அருந்தம்போதன னவளிடத்தினுங்கரு வருளியக்கணத்தெ
ய்தி - இருந்தவாறுதன் னன்னையோடினிதுளாத்திமையவ னெ
னச்சென்றான் - பெருந்தராதலந் திரவிநலொருதனிப்பெறு
முறைமையிற்பெற்ற - முருந்தவாணகை மருட்சியால் விளர்த்தி
டுமுழுவது முடலென்றே ... ... (௧௬)

வேதபுங்கவனகன்றுழிவலியுடை விழியின்மைந்தனும்யாரு
ம் - பாதபங்கயந்தொழத்தகுந்திறலுடைப் பாண்டுவென்பவன்
றானும் - பூதலம்பெருங்களிப் புறக்குருகுலம்பொற்புறப்பொழு
தூற்றுச் - சாதராயின ரவ்விருமகவையுஞ்சத்தியவதிகண்டாள்()

காணலும்பெரிதுவகையற் றின்னமுங்கருதுதுமெனவெ
ண்ணச் - சேணடைந்தமாமுனிவரன் வருதலுஞ் சிந்தனையுறச்
சொல்ல - நாணலந்திகழம்பிகையிடத்தவனண்ணலுமிவளஞ்சிப்-
பூணலம்பெறுதோழிமற்றொருத்திடைப் பூவணையணைவித்தாள்()

வந்தகாலையின் மனங்கலந்தனங்கனூன் மாயின்மெய்யுறத்
தோய்ந்து - சந்தனுகருப்பரிமளதனதடந் தயங்குமார்பினின்
மூழ்க - இந்திராதிபர்போகமுற்றியைதலு மின்பமுற்றியபின்
னர் - அந்தணாளனவ் விரவிடைமீளவந் தன்னையொடுரைசெய்
தான் ... ... (௧௯)

அம்பிகைக்கொடி சேடியைவிடுத்தன ளவள்புரிதவந்தன்
னால் - உம்பரிற்பெறுவரத்தினுற்றருமன்வந்துதித்திடும்பதம்பெ
ற்றாள் -வெம்படைத்தொழில் விதுரனென்றவன்பெயர் மேலினி
மகவாசை - என்புணர்ப்பினு லொழிகெனவனநெறி யேகினன்
விடைகொண்டே ... ... (௨௦)

மருவருங்குழற்கணிகைபெற் றெடுத்தவிம்மைந்தனுமுதற்
பெற்ற - இருவருங்குருகுலப்பெருங் கிரிமிசையிலங்குமாக்குவ
டென்னப் - பொருவருந்திறற் படைகளுங்களிறுதேர் புரவியும்
புவிவேந்தர் - வெருவரும்படிப் பலகலைவிதங்களும் வீடுமனுட
ன்கற்றார் ... ... (௨௧)

ஆனதிக்கிருநாளும்வந்தடிதொழ வம்பிகைமகன்றன்னை -
வானதித்திருமகனொருதினத்தினின் மங்கலமுடிசூட்டிப் - பாணி

றப்பெரும் பாண்டுவெஞ்சேனையின் பதிமுழுமதிமிக்க - கானிற
த்தொடை விதுரனையமைச்சனிக்காவலர்க்கெனவைத்தான் (உஉ)

நதியளித்தவனைவலிற்றாதர்போய் நயந்துடன்காந்தார -
பதியளித்தமெய்க் கன்னியைத்தருகபூபதிக்கென மணநேர்ந்தா
ன - மதியளித்ததொல் குலத்தவள்விழியிலா மகனெனத்தமர்
சொல்ல - விதியளித்ததென்றுள மகிழ்ந்தனள்வடமீனெனத்தகு
ங்கற்பாள் ... ... (உங)

இமைத்தகண்ணிணை மலர்ந்தினிநோக்கலேன் யானொருவ
வனையென்று - சமைத்தபட்டமொன் றினிற்பொதிபெதும்பை
யைத்தந்தையுந்தநயோரும் - அமைத்தருங்குலமுனிவருமறைமு
றை யருங்கடிவிளைத்திட்டார் - சுமைத்தராபதி மதியிவளுரோகி
ணியென்னவே தொழத்தக்காள்... ... ... (உச)

புந்தியாலருங் கலைமகள்பொற்பினூற் பூந்திருபுனைகற்பா
ல் - அந்திவாயருந் ததிபெரும்பொறையினு லவனிமாணிகமொன்
னக் - குந்திபோசரிற் சூரனென்பவன்மகள் குருகுலந்தழைத்
தோங்க - வந்தியாவரும் பிரதையென்றடிதொழ மாசறவளர்கின்
றாள்... ... ... (உரு)

அந்தமாதிளமடமயிலெனவிளையாடுமெல்லையினன்று - மு
ந்தமாதவம் புரிதுருவாசமாமுனியுமவ்வுழைவந்தான் - வந்தமா
தவனடிபணிந்திவனைநீ வழிபடுகெனத்தந்தை - இந்தமாதவன்
மொழிப்படி புரிந்துகுற்றேவலின்வழிநின்றாள்... (உசா)

கழங்குகந்துகமம்மனையாடலுங் கனகபென்கொடியூசல் -
வழங்குதண்புனலாடலுந்துறைவரி வண்டலாடலுமாற்றி - முழ
ங்குசங்கினந் தவழ்திருப்பனிநிலாமுன்றிலுஞ் செய்குன்றும் -
தழங்குசெஞ்சுரும் பெழுமலர்ச்சோலையுந்தனித்தனி மறந்திட்
டாள்... ... ... (உஎ)

தொழுதுதாளிணை செய்யபஞ்செழுதினுந்தோளிணைசெழு
ந்தொய்யில - எழுதினும்பொறுவிளமை யண்முழுதுக்குறைந்தியா
துயாதுனாசெய்தான் - முழுதுநெஞ்சுறுகோபவெங்கனன்மிகு
முனிவரன் மகிழ்வெய்தப் - பழுதிலன்புட னியற்றினளொன்று
போற் பன்னிருமதிசேர ... ... (உஅ)

பிரஜைதன்னையத்தபோநிதி வருகெனப்பெரிதுவந்தென
தேவல் - அரிதெனுதுநீ யியற்றினைநெடுங்கட லவனிமேலார்வல்
லார் - தெரிவைகேளெனச் செவிப்படுத்தொருமறைதேவரில்யா
ர்யானாக் - கருதிநீவரவழைத்தனை யவரவர்கணத்துநின்கரஞ்சேர்
வார்... ... ... (௨௯)

தம்மையொப்பதோர் மகவையுந்தருகுவர் தவப்பயனென
ப்பெற்ற - இம்மறைப்பய னிம்மையிலுனக்குவந்தெய்தியதென
க்கூறி - அம்முனிப்பெருங் கடவுளுந்தபோவன மடைந்தனனவ
ளுந்தன் - செம்மனத்தொடு பயின்றரமகளெனச் செல்வமாம
னைசேர்ந்தாள் ... ... (௩௰)

ததையும்வண்டிமிர் கருங்குழற்கன்னியத் தனிமறைப்பய
ன்காண்பாள் - சுதைநிலாவெழுமாளிகைத் தலத்திடைத்தூநிலா
வெழுமுன்றில் - இதயமாமலர் களிப்பநின்றன்னவ ளியம்பலு
மெதிரோடி - உதயபானுவு மலர்மிசையளியென வொருகணத்
திடைவந்தான் ... ... (௩௧)

செம்பொனுடையுங் கவசகுண்டலங்களுந் திகழ்மணிமுடி
யாரம் - பைம்பொனங்கதம் புனையவயவங்களும் பவளமேனியு
மாகி - வம்பளுதமெய்ப் பதுமினியெனச்செழு மறைநுவன்மட
ப்பாவை - அம்புயானனமலர்வுறக்கரங்ளாலணைத்தனனருகெய்தி()

கன்னிகன்னியென் கைதொடேன்மடந்தையர் கற்புநீயறி
கிற்றி - என்னமெய்க்குலத்தலம்வர நாணின ளிதயமும்வெருகி -
அன்னமென்னடை யஞ்சினளரற்றலு மருகுறுவிடப்போய்நின்-
றுன்னியென்னைநீ யழைத்ததென்பெறவென வுருத்தனனுளா
செய்வான் ... ... (௩௩)

உருக்கொள்சாயையு முழையுமங்கறிவுற தொளிந்தநான்
வரவுள்ளம் - வெருக்கொளாவென மறுத்தனையுனக்குமுன் விதி
மறையுளாசெய்த-குருக்களென்படானென்படா தரிவைநின்குல
மெனக்கொடித்திண்டேர் - அருக்கன்மெய்யினு மனமிகக்கொ
தித்தன னுயிரமடங்கம்மா ... ... (௩௪)

ஊனையளித்தவன்முனியுமென்றஞ்சனீ யுடன்படுமுணர்வா
னல் - வினையளித்ததென் றனைதியேலின்பமும் விலைழவுறும்படித்
துய்த்தி - எனையளித்ததொல்லதிதியினுனக்கிசையெய்துமாறிகன்

மைந்தன் - தனையளித்திமற்றென்னினுமிருநிலந் தாடொழத்தக்
கோனே ... ... (௫௫)

ஆயிரங்கரத்ததிபதி புகழ்ந்தநா ரூயிரமுகமாகப் - பேரா
யிரந்திவை யுரைத்தபின் மதர்விழிப்புரிவுமூர லுநல்கி - வேயிரு
ந்தடந்தோளிடந்துடித்திட மெல்லியன்மதன்வேதப் - பாயிர
ங்கொலென் றையுறவவமெனும் பணிமலரணைசேர்ந்தாள்...(௫௬)

தினகரன்சுடர் வடிவமுமழகுமெழு திங்களின்வடிவாகித் - த
னதடந்திரு மார்புறத்தழீஇயபின் றையலுநினைவெய்த - மன
மகிழ்ந்ததும் வந்ததுமணந்ததும் வரங்கொடுத்ததுமெல்லாம் -
கனவெனும்படிக்கரந்தனன்பெருந்தகைக்கவினியுங்கருக்கொண்
டாள் ... ... (௫௭)

அந்தியாரழ லெனப்பரிதியிளெளியடைந்தபின் மருண்
டந்தக்- குந்திபோசன்மாமடவரலெழிலங்கொண்டகொள்கை
யளாகி - இந்திராதிய ரவரவர்முகமலர்த் திரந்தனதகத்தக்க -
மைந்தனைவ னொருவனைப்பயந்தனள் மாசிலாமணியென்ன()

ஞான்மாமகள் ஞானதருளினற் றலங்குகவினிலையாகி -
வாரமாமணிக் கவசகுண்டலத்துடன் வருமகன்முகநோக்கிப் -
பாரமாமர பினிற்பிறந்தவர்மொழி பழுதெனுக்கழுதஞ்சிப் - பூர
மாநதி பெட்டகத்திடைநனி பொதிந்தொழுக்கினண்மடன்றே()

குஞ்சரத்திளங்கன்றெனச்சரபவெங் கோளரியெனப்பைம்
பொற் - பஞ்சரத்திடை வருதிரு மதலையைப் பகீரதியெனுமன்
னை - அஞ்சரத்துளைக் கரங்களாலெடுத்தெடுத் தசையவேதாலா
ட்டி - வெஞ்சரச்சிலைச் சூததாயகன்பதி மேவுவித்தனளன்றே()

கோடகப்படவரு புனல்விழைவினற்குளிர்துறைமருங்குற்
றோர் - பேடகத்திடையொழுகியதினபதிபெருங்குமரனைக்கண்
டு- சூடகக்கையம்புயமலரிராதையுஞ்சூதநாயகன்றனும்-ஆடகத்
தலமடைந்ததொத்தரும்பெறலாதரத்தொடுங்கொண்டார் (௬௧)

அதிரதன்றிருமனையினின்விழைவுடனரும்பியபணிக்கற்றை
மதியெனும்படிவளர்ந்துதிண்டிறல்புனைமழுவுடைவராமன்-பத
யுகந்தனில்வரிசிலைமுதலியபலபடைகளுங்கற்றுக் - கதிரவன்றருக
ன்னனெனற்றலமெலாங்கைதொழுங்கவின்பெற்றான்..... (௬௨)

கலிநிலைத்துறை.

கன்னற்பயந்தகதிர்வெம்முலைக்கலினிதன்னை ... *
முன்னர்ப்பயந்தோன்முகவோலையுகவையோடு ... *
மன்னர்க்கெழுதமடப்பாவைவரிக்குமென்று ... *
செற்றற்கதிர்வேன்முடிமன்னவர்சென்றுசேர்ந்தார் ...... (௪௩)

உருவஞ்சிறந்துபலகோளுமுதிக்குமேனும் ... ... *
மருவுங்குமுதமதிகண்டுமலருமாபோல் ... ... *
பருவஞ்செய்பைம்பொற்கொடியன்னவள்பாண்டுவென்னும் *
திருபன்றனக்கேமணங்கூர்பெருநேயமுற்றாள் ... (௪௪)

தானேயுவந்துதனித்தார்புனைதையல்வென்றி ... *
ஆனேறனையானுயிர்க்காரமுதாயபின்னர் ... *
யானேதிருவனெனமத்திரராசனல்க ... ... *
மானேரனையவிழியாளைவதுவைசெய்தான் ... (௪௫)

எண்ணுற்றஞானிகண்மத்திரராசனென்ன ... *
மண்ணுற்றகீர்த்திவயமன்னர்மகளிரோடும் ... *
கண்ணுற்றகானில்விளையாடல்கருதியப்பொன் ... *
விண்ணுற்றசாரலிமயப்புறமேயினானால் ... . (௪௬)

கானத்திலுள்ளகலைமானினங்கட்சியாமா ... *
ஏனத்திரள்வெம்புலியெண்குடன்யாளிசிங்கம் ... *
தானப்பகடுமுதலாயசனங்களெல்லாம் ... ... *
மானச்சரத்தாற்கொலைசெய்தனன்வாகைவில்லான்... (௪௭)

மெய்யிற்றெறித்தகுருதித்துளிமேருவில்லி ... *
சையத்தலர்ந்தகமழ்குங்குமத்தாதுமானக் ... ... *
கையிற்சிலையோடுலவுங்கழற்காளைக்கேதம்... ... *
பையத்தணித்தானிமநாகபவனனென்பான் ... (௪௮)

பொன்னங்கழலானெதிரவ்விடைப்போகம்வேட்டு... *
மன்னுங்கலையும்பிணைமானுமகிழ்ச்சிகூர ... ... *
மின்னுங்கணையாலிவனெய்துடன்வீழ்த்தபோதின்... *
முன்னின்றதந்தவுயிர்வந்தொர்முனிவனாகி ... (௪௯)

நாரிக்கொருகூறரனார்முதனல்கவெய்த ... ... *
வேரிக்கணையான்மிகநொந்துழிம்வடமாறிப் ... *
பூரித்தகாமநலமெய்துபொழுதின்கைச் ... ... *
சோரிக்கணையாலறையுண்டுயிர்சோர்ந்துவீழ்ந்தேன்... (௫௰)

என்போலவின்பத்திடைநீயுமிறத்தியென்று... *
அல்போடிறந்தான்முதற்கிந்தமனுனபேரோன் *
தன்பேர்மகிழ்நனுடனேசெந்தழலினெய்திப் *
பின்போயினன்மென்பிணையானவப்பேதைதானும் (௫௧)

நினைவற்றசாபநிலைபெற்றபினெஞ்சில்வேறோர் *
இனைவற்றதன்மையிதுவேயினியென்றுதேறி *
வனைவற்றகாதன்மடவாரொடுமன்றல்வேந்தன் *
முனைவற்றவாய்மைமுனிக்கானமுயன்றுசேர்ந்தான்... (௫௨)

காண்டற்கரியமணிப்பைம்பொற்கலனொடாடை *
வேண்டற்கரியவிடயங்களின்வேடமாற்றித் *
தீண்டற்கரியதிருமேனியன்றேவராலும் *
பூண்டற்கரியபெருமாதவம்பூண்டுகொண்டான் (௫௩)

உற்றுப்புறத்துப்பகையாகியுடன்றவெல்லாம் *
செற்றுப்புவியிற்றனியாழிசெலுத்துநீரான் *
பற்றற்றயோகப்படையானுட்பகைகள்யாவும் *
முற்றத்துரந்துபெருஞானமுதல்வனானான் (௫௪)

ஆரக்குழம்பிலளைந்தாரமணிந்துவிம்மும் *
பாரக்குசங்கள்பலதைவரும்பான்மைநீங்கி *
நாரக்கமலகரசோதிதகங்கண்மீள *
ஈரக்குசங்கள்கிழிக்குந்தொழிற்கேற்றவாலோ (௫௫)

நாமக்கலவிதலங்கூரநயந்துநாளும் *
காமக்கனலைவளர்க்கின்றகருத்துமாற்றித் *
தாமக்குழலாரிருவோரொடுதானுமொன்றி *
ஓமக்கனலைவளர்த்தானுணர்வுண்மைகண்டான் (௫௬)

இவ்வாறரியதவநாடொறுமெய்த்துமெல்லைக் *
கைவாளொழிந்துசமித்தேந்தியகாவன்மன்னன் *
மைவாணெடுங்கண்வரசூரன்மகளைநோக்கிச் *
செவ்வாய்மலர்ந்தாய்புவிமேலுறைதெய்வமன்னன்... (௫௭)

பூந்தார்வியாதமுனிதாளிணைபோற்றியன்பு... *
கூர்ந்தார்வமுற்றியவன்பால்வரங்கோடலெய்திக் *
காந்தாரிநூறுமகவானகருப்பமொன்று... *
வேந்தாதரிப்பத்தரித்தாள்வடமீனொடொப்பாள் (௫௮)

கல்லாமழலைக்கனியூறல்கலந்துகொஞ்சும் ... ... *
சொல்லாலுருக்கியசூதோடிதம்தொடர்ந்துபற்றி ... *
மல்லார்புயத்துவிளையாடிமகிழ்ச்சிமைந்தர் ... *
இல்லாதவர்க்குமனைவாழ்வினினிமையென்னும் ... (௫௯)

மெய்தானம்வண்மைவிரதந்தழல்வேள்விதாளும் ... *
செய்தாலுஞாலத்தவர்நற்கதிசென்றுசேரார் ... *
மைதாழ்தடங்கண்மகவின்முகமன்னுபார்வை ... *
எய்தாதொழியிற்பெறுமின்பமெவனுமில்லை ... (௬௰)

மென்பாலகரைப்பயவாதவர்மெய்ம்மையாகத் ... *
தென்பாலவர்தம்பசித்திறனிதிர்க்கமாட்டார் ... *
என்பாணிகழ்ந்தவினையாலிடரெய்திநின்றேன் ... *
நின்பாலருளுண்டெனினுய்வனெடுங்கணல்லாய்... (௬௧)

இல்வாழ்பவர்க்குமடவாரலதியாவரின்பம் ... *
நல்வாழ்வுதேசுபுகழ்யாவுநடத்துகிற்பார் ... ... *
தொல்வானவரின்மறையோரிற்றுறக்கபூமி ... *
செல்வான்பயக்கும்பயனீயருள்செய்தியென்றான்... (௬௨)

பொற்பாவைகேள்வன்மொழிகேட்டலும்பொன்றநாணிச்... *
சொற்பாலவல்லாப்பழிகூறுநாசொல்வதென்னே... ... *
வெற்பானதிகள்சிறுபுன்குழிமேவினன்றே... ... *
இற்பாலவர்க்குப்பிறர்மேன்மனமேற்பதென்றாள் ... (௬௩)

பின்னும்பலகால்வருந்திப்பிறர்பெற்றிகாட்டி ... *
மன்னன்புகலமடமாதுமறுக்கமாட்டாள் ... ... *
கன்னன்பிறந்ததொழியச்செழுங்கன்னியாகி ... *
முன்னம்பெறுமாமறைமேன்மைமொழிகளுற்றாள்... (௬௪)

மருமாலைவல்லியுரைகேட்டுமகிழ்ச்சிகூரும்... ... *
பெருமாதவத்தோன்பணித்தேவியபின்னர்முன்னர்த் ... *
திருமாதவனைக்கருத்தான்மடத்தையவுன்னி ... *
அருமாமறையாலழைத்தாண்மற்றவனும்வந்தான்... (௬௫)

வந்தித்ததெய்வமெதிர்வந்துழிமன்னுகேள்வற் ... *
சிந்தித்தசிந்தையினளாய்மலர்ச்சேக்கைசேர்ந்து ... *
குந்தித்தெரிவைநிறைமாமதிக்கூட்டமுற்ற ... *
அந்தித்தெரிவைநிகரொன்னவழகின்மிக்காள் ... (௬௬)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிவமுறமுகூர்த்தம்வாரந்திதிகரணம்யோகம் ... *
நவமெனவழங்குகோளுநன்னிலைநின்றபோதில் ... *
அவனியையொருகோலோச்சியாளுமென்றறிவின்மிக்க... *
தவநெறிமுனிவர்கூறப்பிறந்தனன்றருமன்மைந்தன்... (௬௭)

உதிட்டிரன்பிறந்தகாலையுலகினிலுயர்ந்தோர்யாரும்... *
வதிட்டனைமுதலாவெண்ணுமுநிவரும்வானுளோரும் ... *
நிதிப்பயன்பெற்றோரென்னநேயம்மாடுவகைகூர்ந்தார்... *
மதித்தனநிமித்தம்யாவுமங்கலநிகழ்ந்தவன்றே ... (௬௮)

தண்புயலெழுச்சிகண்டசலநிதியெனவேமைந்தன் ... *
பண்புடைவதனநோக்கிப்பார்த்திபன்பாண்டுவென்பான்... *
கண்பனிதுளிப்பநெஞ்சங்கனிந்தினிதுருகமேனி ... *
வண்புளகரும்பமேன்மேல்வரம்பிகுமகிழ்ச்சிகூர்ந்தான்...(௬௯)

அற்றனபெயரமெல்லாமருந்தவப்பயனுன்மைந்தர்ப் ... *
பெற்றனள்குந்தியென்னும்பேருணாகேட்டவன்றே ... *
உற்றனள்பொறாமைகல்லாதுதரமுட்டுழும்புமாறு ... *
செற்றனடனதுங்கடுமாக்கமுஞ்சிந்தியாதாள் ... (௭௰)

மையறுசுவலன்கன்னிவயிற்றிடைக்கருப்பஞ்சேரப்... *
பையொடுகுருதிபொங்கிப்பார்மிசைவிழுந்ததாகச்... *
செய்யவன்விழுந்ததிக்கிற்செக்கர்வானெனன்னச்சென்று... *
மெய்யுடையரியகேள்விம்வள்ளிகூர்வியாதன்கண்டான்... (௭௧)

சஞ்சலமானகோசத்தசையினைத்தாழிசேர்த்து ... *
எஞ்சிலதாகநூறுகூறுசெட்டிமுதிலேற்றி... ... *
நெஞ்சலர்கருணையாளனின்றவக்குறையுஞ்சேர்த்தி ... *
அஞ்சிலார்குழலியாளென்றுங்கொருகடத்தில்வைத்தான்...(௭௨)

கருவுறுதாயைநோக்கிக்கையறுமென்றுகண்ணி ... *
வெருவுறல்கற்பின்மிக்காய்வேறுசெய்தசைகள்யாவும்... *
உருவுறநிரம்பித்தாமேயுற்பவிப்பளவுங்கையால் ... *
மருவுறல்வழுவுறுதென்வரமௌவரதன்போனான் ... (௭௩)

காம்பெனநிறத்ததோளாள்கருவயிறிருப்பதொப்பத்... *
தேம்பயினறுநெய்சேர்த்திக்கலன்களைச்சேமமாக ... *
ஆம்பரிவுடனேயாற்றியிற்றனையடைந்துவைகும் ... *
பாம்பெனப்பருவநோக்கியிருந்தனள்பழுதிலாதாள்... (௭௪)

ஈண்டுறுநிகழ்ச்சிகேட்டேயாதவன்மகளைநோக்கிப் ... *
பாண்டுமன்னிரந்துபல்கால்பணித்தலும்பவனன்றன்னை ... *
வேண்டுமம்மறையானுன்னியழைத்தனள்விரைவினோடி ... *
ஆண்டுவந்தவனும்பூத்தகொடியனுளாகந்தோய்ந்தான்... (எரு)

நெஞ்சுற்றணைந்துமீளநெடுங்கலைவாகனேகச் ... *
செஞ்சுடருச்சியெய்திச்சிறந்ததோர்முகுத்தந்தன்னில்... *
அஞ்சனையளித்தபொற்றோளனுமனேட்வண்மையென்ன... *
வெஞ்சினவீமன்றன்னைப்பயந்தனள்விரதமிக்காள்... (எசு)

தண்பரிமளமென்சாயற்றந்தையுந்திசைகடோறும்...... *
எண்பெறுமுயிர்கட்கெல்லாமிதமுறுபொலிவின்வீச ... *
நண்புடையனலன்றானுநலமிகுநண்புதோன்றப் ... *
பண்புறவலம்வந்தோங்கிப்பரிவுடன் விளக்கஞ்செய்தான் (எஎ)

அன்னநாளனில்ன்மைந்தன்பிறந்தனனகமற்றை ... *
முன்னநாளருக்கன்வேலைமுழங்கியமுகுத்தந்தன்னில் ... *
இன்னநாளுருவமுற்றியெழில்பெறுமெல்றுமுன்னோன்... *
சொன்னநாள்வழுவுறாமற்சுயோதனன்றோன்றினானே... (எஅ)

வாரியிற்சிறந்துவிம்முமங்கலமுழவமேன்மேல் ... *
ஓரியின்குரலாலோதையொடுங்கினவிடங்கடோறும்... *
பாரியகுலத்தோர்கண்ணிலுவகைநீர்பனிக்குமுன்னே... *
சோரியந்தரத்துநின்றுசொரிந்தனசோனைமேகம் ... (எகூ)

கோள்களினிலையாற்றீமைகொண்டதுன்முகுத்தந்தன்னில்... *
தேள்களிற்கொடியமற்றைச்சிறுவருஞ்சேரவோரோர்... *
நாள்களிற்பிறந்தபின்னர்நங்கையுமொருத்திவந்தாள்... *
தோள்களிற்கழையைவென்றதுச்சலையென்னும்பேராள் (அய)

பின்னியபுதல்வராலும்பிறந்தமென்புதல்வியாலும் ... *
துன்னியமகிழ்நனாலுந்துலங்கியசுவலன்பாவை ... *
தன்னிகர்பருதியாலுஞ்சதவிதழாலுஞ்செம்பொற் ... *
கன்னிகையாலுஞ்சோதிகலந்தசெங்கமலம்போன்றாள்... (அக)

பான்மொழிக்குந்திமீண்டும்பாண்டுவினேவல்பெற்று... *
வான்மறைமொழியாலுன்னிவானவர்க்கரசைநோக்க... *
மேன்மொழிவதுமற்றென்கொல்விடுவனோவிரைவின்வர்தத்...*
தேன்மொழித்தெரிவைமெய்யுஞ்சிந்தையுங்களிப்பச்சேர்ந்தான்;

எங்குநன்னிமித்தஞ்சொல்லவிருநிலமகிழ்ச்சிகூரப்... ...*
பங்குனிநிறைந்ததிங்களாதவன்பயிலுநாளில்... ... *
வெங்குனிவரிவில்வாழ்க்கைவிசயனும்பிறந்தான்வென்றிப்... *
பங்குனனென்னுநாமம்பகுதியாற்படைத்தகோமான்... (௮௩)

கற்பகமலர்கள்சிந்திக்கடவுளர்கணங்களாட ... ... *
வெற்பகமுனிவரீண்டிமங்கலவேதம்பாட... ... ... *
பொற்பகமுழவுவிம்மப்புரிவளைமுழங்கியார்ப்ப... ... *
நற்பகலிதுவென்றெல்லாவுலகமுநயந்தவன்றே... ...(௮௪)

இறைவனுமகிழ்ந்துபின்னும்பாதவிக்குளாட்பவந்த ... *
மறையினைமுறையிற்பெற்றேயத்திரராசன்கன்னி ... *
குறைவறவிருவர்வேண்டுங்குமரரொன்றுன்னிநின்றாள்... *
நிறையுடையாயுண்மைந்தரிருவருநினைவின்வந்தார்... (௮௫)

மருவருங்குழலியாயுண்மறையினால்வரிசைபெற்ற ... ...*
இருவருமொருவர்போலவின்புறமணந்தபோதில்... ... *
பருவரல்யாதுமில்லாப்பாலரோரிருவர்சேரக்... ... *
கருவிளைந்துதித்தார்யாருங்கண்ணெனக்காணுநீரார்... (௮௬)

சிகுலநகுலனென்றுந்தப்பிசாதேவனென்றும்... ... *
விசயனோடெண்ணும்வீமன்மேதகுதருமனென்றும்... *
அசைவுறுசிங்கசாபமனையவரைவரானும்... ... ...*
வசையறுதவத்தின்மிக்கோன்மகிழ்ச்சியால்வாழ்வுபெற்றான்(௮௭

தாதியர்மருங்குந்தந்தைதடமணிமார்பும்பெற்ற... ...*
பேதையர்காமுநீங்காப்பெற்றியின்வளர்ந்தபின்னர்ப்... *
போதகமடங்கல்புல்வாய்புலிமுதல்விலங்கொடாடி ... *
வேதியர்முன்றிறோறும்விழைவிளையாடலுற்றார்... (௮௮)

செய்தவர்முனிவர்தப்மாற்சிகையுடன்புரிநூல்சாத்திக்... *
கைதவமின்றியெண்ணெண்கலைக்கடற்கரையுங்கண்டு... *
மெய்தவம்விளங்கிவேழவில்லியும்வியந்துநோக்க... ... *
மைதவழ்சிகரியென்னவளர்ச்சியால்வனப்பின்மிக்கார்... (௮௯)

மார்பினுமகன்றகல்விவனப்பினுநிறத்தசீர்த்தி... ... *
போர்வருதெரியன்மாலைப்புயத்தினுமுயர்ந்தகொற்றம்... *
சீர்வருவாய்மைமிக்ககண்ணினுஞ்செங்கைவண்மை ... *
பார்வளஞ்சுரக்குஞ்செல்வப்பரப்பினும்பரந்தவன்றே... (௯௰)

ஆரமுமாரச்சேறுமரும்பனிநீரும்பூவும்... ... *
ஈரவெண்மதிநிலாவுமின்னிளந்தென்றற்காலும்... ... *
ஓருயிரிரண்டுமெய்யாவுருகுவாருருகும்வண்ணம் ... *
மாரனைமகுடஞ்சூட்டவந்ததுவசந்தகாலம் ... (௯௧)

விதுநலம்பெறுகாவெங்குமெய்ச்சிவப்பேறவண்டு ... *
புதுமையின்முரன்றுமொய்ப்பப்புதுமணம்பரந்துலாவத்... *
கதுமெனத்தலைபணிப்பக்காறடுமாதிர்ப்பம்மா ... ... *
மதுவயின்றவரின்யாவர்மண்ணின்மேன்மயக்குறாதார் ... (௯௨)

பைந்தடந்தாளான்முன்னம்பருகியபுனலையீவச் ... ... *
செந்தழலாக்கியந்தஞ்சினைதொறுங்காட்டுநீரால் ... *
முந்தியவசோகுருநமுதலியதருக்களெல்லாம் ... ... *
இந்திரசாலம்வல்லோரியற்கையினியைந்தவாலோ ... (௯௩)

பரந்தெழுசூதபுட்பபராகநல்விராகம்விஞ்ச ... ... *
முரண்படுசிலைவேள்விட்டமோகனச்சுண்ணம்போன்ற ...*
புரிந்ததொல்யோகமாக்கள்புரிந்துநின்றுருகவிட்ட ... *
அருந்தழற்கணைகள்போலவலர்ந்தனவசோகசாலம்... (௯௪)

வேனலின்விளைவினாலும்வேனலான்விழைவினாலும் ... *
மாநலந்திகழுமாரன்மாத்திரிவனப்பினாலும் ... ... *
தானலமுறுதலெண்ணிச்சாடமுமறந்துமற்றைப் ... ...*
பானலங்கண்ணினாரும்பாண்டுவும்பரிவுகூர்ந்தார் ... (௯௫)

அருந்தளிர்நயந்துநல்கியலகுடனலகுசேரப் ... *
பொருந்துமுன்னவசமாகிப்போகமென்குயிலும்பேடும் .. *
இருந்துமெய்ப்புருகுங்காவினிரதியுமதனுமென்ன ... ... *
வருந்தியகாதலோடுமாதவிப்பந்தர்ச்சேர்ந்தார்... ...(௯௬)

பஞ்சின்மெல்லடியினாளுமகிழ்நனும்பழக்கநோட்டம்.. *
நெஞ்சினைநலியமேன்மேனையமுற்றுருகியாங்கண் ... *
எஞ்சியகாலமெல்லாமென்செய்தாமென்றன்றெண்ணி ... *
வெஞ்சிலையனங்கவேதமுறைமையான்மேவினரே ... (௯௭)

பூவியலமளிபொங்கப்புணர்முலைபுளகமேற ... ... *
மேவியகலவியின்பமெய்ப்புறமகிழ்ந்துமுற்றிக் ... ... *
காவியங்கண்ணிகேள்வன்கடமழ்வரைமார்பினன்போ ... *
டோவியமெனவேயுள்ளமுருகியுள்ளயர்ந்துவீழ்ந்தாள் (௯௮)

அரும்பியவிழியுந்தொண்டையமுதூறுபவளவாயும் ... *
விரும்பியசுரதபோகமேவருகுறிப்புமாகிப் ... ... *
பொரும்படைமதனனம்பாற்பொன்றினன்போலமண்ணிற்.. *
சுரும்பினமிரங்கியார்ப்பத்தோன்றலுஞ்சோர்ந்துவீழ்ந்தான் ()

கலிவிருத்தம்.

கொஞ்சுகிளியன்னமொழிகுமுதவிதழமுதால் ... ... *
எஞ்சினனராதிபதியீதெனவியப்பா... ... *
அஞ்சுதகுதீவினையினாரமுதுநஞ்சாம் ... ... *
நஞ்சமமுதாமுரியநல்வினையின்மாதோ ... ... (௰)

சித்திராவயந்தன்வருசெவ்வியுடன்மகிழா ... ... *
மத்திரியெனுங்கொடியவாட்கண்விடமன்னாள் ... ... *
முத்திரையுணர்ந்திலண்முயக்கடுமுமின்பப் ... ... *
நித்திரைகொலாமெனநினைந்தருகிருந்தாள் ... ...(௰௧)

செயிர்த்தவரையாவிகவர்தீயுமிழும்வேலான் ... ... *
உயிர்த்திலன்விழித்திலனுணர்ந்துமிலனென்னா ... *
அயிர்த்தனளழைத்தனளரற்றினளிரங்கா ... ... *
வயிர்த்தனணிலத்தினுயர்வானமினிதென்பாள் ... (௰௨)

புந்தியிலண்மான்றல்பெறுபூவைகுரல்கேளா ... *
முந்தியகடும்பழிமுடிந்ததுகொலென்னாக் ... ... *
குந்தியும்விரைந்துநனிகுமரரொடுபுக்காள் ... ... *
அந்தியரவிந்தமெனவணிபுலர்முகத்தாள் ... .. (௰௩)

உற்றதுமருங்கொழுநனுயிரிறுநலத்தால் ... ... *
இற்றதுமுணர்ந்தவளிரங்கியழும்வேலைக் ... ... *
குற்றமகலும்படிகுணங்களைநிறுத்தும் ... ... *
நற்றவர்புகுந்தருகிருந்துளமழிந்தார் ... ... (௰௪)

அழுகுரல்விலக்கியபினம்மகவையுங்கொண் ... *
டெழுகடனிலத்தரசையீமவிதிசெய்யப் ... ... *
புழுகுகமழ்மைக்குழலிபொற்புடைமுகத்தாள் ... *
முழுகினளனற்புனலின்மொய்ம்பனைவிடாதாள் ...(௰௫)

தங்கையவள்வானுலகுதலைவனுடனெய்திக் ... *
கங்கைவனமூழ்கியுயர்கற்பவனம்வைகப் ... ... *
பங்கயநெடுந்துறைபடிந்துதன்மகாரால் ... ...*
மங்கையிவளுங்கடன்முடித்தனள்வனத்தே ... (௰௬)

காசிபன்முதற்கடவுள்வேதியர்கரத்தால் ... ... *
ஆசிபெறுமப்புதல்வரைவரொடுமன்றே ... ... *
ஏசில்விரதக்கொடியையிறைநகரினுய்த்தார் ... *
தேசிகரின்முற்றெழுதகுஞ்சதசிருங்கர் ... (௱௭)

இறந்ததுணைவற்குளமிரங்கிநிலமன்னன் ... ... *
சிறந்தசரணத்தில்விழுசிறுவரையெடுத்துப் ... *
புறந்தழுவியப்பொழுதுபுண்ணியநயத்தால் ... *
பிறந்தபொழுதொத்துமகிழ்பெற்றியினனானன் ... (௱௮)

வியனதிமகன்சிலைவிதுரன்முதலுள்ளோர் ... ... *
பயனுடைவிசும்புபயில்பாண்டுவைநினைந்து ... ... *
சயநிலைபெறுந்தகையதநயரையுகந்து ... ... *
நயனமிருமைப்புயனுநல்கினர்நயந்தார் ... (௱௯)

அநுசனிருபன்புதல்வரைவருமபேன் ... ... *
தநயரொருநூற்றுவருமன்பினெடுதழுவிக் ... *
கனகுலமுகத்துபெய்கருங்கயநெருங்கும் ... *
வநசமலருங்குமுதமலருமெனவளர்வார்... ... (௱௰)

அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

இன்னணம்வளருங்காலையெறிகடலுடுத்தவல்குல் ... *
பின்னெனுமருங்குகொங்கைவெற்புடைவேய்கொண்மென்றோட்
பொன்னெனுநிறத்திறேனும்பொற்பழிந்தாகுலித்தாள்... *
தன்னெணமுடிப்பான்வந்ததலைவனைத்தந்தம்காமான் ... (௱௰௧)

குந்திபோசன்றன்றெய்வக்குலத்துளோர்களுமநேக ... *
விந்திரவனிதன்னிலெய்தினராகுமென்னக் ... *
கந்தநீர்வாசக்கொன்றைக்கங்கையாண்மகனிருக்கும்... *
அந்தமில்பூமியன்னவத்தினபுரிவந்துற்றார் ... (௱௰௨)

வெண்ணிறமதியமென்னவிடலையுங்கரியமேக ... *
வண்ணனும்வண்ணன்றன்னைத்திருவயிற்றுயிர்த்தமானும் *
எண்ணிலாவுவகையோடுங்குந்தியையெய்தியெல்லாப்... *
புண்ணியநலமுமெய்திப்பூமியாண்முறையுங்கோத்தார்...(௱௰௩)

எம்பிரானுதிமூலமிந்திரன்முதலோர்க்கெல்லாம் ... *
தம்பிரான்பாண்டுவீன்றதருமதேவதையுந்தானும் ... *
அம்புராசிகளுட்பட்டவவனிகளனைத்தும்யாமே ... *
இம்பராயகற்றியெல்லாவெண்ணமுமுடித்துமென்றான் (௱௰௪)

மூதுரவாளனானும்ராசமுனிவனுமனஞ்சொல்காயம்... *
பகிரிலாவிதுரன்றானும்பாந்தளேறுயர்த்தகோவும் ... *
நிகரிலாத்துணைவர்தாமுநீரொடுநீர்சேர்ந்தென்னத் ... *
தகைவிலாவன்பினோடுந்தழுவினர்கெழுமினாரே ... (௩௰௫)

தன்பதிவந்தோர்தம்மைத்தாதைதன்றாதையான ... *
மூன்புடைக்கங்கைமைந்தன்முதவியமுதல்வரெல்லாம் ... *
அன்பொடுகண்டுகண்டுகண்களித்தார்வப்விஞ்சி ... *
மன்பதைமகிழ்ச்சிகூரவரம்பிலாவிருந்துசெய்தார்... (௩௰௬)

நூற்றுவராவரொன்னுநுதியுடைச்சமரவைவேற் ... *
கூற்றுவரனையோர்க்கியாருங்கொடுங்கடும்போரிலாற்றார்... *
ஆற்றுவரெனினுமுங்களுதவியுண்டருளுமுண்டு ... *
தோற்றமுமுண்டுநுங்கள்சுமையிவர்சுமையுமென்றார்... (௩௰௭)

இனிமையிற்பலவுமாற்றியாவரும்யாவுஞ்சொல்லித்... *
திலகரற்றொழுதபின்னர்த்தேர்பரிகரிகடோறும் ... *
மனனுறத்தக்கசெல்வம்வகைதொறும்வழங்கியன்றே.. *
தனதனைப்போல்வார்தம்மைத்தம்பதியணைவித்தாரே... (௩௰௮)

வேறு.

எயினலம்புனைகோபுரமாபுரத்தெழுதுமாளிகைதோறும் - வெயி
லிலாவுமிழ்கனகநீள்வீதியில்விலாதமுற்றிடுநாளில் - பயினின்மே
லவருகல்லெனச்செறிந்தமெய்ப்பவனமைந்தனுமொத்தான் - வயி
னதேயனைக்காத்திருவேயனாமன்னன்மைந்தருமொத்தார் (௩௰௯)

௩ - வதுசம்பவச்சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௨௭௫.

௪ - வது.

வாரணாவதச் சருக்கம்.

கலிவிருத்தம்.

அருமறைமுதல்வனையாழிமாயனைக் ... ... *
கருமுகில்வண்ணனைக்கருணைமூர்த்தியைத் ... *
திருமகடலைவனைத்தேவர்தேவனை... ... ... *
இருபதமுளரிகளிறைஞ்சியேத்துவாம் ... ... (௧)

ஆங்கவரம்முறையயருமாயிடைத் ... ... ※
தீங்கொருவடிவமாஞ்சீர்ச்சுயோதனன் ... ... ※
பாங்கிவணமக்கெனப்பரிதிமைந்தனை ... ... ※
வாங்குபுதழீஇயினன்வலிமைகூரவே ... ... (௨)

ஒருபகனிலமகளுய்யமங்குலின் ... ... ※
வருபகிரதிநதிவாசநீர்படிந்... ... ... ※
திருதிறப்புதல்வருமியைந்ததேன்மையாற் ... ※
றுறையடைந்தனரிலங்கடவுளோரனார் ... ... (௩)

றைவருநவமணிச்சைலமென்னவே ... ... ※
ஐவகைநிறங்களுமமைத்தியற்றிய ... ... ※
தெய்வவாடகமனச்செல்வப்போனகம் ... ... ※
கைவரநுகர்ந்தபின்கண்ணுந்துஞ்சினர் ... (௪)

கண்படைக்கஞ்சலிற்கன்னசௌபலர் ... ... ※
எண்படக்குமரரோடெண்ணிப்பாவகன் ... ※
நண்பன்மெய்க்குமரனைநாக்கொள்வல்லியால் ... ※
திண்பதத்தொடுபுயஞ்சிக்கயாத்தபின் ... ... (௫)

அரவினிற்பிணித்தெழுமரவம்பொங்கிட... ... ※
உரனுடைப்பொருப்பையன்றம்பர்நாயகன் ... ※
பரவையிற்செறித்தெனப்பயனில்செய்கையான் ... ※
விரவுமப்பெருநதியூடுவீழ்த்தினான் ... ... (௬)

வீழ்ந்தவனநந்தாநிமிர்ந்துமெய்யுறச் ... ... ※
சூழ்ந்தனபிணிகளைத்துணிகளாக்கியே ... ... ※
ஆழ்ந்திலனெறிமீண்டவசத்தோடவன் ... ... ※
தாழ்ந்திலனிராவணன்றம்பிபோன்றுளான் ... (௭)

வாளிரவியையொளிமறைக்கும்வெஞ்சினக் ... ※
கோளரவனையவக்கொடியநெஞ்சினன் ... ... ※
நீளரவினங்களாணித்திரானவை ... ... ※
மீளவுங்கொல்லுவான்வீரனேவினான் ... ... (௮)

கடித்தனபன்னகநகங்கொள்கைகளால் ... ... ※
துடித்திடமற்றுணைத்தொகுதிபோற்பிசைந் ... ※
திடித்திடுமுகிலெனவெழுந்துமாதகர்... ... ※
வடித்தவேற்றுணைவரோடெய்திமன்னினான் ... (௯)

வேறொருபகல்கழுநீராத்துவிமனே ... ... ❋
டாறுபாய்ந்திருவருமாடுவேலையில் ... ... ❋
தேறலான்வஞ்சகந்தேறவண்டினன் ... ... ❋
ஏறினன்கடந்தரியேறுபோலிவன் ... ... (௰)

பின்னருமொருபகல்பெற்றம்பெற்றவன் ... ❋
றன்னையம்மகிபதிதனயனுதரித் ... ... ❋
தின்னமுதருத்துவான்போன்றியாவையும் ... ❋
துன்னியவிடங்களாற்றுய்ப்பித்தானரோ ... (௰௧)

விடத்திலேயழிந்தறிவொழிந்தவிமலை ... ... ❋
வடத்திலேபிணித்தனன்கங்கைவாரியின்... ... ❋
இடத்திலேயமிழ்த்தினனிதயமொத்தவர் ... ❋
திடத்திலேமுதிர்ந்ததீங்கார்திறங்களால்... ... (௨௩)

ஓதவால்கடலிடையொளித்தவெற்பெனப்... ... ❋
பாதலந்தனில்விழுபவனனுனவை ... ... ❋
வேதனைபடுத்தினர்விடங்கொள்கூரெயிற் ... ❋
றூதபபணமணியரவிளஞ்சிறார் ... ... (௨௪)

முற்படுகொடுவிடமுனையெயிற்றுகும் ... ...❋
பிற்படுவிடத்தினுற்பெயர்ந்துபோதலின் ... ❋
மற்படுபுயகிரிவடப்பிணிப்புடற்... ... ... ❋
றற்படுமிருள்புலரலரியாயினன் ... ... (௰௪)

வாசுகிதனக்கிவன்வரவுணர்த்தலும்... ... ... ❋
ஆசுகன்மதலையென்றறிந்துமற்றவன்... ... ... ❋
தேசுறுபொற்கடந்தெரிந்துபத்தியில்... ... ❋
ஏசுகிலமுதெலாமினிதினூட்டினன் ... ... (௰௫)

வெங்கனல்கொளுந்தலின்வெந்தவன்புலம்... ... ❋
மங்குல்பெய்மாரியால்வயங்குமாறுபோல்... ... ❋
அங்கெரிவிடநுகர்ந்தழிந்தபேருடல்... ... ...❋
இங்கமுதருந்தலானெழில்புரிந்ததே... ... (௰௬)

ஆயிரம்பதின்மடங்கரசுவாக்களின்... ... ...❋
மாயிருந்திறல்வலிமலிந்தமேனியான்... ... ❋
ஏயிருந்தவப்பயனென்னவெண்பகல்... ... ... ❋
மேயிருந்தனன்பணிவேந்தன்கோயிலே... ... (௰௭)

இவனையத்ததியிடையிட்டபாவியும் ... ... *
தவனையுததியிற்சாய்த்தமாலைபோல் ... ... *
அவனிபனகரியிலரசவெள்வளை ... ... *
துவணிமெய்த்தணிவிளக்கெடுப்பத்துன்னவே ... (௰௮)

கண்டிலனுதிட்டிரன்கனிட்டர்கண்ணுற ... ... *
உண்டிலடரித்திலனோரிராவினும் ... ... *
கொண்டிலவுயிரிளங்குமரர்தம்மொடும் ... ... *
விண்டிலனுணாபுளம்விம்முகுந்தியே ... ... (௰௯)

வீடினனுமெனத்துணைவர்வேறுவே ... ... *
நேடினர்கானதிம்பாடையெங்கணும் ... ... *
தேடினர்காண்கிலஞ்செய்வதென்னென ... *
நாடினர்நடுங்கினர்நமக்கில்சிந்தையார் ... ... (௨௰)

கூற்றனசுயோதனகுமாரனேயிவன் ... ... *
ஆற்றலின்வெரீஇயழுக்கற்றசிந்தையால் ... ... *
எற்றதையுணர்கிலமென்றுதந்தையாம் ... ... *
மாற்றினுமலமருகருத்தாயினர் ... ... (௨௧)

உனதையில்பூதமொத்துள்ளம்வெம்பிய ... ... *
தாதையில்சிறுவரைத்தாதைதாதைபால் ... *
கோதையில்குழலினுள்கொண்டுசேர்த்தும் ... *
வாதையிலவற்கெனவருத்தமாற்றினான் ... (௨௨)

தருமமன்னனுநகர்ச்சனங்கள்யாவையும் ... ... *
தெருமாறேற்றவுந்தெய்வங்கூறுமப் ... ... *
பெருமிதநிமித்தங்கள்பெற்றிபேசவும் ... ... *
வரும்வருமெனமனமறுகிவைகினர் ... ... (௨௩)

இருந்தினைப்பகன்றபிணிவனமற்றைநாள் ... ... *
அருந்திறற்போகிகளரசனேவலால் ... ... *
வருந்தியுற்றெடுத்துமுன்வந்தநீர்வழி ... ... *
பொருந்திறற்கங்கையின்கரையிற்போக்கவே ... (௨௪)

பாழியம்புயவலிப்பாண்டுமைந்தனைச் ... ... *
சூழிகற்பணிக்குலஞ்சுமக்கவல்லவோ ... ... *
வாழியங்குலங்களின்மன்னனல்லனோ ... ... *
ஏழிருபுவனமுமினிதினேந்துவான் ... ... (௨௫)

விதியினாலொளித்தலினுயங்கிமீளவும் ... ... *
நதியினால்வருதலினலங்கொண்மேனியான் ... *
பதியினால்விளங்குமென்பங்கயங்களும் ... ... *
மதியினாற்குளிர்நெடுவானுமாயினான் ... ... (௨௬)

வேதியர்குரவர்வில்விதுரன்வீடுமன் ... ... *
ஆதியர்துணைவரந்நகருளார்களென் ... *
றோதியசனங்களுக்குவகைநல்கினான் ... ... *
ஞாதியர்கிளைக்கெலாநடுக்கநல்கியே ... (௨௭)

குந்தியைமகிழுனாகூறிக்கற்பினால் ... ... *
அத்திமீனனையவரருளின்வாழ்த்தவே ... ... *
செத்திருமகளுறைசெல்வமாநகர் ... ... *
வந்திவர்முன்புபோல்வளருநாளினே ... ... (௨௮)

கோதமன்மகன்மகன்குனிவில்லாதிய ... ... *
மேதகுபடைக்கலம்யாவும்வீறுடம் ... ... *
மாதவன்வயிற்பயில்வரதன்வன்றிறல் ... ... *
கேதமில்சிந்தையான்கிருபனென்றுளான் ... (௨௯)

மற்றிவன்சத்தனுமைந்தனேவலால் ... ... *
கொற்றவருள்குருகுலக்குமாரரை ... ... *
வெற்றிகொள்சிலையும்வெவ்வேலும்வாளமும் ... ... *
பற்றலர்வெருவரும்படிபயிற்றினான் ... ... (௩௰)

பரிவுடனிவன்படைபயிற்றப்பின்னரும் ... ... *
குருபதிவேறொருகுருவைத்தேடினான் ... ... *
இருளறமதிநிலவெறித்ததாயினும் ... ... *
பரிதியைநயக்குமிப்பரவைஞாலமே ... ... (௩௧)

அறுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

பாதநாதவேதபாரத்துவாசனென்பான் ... ... *
விரதவேள்விதன்னின்மேனகைமாலான ... ... *
சுரததாதுவீழ்ந்ததுரோணகும்பந்தன்னில் ... ... *
வரதனொருவன்வந்தான்வசிட்டமுனியையொப்பான் ...(௩௨)

ஈரேழ்விஞ்சைத்திறனுமீன்றோன்றன்பாலெய்தி... ... *
நீரேழென்னயாவுநிறைந்தகேள்விமதஞ்சன்... ... *
பாரேழெண்ணும்படைகள்பரசுராமன்றன்பால்... ... *
ஓரேழ்பகலினுலகுக்கொருவனென்னக்கற்றான் .. ...(௩௩)

வெற்பின்வலியதிண்டோள்வேந்தவேவுதூதால்... ... *
அற்பின்மிக்கசிந்தையறஞ்சார்மொழியவ்வாசான்... ...*
கற்பின்பன்னியோடுங்கையின்மதலையோடும் .. ... *
பொற்பினமராபதியேபோலுநகரிபுக்கான்.. ... (௫௪)

வந்தான்வரதனெனவுமுந்தாகினியாண்மைந்தன்... ... *
பைந்தாரசையவெதிர்போய்ப்பணிந்துபூசைபண்ணிச்... *
சிந்தாசனத்தோடொக்குஞ்சிங்காசனத்திலேற்றி... ... *
எந்தாய்வரநீயடியேனென்னதவத்தேனென்றான்... (௫௫)

மூசிவண்டுமொய்க்குமுருகார்செவ்விமாலை... ... *
வாசிவான்றேர்வெம்போர்மன்னர்மன்னன்றன்னை... ...*
ஏசில்கடவுள்வாய்மையிருக்காலெண்ணில்கோடி... ... *
ஆசியன்பாலோதியருள்செய்திருந்தபின்னர்... ... (௫௬)

வேதமுனிவனிருந்தவேந்துமுனியைநோக்கிப் ... *
பூதந்தன்னினிகழ்ந்தபுன்மைமொழியென்னுரைத்தான்... *
ஏதமெய்ப்பெற்றனையயாகசேனனென்பான்... ... *
போதமில்லாவென்பாற்பூட்டுநண்புபூண்டான் ... (௫௭)

யானுமவனுமுறையாலிளையோமானவெல்லை... ... *
யானுநிகர்சொல்லங்கிவேசன்பாதம்பணிந்து... ... *
வானுமண்ணும்வியக்குமறைவெம்படைகள்கற்றுத்... *
தானும்வல்லனாகித்தன்போலென்னைவைத்தான்... (௫௮)

பின்னையிரவும்பகலும்பிரியோமாகித்திரியத்... ... *
தன்னையடைந்தநண்பின்றகவான்மிகவாதரியா... ...*
என்னைவானமெட்டியானேயிறைவனானால்... ... *
உன்னையாளவைப்பேனுலகிற்பாதியென்றான்... ...(௫௯)

நன்றுநன்றுன்வாய்மைநன்றுநண்புக்கினியாய்... ...*
என்றுபோந்துநானுமியன்றதவத்திலிருந்தேன்... ...*
வென்றுகொண்டபுவியைவேந்தன்மகவுக்களித்துச்... ...*
சென்றுவனம்புகுந்தான்சிறுவன்றலைவனானான்... ...(௬௰)

தனத்திலாசையின்றித்தவமேதனமென்றெண்ணி ... ...*
வனத்திலுணவுமகிழ்வுற்றொருசார்வைகிமறையோர்... ... *
சனத்திலருளாலில்வாழ்தருமந்தவறுவண்ணம்... ... *
இனத்தின்மிக்ககிருபற்கிளையசிவளைவேட்டேன்... (௬௧)

கந்தமகவையீன்றகாளகண்டனருளால் ... ... *
வந்தமகவிம்மகவும்பெறுமைவளரவளர்ந்தான் ... *
எந்தமகவுமையாண்டின்மைபதியாதெனலால் ... *
அந்தமகவைநோக்கித்தாயும்பெருகத்தளர்ந்தாள் ... (௪௨)

மாவின்பாலேயன்றிமரபுக்குரியமைந்தன் ... *
ஆவின்பால்கண்டறியானதனால்வருந்தியத்தக் ... *
கோவின்பாலேகுதலுங்கோமானியாதொன்னை ... *
நாவில்பாலுண்ணடுங்கிநானுன்னன்பனென்றேன் (௪௩)

மன்னன்யானிமுனிவன்மரபாலுனக்குமெனக்கும் ... *
என்னநண்புண்டென்னவேவசிநகைசெய்திகழ்ந்தான் ... *
அன்னதுருபன்றன்னையவையிலரசர்கேட்பச் ... *
சொன்னவாய்மைநீயேசோர்ந்தாயானேசோரேன்... (௪௪)

புகன்றபடிநீயாளும்புவியும்பாதிகொள்வேன்... ... *
இகன்றசமரிலுன்னையிரதத்துடனேகவர்வேன் ... ...*
அகன்றமெய்ம்மையுடையாயறிதியென்றேனென்று... ...*
சுகன்றன்ஞானம்பெற்றதுரோணன்சொல்லக்கேட்டான் (௪௫)

கேட்டவரசனழைக்கக்கிருபனுடன்வந்திறைஞ்சும்... *
பூட்டும்வரிவிற்றடக்கைப்புதல்வர்புதல்வர்தம்மைக்... *
காட்டிநீயேயிவரைக்கடிதிற்படைமைக்கல்வி... ... *
மூட்டிநின்வஞ்சினமுமுடித்தியென்றுமொழிந்தான்... (௪௬)

முனிநீயையயாவிதற்குமுன்னமின்றுமுதலா ... *
இனியிவ்வுலகுக்கரசாமெம்மினொருவனுகிக் ... *
குனிவில்வலியாலமருங்கோடியென்றுகொடுத்தான்... *
பனிவெண்குடையுநிருபர்க்குரியவரிசைபலவும் ... (௪௭)

எழுசீர்க்கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம்.

அன்றுமுதலாகவரிவெஞ்சிலைமுதற்படைக ளாயவைபனை
த்துமடைவே - தொன்றுபடுநான்மறையி னம்முறையுதட்டிராசு
யோதனர்களாதியெவரும் - ஒன்றியதுரோணனரு ளாலும்வலி
யாலுமிய லுணர்வுடைமையாலுமுதலே - நின்றகுறையாலுமொ
ருவர்க்கொருவர்கல்வியினிரம்பினர்வரம்பிலிதியோர்... (௪௮)

வெஞ்சிலையினுலிமணிராகவனையொக்குமென விசயன்வினை
பத்தும்மிகவே - எஞ்சியகுமாரர்கள்பொறுமையின்மிகுத்தனர்

க ளிரவியெதிர்மின்மினிகள்போல் - அஞ்சொன்முனிதானுமிவ
ன் மேலெவரினும்பெரு வன்படையணுகியகலான் - நெஞ்சுற
வருங்கலைகள்கற்குமவர்தம்மளவி னேயநிகழாதவர்கள்யார் (௪௯)

ஏகலைவனென்றொருகிராதன்முனியைத்தனி யிறைஞ்சியிவ
னேவலின்வழான் - ஆகலையடைந்துமிகுபத்தியொடுநாடொறு
மருச்சுனனையோத் துவருவான் - மேகலைநெடுங்கடல்வளைந்ததர
ணிக்கவொரு வில்லியெனவின்மையுடையான் - மாகலைநிறைந்த
குருதக்கணைவலக்கையினின் வல்விரல்வழங்கியுளனால் ... (௫௰)

அங்குலியமொன்றுபுனலாழ்தருகிணற்றில்விழ வந்தமுனிபி
ர்வகிர்களால் - புங்கமொடுபுங்கமுறவெய்தவனெடுத்ததை புகன்
றருகுநின்றவனாநீர் - இங்கிதனிலைத்தொகைகளியாவுமுருவப்ப
கழி யேவுமினென்றுமன்விசயன் - துங்கவில்வளைத்தொருகணத்
தினில்வடத்திலை தொளைத்தனனிலக்கில்கணையால் ... (௫௧)

முத்திமுனிதாளிணையைநீர்படிதடத்துறையின் முதலைகவர்
வுற்றதெனவும் - சித்திரவில்வீரர்பல ருந்தமவெறுங்கையொடு
சென்றருகுநின்றவிடவே - பத்தியின்விரைந்துபொதுவேயிப
மழைப்பவொரு பறவைமிசைவந்தநெடுமால் - கைத்திகிரிபோ
ல்கணையின்விசயனதனைப்பழைய கார்முதலையிற்றுணிசெய்தான்.

ஒருதனுவினுவிதயமகிழ்குருவினுக்கிவனு முயிருதவிமுன்
வயிர்மனக் - குருவுமிவனுக்குநிலையானுமறையானும்வலி கூர்பக
ழியன்றுதவினுன் - இருவருநயந்தருளும்வினையமுமிகுந்தனர்க
ளின்னுயிருமன்புமெனவே - மருவிவருநல்வினைவயத்தின்வழிவ
ந்தபயன் மற்றொருவருக்குவருமே ... ... (௫௩)

சிலைக்குருவிறக்குருகுலக்குமரருக்குவரு சீர்மைநிலைகாண்
மினெனவே - அலைக்கலைநிலாவெழுசரிற்புதல்வனுக்குற லறக்கட
வுளுக்குமுறையா - நிலைப்படுவிசாலமணியணிதிகழரங்கினிமிசை
நிகழ்பலிகொடுத்தரியுடன் - கலைப்புரவியூர்திருவையுத்தொழு
துபுக்கன னகத்துணர்வின்மிக்ககலையோன் ... (௫௪)

புரிவிலறிவோர்சனபதத்திலறிவோர்புவி புரக்குமவர்தம்பி
லறிவோர் - வரிபடவயங்குகொடிமஞ்சமிசையெங்கணும் வனப்
புறவிருந்தபொழுதில் - தெரிவுறவிமானமனைதோறுமுறைதேவ
ர்பலர் சித்தர்முதலோர்பலர்நெடுங் - கரியநெடுமாலபிரமனிந்தி
ரன்முதற்பலர் கலந்தவகல்வானிகருமே ... (௫௫)

ஆற்றின்வழுவாமனுமுறைத்தருமன்மைந்தன்முத லாகிய குமாரரடைவே - போற்றியடலாசிரியரிருவரையுமன்பினுயர் பூசைபலசெய்துபுரிநாண் - எற்றியசராசனம்வணக்கிவடிவாளியி னிலக்கமவைநாலும்வகையால் - மாற்றினர்பிளந்துபெருவண்மை சிறுநுண்மைசல நிச்சலமெனச்சொல்வகையே ... (௫௬)

ஆயுதமநேகவிதமானவையெனைப்பலவு மழகுறவியற்றியுமதம் - பாயுமிபமாவிரதம்வாசியொருவர்க்கொருவர் பல்கதிவரக்கடவியும் - சேயுயருமாடநிலைதோறவையிருந்தவர் தெளிந்துளமகிழ்ந்துநகைதீர் - வாயுகதியல்லதுமணித்தர்கதியல்லவெனவல்லனபுரிந்தனரரோ ... ... (௫௭)

ஒத்தவலியோர்வலியுமொத்ததிறலோர்திறனு மொத்தவினையோர்வினையுறும் - சித்தமழன்மூளமுகவம்புயமலர்ந்தரசன் மகனுமனிலன்சிறுவனும் - கைத்தலமமைந்தகதைகொண்டெதிர்நடந்தனர் களிப்புடனிரண்டுதறுகண் - மத்தகயம்வேரொடுமராமரமெடுத்தமர் மலைந்தனையகோலமறவோர் ... (௫௮)

தண்டின்முனையொன்றினுடனொன்றுருமெறிந்தனைய தன்மையினெடெற்றிவிலகும் - மண்டலவிதங்களுப்வியப்புறநடந்தபின் மறத்தொடுசெயிர்த்துவயிரம் - கொண்டிருவரும்பொருதுழன்றுபொழுதத்திவர் குறிப்பினையிமைப்பளவையில் - கண்டுகுருவிஃசிறுவனன்பொடுவிலக்கினன்மெய் கல்விகளைகண்டபெரியோன் ... ... (௫௯)

மீளிமகவான்மதலையாயுதபுரோகிதன் விலோசனமுணர்ந்தவன்மலர்த்- தாளின்முடிவைத்தெதிர்தரித்தனனிடங்கைவரிசாபகவசத்தினனிடம் - யாளியரவங்கருடன்வன்னிசலிலந்திமிர மிருவியிவையேகடவுளாம் - வாளியின்விநோதமுறவெய்தனனிருந்தமுடி மன்னவர்மதிக்கும்வகையே ... ... (௬௰)

வேறு.

மங்குல்சூழ்விசாலமூன்றின்மஞ்சகோடிதிகழவே ... *
அங்கணவானமீனமானவவையிருந்தவரசர்முன் ... *
சிங்கமொன்னுமாறெழுந்துசிங்கநாதமுஞ்செய்தான் ... *
பங்கசாதபரிமளங்கொள்பாணுராசசூனுவே ... (௬௧)

சிற்றையன்புடன்பணிந்துதேசிகேசனருளினால் ... *
வந்துவெஞ்சராசனம்வணக்கிவீரவாளியால் ... ... *
இந்திரன்குமாரன்முன்னம்யாதியாதியற்றினான் ... *
அந்தவந்தநிலையுமேவுமவனின்விஞ்சலாயினான் ... (௬௨)

கணைகள்போயிலக்கடைந்தவுறுதிகண்டுகண்களித்... *
திணையில்வீரனென்றதன்றிருந்தராசமண்டலம்... ... *
பிணையன்மாலைவிசயனண்ணல்பெற்றிபற்றிநாணினான்...... *
துணைவரோடுவரிகழற்சுயோதனன்களிப்பவே... (௬௩)

மருவிநின்றருக்கன்மைந்தன்வானநாடன்மகனையாம்... *
இருவருந்தனுக்கொள்போரியற்றவம்மினென்னலும்... *
குருகுலந்தழைக்கவந்தகுமரனன்புகூரவே... ... *
உருகிநன்றெனத்தழீஇயுகந்துளந்திருக்கினான்... ... (௬௪)

அனந்தரம்பொரற்குநீகொலந்தரம்மெனக்கெனத்... ...*
தனஞ்சயன்செயிர்த்தல்கண்டுதபனன்மைந்தன்மீளவும்... *
முனைந்தபோரின்முடிதுணித்துன்முகசரோருகத்தினால்... *
சினந்தணிந்தரங்கபூசைசெய்வலென்றுசீறினான்... (௬௫)

அதிருகின்றவெழிலிபோலருச்சுனன்றனைக்குறித் ... ... *
தெதிருகின்றவின்மைகண்டியாவருந்திகைக்கவே... ...*
முதிருகின்றமெய்யனாகிமுன்னிருந்தகோதமன்... ...*
உதிருகின்றவமுதவிந்துவொக்குமென்னவுரைசெய்தான்...(௬௬)

சூதன்மைந்தன்வேலையேழுசூழுமேதினிக்கெலாம்... ... *
நாதன்மைந்தனுடன்வெகுண்டுநவிலுதற்குநண்ணுமோ... *
ஏதமுண்டுசாலவென்னராசராசனிகலியக் ... ...*
கோதமன்றனக்குளங்கொதிக்குமாறுகூறினான்... ... (௬௭)

கற்றவர்க்குநலநிறைந்தகன்னியர்க்கும்வண்மைகை... ...*
உற்றவர்க்கும்வீரரொன்றுயர்ந்தவர்க்கும்வாழ்வுடைக் ... ... *
கொற்றவர்க்குமுண்மையானகோதின்ஞானசரிதராம்... *
நற்றவர்க்குமொன்றுசாதிநன்மைதின்மையில்லையால்... (௬௮)

அரிபிறந்ததின்றுதூணிலரனும்வேயிலாயினான்... ... *
பரவையுண்டமுனியுமிப்பரத்துவாசன்மைந்தனும்... *
ஒருவையின்கண்முற்பிறந்ததொண்சரத்திலல்லவோ ... *
அரியவென்றிமுருகவேளுமடிகளும்பிறந்ததே... ...(௬௯)

என்றுநல்லவுரையெடுத்தியம்பியேனையிழிவினே... ... *
டொன்றிநின்றவாடகத்தையோடவைக்குமாறுபோல்... *
அன்றுசூதன்மதலைதன்னையங்கராசனாக்கினான்... ... *
மின்றயங்குமுடிகவித்துவேந்தெலாம்வியக்கவே... (௭௰)

தானிருந்தவரிமுகஞ்செய்தாள்சுமந்ததவிசின்மேல்... *
ஊனிருந்தபடையினானையுடனிருத்திவண்டுசூழ் ... *
தேனிருந்தமாலைவாகுசிகரமீதுதெண்டிரைக் ... *
கானிருந்தமண்டலங்கருத்தினாலிருத்தினான் ... (எக)

தவனன்மைந்தனுஞ்சுயோதனனுமியைந்துதனதனும்... *
சிவனுமென்னநண்புகொண்டுதிறலுடன்சிறந்துளார்... *
பவனனுப்பர்நாயகன்பயந்தவீரரஞ்சவே ... *
அவனியெங்குநமதெனக்கொள்பெருமிதத்தராயினார் (எஉ)

ஆனகாலையென்னுகின்றவாயுதங்கள்யாவையும் ... *
யானைவாசியிரதமானயானமுள்ளயாவையும் ... *
சேனையோடுதெவ்வணாச்செறுக்கவல்லவீரமும் ... *
மானவீரர்வல்லதொன்றுமறைவலானுமகிழ்வுற ... (எங)

வம்பினுதிகுருகுலந்தழைக்கவந்தமைந்தர்கள் ... *
தம்பினானையேயெமக்களிக்கநின்றதக்கணை ... *
எம்பினின்றுருத்தன்வேறியாகசேனனென்றுளான் ... *
நம்பினுடையவனையிம்பர்நேர்தல்செய்துகொணர்மினே (எச)

என்றுதுருசிலைப்புரோகிதன்கனன்றியம்பவே ... *
அன்றவன்பதம்பணிந்தளித்தசொற்றலைக்கொளா ... *
வென்றிநீடுபடைகளோடுவிரவுமங்கநாலொடும்... *
சென்றுதங்கணுடகன்றுதெவ்வுநாடுகுறுகினார்... ... (எரு)

ஆளிமொய்ம்பரம்மனைக்கணைபோதநீகநீள்... ... *
தூளிகண்புதைத்தசென்றுசெவிபுதைத்ததுவனியோய்... *
ஒளிகொண்டசெம்பொன்வெற்பினுடல்புதைத்தவெழிலிபோல் *
வாளிகொண்டவிருதர்மாமதிற்புறம்புதைக்கவே... (எசா)

வளைத்தசேனையானைவாசிவாயினின்றுகுமுறவே... ... *
உளைத்தெழுந்துமழையைவிட்டடன்றசிங்கவேறுபோல்... *
திளைத்ததன்பதாதியோடுமோகயாகசேனனும்... ... *
இளைத்தநெஞ்சனன்றிநீடுபுரிசைவாயிலெய்தினான்... (எஎ)

சோமகர்க்குமுடிகுசேனைசூழவந்தகுருகுலக் ... *
கோமகர்க்கும்வெஞ்சமம்விளைந்ததாண்மைகூரவே... *
பூமகற்குமிக்கமாமுனிக்குவாய்மைபொய்த்தவம்...... *
மாமகற்கும்விசயனுக்குமன்றுபோர்வழங்கவே... (எஅ)

தூறுகொண்டுகணைபொழிந்து சோமகேசர்பொருதலால்... *
நூறுகொண்டகுமரர்தங்கணகரிமீளநோக்கினர் ... *
மாறுகொண்டுவிசயன்வீசும்வண்ணவாளி வலையினால்... ...*
வீறுகொண்டெதிர்ந்தமன்விலங்கரீடுபட்டதே ... (எகூ)

தகப்படுஞ்சராசனத்தனஞ்சயன்கைவாள்வெரீஇ ... ...*
அகப்படுந்துராதிபன்றனைத்தன்விலினாணினால் ... *
மிகப்படுந்தடங்கொடேர்மிசைப்பிணித்துவிசையுடன் ...*
நகப்படுஞ்செயற்கைசெய்து குருவின்முன்னர்நண்ணினன் (அய)

முறுவல்கொண்டுகண்டசாப முனியுநாணியெம்மைநீ ... *
உறுவதொன்றுமுணர்கலாதுரைத்தபுன்சொலறிதியே... ...*
மறுவிலந்தணாளன்யானுமன்னனீயும்வாசவன்... ... *
சிறுவனென்றுனைப்பிணித்தசிறுமையென்னபெருமையோ ()

அன்றெனக்குநீயிசைந்தவவனிபாதியமையுமற்... ... *
றின்றுனக்குநின்றபாதியான்விரைந்துதருகுவேன் ... ...*
குன்றெனக்குவிந்திலங்குகொற்றவாகுவீரவே... ... *
குன்றனக்குவேண்டுமென்னவுயிரும்வாழ்வுமுதவினேன் (அஉ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

புயங்கம்பருகியுமிழ்மதியம்போல்வான்மீண்டு பூசுரன்றன்-
வயங்குஞ்சுருதிவாய்மையினன்மன்னுங்குருக்கள்டதிநீங்கித்-தயங்
குஞ்சிலைக்கைவாள்விசயன்சயமும்பிறர்முன்றனகப்பட்-டுயங்கு
ஞ்செயலுநினைந்துநினைந்துள்ளஞ்சுடப்போயூர்சேர்ந்தான். ..()

மறுகிற்பணிலந்தவழ்பழனவள நாடுடையா னெதிர்வணங்
கி-முறுகற்புரிவெங்கலைக்கோட்டுமுனியேபோலு முனிவரரைத்-
தறுகட்குருவின் றலைதுமிக்கத் தகவோர் மகவுந் தனஞ்சயன்
றேள்- உறுகைக்கொருபூங்கன்னியையும்பெறுவான்வேண்டியுற்
றிரந்தான்.. ... ...(அச)

ஆறுமுகனைப்பயந்தநதி யலையாற்குளிர்வ தொருகாவில்-
ஈறிறவத்தோருபயாசன் யாசனென்னும் பேரிருவோர் - கூறு
மறையிற்சடங்கியற்றிக்கோவின்வழக்கப்பெருவேள்வி - நூறு
மகத்தோ னிகராசைநோன்மைக்கியையப்புரிவித்தார் ...(அரு)

புரிந்தமகப்பேறழல்வேள்விப் பொன்றுவோமப் பொரு
ண்மிச்சில் - பரிந்துவிபுதரமுதேயப்பைம்பொற்கலத்தினிறைத்

தாங்குத் - தெரிந்தமணிப்பூணவன்றேவிக்களிப்பத்தீண்டாளாகி
யபின் - சொரிந்துகனலிலுபயாச னிலைமைப்பிற்சுதனைத்தோற்று
வித்தான் ... ... (௮௬)

வலையப்பிறழமுடிதயங்க மணிக்குண்டலம்பேரழகெறிப்ப
ச் - சிலையுங்கையும்மெய்யும்வயந் திகழ்போர் வயிரக்கவசமுமா
ய்க் - கொலைவெஞ்சிங்கக்குருளை பொலங்குன்றிற் புறத்துக்குதிப்
பதுபோல் - தலைவன்களிக்கத் தடந்தேர்மேற் றநயனொருவன்
றலைப்பட்டான்... ... ... (௮௭)

தேரோடருக்கனருணமணிச் சிமயத்துதிப்பச் செவ்வியுட
ன் - நீரோடையிற்செந்தாமரைக ணிறம்பெற்றலர்ந்துநின்றன
போல் - வீரோதயன்வந்துதிப்பவளவின்மேனிமலர்ந்துமெய்களி
த்துப் - பாரோர்கண்கள் களித்தனவாற் டார்க்குந்தோறும் பரி
வுற்றே... ... ... (௮௮)

சங்கச்சங்கமிகமுழங்கச்சாந்துப்புழுகு மெறிந்தார்த்துத்-
துங்கக்கொடியுந்தோரணமுந்தொடையும்பரப்பிச் சோபகநா -
டங்கச்சயந்தனவதரித்த வமராபதிபோலார்ப்பெழத்-திங்கட்குழ
வியுற்பவித்த திசைபோன்றனவெண்டிசையெல்லாம் .. (௮௯)

பின்னுங்கடவுளுபயாசன் பெருந்தீப்புறத்துச் சருவையி
னூல்-மன்னுங்கடலாரமுதென்னவழங்குசருநியவிநலத்தால்- மின்
னுங்கொடியுநிகர்மருங்குல்வேய்த்தோண் முல்லை வெண்முறுவற்-
பொன்னும்பிறந்தாள் கோகனகப் பூமீதெழுந்த பொன்போ
ல்வாள்... ... ... (௯௦)

மண்மேலொருத்தியரக்கர்குல மாளப்பிறந்தாள் வாமனுத
ற்-கண்மேலின்றுமிவள்பிறந்தாள் கழற்காவலர்தங் குலமுடிப்பா
ன் எண்மேலென்கொலினியென்றுங் கெவருங்கேட்பவொருவார்
த்தை- விண்மேலெழுந்த தவன்புரிந்த வேள்விக் களத்தினிடை
யம்மா... ... ... (௯௧)

முற்றோன்றியதன்குலமுதலான் முரட்போர்முனிக்குமுடி
வுமிவன் -பிற்றோன்றியவக்கன்னிகையால் விசயன்றனக்குப்பெ
ருநலமும் - உற்றோர்ந்துள்ளமிகத்தருக்கியுகந் தாங்கலைந்தானு
யர்மகத்தால் - பெற்றோன்பெற்றமகப்பேறுபெற்றோர் தம்மிற்
பெற்றோர்யார் ... ... (௯௨)

ஈரணமறுவற்றிலங்குதிறற் கலசோற் பவன்பார்த்தனல்பயந்தோன் - சரணமலர்தன்றலைக்கொண்டுதனு நூலெனக்குத்தருகென்றான் - மாரணமிவனாற்றனக்கென்பதுணர்ந்தும் உருவுமருதளித்தான் - ஆரணியிடத்தேசெறிந்தன்றோ வதனைச்செகுப்பதநலம்மா ... ... (௯௩)

இவ்வாறமைந்தாங்கைவருடனீரைம்பதின்மர்நனிவளர - மைவான்மீனிற்பலகோடிமன்வந்திறைஞ்சிப்புடைசூழத் - தெவ்வர்தியவெம்பெருஞ்சேனைத் திதராட்டிரனுந்தந்தையுமற் - றெவ்வாரிவற்கென் றுதிட்டிரனையொழுக்கத்தழகாலுட்கொண்டார ()

கலிவிருத்தம்.

சூதிநலந்திகழ்குருகுலத்திற் ... ... *
காதிபனாகியநங்கனைவென்றோன் ... ... *
நீதியினானிறைந்தனனுண்ணூல் ... ... *
ஓதியகேள்வியுதிட்டிரனென்று ... ... (௯௫)

மைந்தருடன்செயல்வழுவறவெண்ணிக் ... ... *
குந்திபயந்தருள்குரிசிலையிவனை ... ... *
இந்தநிலக்கினியிளவரசென்றாங் ... ... *
கந்தண்மதிக்குடைமுடியொடளித்தான் ... ...(௯௬)

சந்தனுவின்றனிமரபுதயங்கச் ... ... *
செந்திருமேவருசிறுவனுமப்போ ... ... *
திந்துவொடாதவனிருவருமன்பால்... ... ...*
வந்துதழீஇமெய்வயங்கினனைத்தான்... ... (௯௭)

துன்மதியானசுயோதனன்மாழ்கித்... ... ... *
தன்மதியாலருடந்தையையெய்திப்... ... ...*
புன்மதியாமுனைசில்லபுகன்றான்... ... ... *
மன்மதியாவுமதித்தலிலாதான்... ... ... (௯௮)

உன்பதம்யாவுமுதிட்டிரனுக்கே... ... ... *
மன்பதையோடுவழங்கினையெந்தாய்... ... ... *
அன்பதிலாவவனநுசர்மதத்தால்... ... ...*
என்பதமம்மவிறந்ததையின்றே .. .. (௯௯)

என்றலுமைந்தனையிந்துகுலத்தோன்... ... ... *
நின்றிலையான்மனுநீதியிலையா... ... ...*

பொன்றியவெப்பிபதப்புதல்வர்க்கே... ... ... *
அன்றிநமக்கரசாளுதலாமோ... ... ... (௱)
நீதியிலாநெறியெண்ணினைநீயிங்... ... ... *
கோதியவாய்மையினுறுபொருளின்றால்... ... *
ஆதிபராயவனாவருநீரும்... ... ... *
மேதினியாளுதல்வேத்தியலன்றே... ... (௱க)

இகன்மிகுகன்னனுமென்னிளையோரும்... ... ...*
சகுனியுமுண்டுதகுந்துணைநெஞ்சில்... ... ... *
உகவையிலாரொடுறேனினியென்றே... ... ... ன்
முகிழ்முறுவற்புனைமுகனெடுசொற்றான்... ... ...(௱உ)

பாதகனன்றுபகர்ந்தமொழிக்கே ... ... *
பேதகனனைபிதாமருளெய்தா ... ... *
மேதகவாழ்வுறுவில்விதுரற்கும் ... ... *
நாதகுநல்லுரைநதிமகனுக்கும் ... ... (௱௩)

ஈண்டினியென்செய்வதெண்ணுமினென்றே ... ... *
பாண்டவரோடுபயின்றுணையாமல் ... ... *
தூண்டுபரித்துரியோதனன்முதலோர் ... ... *
பூண்டனர்வெப்பகைவாழ்வுபொறாதார் ... (௱௪)

ஒருதிறனிந்நகருறைதரினன்றே ... ... *
இருதிறன்மைந்தருமிகலுவர்மென்மேல் ... ... *
அருகணுகாவகையகல்விருந்தால் ... ... *
மருவுறுநண்புவளர்ந்திடுமென்றே ... ... (௱௫)

இம்மொழிகூறலுமிருவருமெண்ணித் ... ... *
தெம்முலறயாயினர்சிறுபருவத்தே ... ... *
எம்முறைகேளலரினியவர்மதியே ... ... *
தம்மதிபேமதியாகுகவென்றார் ... ... (௱௬)

விதுரனும்வார்கழல்வீடுமனுந்தம் ... ... *
இதயநிகழ்ந்தவியப்பியபின்னர்ப் ... ... *
பொதுமையிலாதபுரோசனனென்னும் ... ... *
மதியுடைமந்திரிவருகெனவந்தான் ... ... (௱௭)

வந்தவமைச்சனுமைந்தனுமற்றைத் ... ... *
தந்தையுமங்கொருதனிவயினெய்திச் ... ... *

சிந்தனைசெய்தனர்தீமைமனத்தோர் ... ... *
குந்திமகாருயிர்கோறல்புரிந்தே ... ... (௱௮)

(வேறு)

ஆரணாதிபர்யாரும்புகழ்வது ... ... *
தாரணாதியர்நண்ணுஞ்சிறப்பது .. ... *
தோரணாதிதுலங்குபொற்கோபுர ... ... *
வாரணாவதமாநகரங்கணே ... ... (௱௯)

சென்றிருப்பத்திருவாய்மலர்கென ... ... *
ஒன்றுபட்டுமகன்றொழுதோதினன் ... ... *
அன்றுதொட்டுயிரன்னவமைச்சனால் ... ... *
நன்றுபட்டதுநன்னகரொங்குமே ... ... (௱௰)

சிற்பநூலிற்றிருந்தியமாக்களால் ... ... *
பொற்பமைந்துபொலிந்ததத்தொன்னகர் ... ... *
கற்பகாடவிபல்லதுகண்டவர் ... ... *
அற்பமென்பவவமராபதியையே ... ...(௱௰௧)

அறத்தின்மைந்தனையாங்கொருநாளவைப் ... ... *
புறத்திருந்துபுகன்றனன்காவலன் ... ... *
திறத்துநின்னிளையோரொடுஞ்சென்றுதோண் ... *
மறத்தினாற்றனிவாழுதியென்னவே ... ... (௱௰௨)

புகன்றகேள்விப்புரோசனன்றன்னையிம் ... ... *
மகன்றனக்கினிமந்திரியாகிநீ ... ... *
இகன்றவர்ச்செற்றினியோர்க்கினிமைசெய் ... *
தகன்றனாலமிவன்வழியாக்குவாய் ... ... (௱௰௩)

என்னவாங்கணிறைஞ்சியநந்தரம் ... ... *
சொன்னசொற்படிச்சூழ்படைவேண்டுவ ... ... *
இன்னவுங்கொண்டிளவரசோடுமப் ... ... *
பொன்னகர்க்குடிபுக்கனனென்பவே ... ...(௱௰௪)

ஆரவெண்குடையைவருங்குந்தியும் ... ... *
பேரஞானப்புரோசனநாமனும் ... ... *
சேரவெண்பிறைச்செஞ்சடைவானவன் ... ... *
வாரணாவதஞ்சென்றுவணங்கினார் ... ... (௱௰௫)

அங்கவன்றனருள்பெற்றழகுற ... ... *
இங்கிதத்தொடியற்றிய நீள்கொடி ... ... *
மங்குமேருப்மணிமாளிகையெய்தினர் ... ... *
சங்கம்விம்மமுரசந்தழங்கவே ... ... (ரு௯சு)
ஆவியன்னவமைச்சன்மொழிப்படி ... ... *
மேவியத்திசைவேந்தர்குலந்தொழக் ... ... *
கோவினேணைநடத்திக்குவலயத் ... ... *
தேவிமெய்களிப்பச்சிறந்தாரரோ ... ... (ரு௯எ)
கலிநிலைத்துறை.
மன்னனாவருமவாரணாவதந்தனின்மருவித் ... ... *
துன்னலார்தொழத்தொன்னிலம்புரந்திடுநாளில் ... *
பின்னநெஞ்சுடைப்புரோசனன்பேதுறுமதியால் ... *
முன்னமேயினியமைச்செனமனச்செயன்முன்னு ... (ரு௯அ)
மெழுகினுனமக்காலயம்வகுத்ததும்விரகே ... ... *
ஒழுகுகின்றதன்னெழுக்கமும்வஞ்சனையொழுக்கே ... *
எழுகடற்படையாவையுமிவன்வழியனவே ... ... *
தொழுதகையுளும்படையுளசூழ்ச்சியும்பெரிதால் ... (ரு௯௯)
சங்கையுண்டினியுண்டியுஞ்சாந்தமும்பூணும் ... ... *
பொங்குநுண்ணிழைத்துகிலுமுந்தாமமும்பூவும் ... *
இங்கிவன்பரிந்தியற்றியகோடலமென்றூர் ... ... *
கங்கைநீர்தவழ்கழனிசூழ்பழனநாடுடையார் ... (௬௦௦)
ஐயமுந்திவரிருப்புழிமபனினுமறிகன் ... ... *
சையமொத்ததோள்வலியுடைத்தபதியங்கொருவன் ... *
வையமுற்றிடைவினையொருதனிவணங்கி ... ... *
ஐயபட்டதையறிந்தருளாமுறையென்றான் ... (௬௦௧)
நந்தையேவவிற்கன்மியர்நூதனமாக ... ... *
இந்தமாநகர்த்திருமனையியற்றிடுநாளில் ... ... *
வந்தமந்திரிவஞ்சனையறிந்தறன்வடிவாம் ... ... *
தந்தையென்னையுமேவினன்றன்மையினுணர்ந்தே ... (௬௦௨)
அடியனேனுமங்கவருடனரக்குமாளிகையில் ... *
படியியற்றியகொடுந்தொழிற்பபனெலாங்குறித்து ... *
நெடியகானகத்தளவுநீணிலவறைநெறிபோய் ... *
முடியுமாறொருமண்டபங்கோட்டினன்முழைபோல் ... (௬௦௩)

வேறொருத்தருமறிவுறாவிரகினாலொருதூண்... ... *
மாறுபட்டுநீபறிக்கலாம்வழிவழிவகுத்தேன்... ... *
தேறுதற்கிதுதகுமெனத்திருவுளத்தடக்கி... ... ...*
ஊறுபட்டபோதெழுந்தருள்கெனப்பணிந்துரைத்தான் (௱௨௪)

தச்சரிற்பெருந்தலைவனுக்குரிமையிற்றனங்கள்... ... *
பிச்சரிற்கொடுத்தவன்விடைகொண்டதற்பின்னர்... ... *
அச்சமற்றினம்மடிமைக்கம்மனைவணங்கி... ... ... *
நிச்சமின்றுகொலென்றுகொலெனநினைந்திருந்தான்... (௱௨௫)

விடவிவன்சினைநெடுங்கொடிதழுவலின்மிடைந்த... ... *
அடவியெங்கணும்வேட்டையாற்றங்கள்பேராண்மை... *
நடவிநன்பகலிரவுகண்டுயிலறநடந்தார்... ... ...*
புடவிதங்கள்வெண்குடைநிழற்குளிருமாபுரப்போர்... (௱௨௬)

பாந்தளோடொருமனைவயிற்பயில்பவர்போல... ... *
வேந்தனைவருமந்திரிவலியினான்மிக்கோர்... ... ...*
காந்துநெஞ்சுடையமைச்சனைக்கைவிடாரணுகித்... ... *
தாந்தமெய்யெனவுயிரெனத்தனித்தனிச்சார்ந்தார்... (௱௨௭)

ஆங்கொர்கங்குலினழைத்துநீடரசியலுசாவி... ... *
ஈங்குநீதுயிலவைகுதியெம்முடனென்னப்... ... *
பாங்கர்மெல்லணைப்பள்ளியு பரிவுறவழங்கித்... ... *
தாங்களும்பொலன்சேக்கையிற்றங்கினர்மாதோ... (௱௨௮)

உணர்வறத்துயிலுற்றபோதற்றமங்குணராத்... ... ...*
துணைவனைத்திருத்தாட்பதந்தொழுகெனச்சொல்லி... ...*
அணிகொள்கோயிலைத்தாதைதன்னண்பனுக்களித்தான்... *
இணையிலாவமு துரகர்கோனிடநுகர்ந்திருந்தான்... (௱௨௯)

முடியுடைத்தடங்கிரியினைமுளிதழைதொறுமுற்... ... *
றடிநிலத்துறச்சூழ்வருமாறுபோலழலோன்... ... *
கொடிநிரைத்தபொற்கோபுரப்புரிசைசூழ்கோயில்... ...*
இடியிடித்தெனவெடிபடச்சிரித்தெழுந்தெரித்தான்... (௱௩௰)

அக்கணத்தினிலன்னையிலணுகியாங்கவனைத்... ... *
தொக்கசித்திரத்தூணடித்துவாரமேவழியாய்... ... *
பொக்கெனக்கொடுபோயகல்வனத்திடைப்புகுந்தான்... ...*
மூக்கணற்புதன்முனிந்தவூர்மூவரொடொப்பான்... ...(௱௩௧)

புரிந்ததீயினைக்கண்ணநீரவித்திடப்புகுந்து... ... ...*
பரிந்தநெஞ்சினைமீண்டுமப்பாவகன்சுடவே... ... ...*
கரிந்தகோயிலிற்காரிருள்புலர்ந்தபின்கண்டோர்... ... ...*
எரிந்துவீழ்ந்தனரைவருமியாயுமீண்டென்றார் ... (௱௯௨)

விருந்தராய்விடமிடவரும் வேடருந்தாயும் ... ...*
இருந்ததீமதியமைச்சனேடிறந்தமையுணராத் ... ...*
திருந்துமாமதிப்பாண்டவர்செயலுமற்றறியார் ... ...*
வருந்தினார்கடம்முயிரிழந்தெனப்புவிமன்னர்... ... (௱௯௩)

போதுபட்டிருள்புகுந்தொளிபோனவானகம்போல்... ...*
மாதுபட்டபார்மடந்தைதன்மதிமுகமழுங்கத் ... ...*
தீதுபட்டனகுருகுலச்செல்வமென்றிரங்கி... ... ...*
ஏதுபட்டனமுனிவரர்முதலியோரிதயம்... ... ...(௱௯௪)

கொட்பனற்சுடவிறந்தமைகேட்டலுங் குருக்கள்... ... *
துட்பதத்துடனழுதிடுஞ்சுயோதனன்முதலோர்... ... *
உட்பனித்துமேல்வெயிலுறவெதும்புநீரொத்தார் ... ...*
பெட்புறப்புவிமுழுவதும்பெறுங்கருத்துடையார்... (௱௯௫)

பொன்னலங்கொளமெழுகினாலயம்புனைந்து... ... ...*
துன்னுவெங்கதைப்படமருச்சுதனையேசுடுவான்... ... *
என்னவாண்மைகொ லெண்ணின னெண்ணினுஞ்சுடுமோ.. *
வன்னிதன்பெயர்மருச்சகனென்பது மறந்தே... ... (௱௯௬)

௪ - வது. வாரணாவதச்சருக்கம் முற்றிற்று.

ஆ_திருவிருத்தம் - ௬௱௯௬.

௫ - வது.

வேத்திரகீயச்சருக்கம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியச் சந்த விருத்தம்.

சீதநாண்மலர்க்கோயின்மேவுசெந் திருவினாயகன் தெய்வ நாயகன் - வேதநாயகன் பூதநாயகன் விரதர்நாயகன் விபுதர்நா யகன்- போதகாதிபன் முதலைவாயிடைப் பொறைதளர்ந்தழுமுன்

பொதுவிலேநினைந் - தாதிமூலமே யென்னமுன்வரு மாதிநாய
கனடிவணங்குவாம்... ... ...(௧)

தோள்கரம்புறந் தன்னிலன்னையுந் துணைவர்நால்வருந் தொ
க்குவைகவெங் - கோள்கரந்தபஃ றலையராவெனக் கூனிநீணெ
றிக் கொண்டுபோயபின் - தாள்களின்கறித் தாள்பறிந்துவீழ்த
ருவனத்திலோர் சாரன்முன்னினன் - மூள்கடுங்கொடுஞ் சினவு
கன்றமா மும்மதக்களி றனையமொய்ம்பினன் ... (௨)

அவ்வனத்தில்வாழரமடந்தையென் றையமெய்தவோரடல
ரக்கிவந் - திவ்வனத்திலிந்நள்ளென்யாமநீ யெங்கொல்வந்தவா றி
வர்கள்யாரெனச் - செவ்வனத்திகழ்கூரெயிற்றெழுந் தெண்ணிலா
வினிற்றிமிரமாறவே - வெவ்வனற்சுடர்க்கொத்தவோதியாள் வீம
சேனனோடுணாவிளம்பினள் ... ... (௩)

யானும்வந்தவா றுணாசெய்கேனுனக் குணாசெய்நீயெனக்
கியார்கொலென்னலும் - தானுமங்கவன் றன்னொடோதினுடரூவு
மாதரந்தங்குசிந்தையால் - ஊனுகர்ந்துதின் றிடுமிடும்பனென்
றொருவனுண்டிராவணியையொத்துளான் - மானுடங்கண்மெய்க்
கந்தமூர்தலால் வரவறிந்தனன்வாளரக்கனே ... (௪)

எம்முனேவலால் யான்மலைத்திடற்கெய்தினேனினிக்கொன்
றுமென்பயன் - அம்மவெற்பிரண்டனையபொற்புயத் தழகெறிக்
குநீடாரமார்பகேள் - கொம்மைமாமுலைத் தெரிவையர்க்குளங் கூ
சுமாசைநோய் கூறுகிற்பதென் - றெம்மனோர்களுஞ்சொல்வர்
யானுனக் கெங்ஙனேகொலாமிறுதிகூறுவேன் ... ... (௫)

பெருஞ்சுழிப்படக் கரைபுரண்டெழப் பெருகும்யாறுபின்
பிறழ்கலங்கல்போய் - அருஞ்சுவைப்படுந் தெளிவினோடுசென் று
ழி ஃவலைவாயணையுமாறெனப் - பெருஞ்சினத்துடன் கொன்றுதி
ன்றிடப் போதருந்தொழிற்பேதைநான்மெலிந் - திருஞ்சிறைச்சு
ரும்பிசைகொண்மாலையாயின்னமா லுழந்துன்னையெய்தினேன்.)

நீடியிங்குநானிற்கின்மாரனு நிருதநிற்கவந்நிருதன்வெம்
மையோ - டோடிவந்தெனைக் கொல்லுமும்மையு மொருகணத்தி
லேயுயிர்செகுத்திடும் - நாடியென்கொன்மற் றுய்ந்துபோகலீர்
நம்பியென்னைநீ நலனுறத்தழீஇக் - கோடியம்பரத்திடையெழுந்
துனைக்கொண்டுபோவலோர் குன்றிலென்னவே... ...(௭)

இரக்கமின்றியேதனிவனத்திலேபிளைஞரொம்முனையர்யைவி
ட்டெமைப் - புரக்கவல்லளென்றொருமடந்தைபின்போவதாட
வர்க்காண்மைபோதுமோ - வளைக்கண்வாழ்வு கூறும்முனெம்மு
னே மலையவெண்ணிமேல்வந்தபோதுபார் - அரக்கனாகிலென்ன
வுணனாகிலென் னவனைபோர்கணத்தாவிகொள்வனே (அ)

இடும்பிதன்மனங்கொண்டகாளையிங் கிவையியம்பளவையி
லிடும்பனும்-கொடும்பெருஞ்சினங்கதுவுகண்ணினன் குருதிநாறு
புன்கூரெயிற்றினன் - உடம்புபெற்றதோரிருண்முகத்திலேயோ
ரிரண்டுவெஞ்சுடருதிக்கவும் - நெடுப்பிறைக்கொழுந்தோரிரண்
டுவானிலவெறிக்கவுநின்றநீர்மையான் ... (கூ)

இடிபடுத்தெழுந்தெழிலிமின்னுமாறென்னநீடுகுல்றெறி
ரொளிககவின் - வெடிபடச்சிரித்திருபுறத்துநாமிளிரவுட்புகைந்
தொளிரும்வாயினன் - நெடிபடுத்தவெங் கானமெங்கணும் நிழ
ல்படுத்திவானுற நிமிர்ந்துளான் - கொடிபடுத்தநுண்ணிடையி
டும்பியைக் கூவியவ்விடைக்குறுகினனமோ ... (ய)

உணவினசையிற் கொல்லவந்தநீ யுவகையாசையாதுள்ளழி
ந்திவன் - கணவனாமெனக்காதலிப்பதே கங்குல்வாணர்தங்கடனி
றப்பதே - அணவுவெம்பசிக் கனலவிந்துபோயனங்கவெங்கன
ற்கொருவடற்புலிப்- பிணவையுன்பினிற்கலைதயப்பதேபேதைமானு
டன்பேசுகிற்பதே ... ... (யக)

வாரடாவுனக் கியாதுதர்னர்தம் மகளடுக்குமோவானமாதர்
தோள் - சேரடாமலைந்துயினாமெய்யினைத் தின்றுதேவரூர்சேரு
விப்பன்யான் - போரடாதுனேடாளியேறுபுன் பூசைதன்னுட
ன்பொரநினைக்குமோ - பாரடாவெனாண் மையையரக்கர்கண்பட்
டபேரில்யார்பாரில்வைகினர் ... ... (யஉ)

என்றுசீறிமற்றவனடுத்தல்கண் டிணையிலாவிறற்றுணைவர்நா
ல்வரும் - நின்றயாயுமங்கொருபுறத்திலே நிற்கமையல்கூர்நிருத
வல்லியும் - வென்றிதல்குமாவந்தவித்தைபோல் விழிபரப்பமே
ல்வீமசேனனும் - சென்றுதோள்களிற்பற்கனாவுடன் சிதறவாயி
னிற்சென்றுகுத்தினான் ... ... (யங)

குத்தினானிவன் குணபவல்சியக் கூரனுங் கரங் கொண்டு
வீமன்மேல் - மொத்தினான்முனைந் திருவருப்பொரமுரனுடன்

சினைமுளைமுளைவே-தத்தினொடுத் தம்மரங்களிற்சாடினார்புயச்சை லமொன்றொடொன் - றொற்றினாரிரண் டம்புதங்கள்வானுருமெ திர்ந்தொத் தோதைவிஞ்சவே ... ... (௧௪)

வளர்ந்ததிண்கருங்குன்றுகாந்தளம் மலர்வதென்னவேவான கம்படக் - கிளர்ந்தசெம்புனீர் பொசியமெய்யினன் கேதநெஞ் சினன் கோதவாய்மையன் - தளர்ந்துவீழ்நிசாசரனுமாடகன்றன் னையொத்தனன் பின்னைமுன்னுறப் - பிளந்தளைந்தகோளரியை யொத்தனன் பிரதையென்னுமின்பெற்றகாளையே... (௧௫)

கலிவிருத்தம்.

வன்றிறலிடும்பனைவடிம்பினாலுடல் ... ... *
ஒன்றிரண்டாகுமாறுடன்றமைந்தனை ... ... *
அன்றுகண்டனளியாயரியின்பேடிதன் ... ... *
கன்றுவெங்கரிபொரக்கண்டதென்னவே... ... (௧௬)

இளைஞருந்தம்முனுமிவனரும்பகை ... ... *
களைகுவனினியெனக்கண் களித்தனர் ... ... *
விளைவுறுகாதலான்மெலிந்தபாவையும் ... ... *
உளைவுடனுவகையுமொருங்கினெய்தினாள் ... (௧௭)

பெருந்திறனிசாசரப்பிணத்தையவ்வனத் ... *
திருந்துளபறவைசட்கிருள்செய்கங்குலில் ... *
விருந்திடக்கொளுத்தியவிளக்கெனும்படி... ... *
அருந்திசைபொலிவுறவருக்கன்றோன்றினான் ... (௧௮)

கரங்களினிசாசரவிருளைக்காய்ந்துகொண் ... *
டிரங்கிநீள்வனத்திடையிரவின்மாழ்கிய ... ... *
வரங்கொடாமரைமுகமலர்த்துநீர்மையால் ... ... *
உரங்கொள்வீமனுக்கெதிருதயபானுவே ... (௧௯)

எண்டகுமவர்மனத்திடும்பிமன்மதன் ... ... *
மண்டெரிசுடுதலின்வாடுமேனியாள் ... ... *
கொண்டவெங்காதலின்குறிப்பையவ்வழிக்... ... *
கண்டனன்காணலர்ச்செற்றகாளையே ... ... (௨௰)

மாய்ந்தவன்றுணைவிகேள்வதுவையின்னமும் ... *
ஏய்ந்திலனெம்முனும்யாங்கண்மானுடர் ... ... *

ஆய்ந்துகொண் முறைமையாலரக்கர்பாவைநீ ... *
காய்ந்தமைபறிதிமுன்கணையிராமனே ... ... (உக)
ஆசைகொளரக்கியோட நிலன்காதலன் ... ... *
பேசியகட்டுரைகேட்டபெற்றதாய் ... ... *
ஓசைகொண்மைந்தனோடுசாவியன்பினுல்... ... *
ஏசறவுரைத்தனளினிமைகூரவே ... ... (உஉ)

மறுத்தறைவதுசடனன்றுமாந்தருக்... ... ... *
கறத்தியலார்களுமமைத்தல்வேண்டுமால் ... ... *
உறத்தகுமிவளை நீயுப்முன்வாய்மையால் ... ... *
கறுத்தவருயிர்கவர்காளையென்னவே... ... (உங)

அத்தினத்தவர்வயினவல நீக்குவான் ... ... *
மெய்த்தவப்பழமறைவியாதன்வந்தனன் ... ... *
பத்தியிற்சிறுவரும்பணிந்துபோற்றினுர்... ... *
முத்திபெற்றவரினுமுற்றுசிந்தையார்... ... (உச)

தனிவனமிகந்துநீர்சாலிகோத்திர ... .. *
முனிவன்ஞ்சில்பகல்வைகிமுந்துற ... ... *
மனனுறப்பார்ப்பனமாக்களாகியே ... ... *
இனிமையின்வேத்திரகீயமேவுவீர்... ...... (உரு)

எனத்து ர்படமொழித்திமையவன்செல ... *
வனக்கனாவிட்டவண்மருவிவைகினுர் ... ... *
வினைப்படுத்தியாழினேர்முறையின்வேள்விசெய் ... *
கனக்குழற்கன்னிதன்காதலாளொடே... ... (உசா)

குந்தியையிரவுநன்பகலுங்கோதிலா ... ... *
வந்தனைபுரிதலின்மகிழ்ந்திம்பியும் ... ... *
வெந்திற வீமனும்விழைந்துவள்ளியும் ... ... *
கந்தனுமெனப்பெருங்காதல்கூரவே... ... (உஎ)

மான்மதங்கமழ்கொடிமந்திரந்தொறும் ... ... *
கான்மணங்கமழ்தடங்காவகந்தொறும் ... ... *
தேன்மிகுசுனைநெடுஞ்சிலம்பகந்தொறும் ... *
மேன்மணம்புணர்ந்தனர்வேட்கைவிஞ்சவே ... (உஅ)

நிறந்திகழிருட்பிழம்பென்னநீண்டறப் ... ... *
புறந்தருமுரோமமும்பொருப்புத்தோள்களும் ... ... *

மறந்தருகணைகுரல்வாயுமாகவே ... ... *
பிறந்தனன்கடோற்கயனென்னும்பேரினான் ... (உ௬)

காதியதிறனரகாசுரன்றனை ... ... *
ஆதிவெங்கோலமன்றளித்தவாறுபோல் ... ... *
மேதினியதித்தபோர்வீமனல்கிய ... ... *
சோதியம்புதல்வனுந்தொழுதுசொல்லினான் ... (௩௰)

நிறையுடைத்தந்தையார்நீர்நினைந்தபோ... ... ... *
துறைவிடத்தெய்தியாங்குறைத்தல்செய்குவேன்... ... *
இறைவரிப்படிவிடைத்தருகென்றேகினான்... ... *
பிறையெயிற்றுயொடும்பெற்றபிள்ளையே... ... (௩௧)

சாத்திரமறைதெரிமுனிவர்தம்வயிற்... ... ... *
காத்திரமாறியக்காவல்வேந்தரும்... ... ... *
கோத்திரஞ்சூத்திரங்குடியுரைத்துளார்... ... ...*
வேத்திரகீயமாநகரிமேவினார்... ... ...(௩௨)

அந்தணாவரும்பாயுமந்நகர்... ... ... *
வந்துழியதிதியர்வரவுகாண்டலும்... ... ... *
முந்துபுமுற்றுபுமுகமன்கூறினார்... ... ... *
செந்தழல்வேள்விகூராதிதேயரே... ... ...(௩௩)

நன்மனைவாழ்க்கையினயந்தசிந்தையால்... ... *
மன்மனையனையதன்மனையிலோர்முனி... ... *
தன்மனைபம்மனைதம்பிமாரொடும்... ... ... *
என்மனைவருகெனவெதிர்கொண்டேட்டினான்... ...(௩௪)

ஒருதினத்தமிழ்தெனவுள்ளநாளெலாம்... ... ... *
வருமுறைப்படிவிருந்தாகிவைகினார்.. ... ... *
அருநெறிக்கடவுளர்க்கமுதமூட்டுதல்... ... ... *
இருபிறப்பாளருக்கென்றுந்தன்மையே.. ... (௩௫)

பொன்னகரணுகினர்போலநெஞ்சுறத் .. .. *
தந்நகரொனும்படிதாயுமைந்தரும்... ... ... *
இந்நகரந்நகநாளிருந்தவெல்லையில்... ... ...*
அந்நகர்புரிந்ததோராண்மைகூறுவாம்... ... ...(௩௬)

எழுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

மறையுமுருவினொடரியகுருகுல மகிபர்நெடுவனசரிதரா
ய் - உறையும்வளமனை யுடையமடவர லுருகுபிரதைத னுயிரனு

ள் - குறைவில்பொலிவினள் விரதநெறியினள் குழுவுநிதியினள்
கொழிமைபால் - இறையுமொழிவற விருகணறல்வர வெரிகொள்
கொடியெனவினையினுள்... ... ... (௫௭)

மறுகியழிவதென் மொழிகமுனிவரன் மனைவி யெனவிவள்
வினவலும் - குறுகியவளுட னுரைசெய்தனளுறு குறையையுளந
ன்குறையவே - முறுதசினவனல்பொழியும் விழியினன்முகனில்
பகனெனு முரனுடைத் - தருகணிசரனுளனிவ்வளநகர் தமுவு
ம்வனனுறைதகுதியான்... ... ... (௫௮)

அருளிலிதயமு நெறியில்சரிதமு மழகிலுருவமு மதிர்குர
ற் - பொருளிலுரைகளு முடையன் முழுதுடல் புலவுதரு
சமழ்பொறியினன் - மருங்குநரியொடுகழுகுதொடர்தர வலியபி
ணநுகர்சுவையரு - திருளின்மிசையிருபிறைகளெனவுளெயி
றுதிலவெழுமிதழினன்... ... ... (௫௯)

அந்தகனுமிக வஞ்சிமுதுகிடுமந்தனிருதனுமிந்தவூர்-வந்து
குடியொடு கொன்று பலரையு மன்றமறுகிடைதின்றநாள் - எந்
தைமுதலிய வந்தணருமவ ணிங்குவருதொழி லஞ்சியே - சிந்தை
மெலிவுற நொந்துதலைமிசை சென்றுகுவிதருசெங்கையார் (௬௰)

ஒன்றுபடவெதிர்கொன்றுபலருயி ருண்பதறநெறியன்று
நீ - இன்றுமுதலினியென்றுமுறைமுறை யெங்கண்மனைதொறு
ம்விஞ்சையோர் - குன்றமெனவருபண்டியறுசுவை கொண்டவ
டிசிலுநன்குலம் - குன்றுநரபலியொன்றுமிவ்வைதிறை கொண்டு
பூரிகுவமென்றலும் ... ... (௬௧)

அன்றுமுதலடல்வஞ்சகனுமிறை யன்பிலெடுபெறுவன்பி
னால் - என்றுநிலைபெறவுண்டியுடன்மனை யெங்குமிடுபலியஞ்சு
றத் - தின்றுதிரிகுவனின்றென்மனைமுறை சென்றுபணிகவர்திங்க
ள்போல் - நின்றுதளர்வுறுகின்றதெனதுயிர் நெஞ்சமிலதொருத
ஞ்சமே ... ... (௬௨)

கன்னியிவள்பிறர்பன்னியெனதிரு கண்ணின்மணிநிகர்சன்
மனும் - மன்னுகுலமுதல்பின்னையொருவரு மண்ணிலுறுதுணை
யின்மையால் - இன்னல்பெரிதுளதென்னைபுரிகுவ தெனவறிகி
லெனன்னைகேள் - முன்னைமனைநிகழ்தன்மமுனிவனை முன்னினி
டர்நனிதுன்னுமால் ... ... (௬௩)

ஏதமுறவுறவானமனைமகள் யாவுமுனைசெயயாதவன் - றிறி
ல்குலமகளார்வமுடனவ டேறவொருமொழிகூறினுள் - ஆதியனு
மனெடோதுழுவமைய முடல்வலியுடையாண்மையான் - மோதி
யிடையிருள்யாமசரிதனை மூளையுகவுடல்கீளுமே ... (௪௪)

வொவ்வையிதழ்மட நவ்வியலம்வரல் ருவ்விலனவினும்வெ
வ்வியோர் - ஐவருளர்சுதர்கைவில்விறலின ரவ்வியமுமிலர்செவ்வி
யோர் - இவ்வவரிலெனமை யுய்வுகொளுமவ னெவ்வெவ்வுலகையும்
வவ்வுதிண் - பவ்வமனைமதி தெய்வமுனிவரர் பையவறதெறிசெ
ய்வனே...... .... (௪௫)

அவனையிடுபலியருளுகெனமொழி யளவின்மறலியுமனைவு
றச் - சிவனைவழிபடுமகவையருளிய செனகசெனனியர்நிகரான
த் - தவனின்முதிர்தருமுனியும்வழுவறு தனதிலறனுடைவனிதை
யும் - துவனியறமனமகிழ்வொடினிதறு சுவைகொளமுதடுதொ
ழிலராய் . ... (௪௬)

தண்டரளமலைவெண்கயிலைமலை சங்கமலையெனநங்கைமார் -
மொண்டுசொரிதருகின்றவடிசிலு முந்துகறிகளும்வெந்தபால் -
மண்டுநறுநெய்யொடந்தவிடலையு மைந்தரனைவருமுண்டுதம்-பண்
டிநிறைவுறுபின்புபிறிதொரு பண்டிபொருததுபண்டமே(௪௭)

வையமுழுதுடை யையனிளவலை வைகலுடன்மனை வைகு
வோர் - உய்யும்வகைபுகலையவுணாயினை யொய்யெனவிரைவொடு
கைகொளா - வெய்யபகனுடல்பெய்யகுருதியின் மெய்யையெ
ழிலணிசெய்தனன் - செய்யமலர்கொடுசெய்யதுகிலொடு செய்ய
கலவையின்மெய்கொடே ... . (௪௮)

துற்றபலகறிசெற்றியமலைசெய் துப்பொரிமகிரியொப்பெ
னச் - சற்றுமிடனறமொய்த்தசகடிரு சக்ரவுருளைகளுய்க்கவே -
உற்றநிரைநிரைபத்திபடவலி யொத்தபகடுகள்கட்டினுன் - நெற்
றிமிசையொருகொற்றவடலரி நிற்பதெனவொளிர்பொற்பினுன்.

வேறு. [௪௯]

மண்டலங்கொள்வடி வுடனடற்பரிதி மண்ணில்வந்ததென
மறுகினிற் - கண்டதண்டமுனிகுலமடங்கவிரு கண்களிக்கவருகா
ட்சியான் - வெண்டரங்கமெனவீசுபேயிரதம் விஞ்சுகானநெறிமீ
துபோய் - அண்டரண்டமுகடுறவளர்ந்தன னரக்கனின்றவுழியதி
டிவே ... ... (௫௰)

ஆதிபருவம்,

களிந்தவெற்புதவுநீலமாநதியடுத்ததுன்றிலொரு கழிமுழைத்- தெளிந்தபற்களொடுநாவைமென்றுநனி தின்றுவெம்பசிகொடையினன் - முனிந்துழுற்றுமனம் வேகவேகநெடு மூச்செறிந்துபுகைமுகனுடன் - விளிந்ததொத்துவழிகுழியநின்றுசுழல் விழிதிரைத்துவரும்வெகுளியான் ... ... (௫௧)

வெற்றெலும்பினுயராசனந்தனில்விளங்கநீழலிடைமேவரச்- சுற்றுநின்றுபல சம்புகங்கடுதி சொல்லவெல்லன்மிகுதுன்முகன் - உற்றுநின்றநிலைகண்டுகந்திவனை யுயிரொழிந்திடவுடற்றினுல் -இத்தரையுண்டிகெடுமென்றுபண்டியிலெடுத்தவல்சிநுகரிச்சையான்.

வன்பினுவுரக பதியளித்தநெடு வாரியாரமுதமுண்டகோ - முன்பினுகவுயர்சகடிருந்தெதிர் முகந்துகொண்டுவரை முழையுளே - அன்பினுலடையு மன்னமென்னநிறை யன்னமுற்றவுமருந்தினுன் - பின்பினுகவிதுகண்டு வெம்பசிகொள் பகனுமெய்தியிவைபேசுவான் ... ... (௫௩)

புலிதனக்கிடும்விடக்கைநின்றதொரு பூசைதின்னுமதுபோலநீ -பலியனைத்தையும்விழுங்கினுலிது பலிக்குமோவெளிமைபாெனு - ஒலிபடக்கிரியிலுருமெறிந்ததென வோடிவந்துபிடரொடியவே - வலிபடப்பிணைவிரற்றடக்கைகொடு மாறிமாறிமுறைசிதினுன் ... ... (௫௪)

பக்கமும்பிடறுமொக்கமுட்டிகள் படப்படக்கவளபாரமாய் - விக்கநின்றனன்வயிற்றிரண்டருகும்விழவிழமுன்விழுங்கவும்-புக்கபண்டமுடனுனுடற்றசை பொசிப்பனெனங்கணிவைபோவதே - அக்கடுங்கையுமிளைத்துவெஞ்சினமு மாறிநின்றனனரக்கனே ... ... (௫௫)

அச்சகட்டினிலெர்ரொட்டுணைச்சுவடுமற்றபிற்சிறிதுமச்சமற்- றுச்சமுற்றவெயிலர்க்கனைத்திவனு டுத்தரித்துரைசெய்தொட்டினுன் - மெச்சமெச்சுமூலகத்தரக்கர்களில்விக்ரமத்திறலின்மிக்கநீ - கச்சகச்சபலகத்தைவிட்டினது கட்டுரைத்திறனுடுகட்டுவாய் ( )

சொல்லினென்பயனரக்கனீமனிதன் யானுனக்குரியதொழில்களாம் - மல்லினும்படைவிதத்தினுஞ்செருவில் வல்லவல்லனபுரிந்துபோர் - வெல்லநெஞ்சமுள தாகில்வந்துபொருவிறலிடும்பனையும்வென்றனைத்-கொலலவந்தனனெனப்புகன்றிருகை கொட்டிமார்பின்மிசைகுத்தினுன் ... ... (௫௭)

பட்டவர்த்தனர்கள் பொற்கிரீத்தின்மலர் பொற்புடைச்சர
ணபற்பானும் - நெட்டிருட்சரனும்வெற்புவெற்பினொடு நிச்சயித்
துடலநிற்பபோல் - வட்டம்வட்டம்வரவொட்டியொட்டியுறுமற்
றொழிற்செருவின்மட்டியா - முட்டியுத்தநிலைகற்றகற்றவகை மு
ற்றமுற்றவெதிர்முட்டினார் ... ... (௫௮)

கரங்கரங்கொடுபிணங்கவுந்தமதுகால்கள்கால்களொடு கட்ட
வும் - சிரஞ்சிரத்தினொடு தாக்கவுங்கொடிய சிங்கவேறனைய திறலி
னார் - உரங்களிட்டும்வளர்தோள்களிட்டுமெதிரொற்றிமற்சமருட
ன்றபின் - மரங்களிட்டுமுயர்கற்களிட்டுநெடுவாதினோடிகலி மோ
தினார்...... ....(௫௯)

உலாவருந்தனது தந்தையொத்தவலி யுடையகாளைகழ லு
தையினால் - விலாவொடிந்துதடமார்பொடிந்துமிடல்வெரி னொ
டிந்துபடுவெம்பிணப் - புலாலனைந்தவிரு கையொடிந்துபொரு
புயமொடிந்துகடைபொய்த்தவர்ப் - நிலாவெழுங்கொடிய வெயி
றொடிந்துசெய லின்றிவாணிருதனிற்கவே......... ... ...(௬௰)

உண்டியற்றயரு மியாதுதானனடி யுண்டுமெய்த்தளர் வொ
ழிந்தபின் - மண்டியிட்டெதிர்விழுத்திமார்பினிடைமத்தகத்திடை
மடங்கலில் - திண்டிறற்பருமிடற்றைவன்பினொடுதிருகிவீசியொ
ரு செங்கையால் - பண்டியிற்கடிதினிட்டுமாருதிபுகுந்தனன் ப
ழையபதியிலே...... .... (௬௧)

எகசக்கிரவனத்திருந்துதிறல் யாதுதானனையிமைப்பினில் -
சாகமுட்டியிலடர்த்துமாமுனிவர்தம்பதிப்புறநடந்ததோர் - வே
கரிக்கடுவனத்திலிட்டுமல ரோடைமூழ்கவிறல் வீமனும் - மோகரி
த்தவுணனாக்கடிந்துகடன் முளரிநாயகனுமூழ்கினான்... (௬௨)

வாசயாமமணிவிளக்கெடுப்பவிவன் வந்துதாழுறையு மனைபு
குந் - நீசனோடுமை யெனத்தவம்புரியு மிருவர்தாள்களு மிறைஞ்
சியே - நேசமானவரு ளன்னையைத்தொழுது தம்முனைத்தொழு
துநெஞ்சுறத் - தேசினோடினைஞர்தொழமகிழ்ச்சியொடு தழுவின
ன்முறைமைதிகழவே...... .... (௬௩)

அகமலர்ந்துமுனி யாசிசொற்றிடவு மன்னையாருமுனாகூற
வும் - முகமலர்ந்துரிய துணைவராண்மைதிகழ் மொழியவுஞ்சமா
மொய்ம்பனைச் - சகமலர்ந்ததிரு வுந்திமால்கொலிவனென்றுமற்

றுளசனங்களும் - மிகமலர்ந்தபுன லோடையிற்குழுவி நனிவிய
ந்திசைவிளம்பினர்...... .... (௬௪)

௫ - வது. வேத்திரகியச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் -௫- இ-திருவிருத்தம்-௪௰௫.

௬-வது.

மாலையிடு சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குண்டலமிலங்கச்சங்குமா ழியுங்குலவுகாந்தி...... ... *
மண்டலந் துதிக்குந்திங்களிரவிமேல்வடிவந்தாண்ட...... *
விண்டலத்திலங்குமீதவவுணனைவெறுத்துவீழ்த்த..... *
புண்டரிகங்கள்பூத்தபுயலினைப்போற்றிசெய்வாம்... (௧)

இங்கிவரிவ்வாறிவ்வாறிருக்கையிலிருக்குநாளில்...... ...*
அங்கண்மாஞாலமெங்குமரக்குமாளிகையில் வீந்தார்...... *
பங்கமில்குணத்தான்மிக்க பாண்டவரொன்றுமாழ்கித்.... *
துங்கவேற்றுருபமேயன்சூழ்ந்ததுசொல்லலுற்றும்... (௨)

மறைவழாமுனிவர்நின்றமரபினைநோக்கிமன்னன்... ... *
இறையெனுமைவர்மாண்டாரேந்திழைக்கினிமைகூர்தல்... ... *
முறைமையாதென்னப்பொய்யாமுந்தவரைவமொன்னத்...... *
குறைவிலதென்னவிண்ணின்வாணியுங்கூறக்கேட்டான்... (௩)

வணங்கினன்வாழ்த்திமுந்தவந்திலர்வந்துசேர்வர்.. ... *
இணங்கினுங்கேண்மைகொள்வானிச்சையால்யாகத்தீசன்..... *
அணங்கினையன்றுவேள்வியனலினிலன்றளித்தான் .... *
சுணங்கணிமுலையினாளைச்சூட்டுமெல்லொருடையர்லெலன்றன் (௪)

வரத்தினூம்பிறந்தவாறும்வான்மொழிபுகன்றவாறும்... *
சிரத்தினால்வணங்கிக்கேட்பத்தேசிகனுரைத்தவாறும்...... *
உரத்தினர்கெடாதவாறுமுணர்ந்துதன்பேதையின்னம்... *
சரத்திறலுயர்ந்தவின்மைத்தனஞ்சயற்குரியளென்றுன்... (௫)

தாலவரித்தவற்கேயெய்தவுரியளென்றநயளென்று... ...*
கான்வரிச்சுரும்பின்மாலைக்காவலர்கம்காலைபோக்க... ...*

மான்வரிக்கண்ணிக்கேற்றவதுவைநாண்மலர்பூவொன்றைத்... *
தேன்வரித்தெவ்வனவந்துதிரண்டதுகுமரர்சேனை... (௬)

ஆங்கதுநிகழ்ந்தமாற்றமந்தணனொருவன்வந்தோன்... *
ஈங்கிவர்க்குளாக்கலைந்தளாவருமாயுங்கேட்டுப்...... ...*
பாங்குடைப்பதியில்வாழும்பார்ப்பனமாக்களோடும் ... *
தாங்களுங்கொடியகானந்தம்மனத்தேரிற்போனார்... ...(௭)

சாரதந்திரத்தின்மிக்கதபோதனன்சதுர்வேதங்கள் ...... *
பாரதந்தன்னோடைந்தாம்படிபெறப்பகர்ந்தமூர்த்தி...... *
நாரதமுனியையொப்பானராசிபர்நடந்துசெல்லும்...... *
நீரதர்நெறியில்வாவிநிறைந்தநீரொன்னநின்றான் ... (௮)

வணங்கலும்வாழ்த்திமுந்தவந்துநீர்வாழ்வுசெய்தீர் ... *
இணங்கினுங்கண்மைகொள்வானிச்சையால்யாகசேனன்... *
அணங்கினையன்றுவேள்விபழலிடையளித்தானந்தச்...... *
சுணங்கணிமுலையினாளைச்சூட்டுமேதொடையலென்றான்... (௯)

இப்பகலிரவும்வைகாதேகியாங்கெய்துமென்றும்... *
அப்பகன்மன்றல்பெற்றூற்றோன்றுவதாண்மையென்றும்... *
செப்பியம்முனிவன்போகச்சிறுவரும்பெரியகங்குல் ... *
மைப்புறப்பார்த்தன்செங்கைமணிவிளக்கேற்றப்போனார் (௰)

புத்திரர்போயக்கங்கைப்பூந்துறையடைந்தபோதில்..... *
குத்திரவிஞ்சைவேந்தன்குறுகிவெங்கொடும்போர்செய்பச் *
சித்திரத்தேரன்றன்னைத்தேவர்கோன்மதலைசெந்தீ ... *
அத்திரத்திருந்தைத்தேரனுக்கினனிமைப்பினம்மா ... (௰௧)

தோற்றவனறிந்துமீண்டுந்தோழமைவிசயற்காகி ... *
ஆற்றலும்புனலுமாறுமவன்றுணையாகநீந்திச் .. ... *
சாற்றுமுற்கசகந்தன்னிற்றவுமியமுனியைக்கண்டு..... ... *
போற்றுமற்றவன்றனோடும்புனனெறிபுறம்பிட்டாரோ... (௰௨)

புலர்ந்தனகங்குற்போதுப்பொழிதருபனியுஞ்சேர ...... *
மலர்ந்தன்மனமுங்கண்ணும்வயங்கினதிசையும்பாரும் ...... *
அலர்ந்தனதடமுங்காவுமார்த்தனபுள்ளுமாவும் ... ... *
கலந்தனகுருகுப்பேடுங்கலித்தனமுரசுஞ்சங்கும்... ... (௰௩)

குன்றமுங்கொடியகானுங்கூரிருட்கங்குனீங்கி... ... ... *
நன்றுநன்றுதவவர்த்தீர்நடந்துநீரிளைத்தீர்போலும்... ... *

என்றுகொண்டுவகையோடுமினமலர்க்கழுநீர்வாச ... ... *
மன்றலந்தென்றல்வீசிவழிவிடாய்தணித்ததன்றே ... (௰௪)

வெறிபடுமுளரிமொக்குள்விரியதநோக்கிச்சுற்றும் ... *
பொறிவரிவண்டினீட்டம்புறத்திருந்திரங்கவண்டொன் ... *
றிறகரால்வீசிப்புட்புக்கின்மதுநுகர்தல்கண்டு ... *
நெறியிடைநிமித்தமாகநெஞ்சுறநினைந்துசென்றார்... (௰௫)

வண்டுறைமருங்கினாங்கோர்மாங்கனிவீழக்கண்ட... ... *
தண்டுறைமீன்களெல்லாந்தத்தமக்கிரையென்றெய்த... ... *
விண்டுறைகிழியவோடிவென்றொருவாளைதன்வாய்க் ... *
கொண்டுறைவலிமைநோக்கிக்குறிப்பினாலுவகைகூர்ந்தார் (௰௬)

மாக்குரலளகவல்லிவனுவையினழகுகாணத்...... ...... *
தாக்குரலடிகொள்யானைத்தரணிபரெவரும்வந்தார்... ... *
வீக்குரன்விசயப்பூணீர்விரைவுடன்வம்மினென்று... ... *
கூக்குரல்விளிப்பபோலுங்கோகிலக்குரலுங்கேட்டார் ... (௰௭)

நீடுதலில்லையென்றேநிருபதிகன்னிமன்றல்... ... . *
கூடுதலிவர்க்குண்டாகுங்கொற்றவர்குறைபொறாமல்..... *
ஓடுதலுண்மையென்னத்தோகைகளோகையோடும்... ... *
ஆடுதனோக்கிநோக்கியகமகிழ்ந்தேகினாரே ... (௰௮)

பூவெலாஞ்சுரும்புமொய்ப்பப்புனலெலாம்புள்ளுலவக ... *
மாவெலாந்துணையின்மேவமரனெலாம்வல்லிதோய... ... *
ஏவெலாம்பயின்றவிற்கையேற்றிளஞ்சிங்கம்போல்வார் ... *
காவெலாமருங்குதோறுங்கண்டுகண்களிக்கநின்றார் ... (௰௯)

வாரணமாய்கைசூழ்ந்தமாயவன்றோற்றம்போலப்... ... *
பேரொளிபரப்பிபார்க்கும்பேசருஞ்சிறப்பிற்றாகிப் ... *
பூரணகும்பம்பொற்கோபுரங்களாற்பொலிந்துதோன்றும்... *
ஆரவமிகுந்தபல்புள்ளகழிசூழ்புரிசைகண்டார்... ... (௨௰)

மங்கலமுழவம்விம்மமன்னுபல்லியங்களார்ப்பச் ... ... *
சங்கினமுழங்கவெல்லாத்தானையும்பரந்துசூழ ... *
எங்கணுநெருங்கிவைகுமிராசமண்டலங்களோடும் ... ...*
துங்கவேற்சோமகேசன்றொல்லைமாநகரிபுக்கார்... ... (௨௰௧)

தொடங்கியுந்தொடக்கத்தோடுதுகளறவளர்ந்துமீள ... *
மடங்கியுஞ்செல்லுகின்றமன்னுயிருலகமெல்லாம் ... *

முடங்கியசார்ங்கச்செங்கைமுகுந்தன்வாய்புகுந்தகாலத் ... *
தடங்கியவுதரம்போன்றதந்தமாநகரியம்மா ... (௨௨)

குழைப்புறங்கடந்தசெங்கட்குறுநகைக்கொவ்வைச்செவ்வாய் *
இழைப்பொலிமுலையினார்க்கிற்றைநாள்வதுவையென்று.., *
மழைப்புறமாடமேறிவருநரைமலர்க்கைகாட்டி ...... *
அழைப்பனபோன்றவீதியணிகொடியாடையெல்லாம்... (௨௩)

விண்டலம்புதைத்தவைப்பொற்றுகிலிடுவிதானநீழல் ...... *
மண்டகிற்புகையின்மூழ்கியாவணமறுகின்செல்லும் ...... *
கண்டுகண்டரியேறனின்கவினுடைநெடுந்தோல்போர்த்துக்... *
கொண்டனசெயலோராங்கோர்குலாலனதிருக்கைசேர்ந்தார் (௨௪)

ஆங்கணற்றவத்தான்மிக்கவன்னையையிருத்திமைந்தர்... *
தாங்கண்முற்றணையாய்வந்ததாபதர்தம்மோடெய்தித் ... *
தூங்கணங்குரீஇயின்மஞ்சத்தலந்தொறுந்தோன்றுகின்ற... *
தேங்கண்மாத்தெரியல்வேந்தர்சேர்ந்தபேரவையினானார்...(௨௫)

ஆதியிற்குந்திமைந்தரைவர்க்குமுரியளாமென் ...... *
றோதியவிதியினானெஞ்சுலப்புறுவுவகைகூரச் ...... *
சோதிடம்பொய்யாதென்றுந்தோன்றுவாரரியவொன்றும் ... *
தாதியர்தேற்றத்தேற்றத்தன்மனந்தளர்வுதீர்வாள் ...... (௨௬)

சூட்டியதொடையன்மாலைத்தோழியர்வைகவேறும் ...... *
தீட்டியபடங்களுந்தன்சிந்தையும்பொலிவுகொள்ளக் ...... *
கோட்டியசிலையினோடுங்கொடும்பரித்தேரினோடும்... ... *
காட்டியகோலமன்றிப்பிறிதொன்றுங்காண்கிலாதாள்... (௨௭)

ஆண்டெரிபிறந்தநாளேயன்பினாலெந்தைநேர்ந்த... ... *
பூண்டெரிமார்பனின்றிப்பொன்னவைபொலியத்தோன்றி ...*
ஈண்டெரிமுன்னர்மன்னரிழிவுறவேட்டிலானேல் ...... *
மீண்டெரிபுகுவனென்னுமெண்ணமேவிழைபுநீராள் ...(௨௮)

கோண்பிறைநுதலாடன்னைக்கோதையர்பலருங்கூடிச் ...... *
சேண்புனல்பலகொண்டாட்டிச்செழுந்துகிலொழுகுசேர்த்திப்*
பூண்பனவிசையப்பூட்டிப்புகைகமழ்தாமஞ்சூட்டிக் ...... *
காண்பவராண்மைதேயக்காமவேள்கலகஞ்செய்தார் ... (௨௯)

வந்தனர்குமரர்யாரும்வருகெனமகிழ்ந்துபோற்றிச் ...... *
சந்தணிமுலையினாளைத்தாயினும்பரிவுகூர்ந்தோர் ...... *

கந்தனுமுவமையாற்றுக்காவலர்காமத்தீயின் .... *
இந்தனமிடுவதொப்பவத்தவைபேற்றினுரோ .... (௫0)

வெங்கழைப்படைக்கைவீரர்விழிகளால்விளங்குமேனிப் ... *
பொங்கழற்பிறத்தபாவைபொற்பினைப்பொலியநோக்கிப் ...*
பைங்கழைத்தனுவேள்செங்கைப்பகழியாற்பாவமெய்தி ...*
அங்கழற்பட்டநெய்ப்போலனைவருமுருகினுரோ ...... (௫௧)

மங்குலின்மங்குள்கூடவயங்கொளிமறைந்துதோன்றச் ...... *
செங்கதிர்ச்செல்வன்போலச்சீர்கெழுவடிவமாதி ...... *
அங்கவரிருந்ததலமையறிந்ததோசெறிந்தபொய்கைப் ......*
பங்கயம்போன்றதாலப்பரிவுறுபாவைபார்வை ...... (௫௨)

மனக்கவிங்காதல்விம்மமாலைதாழ்புயங்கள்வாட ....*
எனக்கெனக்கென்றெல்லேமாந்திருந்தகாவலரைநோக்கிச் ...*
சினக்கடமொழுகுகன்னக்களிற்றினுன்றிட்டத்தீமன் ...... *
நினைக்கவுமரியதொன்றைநினைவினேடுரைசெய்தானே ... (௫௩)

சிலையிதுசிலீமுகங்களிவைகடுந்திரிகைவேகத் .... *
திலைமுகத்துழலுகின்றவிபந்திரத்திகிரிநாப்பண் ...... *
நிலையிலாவிலக்குமற்றேநெஞ்சுறயாவனெய்தான் ....*
தலைவலீரவற்கேயிந்தக்கன்னியுமுரியளென்றான் ...... (௫௪)

(வேறு)

இச்சொற்பழனப்பாஞ்சாலர்க்கிறைவன்புதல்வனியம்புதல் கேட்டச்சொற்றத்தஞ்செவிக்குருமே முகக்கலங்குமாவன்னுர்-கச்சைப்பொருது புடைபரந்து கதித்துப்பணைக்குங்கதிராரப் - பச்சைக்கரும்பையிளமுலைமேற்பரிவாணைம்பரிவுற்றுர் (௫௫)

கண்போலம்புநுதல்போலுங்கடுங்கார்முகமுங்காண்டோறு ம்-திண்போர்வேந்தர்மனக்கலக்சஞ்செப்புந்தகைத்தன்றுனுவும்-விண்பாயுழன்றுசுழலிலக்கைமெய்யேயெய்துவிழ்த்திமலர்ப்-பெண்போல்வாளைக்கைப்பிடிக்கும்பேராசையினுற்பேதுற்றுர்()

செழுந்தார்மன்றற்குழலணங்கின்செவிலித்தாயர்கடல்கடை ந்து - வருந்தாவமுதநிகர்வாளை மயில்போற்கொண்டுமன்னவை புக் - கிருந்தாரிருந்தகாவலரையின்னேரின்னெரிவரொன்று - மு ருந்தார்பவளத்துவரிதழ்வாய்முகிழ்வாணகைக்குமொழிகின்றுர்()

மாற்றம்பிறிதொன்றுரையானிவ்வன்போர்வில்லின்வலிநோ
க்கிச்- சீற்றஞ்சிந்தைகொண்டழலப் பொய்யேபலர்ந்ததிருமுகத்
தான் - ஏற்றந்தன்னில்வேறொருவர்க்கிட்பேருலகிலிலதென்னத்-
தோற்றம்படைத்தோன்றனைக் காட்டித்துரியோதனன்மற் றிவ
னென்றான் ....(௫௮)

மணியின்கிரணவெயிலெறிப்பமண்ணேழ்தாங்குநச்செயிற்
றுப் - பணியின்முடிநாயகத்தலையின் பாங்கிற்கதிராத்தபஃறலை
போல் - துணியுங்கொடுமைவயிர்ப் பன்னதுணைவர் துச்சாதனன்
முதலோர்- அணியுங்கழற்காற்சுயோதனனுக் கருகாசனத்தரிவரெ
ன்றான் ....(௫௯)

உலைவந்தசவுஞ்சூன்மந்திக் குருகாநிலங்கிண்டுடுக்குலவும் -
கலைவன்பலவின்சுளைமீறிக் களிப்போடளிக்குங்காந்தாரத்- தலைவ
ன்சகுனியிவன்கண்டாய் தக்கோராடுஞ்சூதுக்கும் - நிலைவஞ்சனை
க்குந்தரணியரிலார்வேறிவற்குநிகரென்றான்... ... ...(௬௰)

பேசாதொடுங்கும் பேரறிவாற்பெருப்போர்வலியாற் பிற
ப்பான்மெய்த் - தேசாலியற்றும் பல்படையாற் றிண்டோள்வலி
யாற்செஞ்சிலைக்கை- ஆசான்மைந்தனிவன்றனக்கிங்காரோயுவமை
யமரரிலும் - ஈசானன்மற் றொருசிறிதொப் பெனலாமல்ல திவ
தென்றான் ....(௬௧)

பெண்மைக்கிரதியெனவந்தபெண்ணாரமுதே பேருலகில்*
உண்மைக்கிவனேபொறைக்கிவனேயுறவுக்கிவனேயுரைக்கிவனே*
திண்மைக்கிவனேநெறிக்கிவனேதேசுக்கிவனே சிலைக்கிவனே...*
வண்மைக்கிவனேகன்னனென்னுமன்னன்கண்டாய்மற்றிவனே()

அலத்தான் முன்னம் பிளந்தபகையடர்ப்பான்கருதி ப்பிள
ப்புண்ட - சலத்தாயமுனைபிணித்ததெனத்தயங்கும்படிசொ ரு
ணைபிறன்- குலத்தாலுயர்ந்தவசுதேவன் குமரன்களபக்கொங்கை
யர்மெய்ந் - நலத்தான்மகிழுஞ்சிந்தையினனருந்தாரிராம னிவ
னென்றான்... ....(௬௩)

இந்தக்குரிசில்பதுகுலத்துக்கெல்லாந்திலகமெனுமாறு ...*
வந்துற்பவித்துப்பொதுவருடன்வளருங்கள்ளமாமாயன் .. *
முந்தக்கஞ்சமாமனுயிர்முடித்தானிவற்குமுகிலூர்தி... ...*
அந்தப்புரத்திலாராமமந்தப்புரத்திலாராமம்...... ......(௬௪)

தண்ணந் துளவோன்றனக்கிளவலிவன்காண் பின்னேசாத்தகி
யென் - றெண்ணும்போசக்குலத்தலைவ னெவருஞ்சூழவிருக்கின்
றான் - கண்ணன்றன்னையவமதித்துக் கழறும்புன்சொற் கார்மு
கத்தைத் - திண்ணென்கரத்தானீங்கிவன்காண் சேதிப்பெருமான்
சிசுபாலன் .... (௪௫)

தார்வண்டிமிரத் தேனொழுகுந்தடந்தோள்வீரன் சராசந்
தன் - போர்வந்தெதிர்த்தால்யாவரையும்புறங்கண்டன்றிப்போகா
தான்-சீர்வண்மதுராபுரிவிட்டுத் துவரைப்புரியிற்சென்றொதுங்க
க் - கார்வண்ணனையுநெடுங்காலம்வென்றானிவன்காணென்றாரே( )

பனைத்கைப்பிறைவெண் கோட்டயிராபதமே போலும் ப
கட்டிவன்- வினைக்கட்புகுந்தாலெதிர்நின்று வேறாரிவனை வெ
ல்கிற்பார் - முனைக்கட்செங்கண்டீயுமிழுமுகத்தான் மாதே பக
தத்தன் - தனக்குத்தானேநிகரென்னத்தருக்கோடுண்டையிருக்
கின்றான்... ... . (௪௭)

இவன்சல்லியனென்றுரைசான்றவிகல்வேன் மன்னர்க்கே
றனையான் - இவன்றன்பகையாமவர்களையுமிமையோராக்கு மெ
ழினீலன் - இவன்றண்டமிழ்த்தேரடல்வழுதியிவன்றேரிரவிகுல வ
ளவன் - இவன்செந்தழலோன் மரபாகி யீரேழுலகும் புகழ்
சேரன்...... ....(௪௮)

வில்லாண்மையினால் வெங்கருப்புவில்லோன்றனக்கே நிக
ரென்னப்-பல்லோர்புகலும்பான்மையினாற்பதி னெண்புவிக்கும்
பதியான - எல்லாவரசுநின்பொருட்டாலீண்டே திரண்டவின்
னமுதச் - சொல்லாய்நல்லாய் மென்பூவாய் பாவாய் தோகாய்
துரோபதியே... .... (௪௯)

இவரிற்றனதுதோள் வலியா லரியே றென்னவெழுந்திருந்
து-தவரிற்புரிநாணுறவேற்றித் தழல்கான்முனைவெஞ்சாயகத்தால் -
பவரிற்செறியதிரைத்துருளும் பலவாய்த்திகிரி பயிலிலக்கைக் -
கவரிற்செழுந்தார் புனைந்தவனைக் கைக்கொண்டருணீ கடிதெ
ன்றார்... .... (௫௰)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முத்தநகைப் பவளவிதழ்க் குளிர்வெண்டிங்கண் முகத்தா
ளைக் கைத்தாயர் மொழிந்தகாலைக் - சித்திரமொத் துணர்வழிந்

து தத்தம்மைப்போற்றிகழரியாசனத்திருந்தார் சிற்சில்வேந்தர்-
அத்தனுவின்பெருமையையுமிலக்கத்துள்ள வருமையையுங் கரு
தாமலாண்மைகூறி - எத்தனையெத்தனைவேந்த ராசைகூரயான்
யானென்றெழுந்திருந்தார் யானைபோல்வார்...... ......(௫௧)

தனுவெடுத்து நாண்பிணிப்பான் கிளராநின்ற தன்குலத்தி
லவனிபரைத்தடுத்துவேதப் - பனுவலுக்குந்தவத்தினுக்குமுரிய
வேள்விப் பார்ப்பனமாக்களினிடையேபாண்டுமைந்தர் - அனு
வுருக்கொண்டுருமாறி யிருந்ததன்மையறிந்தருளி பலாயுதனோ
டருளிச்செய்தான் - மனுமறைக்குவரம்பாகிவருத்தம்விட மாநி
லமீதவதரித்தவாசுதேவன்...... .... (௫௨)

பலருமுடனசங்கரித்து மேருசாரப் பாரவரி சிலையினிலை
பார்த்துமீண்டார் - பலருமொருகையிற்பிடிக்கவடங்காவில்லின்
பருமைதனைக்குறித்துமனம்பதைப்பப்போனார் - பலருமலர்க்
கைப்படுத்திப்பெயர்க்கமாட்டார் பணித்தோனுந்தமையுமெ
னப்பயந்துநின்றார் - பலருமெடுத்தணிமணிநாண்பூட்டிவாராய்
பரிசொடுமெற்றதன்வலிமைபசர்ந்தேவிட்டார்...... ......(௫௩)

வல்லியம்போனடந்துதனு விருகையாலும் வாரியெடுத்
தெதிர்நிறுத்திமல்லல்வாகுச்-சல்லியனுநாணேற்றமுடியாதந்தத்
தனுவுடனேதன்றனுவுந்தகரவீழ்ந்தான் - வில்லியரின்முன்னெ
ண்ணத்தக்கவின்மை வேந்தடுபோர்ச்சராசந்தன்வில்வேதத்தில் -
சொல்லியவாறெடுத்தூன்றி மற்றைக்கையாற் றொல்வலிநாணிபு
மெடுத்துத்தோளிற்சேர்த்தான்...... ....(௫௪)

பூகதனுகியவன்றே பகைவரெல்லாம்போற்றவ்வளர்ந்துல்காள
ப்புனைந்தமோலி - மாகதனும்வில்லெடுத்துவரிநாண்வில்லின்மார்
பளவும்போக்கினான்வன்போர்நீலன் - சாகதனென்றவைதுதிக்க
நெடுநாண்கோத்தத் தனுவொருசாணெனக் கொணர்த்தான்சா
ணையன்று - வேகதனுநால்விரலென்றுணாக்கநாணி லீக்கினான்வ
லம்புரித்தார்வேந்தர்வேந்தே .... (௫௫)

கலைவருத்தமறக்கற்றகன்னனென்னுங் கழற்காளை யரவிரு
ந்த கயிலையென்னும் - மலைவருந்தமறவெடுத்த நிருதனென்ன ம
ன்னவையில் வலியுடனேவந்துதோன்றி - நிலைவருத்தமறநின்று
பரியபோல நீள்வரிநாண்மயிர்க்கடைக்கீழ்நின்றதென்னச் - சிலை

வாசுத்தமறவளைத்துவளைந்தவண்ணச்சிலைக்காறன் முடித்தலையைச்
சிந்தவீழ்ந்தான்...... ....(௫௬)

அரவநெடுங்கொடியுயர்த்தோன் முதலாயுள்ள ஏனைவருமங்
கொருதனுவுக்காற்றாராகி- உரவுமெலிந்தெழின்மாழ்கிச் செயல்
வேறின்றியுள்ளமழிந்ததற்பின்னருருமேறென்னக்- கரவுடனந்த
ணர்நாப்பணிருந்தகொற்றக்கருமுகில்வாகனன்புதல்வன்கரியம்மே
னி- இரவிகுலச்சிறுவனைப்போலெழுந்துமன்ற லிளங்கொடித
ம்முனைநோக்கியியம்பினனே...... ....(௫௭)

மன்மரபிற்பிறந்திருதோள்வலியாலிந்த மண்ணாளு மவர்க்
கன்றிமறைநூல்வாணர் - தொன்மரபிற்பிறந்தவருமிலக்குவீழ்
த்தாற் சூட்டுமோமன்றலிளந்தோகையென்னத் - தன்மரபுக்
கணிதிலகமானவீரன்றகவன்றேமன்றலுக்குத்தாழ்வோவென்றா
ன் - வின்மரபிற்சிறந்தநெடுவில்லையீசன் மேருகிரியெடுத்தமெ
ன விணாவிற்கொண்டான்... .... (௫௮)

இளமகுடவயவேந்தர்நாண்களெல்லாங் கிழாகத்தனிநெடு
நாண்கிளரவேற்றித் - தளர்வறுசாயகந்தொடுத்துக் கற்றோர் யா
ருந் தனு நூலுக்காசிரியன்றானேயென்ன - உளதிகிரிச் சுழலில
க்கையவையோர்தங்க ளூக்கமுடன்விழவெய்தானுரவுத் தோளா
ன் - வளருமருந்தவவேள்விமுனிவரார்த்தார் வாசநறுமலர்சொ
ரிந்துவானோரார்த்தார் ....(௫௯)

தாஞ்சாரற்கரிய தனுவளைத்தானென்று தரணிபர்தம்முகங்
கருகத்தனுவிறேடும் - பூஞ்சாரன்மணிநீலக்கிரிபோனின்ற பூசு
ரனை யிவனவனேபோலுமென்றெண்ணிப்- பாஞ்சாரர்பதிகன்னி
யிருகட்செங்கைப் பங்கயத்தாற்பாங்காகப் பரிந்து நோக்கித் -
தேஞ்சாரநறுங்கழுநீர்ச்செய்யதாமஞ் செம்மணிகாலருவியென
ச்சேர்த்தினளே...... ....(௬௰)

அந்தரதுந்துமிமுழங்கச்சங்கமார்ப்ப வானகத்துந்துபி பு
தல்வனாதியாக - வந்திருந்தபேரவையைமதியானாகி மாலைபிடிபசு
ஞ்செம்பொன் மாலையோடு - சந்திரனுமுரோகிணியுமென்னமு
ன்னர்த் தானவளைத்தடஞ்சிலைக்கைத்தலத்திலேந்தி - இந்திரனு
வுமெழுந்தாங்கேகலுற்றா னிருபுறமுந்துணைவர்வர விண்ணயிலா
தான்...... .... (௬௧)

பார்ப்பான்வந்தொருகோடிபரசைச்சேரப் பரிபவித்துப்
பாஞ்சாலன்பயந்ததெய்வச் - சீர்ப்பாவைதனைவலியாற் கொண்
டுபோகச் செயலின்றியிருந்தீரென்செய்வீரென்று- வேர்ப்பாடு
நுதல்சிவந்தவிழியனாகி விழியிலான்மகள்கழறவெகுண்டு மேன்
மேல் - ஆர்ப்பாகக்கொதித்தெழுந்ததுகாந்தகாலத் தார்க்குமக
ராலயம்போலரசரீட்டம் ....(௬௨)

முருத்துவானைத்துவர்வாய்முருக்கினனை மூத்தோன் பி
ன்னிறுத்தியமர்முருக்குமாறு-மருத்துவான்றிருமகனு மருத்தின்
செல்வ மைந்தனுமேபுரிந்திட்டார்மறையோருள்ளார்- உருத்
துவாய்மடித்தெழுந்துகோகுகட்டிட்டூன்றியதண்டெதிரோச்சி
யுடன்றவேந்தர் - கருத்துவாத் தகவெருக்கொண்டோட வோடக்
கையுரங்காட்டினர்வளர்க்குங்கனலேயன்னார் ...... (௬௩)

மிகைத்துமுனிவரர்முனிந்தவுறுதிநோக்கிவென்றெடுத்தவி
ற்றடக்கைவிசயன்சற்றே - நகைத்துநகைத்தவரவரைவிலக்கியென்
முன்னமன்வரினும்பிளப்பலெனநவிலாநின்றான்- புகைத்தகனல்
விழிக்கன்னன்றருக்காலெள்ளிபூசுரனென்றவமதித்துப்புனைவி
ல்வாங்கி - உகைத்தபகழியுமுனைகத்தோனாரனுந்தன்கை யொருக
ணையாலுடன்பிளந்தானுருமேறொப்பான்... ....(௬௪)

குன்றன்மெய்வகுத்தனைபவீமன்றன்மேல்கொல்வியல்செ
ய்சல்லியனைக்குறித்துவீழ்த்திக் கன்றால்முன்விளவெறிந்த கண்
ணனென்னக் கான்முடியோடுறவளைத்து வான்மேல்வீசி- நின்
றான்மற்றவனயலேதெறித்துவீழ்ந்து நெஞ்சொடிந்தா னிருவ
ருமுன்னில்லாராகி - வென்றானுந்தோற்றானும் வசையேய வெம்
போர் வேதியரோடேற்றலெனமீண்டுபோனார்... ...... (௬௫)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வண்ணலமுனிவரல்லர்மருத்துவான்மருத்துநல்கும் ... *
அண்ணலங்குமரராமென்றயிர்ப்புறமரசர்யாரும் ... *
கண்ணனில்விலக்கப்பட்டுக்கடிநகர்தோறுந்தங்கள் ... *
எண்ணமும்பயனும்வறுமேயகினரென்பமன்றே ... (௬௬)

அன்றிலக்கெய்தகோவுந்துணைவருமான வெம்போர் ... *
வென்றுகொற்றவையோடொத்தமின்னிடைப்பொன்னுந்தாமும்
சென்றுமட்கலஞ்செய்கன்மிசெழுமனைமுன்றிலெய்தி ... *
இன்றுபெற்றனமோணாயமென்செய்வததனையென்றார் (௬௭)

உள்ளிருந்தன்னைமைந்தருரைத்தசொற்கேட்டுத்தேவர் ... *
தெள்ளமுதென்னமக்காள்சேரநீரருந்துமென்றுப் ... *
புள்ளினமொடுங்குமாலைப்பொழுதிவள்புறம்பயெய்திக் ... *
கள்ளவிழ்கூந்தலாளைக்கரும்பெனவிரும்பிக்கண்டாள் (சுஅ)

என்னினைந்தென்சொனேன்மற்றென்செய்தேனென்றுசோரும் *
அன்னையைவணங்கிநின்சொலாரணப்படியதாகும் ... *
நின்னினைவன்றிலெங்கணெஞ்சினுநினைவுண்டென்றான் ... *
தன்னிகரிலாதகேள்விசான்றசீர்த்தருமனென்பான் ... (சுகூ)

பாரனைத்தினுந்தன்னுமம்பரப்பியபார்த்தனென்னும் ... *
வீரனைப்பயந்தபாவைவிதிவழியிதுவென்றெண்ணி ... *
மாரனுக்கரசுநல்குமங்கையுந்தானுமந்தக் ... ... *
காரிருட்கங்குன்மைந்தர்கட்டுரைசிறிதுகேட்டாள் ... (எய)

பொற்றொடிக்கனகமாலைப்பொலன்குழைப்பூவைதன்னைப் ... *
பெற்றபூபதியவ்வீரர்பெருமிதவாய்மையெல்லாம் ... *
ஒற்றரானுணர்ந்துநெஞ்சத்துவகையோடையமின்றி ... *
மற்றைநாள்வந்துகொற்றவாழ்மனைகொண்டுபுக்கான் ... (எக)

அடுத்தபல்பொருளும்வைக்கவாயுதமன்றிவேறொன் ... *
றெடுத்திலவொன்றும்வேதமுனிவரரல்லலொன்றும் ... *
கொடுத்தனசிறப்பினோடுங்குருமணித்தவிசினேற்றித் ... *
தொடுத்ததார்க்குருக்களென்றேதுணிந்தனன்றுருபதேயன் (எஉ)

கைவருசிலையின்வென்றுகைப்பிடித்தவனுக்கின்றே ... *
மைவருகண்ணினாளைவதுவைசெய்திடுதுமென்ன ... *
நெய்வருமுனைகொள்கூர்வேனிருபனைநோக்கியாங்கள் ... *
ஐவரும்வேட்டுமென்றனசைவிலாவறத்தின்மைந்தன் ... (எங)

தருமன்மாமதலைசொல்லாற்றளர்வுறுங்காலைமாலை ... *
நிருபநின்மனத்திலையநீக்குகநீக்குகென்றுத் ... ... *
துருபதன்முன்னர்வந்துதோன்றினன்சுருதியாவும் ... *
விரைமலர்விதியின்விஞ்சவிழித்தருள்வியாதனென்பான் (எச)

தொழுதுபொற்றவிசின்மேலேற்றிச்சூழ்ந்தனரிருந்துகேட்ப ... *
முழுதுணர்கேள்விஞானமுனிகுலத்தரசுபோல்வான் ... *
பழுதறுகன்னிதன்னைப்பாண்டவரைவருக்கும் ... *
எழுதருமறையின்வேள்வியியற்றுதற்கியற்கைகேண்மோ (எரு)

கலிநிலைத்துறை.

மூளாரழலுற்பவித்தாளிவண்முற்பவத்தில் ... ... *
நாளாயனியென்றுரைசால்பெருநாமமிக்காள் ... *
வாளார்தடங்கணவட்காரணவாணர்க்கென்றும் ... ... *
கேளான்மவுற்கல்வியனென்பவன்கேள்வனானான் ... (எசு)

ஆதிற்கலந்தகடைக்கண்ணிதன்கற்புமன்பும் ... ... *
சோதித்தலுன்னித்தணியாததுவக்குநோயால் ... ... *
கோதிற்றநெஞ்சன்பெருமூப்பினன்கூர்ந்துநாளும் ... *
வாதித்தலின்றிமகிழாமனைவாழ்வுபூண்டான் ... (எஎ)

கச்சிற்கடங்காமுலையாளக்கணவனுண்ட ... ... *
மிச்சிற்புறத்துவிரல்வீழவும்வீழ்தல்விஞ்சிக் ... ... *
குச்சித்தலின்றிநுகர்ந்தாள்கொடுங்காமநோய்கொண் ... *
டிச்சித்தவின்பநுகராமவிளைத்தமெய்யாள் ... ... (எஅ)

அன்பன்றெரிவைவழிபாடுகண்டார்வமெய்தித் ... ... *
துன்பம்பயந்தபிணியாலழிதோற்றமாற்றித் ... ... *
தன்பங்கையீசன்றிறைநல்கமுன்சாபம்வாங்கும் ... ... *
வன்பன்றனக்குங்கிடையாதவடிவுகொண்டான் ... (எகூ)

மின்னேயுணக்குமிகுகற்புடைமீனுமொவ்வாள் ... *
இன்னேவரம்வேண்டுவவேண்டுகவீண்டையென்ன ... *
நின்னேயமென்றும்பிரியாநலநேர்கவென்றாள் ... ... *
தன்னேரிலாதமனைவாழ்வின்றவத்தின்மிக்காள் ... (அ௰)

குன்றுந்நதியும்மரனும்பைங்கொடியுமாகித் ... *
துன்றுந்துணையாய்ப்பலயோனிகடோறுமெய்தி ... *
நின்றுஞ்சரித்தும்பலபோகநெடிதினுய்த்தார் ... *
என்றும்பிரியாதிருவோருமிதயமொத்தே ... (அக)

இந்தப்பிறப்பினலமெய்தியிறந்தபின்னும் ... ... *
சிந்தித்தவண்ணமிவளிந்திரசேனையாகி ... ... *
அந்தப்பதியுமடைந்தாண்மற்றவனுமஞ்சி ... ... *
வந்தித்ததொல்லையருமாதவமன்னிநின்றான் ... ... (அஉ)

அன்னோனகல்வவன்மேலவளாசைவிஞ்சி ... ...*
என்னோபுரிவதினியென்றலுமேந்தல்கூறத் ... ...*

தன்னேர்வடிவிளெருகூருருணதயலாளும் ... ... *
முன்னேனநோக்கித்தவஞ்செய்தனண்மூரல்வாயாள் ...(அரு)
ஐந்தானனத்தோனருள்செய்யவழகின்மிக்காள் ... *
ஐந்தானசொல்லாற்கணவற்றருகையவென்றாள் ... *
ஐந்தானசொல்லாலளித்தான்மற்றவனுமுன்னாள் ... *
ஐந்தானபோகமிவளெய்தியவாறறிந்தே ... ... (அச)

முன்னின்றதேவன்மொழியின்படிக்கங்கைமூழ்கித் ... *
தன்னந்தனிநின்றழுகின்றவத்தையல்கண்ணீர் ... *
பொன்னங்கமலவனமானபுதுமைநோக்கி ... ... *
என்னென்றிவளையிமையோர்பதியெய்தினனே ... (அரு)

அவனைத்தொடர்பால்வருகென்னவவனுமாங்கண் ... *
சிவனைச்சிறிதுமதியாதெதிர்சென்றகாலை ... ... *
இவனுக்கெனமேல்மையெனச்சிறவுமெஞ்சினன்போற் ... *
புவனத்தெவருநகையாடப்புலம்பிவீழ்ந்தான் ... (அசா)

வெவ்வாயுதங்களுதவாமல்விபுதர்நாதன் ... ... *
இவ்வாறுவிழமழுவாளிபிமைப்பின்மீண்டும் ... *
அவ்வாசவற்குப்பிலமொன்றிலமைந்தவச்சிரக் ... ... *
கைவ்வாசவர்களொருநால்வனாக்காட்டினனே ... (அஎ)

வன்பாதலத்தில்வருநால்வரும்வானில்வந்த ... *
புன்பாகசாதனனுந்தன்னடிபோற்றிநிற்ப... ... *
அன்பான்மகிழ்ந்தரிவட்டைவருமாதிரொன்று ... *
மென்பாவைபங்கன்விதிக்கப்புவிமீதுவந்தார் ... (அஅ)

தருமன்பவனன்றினநாதன்றநயர்தம்மால் ... ... *
வருமந்தநால்வரிவர்நால்வருமாலைமார்பா ... ... *
தெருமந்தவிந்தச்சிலைவீரனத்தேவர்க்கெல்லாம் ... *
பெருமன்பிறப்பிற்கவனேமுன்பிதாவுமானான் ... (அகூ)

இம்மாறுதொல்லையருமாதவத்தெல்லைகண்ட ... *
அம்மாதிவள்காதலனைவருமாகவென்று ... ... *
தெம்மாதர்முற்பூண்கவர்மன்னன்றெளியுமாறு ... *
வெம்மாதவத்தோன்பெருஞானவிழியுமீந்தான் ... (கூ0)

ஓதாதுணர்ந்துமறைநாலுமுருவுசெய்த ... ... *
வேதாவுமெவ்வாவியாதன்மொழிவெள்ளநீரால் ... *

கோதானநெஞ்சைக்குளிர்ப்பாட்டினன்கோடிகோடி ... *
தோதாணவண்டுதுதைமாலைத்துருபதேயன் ... (௯௧)

வியப்போடுதொல்லைமுனிசொற்றலைமீதுகொண்டு ... *
பயப்போன்மகண்மேர்புரிகின்றபரிவினுக்கு ... *
வயப்போர்நிருபர்பெருமைக்கும்வலிக்குமீடா ... *
நயப்போடுமன்றலயர்வித்தனன்கொர்நாளில் ... (௯௨)

பாடுஞ்சுருதிமறைவாணரும்பாரினுள்ள ... ... *
சூடுங்கனகமுடிவேந்தருந்தொக்குநிற்ப ... ... *
நீடுங்கனமாமணித்தூணநிரைத்தபத்தி ... ... *
ஆடுங்கொடிமண்டபமெய்தினரண்டர்போல்வார் ... (௯௩)

குறிக்கும்பணிலமுதலாயிரகோடியார்ப்பப் ... *
பிறிக்குங்கருவியிடந்தோறும்பிளிறியார்ப்பச் ... *
செறிக்குங்கழற்காலறன்மைந்தனைச்செம்பொன்வேதி ... *
எறிக்குங்கிரணமணிப்பீடமதேற்றினாரோ ... (௯௪)

இடத்தோளிவட்கும்வலத்தோள்விறைவனுக்கும் ... *
திடத்தோடுளாத்தகுறியின்பயன்சேர்ந்துதோய ... *
விடத்தோடமுதங்கலந்தென்னமிளிரும்வேற்கண் ... *
வடத்தோடுவிம்முமுலையாளைவலத்தில்வைத்தார் ... (௯௫)

கேள்விக்கொருவனெனுந்தௌமியன்கேவேத ... *
வேள்விக்குவேண்டுவனயாவும்விதியினீட்டி ... ... *
மூள்வித்தசெந்தீக்கரியாகமுரசுயர்த்த ... ... *
தாள்வித்தகற்குவ்ரமானச்சடங்குசெய்தான் ... (௯௬)

பன்மங்கலமுமுட்டின்வைகியபண்பினாளை ... ... *
நன்மங்கலப்பூண்டுகிலோடுநயந்துசாத்தித் ... ... *
தன்மங்கலந்தமனத்தோனையத்தையலோடும் ... *
தென்மங்கலஞ்செஞ்சுடர்த்திவலஞ்செய்வித்தாரோ ... (௯௭)

கங்குற்பவளப்புதன்மீதுகடற்றரங்கம் ... ... *
பொங்கித்தரளத்திரள்சிந்திப்பொழியுமாபோல் ... *
அங்கிப்புறத்துத்திருக்காப்பணியங்கையேந்திச் ... *
செங்கட்கரியகுழலாள்பொரிசிந்தினாளே ... ... (௯௮)

இவ்வாறுமன்றலயர்வித்தபினின்றகாதல் ... ... *
வெவ்வாறழலின்முறைமூழ்கினண்மீண்டுதோல்ற ... *

மைவாளகவடமீனிகர்கற்பினுள் ... ... *
அவ்வாறுமற்றையொருநால்வருமன்றுவேட்டார் ... (௯௯)

மாரன்கரும்புவளருப்படிவார்த்தநீரால் ... ... *
ஈரம்புலராக்கரத்தோருக்கியாகசேனன் ... ... *
தேரும்பரியுங்களிறுந்திரள்சேனையாவும் ... ... *
பாருந்தனமுமுமதென்னப்பலவுமீந்தான் ... (௱)

கலிவிருத்தம்.

ஆண்டுமன்றல்பெற்றங்குரித்தாரிகற் ... ... *
பாண்டுமைந்தரனுஞ்சொற்பரம்பலும் ... ... *
தாண்டும்வெம்பரித்தாத்தராட்டிரர்கள் ... ... *
மீண்டும்வந்திவர்மேல்வினைசெய்யவே ... (௱௧)

சென்றசேனையுந்திட்டத்திமனுடன் ... ... *
நின்றசேனையுநேருறுபூசலில் ... ... *
கொன்றசேனையொழிகுருசேனையை ... ... *
வென்றசேனைவெருண்டுவெந்கண்டதே ... ... (௱௨)

சாலும்வஞ்சச்சகுனியொடெண்ணிய ... ... *
நாலுமைந்தருநச்செயிருகவும் ... ... *
வாலுமெய்யும்வருதினியாகவும் ... ... *
ஆலும்வெம்படையாடரவானதே ... ... (௱௩)

அந்தநாகமழலுமிழ்கண்விடம் ... ... *
சிந்தமேவிடுஞ்சீற்றமுந்தேற்றமும் ... ... *
முந்தவார்சிலைக்கைம்முகில்வாகனன் ... ... *
மைந்தன்வாளிமழைகளின்மாய்ந்ததே ... (௱௪)

சமரவேழமுகாசுரன்சாய்ந்தனன் ... ... *
குமரனெலனக்கோநகுலன்றனுஸ் ... ... *
அமரிலானையணிமுகத்தோடுமெய் ... ... *
கமர்படப்புறந்தந்தனன்கன்னனே ... ... (௱௫)

முன்னிடச்சமர்மோதுஞ்சகுனியை ... ... *
மின்னிடிப்புயங்கம்வெருக்கொண்டெனத் ... ... *
தன்னிடக்கைத்தனுவொடுந்தேரொடும் ... ... *
பின்னிடப்பொருதானவன்பின்னவன் ... ... (௱௬)

தண்மதிக்குடைத்தம்முனுந்தம்பியும் ... ... *
எண்ணுமற்றையிளைஞர்கள்யாவரும் ... ... *
கண்ணுறக்களங்காணுமுன்றீயினல் ... ... *
வெண்ணெயொத்துடைந்தார்விறல்வீமனால் ... (௯௭)

விரோசனக்கதிர்மைந்தனும்வேந்தனும் ... ... *
சரோசநற்கழற்றம்பியுமாமனும் ... ... *
புரோசனப்பெயர்ப்புன்மதிதன்னைநொந் ... ... *
தரோசனத்துடனத்தினநண்ணினர் ... ... (௯௮)

முந்துபோரின்முதுகிடும்வேந்தரால் ... ... *
விந்தைதன்னையுமேதகவேட்டபின் ... ... *
அந்தமாநகராவருமாமனும் ... ... *
வந்தகண்ணனுமன்புடன்வைகினர் ... ... (௯௯)

தும்பைசூடியவேற்றுரியோதனன் ... ... *
வெம்புபோரின்முதுகிட்டுமீண்டபின் ... ... *
தம்பிகூறுதநயருக்கியுமா ... ... *
றம்பிகேயனமைச்சரொடெண்ணினன் ... ... (௱)

தாதினற்பொலிதார்வரைமார்பனைத் ... ... *
தூதினற்றங்கடொல்பதிசேர்த்தினன் ... ... *
காதினற்பயனின்றெனக்கண்கள்போல் ... ... *
கோதினற்றெரியாமனக்கோளினன் ... ... (௱௧)

வீடுமற்றும்விதுரற்குமேற்கவந் ... ... *
நாடுமுற்றுநரபதிநல்கவே ... ... *
ஆடுபொற்கொடியந்நகர்வைகினர் ... ... *
நீடுவிற்றிறலோர்நெடுங்காலமே ... ... (௱௨)

௬-வது மாலையிடு சருக்கம்.

முற்றிற்று.

௬ சருக்கம்- ௬- இ - திருவிருத்தம்- ௫௮௭.

அபிடேகச் சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேதமும்வேதம்விளம்புமெய்ப்பொருளு மப்பொருள்
விதங்களுமாகிப் - பூதமும்புலனும்புலன்களின் பயனு மப்பயன்
பொதுவுறநுகரும் - நாதமுமாகிப்படைத்தளித்தழித்து ஞான
மாய்நிறைவுறநிறைவு - மாதியுநடுவுமுடிவுமாய்நின்ற வாழியான
டியிணைபணிவாம்...... .... *

அத்தினபுரியிலையிருபத்தின்மனாவமொன்றிரண்டறத்தம்பியில் -
ஒத்தனர்மருவத்தெவ்வர் மெய்வெருவவுளமகிழ்நாளின் மற்றொரு
நாள் - மைத்துனன்முதலாந் தமரையுந்தக்கமந்திரத்தமரையுங்
கூட்டி - இத்தினமுயர்ந்த தினமெனமகுடஞ்சூட்டுதற் கெண்
ணினனிகலோன் ... ... (௧)

செழுமுரசுயர்த்தவேந்தனுக்கின்று திருவபிடேகநாளென்
று - முழுமுரசறைந்துநகரிகோடித்து முடிபுனைகடிகொண்ம
ண்டபத்தில் - எழுமுரசதிரப்பகிரதிமுதலா மெத்துறைப்புனல்
களுமியற்றித் - தொழுமுரசுடன்வெள்வலம்புரிமுழங்கச் சுருதி
மாமுனிவருந்தொக்கார் ... ... (௨)

அத்தியின்பலகைநவமணி யழுத்தியாடகத்தமைத்தரிமுக
த்தால் - பத்திகொள்பீடத்தழகுறவிருத்திப் பசும்பொனிற்றசும்
புகணிறைந்த - சுத்தநீர்வியாதன்றௌமியன்முதலோர்சொரிந்
தனர்சோமன்வந்துதித்துச் - சித்திரக்கிரியினெடுநிலாவெள்ளஞ்
சீருடன்வழியவார்த்தெனவே... ... ... (௩)

உதயமால்வரையி லுதயராகத்தோ டுதித்தசேருதயனெ
ன்றுரைப்பத் - துதையளிததைந்தமாலையான் சென்னிசோதிமா
மகுடமுஞ்சூட்டிப் - பதயுகமரசர்முடிகளாற்சிவப்பப் பகர்விதி
முடிந்தபின்பல்ரும் - இதயமொத்தமுத மொழியவரடைவேயி
ருளைநீராஞ்சனமெடுத்தார் ... ... (௪)

ஒற்றையோடிரட்டை வலம்புரிமிழற்ற வொருகுடைமதி
யெனநிழற்றக் - கொற்றவர்முன்பின்போதரமடவார்குழூஉப்பொ
ரிசிந்திவாழ்த்தெடுப்ப - இற்றைநாளெவரும்வாழ்ந்தவாவென்ன
வேழுயராசகுஞ்சரமேல் - மற்றைநால்வருந்தற்சூழ்வரத்தருமன்
மைந்தன்மாநகர்வலம்வந்தான் ... ... (௫)

மாநகர்வலமாய்வந்துதன்குரவர் மலர்ப்பதமுறைமையால் வணங்கிக்-கோநகரிருக்கையடைந்தபின்னொருநாட் கொற்றவனை வல்லைக்கொண்டு - பேய்நகரெனுமாறியாவரும்வழங்காப் பிறங்குநீள்கானிடையழிந்த - தூநகர்முன்னோரிருந்த தொன்றந்தத் தொன்னகர்வைகுமா றுணிந்தார் ... ... (௬)

அங்கண்மாஞாலமுழுவதுங்கொடுத்தற் காயர்தம்பதியிலங் குரித்த - செங்கண்மான்முதலாங் கிளைஞரும்வயிரத் தேர்முதற் சேனையுந்தாமும் - வெங்கண்மாசுணத்தோ னெண்ணமெத்திசை டம் வெளிப்படவேந்தலைவரும்போய்த் - தங்கண்மாதவத்தாற் காண்டவப்பிரத்தமென்னுமத் தழல்வனமடைந்தார் .. (௭)

போயவட்புகுந்தபொழுதுபைங்கடலும் பூவையும்பயிலு நேர்வடிவின் - மாயவற்கெவ்வாறிவ்வழியிவ்வோர் வாழ்வதென் றொருநினைவெய்தி - நாயகக்கடவுடனைமுன்னுதலு நாகர்நாயகனுடனிணங்கி-மேயகட்புலன்கள்களித்திடத்திருமுன் னின்றனன் விச்சுவகன்மா ... ... (௮)

நுண்ணிதினுணர்ந்தோருணர்தருஞ்சிற்ப நூலறிபுலவனை நோக்கித் - திண்ணிதினமரர்சேகரன்மொழிந்தான் றேவருமனித்தரும்வியப்ப - மண்ணிலும்புயங்கர்பாதலமுதலா மற்றுளவுலகினுநமதாம் - விண்ணினுமுவமையிலதெனக்கடிதோர் வியனகர்விதித்திநீயெனவே ... ... (௯)

தேவினுந்தேவர்யோனியிற்பிறந்த திரளினுஞ்சிறந்தவாசவற்குப் - பூவினுமெவ்வெவ்வுலகினும்முன்னம் புந்தியாலியற்றியபுரங்கள் - யாவினுமழகும்பெருமையுந்திருவு மின்பமும்மெலாமடங்காக - நாவினும்புகலக்கருதரினுநினைக்க வரியதோர்நலம்பெறச்சமைத்தான் ... ... (௰)

மரகதங்கோமேதகந்துகிர்தரளம் வயிரம்வைடூரியநீலம்- எரிமணிப்புருடராகமென்றிவற்றிற் காகரமிந்தமாநகரொன் - றரிமுதலிமையோரனைவரும் புகழ்ந்தாராடகப் பொருப்பினையழித்துத் - தரணியினகரொன் றமைத்தவாவென்றுதபதியர்யாவரும் வியந்தார்... ... ... (௰௧)

என்பதியழகு குலைந்ததென்றெண்ணி யிந்திரன் வெறுக்கவு மியக்கர் - மன்பதிபொலிவு சிதைந்ததென்றிடவுமற்றுளவானவர் பதிகள் - புன்பதியாகிப் போயினவெனவும் புரையறுபுந்தி

யாற் புவிமேல்- நன்பதியிதுவொன் றியற்றிருனென்று நாரதா
தியர்துத்திடவும்... ... ...(௧௨)

சந்திரர்பதமும் தினகரர்பதமு மிருபெர்ழுதினுமெழச்ச
மைத்த- மந்திராதிகளு மஞ்சமுமதிலு மகரதோரண மணிமறு
கும்- கொந்திராநின்ற சோலையுந்தடமுங் கொற்றவன் கோயிலு
நோக்கி- இந்திராபதியவ் விந்திரன்பெயரா லிந்திரபிரத்தமெ
ன்றிட்டான்... ... ... (௧௩)

இமையவர்பதியி னுள்ளனயாவு மிங்குளவிங்குமற்றுள்ள-
அமைவறுபொருள்களங்கிலவெனுமா றமைத்தவான் றெல்பதி
யழகைச்- சமைவுறவிரித்துப்புகழ்வதற்குன்னிற் சதுமுகத்தவனு
மெய்தளரும்- நமர்களானவில முடியுமோமுடியா தாயினும்வ
ல்லவா நவில்வாம்... ... ... (௧௪)

விதிமறைமுறையிற் சாந்திசெய்கடவுள் வேதியராரவமொ
ருசார் - மதிமுறைதவறுவமைச்சர்சொல்விளைப்பு மன்னவராரவ
மொருசார்- நிதிகெழுசெல்வத் தளகையோர்நெருக்கானிறைந்
தபேராரவ மொருசார் - பதிதொறுமுழவர்வினைப்பயனெடுக்கு
ம் பறைதரங்காறவ மொருசார்... ... ... (௧௫)

தோரணமஞ்சத் தலத்தொறுநடிக்குந் தோகையர்நாடக
மொருசார் - பூரணப்பைம்பொற் கும்பமுமொளிகூர்புரிமணித்
தீபமு மொருசார் - வாரணமிவுளிதேர்முதனிரைத்த வாகமுஞ்
சேனையு மொருசார் - நாரணன்வனச பதயுகப்பிரியாநலம்பெறு
மாதவ ரொருசார்... ... ...(௧௬)

சிற்பவல்லபத்தின்மயன்முதலுள்ளதெய்வவான்றபதியரொ
ருசார் - வெற்பகமருவிவீற்றுவீற்றிருக்கும் விஞ்சையர்கின்னர
ரொருசார் - அற்புதவடிவினுருப்பசிமுதலா வழகுடைக்கன்னி
யரொருசார் - பொற்புடையமராபதியுமெய்ம்மகிழ்ந்து பொழி
தருபொன்மலரொருசார் ... ... (௧௭)

வரையெலாமகிலுஞ்சந்தனத்தருவு மான்மதநாவியின்குல
மும் - திரையெலாமுத்தும் பவளவன்கொடியுஞ் செம்மணிகளு
மரகதமும் - கரையெலாம்புன்னைக்கானமுங்கண்ட லடவியுங்கை
தையங்காடும் - தரையெலாம்பொன்னும்வெள்ளியும்பழன வேலி
சூழ்சாலியுங்கரும்பும் ... ... (௧௮)

ஆலையிற்கரும்பின்கண்களிற்றெறித்த வாரமவ்வயற்புறத்தடு
த்த - சோலையிற்பயிலுங்குயிலையுஞ்சுருதிச் சுரும்பையுநிரை நிரை
துரப்ப - வேலையிற்குதித்தவாளைமீயறும்பர் வியனதிகலக்கிவெ
ண்டிங்கண் - மாலையிற்பயிலும்வானமின்கொடிபோல் வாவியிற்
குளிக்குமாமருதம் ... ... (௰௯)

புரிசையிற்குடுமிதொறுநிரைதொடுத்தபொற்கொடியாலட
யினிழலைக் - கிரிமிசைப்பறக்குமன்னமென்றெண்ணிக் கிடங்கில்
வாழ்மேதிமக்கிளைகள் - விரிசிறைப்பறவின்கடுமையாலெய்தி மீ
தெழுமஞ்செனக்கலங்கி - பரிசயப்படுதண்சததளப்பொகுட்டுப்
பார்ப்புறைபள்ளிவிட்டகலா ... ... (௨௰)

கயற்றடஞ்செங்கட் கன்னியர்க்கிந்து காந்தவார்சிலையினா
லுயரச் - செயற்படுபொருப்பின்சாரலிற்கங்குற் றெண்ணிலா
வெறித்தலினுருகி - வியப்பொடுகுதிக்குந்தாரைகொளருவி வி
ழைவுடன்படிவனசகோரம் - நயப்புடையன்னச்சேவல்பேடெ
ன்று நண்ணலானுளமிகநாணும் ... ... (௨௧)

அரிமணிச்சிலையின்சலாகையால்வட்ட மாகவேயமைத்தசா
லகந்தோ - றெரிமணிக்குழைபார்வதனமண்டலத்தி லெழிலு
டைமிளிருமத்தடங்கண் - விரிமணிக்கதிரோனளிக்கமுன்களித்த
வெற்பிடைவீழுமாநதியின் - புரிமணிச்சுழியிற்றுணையொடுமு
லாவிப் பொருவனகயல்களேபோலும் ... ... (௨௨)

இனத்தினாலுயர்ந்தவிந்திரபுரியு மிந்திரபிரத்தமு மிரண்
டும் - தனத்தினாலுணர்வாற்கேள்வியாலழகாற்றக்கதென்றியாதெ
னத்துலைகொள் - மனத்தினானிறக்கவுயர்ந்ததொன்றென்று ம
ண்மிசையிருந்ததுமிகவும் - கனத்தினாலன்றித்தாழுமோயாருங்
கண்டதுகேட்டதன்றிதுவே ... ... (௨௩)

நிறக்கவல்லிரும்பைச்செம்பொனாம்வண்ண நிகழ்த்தியவிர
தமேநிகர்ப்பப் - பிறக்கமும்வனமு மொழித்தவணமைத்தபெரு
ம்பதிக்குவமையும்பெறாமல் - மறக்கடுங்களிற்றுக்குபேரன்வாழ
ளகை வடக்கிரிந்ததுநெடுவானில் - துறக்கமுமொளித்ததிலங்கை
யும்வெருவித் தொடுகடற்சுழிபுகுந்ததுவே ... (௨௪)

வாவியும்புறவுஞ்சோலையுமலர்ந்த மலர்களுமணிகளின்குழா
மும் - மேவியங்கெங்குமயங்கலிற்றத்தம் வேரியும்வாசமுந்து

தாப் - பூவினஞ்சுரும்பையழைக்கும்வண்பழனப் புதுவளஞ்சா க்கநாடனைத்தும் - ஓவியங்குறித்துப்பூமகள்வடிவை யொப்பனைசெய்தவாறொக்கும் ... ... (௨௫)

பரிமளமதுபமுரல்பசுந்தொடையற் பாண்டவரைவருங் கடவுள் - எரிவலப்புரிந்துடனிறைமுறைவேட்ட வின்னெழிலிளமயிலென்ன - வரிசையினனுடிபுரிமையாலவனி மயிலையுமன்றலெய்தியபோல் - புரிவளைதரளஞ்சொரிபுனலகழிப் புரிசைசூழ்புரங் குடிபுகுந்தார் ... ... (௨௬)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

உரங்குடிபுகுந்ததிண்டோளுதிட்டிரன்முதலியோரப் ... *
புரங்குடிபுகுந்ததங்கள்பொன்னெயிற்கோயிலெய்தித் ... *
திரங்குடிபுகுந்தகல்விச்சிற்பவித்தகன்றனெஞ்சால் ... *
கரங்குடிபுகாமற்செய்தகடிநகர்காட்டலுற்றான் ... (௨௭)

நாபுரப்பதற்கேதக்கநவிரறுவாய்மைவேந்தர் ... *
கோபுரத்தும்பர்மஞ்சகோடியினின்றுதங்கள் ... *
மாபுரத்துள்ளவெல்லைவளமனையாவுமாதர் ... ... *
நூபுரத்தரவவீதியகலமுநோக்கினாரே ... ... (௨௮)

அரவின்வெஞ்சுடிகைகொண்டவவிர்மணிச்சோதிமேன்மேல் *
விரவிவந்தெறித்துப்பச்சைமெய்சிவப்பேறிற்றாக ... *
இரவிதன்னிரதம்பூண்டவெழுபெயர்ப்பவனவேகப் ... *
புரவியையையுற்றேகொல்புரிவலம்புரிவதென்பார் ... (௨௯)

அருளுடையறத்தின்வாழ்வாமந்நகரில்லமெங்கும் ... *
இருளுடையிந்திரநீலத்தியன்றசாளரங்கணோக்கி ... *
உருளுடையொற்றைநேமியொருபரித்தேரோன்சீறத் ... *
தெருளுடைத்திமிரம்போநற்சின்னெறிபோலுமென்பார் (௩௰)

சமர்முகப்பொறிகண்மிக்கதடமதிற்குடுமிதோறும் ... *
குமருறப்பிணித்தபைம்பொற்கொடித்துகிலசைவுநோக்கி *
நமர்புரக்கிழத்தியும்பர்நாயகன்புரத்தினேறும் ... *
அமர்பொரப்பற்பல்கையாலழைப்பதுபோலுமென்பார் (௩௧)

தசும்புறுமதிலின்றாமஞ்சாறடுகரும்பின்றாமம் ... *
அசும்பருமடையின்றாமமவிபெறுமழலின்றாமம் ... *

விசும்புறுநாலுதிக்குமிசைமிசையெழுதனோக்கிப் ... *
பசும்புயலேழன்றின்னப்பலவுளவாகுமென்பார் ... (௫௨)

அடுக்குறநிலஞ்செய்மாடத்தணியுறுபெரும்பதாகை ... *
மிடுக்கினாலநிலனெற்றிவிசையுடனெடுத்துமோத ... *
உடுக்களுநாளுங்கோளுமுள்ளமுமுடனுஞ்சேர ... *
நடுக்குறுகின்றவிந்தநகர்வழிப்பாகவென்பார் ... (௫௩)

துதையளிமூரலும்வாசச்சோலையின்பாங்கர்தோறும் ... *
விதமுறவெழுந்துகாளமேகங்கள்படிதனோக்கிக் ... *
கதிர்மணிபகழிமாமேகலையுடைநகரொன்மாதின் ... *
புகைநறுமலர்மென்கூந்தல்போலுமாகாண்மினென்பார் (௫௪)

ஈட்டியமணியும்பொன்னுமெழில்பெறப்பணிகடோறும் *
பூட்டியசிகரிசாலப்புரிசையின்புறத்தைநோக்கிக் ... *
கோட்டியநகரியென்னுங்குலக்கொடிமன்றலெய்தச் ... *
சூட்டியசூட்டுப்போலுந்தூங்குமாகாண்மினென்பார் (௫௫)

பணையினம்பலவுமார்ப்பப்பைங்கொடிநிரைத்தசெல்வத் ... *
துணைமணிமாடமன்னுந்தோரணவீதியாவும் ... *
புணைவனநெருங்கநீடிப்பொழிபுயல்கிழிக்குஞ்சாரல் ... *
இணைவரைநடுவட்போதும்பாறுபோலிலங்குமென்பார் (௫௬)

கண்ணுறுபொருள்கள்யாவுங்கண்டுகண் டுவகைகூர... ...*
எண்ணுறுகிளைஞரோடும் யாதவகுமரரோடும்... ... *
பண்ணுறும்வேதவாணர்பலரொடும்வைகியாங்கண் ... *
விண்ணுறுதடபதிக்கம்மவிடைகொடுத்தருளினானே ...(௫௭)

கேசவன்முதலாயுள்ளகிளைஞருங்கேண்மைதப்பா ... *
வாசவன்முதலினோருமன்னுதம்பதிகள்புக்கார்... ... *
ஓசைவன்றிகிரியோச்சியுதயபானுவுக்குமேலாம் ... ...*
தேசவன்றானும்வையந்திசைமுறைதிருத்தியாண்டான் (௫௮)

யாய்மொழிதலைமேற்கொண்டுமிளையவர் மொழிகள்கேட்டும் *
வேய்மொழிவேய்த்தோள்வல்லிமென்மொழி விருப்புற்றும் *
வாய்மொழியறத்தின்மெய்யுமாநகர்வாழுநாளில் ... *
ஆய்மொழிப்பாடலோடோரந்தண னாங்குவந்தான்... ...(௫௯)

இந்தநாரதனைப்போற்றியிருபதம்விளக்கிவாசச் ... ...*
சந்தனாகருவின்தூபந்தவழ்மணித்தவிசினேற்றி ... ...*

வந்தணவிதியிற்சற்றும்வழுவறவழிபாடெய்தி ... ...*
அந்தநால்வருடவ்வேந்துமாதிவாசவர்களானூர்... ... (சய)

வரமிகுகற்பினானுமாமியும்வணங்கிநிற்பச் ... ...*
சரிகமபதநிப்பாடற்றண்டுதைவருஞ்செங்கையோன்... *
இருசெவிபடைவீடாகவெம்பிரானளிக்கப்பெற்ற ... ...*
பெருமுனிபவர்க்கவ்வார்த்தைபெட்புறப்பேசினானே... (சக)

முராரியைமுராரிநாபிமுளரிவாழ்முனியைமுக்கட்... ...*
புராரியைம்நோக்கிமுன்னாட்புரிபெருந்தவத்தின்மிக்கோர்... ...*
சுராரிகடம்மிற்சுந்தோபசுந்தரென் றிருவர் தங்கள் .. ...*
திராரியேவலினால்வந்ததிலோத்தமைதன்னைக்கண்டார் (சஉ)

காண்டலுமவண்மேல்வைத்தகாதலாலழிந்துநெஞ்சில் ... *
ஈண்டிய துயரத்தோடுமிருவருநயந்தும்பாதப் ... *
பூண்டகுபொலிவினாடன்பொருட்டமர்தம்மிற்பூண்டு *
மாண்டனரென்னும்வார்த்தைமாநிலமறியுமன்றே ... (சங)

நீவிரும்விதியால்வேட்டநேயமுண்டேனுமன்றலீ... *
ஒவியமனையாடன்னையோரோராண்டொருவராக ... *
மேவினிர்புரிமினென்றுமேவுநாளேன்னையோரிக் ... *
காவியங்கண்ணினாளைக்கண்ணுறல்கடனன்றென்றும்... (சச)

எண்ணுறக்காணினோராறிருதுவுவ்வேடமாறிப் ... *
புண்ணியப்புனல்களாடப்போவதேயுறுதியென்றும்... *
வண்ணவிற்றிறலினார்க்குவாய்மலர்ந்தருளிமீண்டு ... *
பண்ணுடைக்கீதநாதபண்டிதன்விசும்பிற்போனான்... (சரு)

சொன்னநாடொடங்கியஞ்சுசூரருந்தேவர்நாளுக் ... *
கின்னநாளவதியென்றேயெண்ணியாங்கிரதிகேள்வன்... *
அன்னநாண்மலர்ப்பைந்தாமத்தறன்மகனுதியாக... *
மின்னனாடன்னைவேட்டமுறைமையின்மேவினாரோ... (சசா)

எ-வது அபிடேகச்சருக்கம்

முற்றிற்று.

ஆ. சருக்கம் - எ - இ - திருவிருத்தம் - ருஙரு.

தீர்த்தயாத்திரைச் சருக்கம்.

கலிச்சந்த விருத்தம்.

அருமாமறையுணராதலமருசேவடியருளால் ... *
இருமாநிலமிசைதோய்வுறவியலானிரைவழிபோய்த்... *
திருமாநிகரிடைமாதர்கடிகமழ்வேல்விழிமகிழ ... *
வருமாதவன்விளையாடலைமறவாதெனதுளமே ... (க)

துன்பம்பயமிடிநோய்பகைசோரங்கொலையெய்தா... *
இன்பம்பொருளறன்யாவையுமியல்பாதலினெய்தித்... *
தன்பைக்குடைநிழன்மன்பதைதரியார்முனைமதியா ... *
வன்பன்றனைநிகர்வாழ்வுறவருநாள்களினொருநாள்... (உ)

அறையோதவனஞ்சூழ்புவியரசாளவனைத்தும் ... *
திறையோடிடமறநிற்பதொர்திருவாசன்மருங்கே ... *
இறையோடுபெரிருகையுமெடுத்தெண்ணுறமுறையோ... *
முறையோவெனவொருவைதிகமுனிவந்துபுகுந்தான்... (ங)

கடைகாவலர்குறைகூறலும்விசயன்கடிதிற்றன் ... *
புடைகாவலர்தொழவந்துபுவித்தேவனைமறையின் ... *
தொடைகாவலவிதுவென்னெனவவனுந்தொடுகழலோய்... *
விடைகாவலநிரைகொண்டனர்வில்வேடுவரொன்றன்... (ச)

அஞ்சாதொழிமுனிநீயுனதானின்கணமின்றே ... *
எஞ்சாவகைதருவேனெனவேவுக்கொருதிலகன் ... *
வெஞ்சாபமெடுப்பான்வருவிசயன்றருமனுடன் ... *
மஞ்சார்பொழில்விளையாடுமம்மயில்சேரடிகண்டான் (ரு)

காணாமெய்நடுங்காவொளிகருகாமனமிகவும் ... *
நாணாவிரைவொடுசாலையினுண்வெஞ்சிலைகொள்ளாச்... *
சேணாநெறிசெல்லாநனிசீறுவமர்வெல்லா ... *
மாணாநிரைமீளாவொரிமைப்போதையின்வந்தான் ... (சா)

தோறுக்கொண்டவருயிருந்தொறுநிரையுங்கவர்சூரன்... *
மறுக்கம்படுமறையோன்மனமகிழும்படிநல்கிப்... *
பொறுக்குந்தனிமுனிசொற்படிபுனிதப்புனல்படிவான் *
நிறுக்குத்துலைநிகர்தம்முனைநிகழ்வோடுபணிந்தான்... (எ)

ஆடம்பரமனவேடமகற்றித்தொழுதகுதொல் ... *
வேடம்பெறுமறையோருடன்விசயன்பொரவிசயன்... *

சூடந்தருபாகீரதிதோய்காலையிலவனே... ... *
சேடன்றலமடவார்புனலயர்வானெதிர்சென்றார்... (௮)

ஓடுங்கயல்விழியாரினுலூபிப்பெயரவளோ ... *
டாடும்புனலிடைநின்றவனனுராகமிகுந்தே ... *
நாடும்பிலவழியேயவள்பின்சென்றுநலத்தால் ... *
நீடுங்கொடிமணமெய்தினன்முகில்போலுநிறத்தான்... (௯)

இம்மென்றளிமுரல்பாயலினின்பத்தைவளர்த்தும் ... *
பொம்மென்பரிபுரநாண்மலர்பொற்சென்னியில்வைத்தும் *
செம்மென்கனியிதழாளொடுசின்னாளலமர்ந்தான்... *
அம்மென்கொடியனையாளுமிராவானையளித்தாள்... (௰)

நாகாதிபன்மகன்மைந்தனலங்கண்டுமகிழ்ந்து ... *
நாகாதிபன்மகன்மீளவுநதியின்வழிவந்து... ... *
நாகாதிபன்வனசாரலினன்னீர்கள்படிந்து ... *
நாகாதிபன்விடுமும்மதநாறுந்திசைபுக்கான்... ... (௰௧)

நெளிந்தாடரவணையையனிறம்போலநிறக்கும் ... *
களிந்தாநதிமுதலாகியகடவுண்ணதிபலவும்... ... *
முளிந்தாரழலெழுகானெறிமுக்கோலினராகித்... ... *
தெளிந்தாரியபெரியோரொடுசென்றாடினனன்றே... (௰௨)

பத்திக்குவரம்பாகியபார்த்தன்பலதீர்த்தம்... ... *
அத்திக்கினுமெத்திக்கினுமாமென்றவையாடிச்... ... *
சித்திக்கொருசிகையாகியதிருவேங்கடமென்னும்... *
தத்திச்சொரியருவித்தடவரவக்கிரிசார்ந்தான் ... (௰௩)

இச்சைப்படிதன்பேரறமெண்ணான்கும்வளர்க்கும் ... *
பச்சைக்கொடிவிடைமேயானொருபாகந்திறைகொண்டாள்... *
செச்சைத்தொடையிளையோனுகர்தீம்பான்மணநாறும்... *
கச்சைப்பொருமுலையாளுறைகச்சிப்பதிகண்டான்... (௰௪)

அயனார்புரிமகசாலையுமணியத்திகிரிக்கே... ... *
மயனார்செய்திருக்கோயிலுமாமின்னலோடமரும்... *
புயனாரணர்மெய்க்கோலமுமுள்ளன்பொடுபோற்றிப்... *
பயனார்புனனதியேபூமந்நகரூடுபடிந்தான் ... (௰௫)

பெற்றாள்சகதண்டங்களனைத்தும்மவைபெற்றும்... *
முற்றாமுகிழ்முலையாளொடுமுக்கண்ணர்விரும்பும் .. *

பற்றுமெனமிக்கோரிகழ்பற்றென்றில துண்மை ... *
கற்றூர்தொழுமருணாசலமுங்கண்டிகைதொழுதான்... (௰௬)

மாவிந்தையுநிலமங்கையுமலர்மாணடிவருடத்... ... *
தாவும்மரவணைமேல்விழிதுயிலுந்தனிமுதலைப்... ... *
பூவுந்தியபொழில்சூழ்தருபொற்சித்திரகூடக் ... *
கோவிந்தனையடிபன்முறைதொழுதுட்களிகொண்டான் (௰௭)

இன்னம்பலபலயோனியிலெய்தாநெறிபெறவே ... *
முன்னம்பலர்நறுமாமலர்முறைதூய்மகிழ்வெய்த ... *
அன்னம்பலபயில்வார்புனலணிதில்லையிலாடும் ... *
பொன்னம்பலநாதன்கழல்பொற்போடுகைதொழுதான்... (௰௮)

இலங்காநகுமுடிவானவரிருபோதும்வணங்கத் ... *
துலங்காடரவணைமேலறிதுயில்கொண்டவர்பொற்றாள்... *
பொலங்காவிரியிருபாலும்வரப்பூதலமங்கைக் ... *
கலங்காரமணிக்குந்தெனரங்கத்திடைதொழுதான் ... (௰௯)

ஆங்கப்பணவத்துட்பொருளரிதாளிணைதொழுது ... *
பாங்கர்ப்புதுவெயில்வீசுப்பருமாமணிகுயிலா ... *
ஓங்கிக்கிளர்பொலன்மண்டபமொருதன்பெயரானத்... *
தூங்கற்கரிநடையிந்திரசுதனென்றுபடைத்தான்... (௨௦)

வளவன்பதிமுதலாகவயங்கும்பதிதோறும் ... *
துளவங்கமழ்திசீதளதோயங்கள்படிந்தே ... *
உளவண்டமிழ்நானூறுமுணர்ந்தேறிய துறைசூழ்... *
திளவங்கமழ்புறவஞ்செறிதண்கூடல்புகுந்தான்... ... (௨௧)

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

குன்றிலிளவாடைவரும்போதெல்லா மலர்ந்ததிருக்கொன்றைநாறத் - தென்றல்வரும்போதெல்லாஞ் செழுஞ்சந்தின்மணநாறுஞ்செல்வவீதி - நன்றறிவோர்வீற்றிருக்கு நான்மாடக்கூடல்வடநகரியாளும் - வென்றிபுனைவடிசுடர்வேன்மீனவனைவானவர்கோன்மதலைகண்டான் ... ... (௨௨)

அந்நிலத்தினவரல் லாவந்தணரோடிவனவனுக்காசிகூற - எந்நிலத்திலொப்பதியி லொத்திசைக்குப்போகின்றீ ரொன்றும்போற்றிச் - சென்னியற்கும்வில்லவற்கு மணிமுடியாங்கனைகழற்காற்செ

ழியன்கேட்பக் - கன்னியைக்கண் ணுற்றுடவந்தனமென்றனன்
மெய்ம்மைக்கடவுள்போல்வான்... ... (௨௩)

வெய்தின்மகபதி முடிமேல்வளைபுடைத்து மீண்டநாள்வி
ண்ணின்மாதர் - கொய்துமலர்தொலையாத குளிர்தருக்களொரு
கோடி கொண்டுபோந்து - மைதவழ்தன்றடங்கோயில் வரோத
யனைமனைப்படப்பைவைத்தகாவில் - கைதவர்கோன்மற்றிவர்க்குப்
போனகஞ்செய்தருந்துமிடங்கற்பித்தானே ... (௨௪)

வேதியரத்தண்காவி விளைப்பாறியிருந்தளவின் மின்சூழா
ம்போல் - தாதியருஞ்சேடியருந் தற்சூழச்சிலைமதனன்றனிச்சே
விப்பச் - சோதிமணிச்சிலம்பரற்றத் துணைநெடுங்கண்செவியள
ப்பத் தொடித்தோள்வீசி - ஆதியரவிந்தையென நிருபன்மகள்
விளையாடற்காங்குவந்தாள் ... ... (௨௫)

பச்சென்றதிருநிறமுஞ் சேப்பிதழும்வெண்ணகையும் பார்
வையென்னும் - நச்சம்புமுதுற நவிற்றுகின்றமடமொழியிணு
ணின்பூணும் - கச்சின்கணடங்காத கனதனமு நுண்ணிடையுங்கண்
டுசோர்ந்து - பிச்சன்போலாயினனப்பெண்கொடி மெய்ந்நல
முழுதும்பெறுவானின்றுன் ... ... (௨௬)

புத்திரர்வேறில்லாது புரிவரியதவம்புரிந்த பூழிவேந்தன் -
சித்திரவாகணன்பயந்த சித்திராங்கதையென்னுஞ் செஞ்சொல்வ
ஞ்சி - பத்திரமுநறுமலரு மவயவம்போல் விளங்குவனபலவுங்
கொய்து - மித்திரமாமகளிருடன் விரவியொருசெய்குன்றமே
வினளே... ... ... (௨௭)

முன்னுருவந்தனைமாற்றிமுகில்வாகன் திருமதலைமோகியா
கித் - தன்னுருவந்தனைக்கொண்டுசாமனிலுங் காமனிலுந்தயங்கு
மெய்யோன் - பொன்னுருவமேன்மலர்ந்து பொலிந்ததொருச
ண்பகத்தின்பூந்தணீழல் - மின்னுருவநுண்ணிடையாள்விழிகளிக்
கும் படிநின்றுன்வீரரேறே ... ... (௨௮)

வண்டானந்திரிதடத்துவரிவண்டினினம்பாடமயில்களாடத்-
தண்டார்மெய்க்கிளிக்கூட்டஞ் சான்றோர்களுணைபயிற்றத் தமிழ்
கண்மூன்றும் - கொண்டாடியிளம்பூவைக் குழாந்தலைசாய்ந்துவ
மேருதுங் குன்றினுங்கட் - கண்டாளக்குமரனைத்தங் கொடிக்கய
லைப் புறங்காணுங்கண்ணினளே... ... ... (௨௯)

செந்திருவையனையாளுந் திருமாலை யனையானுஞ்சிந்தை
யொன்றாய் - வந்திருவர்விலோசனமுந் தடையின்றியுறவாடிமகி
ழ்ச்சிகூர்ந்து - வெந்துருவமிழந்தமதன் மீளவும்வந் திரதியுடன்
மேவுமாபோல் - சுந்திருவமுறைமையினாற் கடவுளர்க்குங்கிடை
யாதகாமத்துய்த்தார் ... ... (௫௰)

கூடியிருவருமொருவரொணவிதயங் கலந்ததற்பின் குறித்த
தூநீர்- ஆடியவந்ததுந்தன்னை யருச்சனனெனபதுமிளமானறிய
க்கூறி - நீடியதென்றையுறுவர்நீயினியே சௌனவுரைப்பநெடுங்க
ண்ணாள்போய்ச் - சேடியருக்கன்ஞான்றுநிகழ்ந்தவெலா மகிழ்
ந்துருகிச்செப்பினாளே ... ... (௫௧)

கவுரியர்கோன்றிருமகளைக்கன்னனையார் கொண்டுபோய்க்
கன்னிமாடத் - தவிருமணிப்பரியங்கத்தையமளி யேற்றியபினந
ங்கன்போரால் - நவிருடைமான்மயலுழந்துநயனங்கள் பொரு
ந்தாமலுணாமல் - தவிர்கெனவுந்தவிராமற் றன்விரகங்கனாயு
ழிந்துதளர்ந்தாண்மன்னோ ... ... (௫௨)

தங்கண்மலைச்சந்தனத்தைத்தழற்குழம்பா விதுவென்னு
ந்தாபந்தோன்றத்-தங்கள்கடற்றண்முத்தைக் கண்முத்தானீருக்கு
ந்தக்கோராய்ந்த - தங்கடமிழ்க்குழலிசையைத் தன்செவிக்குவி
டமென்னுந்தபனனேகத் - தங்கள்குலக்கலைமதியைத் தபனனெ
ன்னுமெனப்பட்டாடனிப்பொருதாள் ... ... (௫௩)

அங்குயிர்போலிருமருங்கு மாயமடமகளிரிருந்தாற்றவாற்
றக் - கங்குலெனும்பெருங்கடலைக் கரைகாணக்கடற்புறத்தேதகதி
ருங்கண்டாள் - இங்கிவள்போய்மலர்க்காவி லெழில்விசயற்கிடமி
ந்தவின்னலெல்லாம் - சங்கெறியுந்தடம்பொருனைத் துறைவனு
க்குச்செவிலியரோந்தாயர்சொன்னார் ... ... (௫௪)

ஐந்தருவினீழலில்வாழரியுடனே யோரரியாசனத்தில்வைகி
ப் - புந்தியுறவொருவருமுன் பூணுதமணியாரம்பூண்டகோமான்-
அந்தவுரைசெவிப்படலுமதிதூரம் விழைவுடன்சென்றுடுதீர்த்த
ம் - வந்ததுநந்தவப்பயனென்றுடன்கொண்டான் மகோததியும்
வணங்குந்தாளான் ... ... (௫௫)

வழுதிதிருமகள்கொடுத்தமையலினால் வடிவமுந்தன்மனமு
ம்வேறாய்ப் - பொழுதுவிடியளவுமதன் பூசலிலேகருத்தழிந்து

பூக்கும்வாளி- உழுதகொடும்புண்வழியே பூசினுழைந்தெனத்தென்றலூரலூர- விழிதுயிலும்விசயனுடல் விபுதருடன்றுயிலுணர்ந்துவிதியுஞ்செய்தான் ... ... (௫௬)

பஞ்சவரினடுப்பிறந்தோன் பஞ்சவன்பேரவையெய்திப்பஞ்சபாண - வஞ்சகன்செய்வஞ்சனையான் மதிமயங்கியிருந்துழியம்மதுரைவேந்தன் - சஞ்சரிகநறுமலர்த்தார்த்தனஞ்சயனென்றறிந்தெழுந்துதழீஇக்கொண்டாங்கண் - அஞ்சலினியுனக்குரியள் யான்பயந்தகடற்பிறவாவமுதமென்றான் ... ... (௫௭)

கேண்மதியோர்மொழிமுன்னங்கேண்மைபினங் குலத்தொருவன்கிரீசன்றன்னைத் - தாண்மலரன்புறப்பணித்துதவம்புரிந்தான் மகப்பொருட்டாற்றரித்தகொன்றை - நாண்மலரோன்வெளிநின்றந்நரபதிக்கு நின்குலத்துநரோசர்யார்க்கும் - வாண்மருவுசெங்கரத்தோ யொரொருமாமகவென்றுவரமுமீந்தான் (௫௮)

அன்றுரைத்த வரத்தின்வழியநேகவவனிபருமகவளித்தாரொன்றொன் - ஒன்றுரைக்கமருதொழிநீயொருமகவும் பெண்மகவாயுதித்ததென்பால் - நன்றுரைக்குமொழியாயென் னவ்விபெறுமகவெனக்கேநல்கவேண்டும் - என்றுரைத்தான்மன்றல்பெறவிருந்தோனு மாமனுரைக்கிசைந்தானன்றே ... (௫௯)

தெண்டிரைகைதொழுகழலான் திருமகட்குவதுவையெனச்சேரன்சோழன் - எண்டிசையின்முடிவேந்தரெல்லாருமுனிகுலத்தோரெவருமீண்டி - அண்டர்பிரானளித்தசிலையாண்டகையை யலங்காரமனைத்துஞ்செய்து - மண்டபமொன்றினிலறுகால்வண்ணமணிப் பலகையின்மேல்வைத்தாரன்றே (௬௰)

கோமடந்தைகளிகூரப்புகழ்மடந்தை களிகூரக்கொற்றவிந்தை- மாமடந்தைகளிகூரமன்மனையொப் பனைக்குரியமடந்தைமார்கள் - பூமடந்தையனையாளைப்பூட்டியவெண் டரளமணிப்பூண்களாலே - நாமடந்தைநிகராக்கிநாயகன் றன்வலப்பாகநண்ணுவித்தார் ... ... (௬௧)

இந்திரனுஞ்சசியுமெனவிடையோனு முமையுமெனவெம்பிரானும் - செந்திருவுமெனக்காமதேவ மிரதியுமெனவெஞ்சிலைவலோனுஞ் - சந்தணிபூண்முலையாளுஞ்சதுமறையோர் சடங்கியற்றத்தழல்சான்றாகத் - துந்துமியின்குலமுழங்கச்சுரிசங்கின் குலத்தழங்கத்துலங்கவேட்டான் ... ... (௬௨)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நோக்கியகண்ணிமையாமனோக்கிநோக்கி நுண்ணியமென்பு
லவியிமேலநொந்துநொந்து - தேக்கியசெங்கனியிதழாரமுதுண்
டுண்டு சேர்த்தியகைநெகிழாமற்சேர்ந்துசேர்ந்து - தாக்கியபொ
ற்றுலையிலனுராகபோகந் தொடரவரும்பெரும்போகத்துய்த்தா
ர்முன்னைப் - பாக்கியம்வந்திருவருக்கும்பலித்ததல்லாற் பாயண
லயிப்படியார்பயன்பெற்றாரோ ... ... (௬௩)

பன்னாளிந்நெடும்போகம்பயின்றபின்னர்ப் பப்புருவாகன
னென்னும்பைதற்றிங்கள்- அன்னையவள்பயந்தாள்பயந்தபோ
தே யம்மகவைபுவகையுட னவனுமீந்தான் - தென்னாவென்றளி
பமுரல்வேம்பின்பைம்பூத்தேம் பரிசில்வழங்குதொடைத்தென்
னர்கோவும் - தின்றுமென்மரபுநிலைபெற்றதென்றுநேயமுடன்
கவர்ந்து துயர்நீங்கினானே ... ... (௬௪)

பார்த்தனருச்சுனன் கரியோனண்பன்பாகசாதனி வீமன்
றுணைவன்பற்குனன்பார் - ஏற்றதனஞ்சயன்கிரிடிசுவேதவாகனெ
னு நாமம்படைத்தபிரான்யாழ்போலின்பம் - வாய்த்தவிதழமு
தமொழிப்பேதைதாதை மனையிருக்கத்திருவழுதி வளநாடுள்ள -
தீர்த்தமுழுவது மாடிபன்பாற்றென் பாற்றிருமலையுங்கைதொழு
து சிந்தித்தானே ... ... (௬௫)

கன்றியவெங்கரன்முதலோர்களத்தில்வீழக் கவிக்குலநாயக
னிதயங்கலங்கிவீழ - ஒன்றுபட்டமரமேழுமுதிரயேழு மூடுருவச்
சரந்தொடுத்தவொருவில்வீரன் - துன்றிபெழுபதுவெள்ளங்கு
ரங்கின்சேனை சூழ்போதவாய்த்ததிருத்துணைவனோடும் - சென்ற
சுவடின்றளவுந்துளவநாற்றுஞ் சேதுதரிசனஞ்செய்தான் றிறல்வ
ல்லோனே ... ...(௬௬)

வன்றிறல்வெங்களிற்றினங்களிரண்டுபாலுமலையாமலிடுகணை
யமரனைம்பாலும் - தன்றலைகளவிழாமலெடுப்பான் மேருத் தா
ழ்கடலினீட்டியதோர் தடக்கைபோலும் - அன்றியிருபூதலமு
மிருதட்டாக வகத்தியஃவாழ் குன்றினையுடமணிமுக்கோட்டுக் - கு
ன்றினையுஞ் சீர்தூக்கி நிறுப்பதாகக் கோகனகனமைத்ததுலைக்
கோலும்போலும்... ... ... (௬௭)

அண்டர்தமகங்கையினும் வானுண்டென்றென் றரம்பைய
ரோடவனியில்வந்தாடுங்கன்னித் - தண்டுறைகாரந்தமத்தின்பாவ

நாசத் தடந்துறைகள்படிந்துநதித்தடமே போந்து - பண்டும
ழுப்படையோனம்மழுவாற்கொண்ட பாக்கியபூமியுஞ்சேரன் ப
திகள்யாவும் - கண்டுமனங்களிகூரச்சென்றமேலைக் கடல்கண்டா
னுரகர்தலங்கண்டுமீண்டான்... ... ... (௬௮)

அந்தநெடுந்திசைப்புனல்களாடுநாளிலைந்துதடத் தரம்பை
யரோரைவர்சேர - இந்திரன்வெஞ்சாபத்தாலிடங்கராகி யிடருழ
ந்தோர்பழைபபடி வெய்தநல்கி - சிந்துதிரைநதிபலவுஞ் சென்
றுதோய்ந்து திங்களுடனரவுறவுசெய்யும்வேணிக் - கொந்தவிழு
மலரிதழித்தொடையோன்வைகுங் கொடிமதிள்சூழ் கோகன்னங்
குறுகினனே ... ...(௬௯)

ஆகன்னமுறச்செம்பொன்வரைவில் வாங்கி யவுணர்புரங்க
ட்டழித்தோனடியில்வீழ்ந்து -கோகன்னவளம்பதியிற் றன்பின்
வந்த குலமுனிவர் தமையிருத்திக்கோட்டுக்கோடி - நாகன்னப்
பெடையுடனேயாடுங்கஞ்ச நறைவாவிவண்டுவரை நண்ணியாங்க
ட் - பாகன்னமொழிக்கனிவாய்முத்தமூரற் பாவைநலம்பெறமு
க்கோற்பகவனானான் ... ... (௭௰)

வெங்கதிர்போய்க்குடதிசையில்வீழ்ந்தபின்னர் வீழாமன்
மாலைபின்வாய்மீண்டுமெந்தச் - செங்கதிர்வந்தெழுந்ததென மீது
போர்த்த செய்யவாடையுந்தானுந்தீர்த்தவாசி - சங்க திருமணி
வீதி நகரிசூழ்ந்த தடஞ்சாரலினாவதிகசயிலநண்ணிப் - பொங்க
திர்பைம்புயலெழுந்துபொழியுங்கங்குல்போயொருநீள்வட தரு
வின்பொதும்பர்சேர்ந்தான்... ... ...(௭௧)

இந்திரற்குத்திருமதலைமன்றலெண்ணி யாதவர்கோன்வளம்
பதியிலெய்தினனென் - றந்தரத்தைநீலத்தால்விதானமாக்கி யன்
டமுறவிடிமுரசமார்ப்பவார்ப்ப-வந்திரட்டைவரிசிலையாற் பச்சை
வண்ண மகரதோரணநாட்டிவயங்குமின்னால் - முந்துறத் தீபமு
மெடுத் துத்தாரைமுத்தான் முழுப்பொரிசிந் தினகாலமுகில்கள்
ம்மா... ... ... (௭௨)

யாங்கருதிவருகருமமுடிப்பானெண்ணி லிராமன்முதல் ய
துகுலத்தோ ரிசைபாவொன்றும் - பாங்குடனேதனக்குயிராந்துள
பமோவித் பரந்தாமன்றனை நினைந்தான்பார்த்தனுசப்- பூங்கமல
மலரோடையனையான்றானும் பொன்னெடுந்தேர்ப்பாகனு மே

யாகப்பேர்ந்து - நீங்கரியநண்பினருப்நெடுநாணீங்குநேயத்தோ
ளிணையவிழிநேர்பட்டானே... ... ... (௫௩)

யதியாகியவணிருந்த தோழன்றன்னை யதுகுலநாயகன்பரி
வோடிறைஞ்சவன்பால் - அதியானநெடுஞ்சுருதி யாசிகூறி யாக
மூறைத்தழீஇமகிழ்வுற்றுலநீழல் - மதியார்செஞ் சடைமுடியோ
னென்னவைகிவந்தவாறுனைப்பநெடுமாலுங்கேட்டுத் - துதியாடி
க்காலையிலேவருதுமென்று சொற்றிமைப்பின் மீளவும் போய்த்
துவரைபுக்கான்... ... ... (௫௪)

ஆதவன்வந்துதிப்பளவின்மற்றைநாளி லணிநகர்வாழ்சன
மனைத்துமந்தக்குன்றில் - மாதவன்றனேவலினன்மழைக்காலத்து
வாசவற்குவிழவயர்வான்வந்தகாலை - யாதவரிற்போசரின்மற்றுள்
ளவேந்தர்யாவருஞ்சூழ்வரநறுந்தாரிராமன்வந்தான் - சூதடர்கச்
சிளங்கொங்கைப் பச்சைமேனிச்சுபத்திரையுந்தோழியர்கள் சூழ
வந்தாள்..... ... ...(௫௫)

முக்கோலுங்கமண்டலமுஞ் செம்மட்டுசே முந்நூலுஞ்சி
கையுமாய் முதிர்ந்துதோன்றும் - அக்கோலமனைவருங்கைதொ
ழுதுநோக்கி யருணலம்பெற்றகன்றதற்பினனைத்துலோகத் - தொ
க்கோலமேயானிகட்கு முயிராய்த்தோற்ற மீனாந்தாய்ப்பாற்கட
லினிடையேவைகும் - மைக்கோலமுகில்வண்ணன் முனுமெய்த்தி
மனவணக்கப் புரிவோனைவணங்கினனே ... (௫௬)

துன்னியிருவருமொருப்பட் டிருந்தகாலைச் சுபத்திரையத்
தடங்குன்றின்சூழலோர்சார் - மின்னியபைம்புயலினெழி லிரோ
கைபோலவெளிப்படலுமெய்ப்புளகமேன்மேலேறிக் - கன்னியி
னந்தனிக்கடம்புமலர்ந்ததென்னக் கண்டவிழியிமையாத காட்சி
காணு - மன்னியமாதவத்தோனைமந்தகுமரன் மாதவன்மைத்துன
ன்மைபினுன்மகிழ்ச்சிகூர்ந்தே ... ... (௫௭)

அடிகடிருவுளத்தெண்ண மெம்மனோர்களறியினிசையலர்
பலரிங்கறிவுறுமல் - கடியயர்வுற்றும்பதிகொண்டடையினென்
றுங் காவலர்க்குக்கடனென்றுங் கசியக்கூறித் - கொடியிடைவெ
ங்களபமுலைக்கன்னிமானைக் கூயணங்கேமெய்ம்மையுறக் கொண்
டகோலப்- படிவமுனிக்கிருபருவம்பணித்தவேவல்பரிவுடனீபுரி
யென்றுபணித்திட்டானே... ... ... (௫௮)

கலிநிலைத்துறை.

உள்ளடங்கியகாமவெங்கனல்புறத்தோடிக் ... *
கொள்ளைகொண்டிடன்மறைத்தெனக்கூறையுந்தானு *
மெள்ளவந்துதன்கடிமனைமேவியவேடக்... ... *
கள்ளவஞ்சனையறிந்திலள்கற்புடைக்கன்னி ... (௫௯)

ஈங்குவந்ததென்றவப்பயனென்றுகொண்டெண்ணி ... *
ஆங்குவந்தொருமனையிடையருந்தவன்றுயிலத் ... *
தூங்குகண்ணினள் சுபத்திரைதோழியர்பலரும் ... *
பாங்குவைகமற்றொருமனைபுகுந்துகண்படுத்தாள்... (௬௰)

புடவியெங்கணும்புதையவான்பொழிதருபுனலால் ... *
அடவியாரழலவியவுமவிந்திலதையோ ... ... *
தடவிவாடைமெய்கொளுத்திடத்தனஞ்சயற்கணங்கின்... *
விடவிலோசனக்கடைதருவிரகவெங்கனலே ... (௬௧)

மதனலீலையிற்பழுத்தறவழிபடும்பாவை ... ... *
வதனவான்மதிவந்துமுன்னிற்கவுமருண்டச்... ... *
சதனமேவருந்தபோதனன்றனக்குவெம்மோக ... *
விதனவல்லிருள்விடிந்திலதாரிருள்விடிந்தும் ... (௬௨)

அற்றைநாண்முதலநேகநாளகின்மணங்கமழும் ... *
கற்றைவார்குழற்கன்னிகைவழிபடக்கருத்தால் ... *
இற்றைமாமதன்பூசலுக்கென்செய்வேனென்றென் ... *
றொற்றையனறிவ்போன்மெய்ம்மெலிந்துள்ளமுமுடைந்தான் ()

நல்லிலக்கணம்பலவுடையவயவநலத்தால்... ... *
வில்லிலக்கணத்தழும்புடைக்கரங்களான்மிகவும் ... *
தொல்லிலக்கணம்பலவுடைத்தூயவன்றன்னை ... *
அல்லிலக்கணவனையிவன்யார்கொலென்றயிர்த்தாள்... (௬௪)

மங்கையங்கொருநாளவன்மலரடிவணங்கி... ... *
எங்கும்வண்புனலாடுதற்கேகினீரெனினும்... ... *
தங்குமாநகர்யாதெனத்தனஞ்சயன்றானும்... ... *
எங்கண்வாணகரிந்திரபிரத்தமென்றிசைத்தான்... ... (௬௫)

என்றகாலையிலிந்திரன்மதலையையொழிய ... *
நின்றபேதையநெடுங்கணாள்வினவலுநிருபன் ... *

வென்றிமன்னவர்யாரையும்வினவிவினைமின்னே ... *
மன்றலந்தொடைவிசயனைமறந்ததென்னென்றான்... (௬௬)

யாழின்மென்மொழியெங்கணாயகியிவளவனுக் ... *
கூழினன்புடைமன்றலுக்குரியளாதலினால் ... *
வாழிவெஞ்சிலைவிசயனைமறந்தனளென்றாத் ... *
தோழிநின்றவளொருத்திகைதொழுதனள்சொன்னாள்... (௬௭)

பங்குனன்பெருந்தீர்த்தநீர்படிவதற்காகப் ... *
பொங்குதெண்டிரைப்புவிவலம்போந்தனனென்றே... *
அங்குநின்றுவந்தவருரைத்தனரவனிப்போ...... ... *
தெங்குளானெனத்தெரியுமோவடிகளுக்கென்றாள்... (௬௮)

பாங்கிநல்லுரைதன்செவிப்படுதலும்விசயன்... ... *
தீங்கிலன்பலதிசைகளுஞ்சென்றுநீராடிக் .. ... *
கோங்கிளங்கொழுமுகைநிகர்கொங்கையாள்பொருட்டால்... *
ஈங்கும்வந்துநும்மில்லிடையிருந்தனனென்றான்... (௬௯)

யதியுரைத்தசொற்கேட்டலும்யாதவிநுதல்வாண்...... *
மதிவியர்த்தது துடித்தது குமுதவாய்மலரும்... ... *
புதியகச்சணிகுரும்பைகளரும்பினபுளகம்...... ... *
பதியிடத்தரிவையர்க்குளமாகுலம்படாதோ..... (௭௰)

உகவைமுத்தமென்பவளமுநீலமுமொளிர... ... *
அகவுபச்சிளந்தோகைபோ னின்றவவ்வணங்கை... ... *
மிகவிருப்பநோய்வளர்தலின்மெலிந்ததோள்விசயன்... *
தகவுடைத்தனதடக்கையால்வளைக்கரந்தகைந்தான்... (௭௧)

தகைந்தபோதுயிர்ச்சேடியர்தவிர்கெனச்சிலசொல்... *
பகர்ந்துபோயொருமாதவிப்பந்தரிற்புகுந்து... ... *
புகுந்தநீர்மையைத்தேவகிபதியுமாயுகன்றார்... ... *
அகந்தைபல்பெருங்கிளைஞரிலார்கொலோவறிந்தார்... (௭௨)

அறிவுருவகையலாயுதன்முதல்வடமதுரைச்... ... *
செறியும்யாதவர்யாரையுந்தன்னுடன்சேர்த்து... ... *
மறிகொள்செங்கையன்விழவயர்வான்பெருந்தீவில்... *
உறியில்வெண்டயிருண்டவன்கொண்டுசென்றுற்றான்..... (௭௩)

உற்றகங்குலில்யாவருந்தணந்தவாறுணர்ந்து... ... *
பெற்றதன்பெரும்பிதாவினைமுன்னினன்பெரியோன்... *

சிற்றிடைப்பெருங்கொங்கையுத்தம்முனைத்தியானம்... ...*
முற்றமுன்னினளிருவருமுன்னுன்வந்துற்றார்... ... (௭௪)

இந்திராணியோடெய்தியவிந்திரன்றன்னை .. .. *
முந்திராபதியெதிர்கொளத்துவரைமாமூதூர் ... *
சந்திராதபமண்டபத்திடுபொலந்தவிசில்... ... *
வந்திராவணங்கியதிருமகனுடன்மகிழ்ந்தான் ... (௭௫)

பொருவரும்புருகூதனும்புலோமகன்னிகையும்... ... *
இருவருந்தமகலன்களாலிவரிருவரையும்... ...... *
மருவரும்படியணிதலினணிகெழுவனப்பால்... ... *
ஒருவரும்பிறிதொப்பலரொன்றுமாறுயர்ந்தார் ... (௭௬)

பாலருந்ததிநறுநெயாய்ப்பாடியிற்கள்ளத்... .. *
தாலருந்ததிவிரகனதருளினவ்விரைவில்...... ... *
சாலருந்ததிதலைவனுந்தலைபெறுபலநுண்... ... *
ணூலருந்ததியுறப்புகுந்தாசிகனுவன்றார்... ... (௭௭)

தொடங்கிநாதவெம்முரசுடன்சுரிமுகந்தழங்கச்... ... *
சடங்கிறுவுபராகுதித்தழலவன்சான்றா...... ...... *
விடங்கிளன்மிகுவிசயனக்கன்னியைவேட்டான்... ... *
மடங்கினர்தமபதிதொறுமவ்வுழிவந்தோர்... ... (௭௮)

முன்னம்யாவையுமுடித்தருண்மொய்துழாய்முடியோன்... *
கன்னனுருயிர்கொளவளர்காளையைத்தழீஇக்கொண்... ...*
டன்னமென்னடைபரிவையர்பொருட்டுநீயின்னம்... ... *
என்னவென்னமாதவவுருக்கொள்ளுதியென்றான்... (௭௯)

(வேறு)

காமற்பயந்தோனனைதேவலிற்காமபாலன்... ... *
வாமப்பதிதன்னினும்வாசவன்மாபிரத்த...... ...... *
தாமப்புரியேசரியாகநடக்கலுற்றான்... ... ... *
தாமக்குழலாளணிதேர்விடச்சாடவீரன்... ... (௮௰)

வென்றித்துவரைநகர்க்காவலர்தம்மைவென்று... ... *
மன்றற்குழலினிளையாளைவலிதினெய்திக்... ... *
குன்றைச்சிறகரிந்தோன்மகன்கொண்டுபோந்தான்... *
என்றப்பலர்க்குக்கடல்வண்ணனியம்பினனே... ... (௮௧)

சேலாம்பிறப்பிற்றிருமாலிதுசெப்புமுன்னே... ... ✻
காலாந்தகனும்வெருவுந்திறற்காளைதன்னை... ... ✻
நீலாம்பரனும்யதுவீரர்திருபர்யாரும்...... ... ✻
நாலாம்படையோடெதிர்சூழ்ந்தமராடினரோ ... (௮௨)

அஞ்சேன்மருளனுடர்தம்மையுமாவிகொள்ளேன் ... ✻
செஞ்சேலனையவிழியாயெனத்தேற்றியந்த... ... ✻
மஞ்சேயனையதடந்தேரவனூரவந்த... ... ... ✻
வெஞ்சேனைமுற்றும்புறந்தந்திடவென்றுபோனான்... (௮௩)

படைபட்டவாளையகிறுமருதவேலி...... ... ... ✻
இடைபட்டதங்கள்வளநாடுசென்றெய்தியாங்குத்... ... ✻
தொடைபட்டதிண்டோளறன்காளைதுணைவரோடு... ... ✻
நடைபட்டுருகியெதிர்கொள்ளநகரிபுக்கான்... ... (௮௪)

முன்போர்விளைத்தமுசலப்படைமொய்ம்பினானும்... ...✻
தன்போலுயர்ந்தோரிலனானதடங்கண்மாலும்... ... ✻
பின்போயினியமொழியாயிரம்பேசிமன்றற்... ... ✻
கன்போடுதவுமுபசாரமனைத்துமீந்தார்... ... (௮௫)

ஞாலத்தெரிவைகளிகூரநடாத்துஞ்செங்கோற் ... ✻
றூலத்துவசன்றுவராப்பதிதன்னில்வைக ... ... ✻
நீலக்கடல்களிரண்டாமெனநெஞ்சொடொத்த ... ✻
சீலத்தவரோடவண்வைகினன்செங்கண்மாலே ... (௮௬)

பன்னாளிவரிப்பதிசேர்ந்தபின்பங்கசாத ... ... ✻
மின்னாளுமார்பற்குயிர்போலும்விசயனென்பான் ... ✻
நன்னாளினன்மைதருவோரையினல்கவஞ்சி... ... ✻
அன்னாளிடத்திலபிமன்னுவவதரித்தான் ... ... (௮௭)

வேதஞ்சிறக்கமனுநீதிவிளங்கவிப்பார் ... ✻
மாதங்கமாறவருமைவரின்மைந்தரைவர் ... ... ✻
பூதங்களைந்திற்குணமைந்தும்பொலிந்தவாபோல் ... ✻
ஓதங்கியினுற்பவித்தாள்வயினுற்பவித்தார் ... (௮௮)

அம்மாதுலனும்பயந்தோருமழகின்மிக்க ... ... ✻
இம்மாமகருக்கியற்றும்விதியேய்ந்தபின்னர்த் ... ✻
தெம்மாறவின்மைமுதலானசெயல்கள்யாவும் ... ✻
கைம்மாறுகொண்டுநனிகைவருமாறுகண்டார் ... (௮௯)

அரிதிற்பயந்தவறுவோரினுமாண்மைதன்னுல் ... *
இருதுக்களின்மெல்லிளவேனிலின்றேற்றமேய்ப்ப ... *
மருதுக்கிடைபோமதுசூதனன்மருகன்வெம்போர் ... *
விருதுக்கொருவனிவனென்னவிளங்கினனே ... (கூய)

உரனுலழகாலுளையான்மற்றுவமையில்லா *
நரநாரணர்க்குநலங்கூர்தருநண்புபோல்வான் ... *
அரனுல்விழிபாலழிந்தங்கமனங்கமான ... *
வரனருடனண்பியைந்தன்றுவசந்தகாலம் ... (கூக)

அ - வது தீர்த்தயாத்திரைச்சருக்கம்.

முற்றிற்று.

ஆகசருக்கம் -அ- இ-திருவிருத்தம்-எஉஉ.

கூ- வது.

வசந்தச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பங்கயனேயுள்ளிட்டபற்பலுயிர்த்தொகைபிறமுன்படைத்துக்காத்துச்- சங்கையறநீத்துவருபெருநீத்தந்தனிலாலின்றளமாலமேவி - நங்கைசெழுமலர்மங்கைநனிமகிழமீட்டுமவைநல்குமண்ணல்-கங்கையொடுபழமறைபைந்துணர்த் துளவுகமழ்கழற்கால்கருத்துள்வைப்பாம்... ... ...*

தனியாரனற்கடவுள்யமனிருதி நண்ணுதிசைநாள்கடோறும்- முனிபாமனடந்திளைத்துமுன்னையினும்பரிதாபமுதிர்ந்ததென்று - தனியாழித்தனிநெடுந்தேர்த்தனிப் பச்சைநிறப்பரியைச்சைலராசன் - பனியாலவ்விடாய்தணிப்பான்பனிப்பகைவன்பனிசெய்வோன்பக்கஞ்சேர்ந்தான் .... (க)

கலக்கமுறமேவேள்வேனிற்கலகமெழும்பசுநறுந்தண்காவுதோறும் - சிலைக்கணிநாண்முறுக்குவபோற் றென்றலின்பின்சுழல்வரிகள்சேரவோட - உலைக்கனலிற்கருங்கொல்லன் சிறுகுறட்டாற்றகடுபுரிந்தொதுக்கிமாரன் - கொலைக்கணைகள்சமைப்பனபோற் குயிலலகாற்பல்லவங்கள்கோதுமாலோ ... ... (உ)

செங்காவிசெங்கமலஞ்சேதாம்பறடந்தோறுமுத்தியாகப் - பைங்காவினெடுஞ்சினைக்கைமலர்நறுந்தேனுகுதிகள்பலவும் வீழ்க்க - உங்காரமதுகரங்கள்ளாங்காரச்சுருதியெடுத் தோதவேள்வி- வெங்காமனிரதியுடன்புரிந்துதன தென்றலந்தேர் மேற்கொண்டானே ... ...(௩)

தேவியருந்திருமாலுஞ்செழுமலர்த்தார்த்தனஞ்சயனுந்தேவிமாரும் - மேவியனந்தரம்வேனில்விழவயர்வான் முரசறைந்து வீதிதோறும் - ஓவியமுமுயிர்ப்பெய்தவுபேந்திரனு மிந்திரனுமுவமைசாலப் - பூவினமுஞ்சுரும்புமெனப்புரமுழுதும்புறப்படவண்பொங்கர்சேர்ந்தார் ... ...(௪)

கொண்டலெழமின்னுடங்கக் கொடுஞ்சாபம்வளைவுறச்செங்கோபந்தோன்ற - வண்டளவுநறுங்குமிழும்வண்டணி காந்தளும்பூக்க மல்கடோறும் - தண்டரளவருவிவிழத்தையலார் வடிவு தொறுஞ்சாயற்றோகை- கண்டுநமக்கிளவேனில்கார்காலமானதெனக்களிக்குமாலோ... ... ... (௫)

பாராமனகையாமற் பகராமற்பாடாமற் பாதஞ்செங்கை - சேராமன் முகராமல் வழங்காமற்றழுவாமற் செவ்வாயூறல்- நேராமலுயிர்ப்பொன்றுதிகழாமன் மலர்ந்தழகுநிறைந்தநீழல்- ஆராமந்தொறுந்தங்கயளவம்போல் வனகொய்தாரணங்கு போல்வார் ... ... (௬)

மாற்றுத்தபனிநீரான்மான்மதகுங் குமமலயவாசச்சந்தின் - சேற்றுலச்சோலையெலாஞ் செங்குழுநீர்த்தடம்போன்றசிந்தைதாபம் - ஆற்றுதகாதலருக்கமுதான விள்நீரால்டர்ந்தபூத்த- தாற்றுலம்மரகதச்செந் துகிராலப்பொழில்போன்றதடங்களெல்லாம்.

மெய்கொண்டமொழிவிசயன் மெய்யினெழிலிமையாமன் மேன்மேனோக்கும் - மைகொண்டகுழலொருத்தி மற்றவன்செங்கையிற்சிவிறிமழைகண்டஞ்சிப் - பொய்கொண்டுவகுத்தனைய மருங்கசையத்தனபாரம்புள்கமேறக் - கைகொண்டுமுகம்புதைத்துக் கைவிரற்சாளரங்களிலே கண்கள்வைத்தாள் ... (௮)

நங்கையங்கோர்கொடியனையாள் வதனமதிசலமதியாய்நடுங்குமாறு- பங்குநன்றன் திருச்செங்கைப் பங்கயத்தின் சிவிறியினுற்பரிவுகூரக் - குங்குமங்கொள்புனல்விடவுமிமையாமற் புனல்வ

ழியேகூர்ந்தபார்வை - செங்கலங்கற்புதுப்புனலுக் கெதிரோடிவி ளையாமீன்சேல்கள்போலும் ... ... (௯)

நறைகமழுந்துழாய்மாலை நாரணற்குநண்பான நானுர்செ ங்கை - உறையுமலர்ச்செந்திருவுமொவ்வாத பொற்புடையாளொ ருத்திபோங்கி - நெறிதருபைங்குழலின்மிசை வீசியநீர்பெருங் காற்றினிறைநீர்வற்றி - அறல்படுநுண்கருமணலிலரித்தொழுகுஞ் செந்நீரோடமைந்ததம்மா ... ... (௰)

விளிந்துமயில்புறங்கொடுக்குமெல்லியலா ளொருத்திநெடு வேயும்பாகும் - சுளிந்துவருங்கடுங்களிற்றுச் சுவேதவாகனன்கட கத்தோளின்மீது - தெளிந்தசெழுங்கத்தூரிச் சேறுபடுசிவிதியி னீர்சிந்துதோற்றம் - களிந்தகிரிமிசைக்கடவுட் காளிந்திபரந்த தெனக்கவினுமாலோ ... ... (௰௧)

பிறையனையதிலகநுதற்பேதையிளம்பிடி யொருத்திபிடித் தசெங்கை - நறைகமழும் பொலன்சிவிறிநண்ணியசெஞ்சிந்தூர தாரம்வீச - அறைகழல்வெஞ் சிலைத்தடக்கையருச்சுனன்றன்தி ருமுகத்திலானபோது - நிறைமதிமேல்வாளிரவி கரங்கணிறைந் தோடுவபோனிகர்த்ததாலோ ... ... (௰௨)

பாண்டுமகலையுங்காதற் பாவைபருந்துழாயோனும் பா வைமாரும் - ஈண்டுபெருஞ்சனத்துடனே யிவ்வண்ணமிடந்தோ றுமினிதுறுடி - ஆண்டுவரிசிலைமதனும்வான்படையுஞ் சேவிப்ப வூழகூர - மீண்டுதமமனைதோறு நிரைநிரைவாள்விளக்கேந்த மேவினரே ... ... (௰௩)

நெடுவேனல் புகுதாமை விளவேன லகன்றதற்பி னிகரில்கஞ் சுப் - படுவேய்வெள்வளையமுந்தண்பட்டாலவட்டமுமொண்பஞ் சச்சேதும் - உடுவேய்நித்திலத்தொடையுமூடுருமண்டபத்தடமு மொழுகுநீண்ட - வடிம்வேய்கண் மடந்தையர்களு மகிழ்நருக்கு மமைந்தனவாழ்மனைகளெல்லாம்... ... ... (௰௪)

திலகநுதற்குறுவியர்வுதனைச்செவிப்பூவளியினத்தின் சிறக ரிக்காற்றுல் - புலரமதுநுகர்மாதர் புன்முறுவலிதழூரல்புதிதின் மாந்தி - இலகுபரிமளபுளகவிரமுலைத்தடமூழ்கியிரதிகேள்வன் கலகமிடும்பரிதாபமகற்றிலுரினிமையுடன்கலந்தகேள்வர்... (௰௫)

மாரவசந்தனையகன்றுமயங்குறுவெங்கோடையினான்மறுகி யாற்றா - தாரமளிமதுமலரிலாரவடங்களிற்பனிநீராரச் சேற்றில் - ஈரநெடுங்குழலிசையி லியங்கியசாமரக்காற்றி னிளநிலாவில் - பேரழலும்புகுந்ததெனப் பிணங்கினார்தங்கேள்வர்ப்பிரிந்த மாதர் ... ... (௧௬)

கோடைவெயில்சுடச்சுட மெய்கொளுந்தியிறந்தனபோல க்கொண்டல்கோடை - வாடைசிறுதென்றலெனுமாருதங்களெம் மருங்கும்வழக்கமின்றி - ஆடையில்வெண்சாமரத்தி லாலவட்டத் தினிலுயிர்ப்பிலழகார்நெற்றி - ஓடைமுகத்தனகயத்தின்றழைசெ வியிற்பல்விறகிலொளித்தமாதோ .. .. (௧௭)

தாழிநறுங்குவளையந்தார்த்தருமன்மகனருட்புனலுந்தரங்க வேலை - ஊழிநெடும்பெரும்புனலு முடலினுறு வியர்ப்புனலு மூறியூறிப் - பாழிதொறுமிறைக்கின்றபைம்புனலுமல்லது வெம் பருவந்தன்னில் - பூழிபடுகமராயநானிலத்தும்புகலுதற்கோர்பு னலுமுண்டோ... ... ... (௧௮)

நீகாரமழைபொழிய நித்திலவெண்குடை நிழற்றநீலவாட்க ட் - பாகாருமொழிமடவார்பனிக்கவரியிருமருங்கும்பயிலவீசக் கார்காலம்புகுந்துசெழுங் காளமுகிலிரண்டொருபாற்கலந்ததெ ன்ன - ஆகாரமழகெறிப்பவிருவருமாங்குடனிருந்தாராவிபோல் வார்... ... ... (௧௯)

ஆக சருக்கம் - ௯ - க்கு - திருவிருத்தம் - ௭௪௪.

௯ - வது வசந்தச்சருக்கம் முற்றிற்று.

௰ - வது.

காண்டவதகனச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அரியமாமறையறைந்தசொல்லறநெறியந்தணர்தமைக்காப் பான் - விரியநீடுதீநெறிமறைக்கடை செலும்வெய்யனைச்செகுப் பான்சீர் - தெரியமாயிருஞாலமீமிசைவரு திருமலிபுகழ்சாலும் - அரியகோவலன் சேவடியல்லன கருத்தினுக் கிணங்காவே ... (௧)

இனியபான்முகந்தொழுக்குமாகுதியெனவிலங்கு முப்புரி
நூலும் - தனதுவெஞ்சிகைக்கொழுந்தெனப்புறத்தினிற் றாழ்ந்
தசெஞ்சடைக்காடும் - புனிதவெண்பலகைமருங்குசுற்றிய தெனப்
புனைந்தவாடையுமாகி - மனிதவேதியர் வடிவுகொண்டவனெதிர்
வன்னிவானவன்வந்தான்... ... ... (உ)

வந்தவந்தணன்வரவுகண்டிருவருமெதிரெதிர்வணங்கித்தம் - சிந்
தையன்பொடுவேதிகையெனத்திகழ்செம்பொனின்றவிசேற்ற -
அந்தணனுங்குழிந்தபொற்கண்ணினனவிமணங்கமழ்வாயன் -
உந்துவெம்பசிபெரிதுவல்லேயெனக்கோதனமிடுகென்றான். (௩)

கரியமேனியரிருவருஞ்செய்யபொற்காயமாமுனியுண்டற் ... *
குரியபோனகமிந்துமிக்கணத்தெனவுவகையோடுரைசெய்தார் *
அரியவாயினும்வழங்குதற்கேற்றனவல்லவாயினுந்தம்மின் ...*
பெரியவாயினுமதிதிகள்கேட்டனமறுப்பரோபெரியோரே (௪)

அளித்துமென்றசொற்றன்செவிப்படுதலுமருந்தினல்போலாகி
ஒளித்துவந்தனனிருபிறப்பினனென்னுதாசனனென்னும் - களி
த்துவண்டிமிர்தொடையலீரெனக் கூணுக்காண்டவமெனுங்கான
:ம் - குளித்தருந்துதற்கிடங்கொடானவ்வனங்கொண்டல் வாகன
ன்காவல் ... ... (௫)

மிடைந்தநால்வகைமிருகங்களுநெடுவெற்பினங்களுந்துன்றி *
அடைந்ததானவரரக்கர்பேருரகருக்காலயங்களுமாகிக்... ...*
குடைந்துசோரிகொள்வாளுகிரரிமுதற்கொடுவிலங்கினமிக்குக்*
கடைந்தகூரெயிற்றுலவாய்த்தக்ககன்கானகமதுகண்டீர்... (௬)

புகுந்தியான்முகம்வைக்கினேழ்புயலையுமேவியப்புருகூத
ன் - தொகுந்தராதலவிறுதிபோனெடும்புனல்சொரிந்த வித்திடு
மென்னை - முகுந்தனானிரைபுரந்தவாறெனவொருமுனைவிலாது
றைநிற்கின் - மிகுந்ததாகமு மெண்ணமுமுடிந்திடும்வேண்டுவதி
துவென்றான்... ... ...(எ)

என்றபோதுநின் னிச்சையின்படி யுணவீந்தன மிமைப்
போதில் - சென்றுகொள்ளெனத் தனஞ்சயன்கூறலுஞ் சிந்தை
கூர்மகிழ்வெய்தி - மன்றலந்துழாய்முடியவ னருளினால் வடிக்க
ணைமாறுமல் - துன்றுதூணியுஞ்சாபமுமிரதமுஞ் சுவேதவாசியு
மீந்தான்... ... ... (அ)

ஈந்தவானரப்பதாகைநட் டீரிசண்டிவுளியுமுடன் பூட்டி -
ஆய்ந்தவான்றொழிற்பாகனுமருணனிலழகெழும்படி தூண்டக் -
காய்ந்தசாயகநாழிகைக்கட்டியக்காண்டிவங்கரத்தேந்தி - வேய்ந்
தமாமணிக்கவசமுமருக்கனிலழகுறமேற்கொண்டான்... (௯)

நெஞ்சின்பேலிடுமூக்கமோடணிதிகழ் நெடும்புயம் பூரித்
துச் - சிஞ்சினிமுகந்தெறித்தனன்றெறித்தலுந்தெறித்தபேரொ
லிசானில் - விஞ்சைவாழ்வனசத்துவமடங்கவீழ்வெருவுறவுகாந்தத்
து - மஞ்சினீடுருமொலியெனப்பரந்ததுவான்முகடுறமன்னே()

ஆழிவாயொருவடவையின்முகத்தெரியவதரித்தனனென்ன-
உளழிவாயுலகனைத்தையுமுருக்குமாறுடன்றெழுந்தனனென்ன -
வாழிவாழியென்றருச்சுனன் சரத்தையும்வார்சிலையையும்வாழ்த்தி
ப்-பாழிமேனியைவளர்த்தனன்பாகவன்பவனனும்பாங்கானான் ()

மூளமூளவெம்பசியொடுஞ் சினத்தொடுமூடி மொய்த்து
றவோடி - வாளமாகவோர் பவளமால்வரைநெடுவரியை வளைந்
தென்னக் - காளமாமுகிலூர்நிதந்தண நிகர்காண்டவந்தனையண்ட-
கோளமீதெழவளைத்தனன்வரைபடிகொண்டலுங்குடர்தீய (௰௨)

ஆனவாருலந்தன்னெடுந்தப்புதற்கணிபடப்பரந்தோங்குந்-
தூநிறத்தனகபோதமொத்தனவிடை யிடையெழுஞ்சுடர்த்தூம
ம் - கானமேதியுங்கரடியுமேனமுங் கடகரிகுலந்தாமும் - வானி
லேறுவபோன்றன நிரை நிரைவளர்தருங்கருந்தூமம்... ...(௰௩)

வரைத்தடந்தொறுங்கதுவியகடுங்கனன்மண்டலி னகல்வா
னின்-நிரைத்தெழுந்தசெம்மரகதகனகவாணிலவெண்ணிறத்தூம
ம்- தரைத்தலத்துநின்றண்டகோளகையுறச்சதமகன்றடஞ்சாபம் -
உரைத்ததன்வளைவுறநிமிர்ந்தழகுறவோடுகின்றதுபோலும் (௰௪)

கருதியாயிரகோடிவெம் பயங்கமிக்காளிடை யுளவென்
று - பரிதிசூழ்வரவெருவுபல்குவடுடைப்பருப்பதங்களின்சாரல்-
சுருதிவேள்வினூறுடையவன் சிறகறத் துணித்தவாய் தொறும்
பொங்கிக்- குருதிபாய்வனபோன்றனகொளுந்தியகொழுந்தழற்
கொழுந்தம்மா... ... ... (௰௫)

கோத்திரங்களிற்கதுமெனவானிடைக்கொழுந்துநின்றெரி
கின்ற - தீத்திறங்கள்செங்காந்தளுமசோகமுஞ்செழுங்குறிஞ்சியு
ஞ்சேரப் - பூத்தவொத்தனவன்றியுங் குலிகநீர் பொழியருவியும்

போன்ற - பாத்தகண்கள்விட்டேகலாவகைநிறம்பரந்ததாதுவும்
போன்ற... ... ... (௰௬)

தளைத்தபாதபத்தலைதொறும்பற்றின சருகுதிர்த்திளவேனி
ல் - கிளைத்துமீளவும்பொறியளியெழவளர் கிசலயங்களும் போ
ன்ற - திளைத்தவேர்முதற் சினையுறவிரிவனதீபசாலமும்போன்ற-
வளைத்தகானிடைமேனிமிர்ந்தட்புகும்வன்னியின்சிகாவர்க்கம்()

தழைத்தபேரொளித்திவாகரன்கரங்கள்போய்த்தடவியவ் வ
டவிக்கட் - பிழைத்தகாரிருட்பிழம்பினைவளைத்துடன் பிடித்தரிப்
பனபோலும் - முழைத்தவான்புழையொருகரத்திருபணைமும்ம
தப்பெருநால்வாய் - மழைத்தகுஞ்சர முகந்தொறும் புகருடன்
மயங்கியபொறிமாலை... ... ... (௰௮)

அரியெனும்பெயர்பொருளுடைமையிற்போல்விரைந்தழற் கொ
ழுந்துளைபற்றக் - கிரிமுழைஞ்சுகடொறும்பதைத்தோடினகேச
ரிக்குலமெல்லாம் - விரியுரோமவாலதிகளிற்பற்றலின்விழைவுடை
ச்சரபங்கள் - எரிகொள்சோபவெங்கனலினுனின்றுநின்றிறந்தன
சலியாமல் ... ... (௰௯)

எப்புறத்திலும் புகுந்துதீச்சூழ்தலினேகுதற்கிடமின்றித் -
தப்புறக்கருத்தழிந்துபேரிரலைமயாடுழையினந்தடுமாறி - மெய்
ப்புறத்துவெண்புள்ளிசெம்புள்ளியாய் விடும்படிவிரைந்தோடி -
அப்புறத்துவீழ்பொறிகளவ்வவற்றினையலங்கரித்தனவன்றே(௨௰)

காழுடைப்புறக் கழைகளின்றுளைதொறுங் கால்பரந்தி
சைக்கின்ற - எழிசைக்குளமுருகிமெய் புளகெழவிறைகொளும
சுணங்கள் - தாழழற்சுடர்சுடச்சுடவெடித்தெழு சடுலவோசையி
ன்மாய்ந்த - ஊழியிற்புயவுருமினுன்மடிந்திடுமுரகர்தங்குலம்
ன்ற... ... ...(௨௧)

அனையபோதிலவ்விபினசாலங்களினுர்தருக்களினீண்ட - சி
னைகடோறும்வாழ்சிகாவளகலாபமேற்செறிதருதீச்சோதி - பனை
யினீடுடற்பணிகளையலகினுற்பற்றலிற்படர்பந்திப் - புனையுமாம
ணி நிழல்பரந்தெழுந்தெனப்பொலிந்திலங்கின்மாதோ (௨௨)

ஆசுகத்தனோடடவியைவளைத்தன ளுசுகக்கணிமேன்மேல்-
வீசுகின்றனபுலிங்கசாலமும்புகல்வேறெமக்கிலதென்று- பாசிள
ங்கிளி பூவைகள்வெருவிமெய்பதைத்துளந்தடுமாறிப்- பேசுகின்
றசொற்கேட்டலுறடுங்கினபிறபறவைகளெல்லாம்... (௨௩)

நெஞ்சிலீரமுநீதியுங்குடிபுகா நிருதர்சென்னியில்வன்னி-
குஞ்சிநீடுறவளர்வபோற்செங்கொடுங்கொழுந்துவிட்டன மேன்
மேல் - வஞ்சிநேரிடையரக்கியர்நகமுழுமதிசிவப்புறத் தீட்டும் -
பஞ்சிபோன்றனவவரவர்பதயுகம்பற்றியசிகாவன்னி... (உச)

முப்புரங்களை முக்கணன்முனிந்த நாண்மூவரம்முழுத்தியில்...*
தப்பினருளர்காண்டவவடவிவாழ்தானவர்யாருய்ந்தார்... *
பைப்புறத்தனிமணியொளிபரந்தெனப்பஃறலைகளிற்பற்றி (தார்
வெப்புறுத்தலினுரகருந்தங்கள்வாய்விடங்கள்கொன்றெனவீழ்ந்

புகைபடப்படக்கரிந்தனபொறியினுப்பொறியெழுந்தனவானின்
மிகைபடைத்தவச்சுரர்பதியாயிரவிழிகளுங்கணப்போதில்... *
தகைவறக்கழைமுதலியதருக்களின்சுடுலவாரவம்விஞ்சித்... *
திகையனைத்திலும்பரத்தலிற்செவிகளுஞ்செவிடுபட்டனசேர ()

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

விரதமேற்கொண்டுசெம்பொன்மால்வரையை விரிசுடர்சூ
ழ்வருவதுபோல் - இரதமேற்கொண்ட வநுசனுஞ்சுதனு மிமை
ப்பினிற்பன்முறைபுரிந்து- சரதமேற்கொண்டு சரிப்பதுந்தன
து தாவகம்பாவகன்புகுந்து - பரதமேற்கொண்டு நடிப்பதுங்க
ருதிப் பார்த்தனன்பாகசாதனனே ... ... (உஎ)

முந்திவார்சிலைக்கைப் பற்குனன்றொடுத்த முரணுடைமூ
ரிவெங்கணைகள் - உந்திவாளுரகர் சூடிகாமகுடகோடிகளுடை
த்தலினுடைந்து - சிந்திமீதெழுந்தமணிகளுமனலன் சிகைகளி
ற்றெறித்தெழுபொறியும் - இந்திராலயத்துக் கேற்றியதீபமென்
னநின்றிலங்கினவென்றும் ... ... (உஅ)

தானவர்புரங்க ணீறெழமுனிந்த தமனியச்சிலைக்கைவள்
ளூர்தி - ஆனவர்நமது புரத்தைபுஞ்சுடுவா னழன்றனர்போலு
மென்றஞ்சி - வானவர்நடுங்க வச்சிரப்படைக்கை வலாரியும
னனுறத்தளர்ந்து - கானவருடனத்தக்ககனென்னுங் கட்செவி
கெடுமெனக்கரைந்தான்... ... ... (உகூ)

பரந்தெழுபுகையாற் றத்தமவடிவம் பண்டையிற்பதின்ம
டங்காகச் - சுரந்ததிர்புயல்களனைத்தையுநெடுநீர்சொரிந்தவித்தி
டுகெனச்சொல்லி-நிரந்தரமருங்குவிடாதுதன்னிழல்போ னின்ற

வானவனையுமேவிப் - புரந்தரன்றனுமீரிருமருப்புப் பொருப்பின்வெம்பிடர்மிசைப்புகுந்தான் ... ... (ரு0)

ஏவகவிருத்தச்செவ்வியின்றனுவுக் கேற்றநாண்முறுக்கியிட்டென்னச் - சேவகவிமையோ ரெண்டிசாமுகத்துச் செஞ்சுடர்வாள்விதிர்த்தென்னப் - பாவகன்பகுவாய் நாவிதிர்த்தென்னப் பரந்தவப்பாவகற்குணவாம் - தாவகமுழுதும் வளைந்துகொண்டெழுந்த சலதரசஞ்சலசாலம் ... ... (ருக)

எறியகளிறுபிளிறுநீரொலியுமெடுத்தவிற் றெறித்தநாணொலியும் - சூறியவிமையோர் பெருநகையொலியுந் துந்துமிக்குழாமதிரொலியும் - சீறியவனலன் சடுலவல்லொலியுங் குறைபடத் திசைதொறுமிகுந்த - ஊறியபுவன பவனவேகத்தோ டுருமுடைமுகிலின்வாயொலியே ... ... (ருஉ)

தூமமுமெமது பவனனுமெமது தோழனற்றேயமுமெமதே - யாமுமிங்கிவற்றோடொன்றுதலொழிது மீரிருபொருள்களும்பிரிந்தால் - மாமுகிலெனும்பே ரெங்குளதடர்த்தும் வாசவனென்செயுமெம்மை - ஆமுறைபறிது மென்றுகொண்டறவுமகங்கரித்தனன் வெகுண்டழலோன் ... ... (ருங)

மூண்டவெங்கனலை யுருமின்வெங்கனலான் முருக்கியெங்காலையானெருக்கி - ஆண்டவன்களிற்றின்கரநிகர் தாரை யருவியின்கரங்களாலவித்துப் - பாண்டவன்பகழிதொடுக்கினுங்கண்ணன் பருப்பதமெடுக்கினுமெங்கள் - காண்டவம்புரத்து மென்றுகொண்டிழிந்து பொழிந்தனகனம்படுகனங்கள்... (ருச)

காலைவாயருக்கன் பனிநுகர்ந்தென்னக் கட்டறக்காண்டவமென்னும் - பாலைவாயுள்ள சராசரமனைத்து நுகர்தலித்தைம்புனல்வேட்டோன் - வேலையேழையுமொண் டேழுமாமுகிலும் விதம்படப்பொழிந்ததாரைகளால் - தாலுவேழியையு நனைத்தனனைத்துந் தணிந்ததம்தாதன்பெருந்தாகம் ... (ருரு)

இக்கடல்களினு மினிப்பசையிலதென் றேழிருபுவனமுநடுங்கத் - தொக்கடலுருமோ டெழுமெழுகொண்டற் சோலையஞ்சுருவையான்முகந்து - மைக்கடல்வெருவக் கறுத்தமெய்ம்மகவான் வழங்கியவாருதியனைத்தும் - நெய்க்கடல்சொரிந்த தென்னுமாறருந்தி நீடுவான்முகடுறநிமிர்ந்தான் ... (ருசு)

தொழுதகுவிசயன் றனுவேழுடையோன் சுடர்முடிநனைந்
திடுவதன்முன் -எழுமுகிலினமும்பொழிதருமாரியாவையுமேவி
னால்விலக்கி - மூழுதுலகமுந் தன்னிடத்தடக்கியவான் முகடுறமு
றைமுறையடுக்கிக் - குழுவுவெங்கணையாற்கனற்கடவுளுக்குக்கொ
ற்றவான்கவிகையுங்கொடுத்தான் ... ... (௩௭)

ஆழ்தருபரவை யேழும்வற்றிடமா றமிழ்ந்தகாருமிழ்ந்திடு
நெடுநீர் - தாழ்தருசரத்தான் மேய்ந்ததற்கிடையோர் தனித்திவ
லையும்பொசியாமல் - வீழ்தருமருவி பாவகன்றனக்கு விசயனன்
றளித்தபொற்குடைக்குச் - சூழ்தரநிரைத்துத் தூக்கியமுத்தின்
சுடர்மணித்தொடையல்போன்றனவே... ... (௩௮)

மண்டிமீதெழுந்த வன்னியின்சிகைக ளிந்திரன்மதலைவாளி
களால் - கண்டகூடத்திற்கமைத்தசெம்பவளக்காண்டகுதூண்டிர
ள்காட்ட - அண்டகூடத்திற் கிந்திரன்பளிங்கா லமைத்தபல்லாயி
ரகோடி - சண்டதூணங்கள்போன்றனபரந்து தனித்தனிமுகில்
பொழிதாரை ... ... (௩௯)

தக்ககன்றன்னைக் கூயினர்தேடிச் சாயகமண்டபஞ்சுற்றி -
மிக்கவிண்ணவர்க டிரிதரவவன்றன் மெல்லியன்மகவையும் விழு
ங்கி - அக்கணந்தன்னிலந்தரத்தெழலும் வீழ்த்தினனம்பினாற்று
ணித்துச் - செக்கர்நடுவட்சென்னியையுரக கன்னியைத்திருமண
ஞ்செய்தான்... ... ... (௪௰)

பருவயிற்சதகோடிபினிறையயிரா பதத்தின்மும்மதத்தி
னனைத்துக் கருவயிற்றெழிலித்தாரையால்வருணக் கடவுடன்க
ணைகளாலவித்துச் - செருவயிற்புரள வொதுக்கியத்தோழன் சி
றுவனைச்சென்றெடுத்தணைத்தான் - ஒருவயிற்பிறந்தோனுதலின்ம
கவானுடனுடன்றிலனுதாசனனே..... ... (௪௧)

அன்னவாயொடுதன்வாலதிதுணியுண் டலம்வருமச்சுவசே
னன் - தன்னவாசவன்போட்வீடுகண்டுழியத் தனஞ்சயனினை
ஞ்செய்வெங்கணையால் - முன்னைவானவரை முடனைமுகந்தன்னின்
முதுகிடமுதுகிடமுருக்கிப் - பின்னைவாரிதங்களேழையும்பொரு
து பின்னிடப்பின்னிடப்பிளந்தான் .. ... (௪௨)

திரன்மால்பொருது வீடுகண்டதற்பின் செக்கர்மெய்த்தக்
ககன்பயந்த - பாரமாசுணமிவ்விசயனுக்கியார்வர் பகையெனப்ப
லனையும்வினவிச்-சூரன்மாமதலைசரணமேயரணநமக்கெனத்தொ

ழு துசென்றெய்தி - வீரமாமுனைவெம் பகழியாகியதெம் மேதினிகளும்பெருவார்த்தை... ... ... (சஈ)

தோழன்மாமகனைக்கண்டபின்றனது தோழனை யொருவயிந்காணன் - வேழமாமுகத்திற்கைத்தலம்புடைத்தான் விழிகளாயிரங்களுஞ்சிவந்தான் - எழுமாதிரத்தினெதிரொலியெழுமாறெயிற்றிளநிலவெழநகைத்தான் - தாழமாநிலத்தினின்றமர்விளக்குந் தன்பெருந்தநயனைமுனிந்தான்... ... (சச)

மேகசாலங்களினைத்தநுந்திளைத்து மேலிடுவிண்ணவரணிந்த - யூகசாலங்களுடைந்தநுங்கண்டானுருத்தெழுந் துள்ளமுங் கொதித்தான் - ஏகசாயகமுமிந்திரதனுவு மிமைப்பளவையின்விரைந்தெடுத்தான் - பாகசாதனனுமேனையதிசையிற் பாலரும்பகடுமேற்கொண்டார்... ... ... (சரு)

தேவருங்கோடிதேவருக்கொருவர் சிரங்களாய்நின்றமுப்பத்து - மூவருந்தத்தம்வாகமேற்கொண்டுமுந்துறநிவந்துவந்தணித்தார் - யாவரும்புவனத்தின்றுகொலிறுதியென்று கொண்டிரங்கினர்நடுங்க - மேவருமனித்தரிருவரோடநேக விபுதரும் வெகுண்டும்போர்புரிந்தார்... ... ...(சசு)

பச்சைவாசிகளுஞ்செய்யவாய்க்கடவுட் பாகனும்பதங்களேயன்றித் - தச்சவாளிகளாற்கரங்களுமிழந்து தனிப்பெருந் திகிரியுந்தகர - உச்சமாகத்திற்பண்டொடிந் தொடியா தொழிந்தனபந்களுமொடிய - அச்சமேதுணையா யருக்கனுமொழிந்தவருக்கர் பன்னிருவருமகன்றார்... ... ... (சஎ)

மாறுபட்டொழியப் பற்குனன்கணையான் மழுக்களுஞ்சூலமுமடைய - நீறுபட்டுடலினீற்றுடன்படியநெடுங் கொடியூர்தியேறுகளும்-எறுபட்டழியச்சடையில்வார்நதியா லேகியதாளிவானெறியும் - சேறுபட்டிடுமாறெடினர்மீளப் பதினொருதிறலுருத்திரரும்... ... ... (சஅ)

எண்ணியவசுக்களெண்மரிற்கங்கை யென்னுமாய் வயிற்றினுற்பவித்த - புண்ணியனொழிந்தோரெழுவருந்தங்கள் புயவலியிற் பொருதிடுவான் - நண்ணியவமரில்விசயன் வெங்கணையானுப்புலர்ந் துள்ளமுநடுங்கி - அண்ணியநிலயும்புகுந் துளரென்றுனிற்பரோவாயுள்வேதியரோ... ... ... (சகூ)

அருணவெங்கணலோன்கனலொடுங்கலந்தானாசுகனவற்குநண்பானான் - கருணையில்யமனுங்காளிடைமடியுங் கணத்திலேலகவலையுற்றனனால் - வருணனுங்கடல்கள்வறத்தல்கண்டழிந்தான்மதியுமம்மதிமுடித்தவனும் - இருணிறவரக்கன்றானுமிங்கிவரோடெங்ஙனம்பொருதுமென்றிளைத்தார் ... ... (௫௰)

சொன்மழைபொழிந்துவாகையுந்தனது சூழுந்துதிக்குநாவலர்க்குப் - பொன்மழைபொழியுங்கொங்கர்பூபதிதன் பொற்பதம்பொருந்தலார்போலக் - கன்மழைபொழியுங்காளமாமுகிலுங் கடவுளர்த்துரந்தவன்கரத்தில் - வின்மழைபொழியச்சற்கணுந்துகளாய் மேனியும்வெளிறிமீண்டனவே... ... (௫௧)

மாயவன்றனக்குநேயமைத்துனனா மைந்தனைத் தந்தையைமதியான் - தூயவெங்கணையாலவனிடித்துவசந்துணித்தமர் தொடங்குமவ்வளவில் - காயமெங்கணுநின் றொலியெழப்பரந்து காயமில்கடவுளக்கடவுள் - நாயகன்றனக்குப்பரிவுடனவைதீர்நல்லுரைநவின்றதையன்றே... ... ... (௫௨)

தமரினுமினியதக்ககன்முதலே தப்பினன்குருநிலஞ் சார்ந்தான் - குமரனுநம்மாலுய்ந்தனன்றாமக்கொடியனுங்கொண்டலுக்கவியான் - நமர்களிலிருவர்நரனுநாரணனு நமக்குமிங்கிவர்சிறிதிளையார் - அமரினையொழிமினமரினையொழிமி னமரருமமரர்நாதனுமே... ... ... (௫௩)

என்றுகொண்டுரைத்தமொழிசெவிப்பட்ட வெல்லையிலிரவிமுன்னிருள்போல் - துன்றுதன்சேனைச்சுரர்கணஞ்சூழச்சுரர்பதிதுறக்கம்வந்தடைந்தான் - வென்றுவெங்களங்கொண் டருச்சுனன்றனது வெற்றிகொள்சங்கமுங்குறித்தான் - அன்றுசெந்திருமாலருச்சுனன்பொருத வாண்மைகண்டதிசயித்தனனே...(௫௪)

வடமதுரையினுந்தென்மதுரையினுமதிகுலநிருபர்கன்னியரைக் கடிமணம்புனைந்தோன் வின்மையின்வன்மை கண்ணுறக்கண்டவானவரும் - புடவியிலொருவ ரொடுமினிப்பூசல் பொரோமெனப்போனவாசவனும் - முடிசடைமவுலி நாரதன்முதலா முனிவருமுடிவறப்புகழ்ந்தார்... ... ... (௫௫)

மாசுணத்தரசன்மந்திரமமைத்த வனத்திடையிருந்தமாமயனை - ஆசுகக்கனல்சென் றடர்த்தலும்வெருவி யருச்சுனவபய

மென்றாற்றத் - தேசுடைத்திகிரிச்செங்கண் மால்கருணைசெய்தன ன்றீவினையுறினும் - பேசுதற்கரியபெரியவர்நினைத்தால் யார்கோ லோபிழைத்திடாதவரே... ... ... (௫௬)

அழைத்தடல்விசயன்றனைத்துணைசெய்கென்றுருபத்திபோ சனையாகித் - தழைத்தவவ்வனத்தைக்கனத்தைவெந்கண்டு தழல வனுகர்ந்திடுங்காலைப் - பிழைத்தவர்மயனுந் தக்ககன்மகவும் பெ ருந்தவமொருவன்முன்கருப்பம் - இழைத்தநுண்சிறகர்க்குருநிற க்குரீஇயினினங்களுமன்றிவேறிலையால்... ... (௫௭)

என்பிறபுகல்வ தீரேழுபுவனமெம்பிரா னருந்தியதென்ன த் - தன்பசிதணியக்காண்டவ வனத்திற் சராசர முள்ளவையனைத் தும் - வன்புடனருந்தியுதரமுங்குளிர்ந்தான் வன்னிதன்வடிவமு ங்குளிர்ந்தான் - அன்புடையிருவர்க்காசியும்புகன்று னசைந்து போய்த்துறக்கமதடைந்தான்... ... ... (௫௮)

அமரணாமுதருகண்டகாவலருமவரவராண்மைகளுணாசெ ய் - தமரிலன்றெடுத்தபல்பெருங்கொடியாலலங்கரித்தமைத்ததந் தேர்மேல் - தமருடன்றுணைவர்நால்வருநகரிச் சனங்களுமகிழ்ந் தெதிர்கொள்ளத் - தமரமர்முரசமுழங்கவெண்சங்கந் தழங்கவந் தணிநகர்ச்சார்ந்தார் ... ... (௫௯)

ய - வது-காண்டவதகனச் சருக்கம்

முற்றிற்று.

ஆகசருக்கம் - ய - இ - திருவிருத்தம்-அ௱௬௲

ஆதிபருவம் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுசாயநமஃ.

௨ - வது.

சபா பருவம்.

௧ - வது.

இராசசூயச் சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பாண்டவர்கள்புரிந்ததவப் பயனாகியவதரித்துப் பகைத்து மேன்மேல் - மூண்டவினைமுழுவதுவு முனைதோறுமுரண்முருக் கிமுகில்புகாமல் - காண்டவமுங்கனல்வயிற்றுக் கனறணிய நுகரு வித்துக்காக்குமாறே - பூண்டருளெம்பெருமானைப் போற்றுவா ரொழிபிறப்புமாற்றுவாரே... ... . (க)

அயனும்பல்சுரர்கணமுமமரர்குலத்தலைவனுஞ்செல்றகல் வானெய்த - நயனங்கண்முதலானவைம்புலனுமனமும்போனக ரியெய்திப் - பயன்விஞ்சுதொழிலினராய்ப்பாண்டவருந்திருமா னும்பயிலும்வேலை - மயனென்பான்வாய்புதைத்துவளம்படவந் தொருமாற்றம்வழங்கினானே ... ... (உ)

உம்மாலின்றருவினையே னுயிர்பிழைத்து நீர்தந்தவுயிர்க்குமீ ண்டோர் - கைம்மாறுவேறில்லைக்குருகுலம்போலெக்குலமுங்கா க்குகிற்பீர் - தெம்மாறவுலகாளுஞ்செங்கோன்மைக்குருபதிக்குச் சிற்பம்வல்லோர்-அம்மாவென்றதிசயிப்பவரியமணிமண்டபமொ ன்றமைக்கின்றேனால் ... ... (ங)

மேனாளிவ்வுலகாண்டவிடபருவனசுரர்குலவேந்தர்வேந்தன்- தானாண்மையுடன்பொருதுதரியலரைத்திறைகொணர்ந்ததாராப ந்தி - போனாளுமொளிவீசும்புதுமணிகள்விந்துவெனும்பொய் கைதன்னில் - ஆனமற்கிடப்பனவுண்டவையிதற்கேயுபாதானமா குமென்றான் ... ... (ச)

என்பதன்முன்முப்பதின்மேலிரட்டி நூறாயிரவரொடுத்தபாரம் - வன்புடனேதரித்துவனா யசைந்தாலுமசையாதவயிரத்தோளார் - அன்புமிகுவிழிக்கருணை யறன்புதல்வனேவலினா லசுரத்தச்சன் - தன்பணியீதெனப்பணிப்ப வொருதொடியிற் கொடுவந்தார்தளர்விலாதார் ... ... (௫)

மீதடுக்கிப்பசும்பொன்னாற்சுவர்செய் துமரகதத்தூண்மீதுபோக்கி - ஓதிடத்திற்சுருங்காமற் செழுங்கதிருத் திரப்பரப்பியுலகோரேழும் - மாதிடத்தின்வைகுதற்குவாய்க்குமதோவிதுவென்னவரம்பில்கேள்விச் - சோதிடத்தோர்நாளுணாப்பச்சுதன்மையினுமுதன்மையுறத்தொடங்கினனே ... ... (௬)

மனத்தாலுந்திருத்தகுநூன்மரபாலுமுரம்பயிரேள்வலியினாலும் - இனத்தாலுந்தெரிந்துதன தெண்ணியவெண்ணினுக்கேற்பவெண்ணில்கோடி - தினத்தாலுஞ்செயற்கரியசெழுமணிமண்டபமீரேழ்திங்கள்செய்தான் - தனத்தால்விஞ்சியதருமன்தம்பியர்க்குத்தண்டுடன்வெண்சங்கமீந்தான் ... ... (௭)

அத்தபதிதன்குறிப்பா லமைத்தபெருமண்டபத்தி னழகுநீள - வித்தரமோடுயர்ச்சியெனும் வனப்பனைத்துங்கண்டோர்கள் வியந்துகூறக் - கொத்தலர்தார் மணிமுரசக்கொடியுயர்த்தோனுடன்பிறந்தகொடியுந்தானும் - மெய்த்தருமமனமகிழக் குடிபுகுந்தானிறைஞ்சலருக்கிடியேறன்னான்... ... (௮)

தம்பியர்கணால்வருடன்றண்டுழாய்முடியோனுந்தானுமேனை - அம்புவிமன்னருமுனிவ ரனைவருஞ்சூழ்தரவிருந்தவவையந்தன்னில் - தம்புருநாரதனென்னுமிருவரினுநாரதனுந்தோன்றலுமன்றப் - பைம்பொன்மலர்தூயெதிர் போய்ப்பணிந்திறைஞ்சியிவைசெய்தான்பாண்டுமைந்தன் ... ... (௯)

ஏற்றினாசனத்திற்றனித்தனியேயுபசாரம்யாவுந்தந்து - மாற்றினான்வழியிளைப்புமலரயன்போலிருந்தோனைமகிழ்ச்சிகூரப் - போற்றினானீவரயான்புரிதவமே தெனப்புகழ்ந்தான்பொதியிற்றென்றற் - காற்றினாலரும்புநறுஞ்சூதம்போற்புளகரும்புங்காயத்தோனே ... ... (௰)

யான்புரிந்ததவமுலகில் யார்புரிந்தாரவனிபரிவிசையின்வீணைத் - தேன்புரிந்ததெள்ளமுதாலமுதுண்டோர்செவியிரதந்தெ

விட்டுவிப்பாய் - மான்புரிந்ததிருக்கரத்துமதியிருந்தநதிவேணி மங்கைபாகன் - தான்புரிந்ததிருக்கூத்துக்கிசையமகிழ்ந்திசைபாடுந்தவத்தின்மிக்கோய் ... . (௰௧)

எனத்தருமன்மகன்கூற விளையோர்கடனித்தனி நின்றிறைஞ்சநீலக் - கனத்தனையதிருமேனிக்கண்ணனுந்தன்கண்களிக்கக்கண்ணினோக்கி - மனத்தினழுக்கணுகாதமர்தவத்தோயுதிட்டிராற்கிம்மாடகூடம் - தனத்தில்மிகுகுபேரனெழிலளகையினுமிலதென்றுசாற்றினானே ... ... (௰௨)

மண்மிசைநால்விரனிற்குமணிமகுடத்தணியரங்கின்மன்னுளோரும் - விண்மிசைவானருநெருங்கவிராவவருமறைச்சடங்கினிராயசூபம் - கண்மிசைமாமணிநிகரொன் கான்முளையைப்பரிதியென்னக்காலனூரில் - பண்மிசைவீணையின்கிழவன்பாண்டுமொழிந்தனனென்றுபகர்வுற்றானே ... ... (௰௩)

தந்தைமொழிதநயருக்குச் சாற்றிமுனியகன்றதற்பின்றம்பியான - இந்திரனுந்தன்னிதயத் தெண்ணமுடிவீண் டாகுமெனவெண்ணிக்கூறும் - அந்தநரமேதமகம்பற்றுதற்கென்றவனிபனையடையவாரிப் - பந்தமுறுபருஞ்சிறையிற் படைகெழுவேற்சராசந்தன்படுத்தினானே ... ... (௰௪)

சதகோடிதனக்கொளித்துத்தடங்கடலிற்புகுங்கிரிபோற்றளர்ச்சிகூர்ந்து - சதகோடிமுடிவேந்தர்தங்களுயிர்கொண்டொளித்தார்சமருக்காற்றார் - சதகோடிசுரும்பரற்றுந் தாராயச்சராசந்தன்றன்னையின்னே - சதகோடியிபமதுகைச் சதாகதிசெய்தனையொழியச்சாதிப்பார்யார் ... ... (௰௫)

ஆரமணங்கமழசலமநேகமுளவானாலுமலையின்கூல - வாரிதியைமதிப்பதற்குவல்லதுமந்தரமன்றி மற்றுமுண்டோ - போர்விசயமிவனுடன்முன் பொருதோரில்யார்பெற்றார் போதுமிப்போ - தாரணமாமுனிவரரா யெனப்புகன்றானறன்மகனு மஃதேயென்றான் ... ... (௰௬)

அரிவிரசுந்துழாய்மகுடத்தரியு மிரண்டரிதளரு ளாண்மையோரும் - எரிவிரசுநெடுங்கானமிருதினத்தில்விளாத்தேகியெண்ணில்சாவற் - கிரிவிரசுநகரொய்திக்கிரித்தடந்தோண்மகதேசன்கிரிகள்போலக் - கரிவிரசுங்கோபுரப்பொற்றிருவாயில் புகுந்துரைத்தார் காவலோர்க்கே... ... ...(௰௭)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வந்தனர்முனிவர்மேவவொன்றுணாமின்மன்னவற் கெனவவ
ருணாப்பத் - தந்திடினனும் புகுந்துநீடம்பொற்றவிசிருந்தா
சியுஞ்சாற்றும் -கந்தடர்குவவுத்தொழிலவிர்குறியுங்காட்சியுங் கரு
த்துறநோக்கி - அந்தணரல்லீர் யாவர்நீரென்றனவ்வுரைக் கமல
னுமுரைப்பான் ... ...(௰௮)

யான்விதுகுலத்தியாதவனிவரோ குருகுலத்தலைவனுக் கி
ளையோர் - மான்மதமலர்த்தார் மன்னனேயொருவன் வாயுவின்
மதலைமற்றொருவன் - வான்மதிளுடுத்தபொன்னகர்க் கிறைவன்
மதலைநின் பொன்னகர்காண்பான் - கான்மதக்களிற்றாய் முனிவ
ராய்வந்தோங் காவலர்க்கனுகொணுமையினால்... ...(௰௯)

என்றுகொண்டுண்மையாதவ னுரைப்ப விருபுயவலியினெ
ண்டிசையும் - சென்றுகொண்டடர்த்துத் தெவ்வர்தம்மயிருந்
திறைகளுமுறைமுறைகவர்ந்து - வென்றுகொண்டணிந்தவாகை
யோன்றினவுமிக்கவென்றினைவனமேருக் - குன்றுகொண்டமை
த்த தோள்களெம்முடனீர் குறித்தமர்புரிமினென்றனாயா (௨௰)

நீயெனின்யாண்டோரொன்பதிற்றிரட்டி நெடுஞ்சிறைக்கலு
ழன்முன் னெறிக்கொள் - ஈயெனவ்வாடிமதுரைவிட்டாழி யெ
யிற்றுவரைப்பதியடைந்தாய் - நோயெனவசுரர்க்குடைந்துபோ
ய்க்காவி னுழைதருநூறுமாமகத்தோன் - சேயெனினிளையோன்
வீமனைவிசும்பிற் சேர்த்துவேனெனவிழிசிவவா... ...(௨௧)

மந்திரச்சுற்றத்தவர்களையழைத்து மதலையைமகிதலந்தனக்
கோர் - இந்திரனெனவேமணிமுடிபுனைந்தன் றியாவருந்தேவரு
ம்வியப்ப - மந்தரகிரியும் விந்தமுந்தம்மின் மலைவபோன் மல்ல
மர்புரிவான் - சந்தணிதடந்தோள் கொட்டியார்த் தெழுந்தான்
றழலுமிழ் விழிச்சராசந்தன்... ... ...(௨௨)

யாளிவெஃகுதாரைவீரனுமிவனும் யாளியும்யாளியுமென
வே - தாளினுஞ்சமரமண்ட லங்களினுந் தாழ்விரற்றடக்கைமுட்
டியினும் - தோளினுஞ்சென்னித்தலத்தினுமற்போர் சொன்ன
போர்விதமெலாந்தொடங்கி - நாளினுந்திங்க ளொன்றினிற்பாதி
நாளிரவினுஞ்சமர்நடத்தி... ... ... (௨௩)

பூதலநடுங்கவெழுகிரிநடுங்கப்போதகத்தொடுதிசைநடுங்க - மீதலநடுங்கக்கண்டவர்தமதுமெய்களுமெய்யுறநடுங்கப் - பாதலநடுங்கவிருவர்மாமனமும் பறையறைந்தயர்வுறநடுங்கச் - சாதலங்கொழிந்தவிடமெலாமுழந்து தங்களிற்றனித்தனித்தளர்ந்தார் ()

கொல்லவென்றெண்ணுமிருவருமொருவரொருவனைக்கொல்லொணாமையினால் - மல்லமர்வலியுமிருபுயவலியு மிழந்துமாமதிதலத்துறலும் - கல்லடர்செம்பொன்வரையின்முக்குவடுங்காலுடன்பறித்தகால்கண்டு - நல்லதன்மைந்தற் குணர்வுமீண்டெய்தநலத்துடனல்கியதன்றே ... ... (உ௫)

மீளவுமிருகதுவசனுற்றெழுந்துவிதலையின்விழுந்தமேவலனைத் - தாளொடுதாள்கள் வலியுறத்தன்பொற் றடக்கையான்முடக்குறப்பிணித்து - வாளுகிர்வாளாற்கனகனைப்பிளந்தவண்டுழாய்மணங்கமழ்மௌலிக் - கோளரியெனவே பிளந்தெறிந்தண்டகோளமும்பிளக்கநின்றார்த்தால்... ... ... (உ௬)

பிளந்தெறிபிளவு மீளவும்பொருந்திப் பிளிறுமாமதகரிநிகர்ப்பக் - கிளர்ந்துவெஞ்சமரந்தொடங்கலுந்தனது கேதனக்கேசரியனையான் - வளர்ந்ததிண்புயத்தின்வலியினான்முன்னை மல்லமரொழுமடங்காக - உளைந்திடமலைந்து வீழுமாறுதைத்தா னோரிரண்டாயதாவுடலம்... ... ...(உ௭)

சீறியக்குரிசில் கீண்டபேருடலைச் சென்னிதாள் செவ்வியினிடாமல் - மாறியிட்டிடுகென்றுருயிர்த்துணையாய் வந்தமாமரகத்வடிவோன் - கூறியிட்டிடாமற்குறிப்பினுணாப்பக்குறிப்பையக்குறிப்பினாற்குறித்து - வேறிடப்புவியின் மிசையெறிந்தனனால் வீமன்வல்லபத்தையார்மதிப்பார்... ... ... (உ௮)

வேறு

சுந்தச்சிகரச்சந்தணியுந்தடந்தோளாண்மைச்சராசந்தன்... ... ✻
முந்தப்பொருதமல்லமரின் முரணேடழிந்து முடிந்ததற்பின் ✻
இந்தப்புதுமைதனைவியவா வேத்தாவிறைஞ்சாய திருலமா... ✻
மைந்தற்கொருவாசகமுரைத்தான் மைந்தார்புயவாசவன்மைந்தன்

இன்றுடமரிலிவன்கையாலிறந்தோனுடலமொன்றியதும் - ஒன்றுநிரண்டுபட்டதும்யாமுணரும்படிநீயுரைத்தருளாய் - குன்றுலன்றுமழைதடுத்தகொற்றக்கவிகைக்கோபாலர் - என்றுமென்றபொழுதவனுமிறந்தோன்சரிதையினிதுரைத்தான்... (கூ௯)

வானோர்பகைவர்களிலொருவன்மகதகுலத்துமாகதப்பேர்-
ஆனோன்வயினிலுற் பவித்தானவன்காணிந்தவடல்வேந்தன் - மீ
னோதிருஷ்மேதினியில்வேந்துக்குலத்தைவேரோடும் - தானோ
ராழிதனிநடத்தித்தடிந்தானனிந்தசமர்தோறும்... .. (௫௧)

எண்ணற்கரியமுடிவேந்தரெண்ணாயிரவர்பசுவாக - மண்ணி
த்தனையுந்தன்குடைக்கீழ்வைக்கும்படிமாமகம்புரிவான் - கண்ணி
ச்சிறையினிடைவைத்தான்கண்ணாயிரத்தோன்முதலாக- விண்ணி
ற்பயிலுந்தேவரெலாமிவன்பேர்சொல்லவெருவுவரால் ....(௫௨)

இவனைப்பயந்தோன்மகவொன்றுமின்றிச் சண்டகௌசிகப்
பேர்த் - தவனைப்பணிந்துவரம்வேண்டத்தவனுந்தான்வாழ் தட
ஞ்சூதத்- தவனிக்கரியதீங்கனியொன்றளித்தானளித்தவக்கனியை-
நவநீத்திலவாணைகையிருவரில்வாழ்பவர்க்கு நல்கினனால்... (௫௩)

காசித்தலைவன் கன்னியர்தங்கண்போல்வடுமுற்றியகனியை -
ஆசிற்பிளந்துதங்கொழுநனருளாலமுதொத்தினிதருந்த - மாச
ற்றிலங்குமகவிருவர்வயிற்றிற்பகிர்ந்துவளர்ந்ததற்பின் - பாசத்து
டனேயோரொருவர்பயந்தார்வடிவிற்பப்பாதி... ...(௫௪)

ஒருவனிருவருதரத்துமுடனுற்பவித்தவுற்பாதம் - வெருவி
மகதகுல வேந்தன்வியன்மாநகரிப்புறத்தெறியப் - புரிசையகழி
ற்கண்டவற்றைப்பொசிப்பானெடுக்கப் பொருந்தினவால்- தரு
மமுணராமனத்தியொருதசைவாயரக்கிச்சரையென்பாள் (௫௫)

தன்னாலொன்றுபடுதலுமத்தநயன்றன்னைச்சராசந்தன் - எ
ன்றுவலழைத்தியெனமகதர்க்கிறைவற்களித்தாங்கேகினளால் - அந்
நாண்முதலப்பேர்படைத்தானதனாலிவ்வாறுயதெனச் - சொன்
னாதுகேட்டுளமகிழ்ந்தார்சுரர்கோமகனுந்துணைவனுமே(௫௬)

வினைமுற்றியபின்மூவருநல்வினையேபுரிவோர்மன்னவரை-
இனைதற்சிறைவிட் டிகன்மல்லாவிறந்தோன்மதலையினைமகுடம்-
புனைவித்தந்தநகரிசனம்பொற்றாள் வணங்க வவனெறும் - துனை
பொற்றடந்தே ரூர்ந்தறத்தின் சுதன்வந்தெதிர் கொண்டிடமீ
ண்டார்... ... ... (௫௭)

கருதற்கரியநிதியனைத்துங் கவர்ந்தோர்காட்டக்கண்டுவந்த-
முரசக்கொடியோன்முன் வேதமொழிந்தோன் முதலாமுனிவர
ரும் - அரசக்குழாமுமீண்டியபேரவையிற்கடவுளரசின்ற - வரி
விற்குமரன்மாதிரங்கள் வெல்வானேகும்வகையுரைத்தான் (௫௮)

சுருதிப்படியேவரராசசூயப் பெயர்மாமகந்தொடங்கக் -
கருதிக்குணபாலெம்முன்னும் வடபால்பானுங் காற்றிசைக்கு-
நிருதித்திசைக்கு நடுவெம்பியிவனுஞ் சிலைவேணிரைமணித்தேர்-
வருதிக்கினிலிவ்விளையோனுமலைவானெழுகவருகவென ... (௩௯)

எண்ணுஞ்சேனையுடன்விரைவினெழுந்தார் வரிவில்லனவோ
ரும் - விண்ணுங்கடவுளாலயமுமுதலாயுள்ளமேலுலகும் - மண்
ணும்புயங்கதலமுதலாமற்றெவ்வுலகுமாதிரமும்- துண்ணென்றி
ட்டவைத்துவகைப் பெரும்பேரியத்தின்றுவனியினால் ...(௪௰)

நாணங்கமழுஞ்செங்கழுநீர் நறுந்தார்வேந்தர்நால்வரையும்-
மானம்பெறுதிண்சேனையுடன் பன்மாதிரத்தும்வகுத்தேவி - மீ
னங்கமடமாவரியாய் வேந்தாய்நரனாய் மெய்ஞ்ஞான - வானந்த
முமாகிய நாதனன்றேதுவரைப் பதியடைந்தான் ... (௪௧)

எழுசீர்க்கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம்.

வான்மருச்சுதனுமீரிரண்டுகடல் வயவரூதிணியின்வர்க்கமு
ம் - நான்மருப்பொருகைமும்மதத்துவளநாகமேவிவளர்திசை
யின்வாழ் - கோன்மதிக்கநெடுவங்கமுந்திகழ்கலிங்கமுந்தெறுகுலி
ங்கமும் - தான்மலைத்துமுனமுரண்முருக்கிவரு தரியலாரைமு
னைதள்ளியே ... ... (௪௨)

மற்றுமற்றுமவண்மருவு பாடைகளின்மன்குலத்தொடுதடி
ந்துமேல் - உற்றவுற்றவலிபானம்யாவைபுமொடிந்திடிந்துபொ
டியுண்ணவே - இற்றயிற்றபலதலைகளாலலை யெறிந்துமோதிவரு
குருதியால்- முற்றமுற்றவரையினமும் வார்குருதிநதியுமாயெழ
முருக்கியே ... ... (௪௩)

அந்தவந்தவனிபரெலாமபயமபயமென்றடிவணங்கியே-
வந்தவந்தநிதியாவையுஞ்சிகரவடமகிதரமெனக்குவித் - தெந்த
வெந்தநரபாலர்பாரினிகரென்னவென்னவரிறையெனத் - தந்
ததந்தவிறைதந்திமீதுகொடுதங்கண்மாநகரிசாரவே ...(௪௪)

விசையவெம்பகழி விசையன் வெவ்விசையொ டிருநிதிக்
கிழவன்மேவிவாழ் - திசையடைந்தகதி ரிரவி யென்னும் வகை
சிறிமாறுபொருதெவ்வரால் - நிசியழிந்துவெளி யாகநால்வகை
நெருங்குசேனையொடுநிலமுநின்- றசையவன்பினுடனைகினெ
ழுபராக மெண்டிசையடைக்கவே... ... ... (௪௫)

பாரதப்பெயர்கொள் வருடமாதிபல பாரிலுள்ள நரபால ரா - பேரறக்குலமும் வேரறப்பொருது பின்னுகன்கிரியு மிமையமும் - சேரமொத்தியவனுள்ள சந்திருவர் இன்னரோசர்பல ர்திறையிடப் - போரடர்த்துகமுடிந்தகாலையெழு புணரியென்ன நனிபொங்கியே... ... ... (சசு)

விந்தமாமலையு மேமகூடமூடனிடதநாமநெடுசெற்புமா - மந்தராசலம்விசாலமாலிய மணித்தடஞ்சிகர மலைகளும் - கந்தமாதனமுநீலசைலமுமெ னப்புகன்றபல கிரியில்வாழ் - அந்தராதிபர் நடுங்கமேருகிரி யப்புறத்துநனி யணுகியே .. (சஎ)

அத்திசைக்கணர சானவுத்திர குருக்கண் மெய்ம்மையைய டக்கியே - எத்திசைக்குமிவ னன்றிவீரரில ரொன்றுதேவரு மியம்பவே - மெத்திசைப்பனி நிலாவெழுச்சமர விசயதம்பமு நிறுத்தினன் - முத்திசைக்குமதி வெண்குடைக்கடவுண்முதல்வ னுனவரிபுதல்வனே... ... ... (சஅ)

கரிகள்கோடியிர தங்கள்கோடிபவ னத்தினுங்கடுகு கவனவெம் - பரிகள்கோடிநவ கோடிமாமணிகள் பலவகைப்படு பசும்பொனின் - கிரிகள்கோடியென வேகவர்ந்தெழு கிரிப்புறத்துறு பரீடிவந் - தரிகள்கோடிகிளர் சோலைசூழ்தமது செல்வமாநகரியணுகினன்... ... ...(சகூ)

வடாதுசென்றவரி சிலைமகீபனிது மெழுமடங்குமிருவலியுடைக் - குடாது சென்றிளையவீரமானகுல நகுலனென்று குலகுலையவே - அடாதமன்னரை யடர்த்தடுத்தவரை யஞ்சலென்றமருளழக்கினன் - இடாதவன்றனமெ னக்கரந்தனர்க ளேனைமன்னவர்கள்யாருமே... ... ... (ருய)

மாளவங்களொடு பப்பரங்களும்வகுத்தடர்ந்தெதிர்திகத்தமும் - தாளவன்புடையிருட்பிழம்பெனவருக்கனிற்பெரிது சுடரொழ - தாள்வணங்கியுடை யத்துரங்காத கசபதாதியொடு தங்கினம் - மூளவந்தெதிர் மலைந்த மன்னவரை முதுகு கண்டமர் முருக்கியே... ... ...(ருக)

கூற்றிசைக்குமிவ னுடன்வருங்கொடிய கொடியசேனையொடுகுமரனும் - காற்றிசைக்குமெனவருணனுந்தனி கருக்குலைந்துளம்வெருக்கொளத் - தோற்றிசைக்கும்வகைகொண்டுமற்றவர்

கள் சொரிதருந்திறைகள் வாரியம் - மேற்றிசைக்குமொருமேரு
வுண்டெனவியற்றினணிகரில்வீரனே... ... ... (ருஉ)

அளவிலாததிறை யோடுமத்திசை யுதித்ததேரிரவியாமெ
ன - துளபமாலைகமழ்மௌலிநாதனுறைதுவரையெய்தியுயர்சுரு
தியின் - கிளவியான்முனிவர் தொழுபதந்தொழுதுசேசரித்துவ
சவீரனுக் - கிளவன்மீளவுமரிப்பிரத்தநக ரெய்திமன்னனை ப
ணிந்தனன்... ... ...(ருங)

குன்றிசைத்தகச ரததுரங்கம பதாதிசூழவிறை கொள்ள
வும் - நின்றிசைத்துவருபல்பணைக்குலமிளாக்கவுங்கொடி நிலாக்க
வும் - தூன்றிசைப்பனிநிலாவெனக்கவிகைவெண்ணிலாநனி துல
ங்கவும் - தென்றிசைப்படர்தன் மேயினனகுல நிருபனுக்கிளைய
செம்மலே... ... ... (ருச)

அத்திசைக்கணிருகடலினுக்குநடுவானமண்டல் மனைத்தினு
ம் - மத்திசைப்புரவிமண்டலீகரும்வயங்குமாமகுடநிருபரும்-பு
த்திசைக்கமர்பொருதழிந்துதிறை பொழிபவாரிவளர்புகிரிப்-
பித்திசைத்தொடைய னிலனென்னுநரபதிபெரும்பதி புகுந்த
பின் ... ... (ருரு)

அந்தமாநகரிகாவலானசுட ரங்கிசீறியெதிர் பொங்கிமேல்-
வந்தவீரமிகு சேனையாவையும் வயங்கவெம்புகையியங்கவ-கந்
துசீறுகளி யானைமன்னனதுகண்டுவெங்கனலவிப்பதோர் - இந்
துமாமுகசநங்களேழுநெடுநாவினனழியவேவினன்...... (ருசா)

அஞ்சியந்தவழலோனுமப்பொழுதொ ரந்தணாளன்வடிவா
கியே- வஞ்சியந்தொடையன்மன்னன்முன்புவரவந்தமாமுனியை
மன்னனீ - எஞ்சநின்றுசுடுகின்றகாரணமி தென்னையென்னவுமி
யம்பினன் - மஞ்சிவர்ந்தபுகைவானவன்றனதுவரவுநீலன்வழிபா
டுமே... ... ... (ருஎ)

நீலனிட்டதிறை யானகோலமணி நீலமாதிநவமணிகளும்.....*
சாலமிக்கதம னியமும்வெளவியுயர் சாலவிந்தசைலப்புறத் ...*
தேலநெட்டடவிமுறியமோதிவெளியாகவேழ்கடலையுக்கடைக் *
காலமுற்றியெழுகாலெனும்படிகலக்கினனெழுகலிங்கமும்(ருஅ)

சென்னிநாடுகுட கொங்கர்நாடுதிறை கொண்டுதென்னனு
றை செந்தமிழ்க் - கன்னிநாடுறவு டன்றுவந்துமணி நீத்திலக்கு

வைகள் கைக்கொளா - மன்னிநாடுகடல்கொண்டகைம்முனிவன்
வைகுமால்வரையைநண்ணினான் - மின்னிநாடுற விளங்குவெஞ்ச
மர வீரவாகைபெறுவேலினான்... ... ... (௫௯)

செகத்தியங்குதனியாழியைவரினு மிளையகாளையொடுசேனை
தான் - நகத்தியன்றபொழு தவனிபௌவமுழு நவ்வெனத்தனிநடு
ங்கவே - மிகத்தியங்கிநெடு மேருவெற்பின்மிசை மேவுவானவர்
கண் மீளவும் - அகத்தியன்றனை வடக்கிருத்தும்வகை யுன்னினார்
கள்சமனாகவே... ... ... (௬௰)

கன்னிலங்கொலென வலியமெய்ப்பெறுக டோற்கசன்றனை
யழைத்துநீ - தென்னிலங்கைதிறை கொண்டுமீள்கவென விளை
யதாதையுரைசெய்பவே - மின்னிலங்கிய வெயிற்றரக்கர்குல வீ
ரனாகியவிபீடணன் - தன்னிலங்கொதிகொளப்புகுந்தொருசமழக்
கறசசமருழக்கினான் ... ... (௬௧)

யாரையோவுரைசெய் நீயெனத்திறனிசாசராதிபனி யம்ப
லும்- பாரையேழினையு முழுதுடைக்குருகுலத்துமேன்மைபெ
று பாண்டுவின் - பேரன்யான்விற லிடும்பன்மாமருகனெனவர
க்கர்பெருமான்மனத் - தாருமாதரவினோடழைத்தவனை யுவகை
யோடுமிக வுறவுறு... ... ... (௬௨)

நீயிலங்கையிடை வந்ததென்கொலென நீதியாலுயருதிட்
டிரன் - ராயசூயமெனு நாமமாமகமியற்றுவான்விறலொடெண்
ணினான் - நேயமானவிளையோர்களால்வரு நெடுந்திசாமுகமட
ங்கவென் - றேயமாநிதிதிரட்டலுற்றனர்கள்யானுநின்னகரியெ
ய்தினேன்... ... ... (௬௩)

அற்பனைத்துலகு மெண்ணவேயறனளித்தமன்னனழல் வே
ள்வியின் - கற்பனைக்குதவி தருகெனப்பழைய கால்விழுதநெ
டுவேலைவீழ் - வெற்பனைப்புகல வந்தவீடணனளித்தநீடுயர்விய
ன்றலைப் - பொற்பனைத்தருவொ ரேழுமேழுமுடனேகவர்ந்துக
ழல் போற்றியே... ... ... (௬௪)

மீளவந்திளையதாதைபாதமுடி மீதுவைத்தொளிவிளங்கு
பொற் - பாளையம்பனைகள் பற்பராகமுதலானபன்மணிபரப்
பினான் - நாளிரண்டினிமையோரொடொத்தபெருஞான பண்டி
தனுநல்லறன் - காளையைங்கழல்வணங்கினன்றனதுபதிபுகுந்து
நணிகடுகியே ... ... (௬௫)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆல்வரும்புரவித்திண்டேரறன்மகனனுசரான... ... *
நால்வருஞ்சென்றுதிக்குநாலிரண்டினுந்தன்செய்ய... ... *
கோல்வரும்படியேயாக்கிக்கொணர்ந்தனதிறைகள்கண்டான் ...*
மேல்வருமிராயசூயவேள்விநாள்விளப்பக்கேண்மோ... (௬௬)

இரணியனிரணியாக்கனெனறதானவனைவென்றுங்... ... *
கரணியவிலங்கைமூதூரரக்கனையனுசனோடு ... ... *
மரணமுற்றிடமுன்சீறிமாமனைமலைந்துமற்றை ... *
முரணியபகையுந்தீர்ப்பான்மூர்த்தியாய்ப்பிறந்துளோனே (௬எ)

விரைவினிற்கொணர்தியென்றுவீணைநாரதனைப்போக்கித் ... *
தரணிபர்க்கெல்லாமோலைதனித்தனித்தூதிற்போக்கி ... ...*
வரனுடைச்சுருதிநான்கும்வகுத்தவனுதியான... ... *
இருபிறப்பாளர்யார்க்குமுனுகலையேவினனே... ... (௬அ)

தானவர்தச்சன்வந்துசமைத்ததோர்சிற்பந்தன்னை ... ...*
வானவர்தச்சன்கண்டுமகிழுமண்டபத்தின்வேந்தர் ... ... *
ஆனவரொவருமீண்டியந்தணரொவருமீண்டி ... ... *
மானவரொவருமீண்டிவரம்பறதிரம்பினரே ... .. (௬௯)

வரவரவந்தவந்தமுனிவரைவணங்கியாசி... ... ... *
திசமுறப்பெற்றுவேந்தர்சிறப்பெலாந்திருந்தநோக்கி... ...*
நரபதிதானுமற்றைநால்வருநீலமேனி... ... ... *
இரவியையனையான்றன்னையுவகையோடெதிர்கொண்டாரே...()

கரகதக்களிறுபோலுங்கனிட்டரீரிருவரோடும்... ... *
துரகதத்தடந்தேர்விட்டுத்துழாய்மணங்கமழும்பொற்றோள்...*
மரகதக்கிரியன்னானைவணங்கினர்தழுவிவெள்ளைத்... ... *
திருநிறத்தவன்றன்செம்பொற்றிருப்பதமிறைஞ்சினரே ...(எக)

இருபுடைமருங்குந்திக்கோரொட்டையும்வென்றோர்போத... *
நிருபதிதேரிற்போதநேமியான்களிற்றிற்போதச் ... ...*
சுரர்பெருந்தச்சன்செய்தசிதான்னகர்வீதிபுக்கார்... ... *
வருதிருப்பவனிகேட்டார்வளநகர்மாதரெல்லாம் ... (எஉ)

ஈரடிகளினுஞ்செப்பஞ்செழுதுவாரொழுதுமுன்னர் ... ...
ஓரடியெழுதிமின்போலொல்கிவந்திறைஞ்சுவாரும்... ...*

ஆரமுதனையகண்ணிலஞ்சனமெழுதுகின்ற... ... *
சிரியங்காலுங்கையுந்திருத்தகத்தோன்றுவாரும் ... ...(எகூ)

விரிதுகில்வேறுடாமல்விரைகமழ்துநீராடிச்... ... *
சுரிகுழன்மேகமாரிதுளித்திடவெதிர்கொள்வாரும் ... ...*
கரதலமலரிற்சங்குங்கலாபமுஞ்சிலம்புமார்ப்பத் ... ... *
தெருவெலாந்தாமேபாகிச்சீறடிசிவப்பிப்பாரும் ...(எரு)

வார்குழைப்பதுமராகமணிவிளக்கேற்றுவாரும்... ... *
நேரிழைமருங்குல்வாட்டுநிரைகுடம்பூரிப்பாரும் ... ... *
காரிளங்கமுகும்பச்சைக்கதலியுநிரைத்துத்தோளாம்... ...*
தோரணநாட்டுவாருந்தூமலர்சிந்துவாரும் ... ... (எடு)

மாதர்களெவர்க்குமுன்போய்வணங்குதற்குன்னிச்சிந்தை... *
ஆதரமுடனேவந்துமாவணமறுகுறுமல்... ... *
சூதடர்கொங்கைபொற்மேருள்சுரிகுழல்சுமக்கலாற்றுப்... ...*
பேதுறுமருங்குலோம்பித்துறும்பிடியன்னாரும்... ...(எசு)

இவ்வகைக்குழுக்கொண்டாங்கணெழுவகைப்பருவமாதர்... ...*
செவ்வியுமழகுந்தேசுஞ்செய்யபூந்திருவோடொப்பார்... ...*
மெய்வழிநின்றபோகம்மெகமேயனையான்றன்னை... ... *
மைவழிகண்ணின்நோக்கிமனனுறவணங்கினாரே... ... (எஎ)

(கலிவிருத்தம்.)

வண்டுமலர்கரும்பாம்வண்ணப்படையானைக் ... ... *
கண்டனையார்கண்ணிறைந்தகாயாமலர்வண்ணன் ... ... *
செண்டுதிரித்தேரன்றிருப்பவளத்தூறமுதம் ... *
உண்டுதமமானதத்தாலுயர்ந்தார்சிலமாதர்... ... (எஅ)

மாடம்பயிலுமணித்தோரணவீதி... ... ... *
நீடஞ்சனக்கண்ணெருங்கித்தடுமாற... ... ...*
ஆடம்பரக்கொண்டலன்னனையாபரணச்... ... ... *
சூடங்கருதித்தொழுதார்சிலமாதர்... ... (எகூ)

கங்கைதரும்பொற்கழலான்மணிமார்பில்... ... *
கொங்கைமுகிழுங்குழையும்படியாகச்... ... ... *
சங்கையறமெய்தழுவுதற்குத்தம்மினுந்தம் ... ... *
செங்கைமலர்பதறச்சென்றார்சிலமாதர் ... ... (அ0)

வஞ்சம்பயில்சகடவாளசுரன்மாளவிறற்... ... *
கஞ்சன்படவுதைத்தகாலனைக்கண்டுருகி ... *
அஞ்சம்புமெய்ப்புருவவைம்புலனுஞ்சோரமுற ... *
நெஞ்சந்தடுமாறநின்றார்சிலமாதர்... ... (௮௧)

தங்கள்குலமுன்றிற்றலையானமும்மதத்து ... ... *
வெங்கண்மதமாமிசைவருவோன்மெய்ந்நோக்கி... ... *
அங்கண்மிளிரவரும்புருவவின்முரியத்... ... *
திங்கணுதல்வேர்வாடநின்றார்சிலமாதர் ... ... (௮௨)

காலமுகிலுமலர்க்காயாவுமன்னதிருக்... ... ... *
கோலமுடையோன்குலவுமணிப்பூண்மார்பில் ... *
மாலைநறுந்தண்டுளவமன்றலுக்குவாணயன... ... *
நீலவரிவண்டாகிநின்றார்சிலமாதர் ... ... (௮௩)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மங்கையர்பலருமங்கண்மன்மதபாணநான்கில் ... *
இங்கிபலின்பமெய்தியின்னுயிரோடுநிற்பப்... ... *
பங்குறவந்தவந்தப்பாண்டவரைவரோடும் ... *
கொங்கலர்துளபத்தாரான்குந்திவாழ்கோயில்புக்கான்... (௮௪)

கொற்றவரைவர்தம்மைக்குருகுலம்விளங்குமாறு... ... *
பெற்றவள்பாதம்போற்றிப்பிறப்பிறப்பறுக்கவல்லான்... *
மற்றவள்வாழ்த்தவாழ்த்தமனமகிழ்ந்தழலின்வந்த... *
பொற்றொடிபணிவுமேனைப்பூவையர்பணிவுங்கொண்டான் (௮௫)

அரசவைக்கணிசெய்சிங்கவாசனத்திருத்திவெற்றி ... *
முரசுடைத்துவசவேந்தன்முகமலர்ந்திருந்தகாலை... *
விரைசெயப்புரவித்திண்டேர்வீமனைமுதலோரொங்கும்... *
உரைசெலக்கவர்ந்தசெல்வங்காட்டிநின்றுரைசெய்தானே (௮௬)

முன்னரமேதஞ்செய்வான் முடிச்சராசந்தனென்னும்... *
இன்னரர்பாடுஞ்சீரான்கிளப்பருஞ்சிறையில்வைத்த... *
அந்நரபதிகளோடுமவன்மகன்மாகதேயன்... ... *
எந்நரபதிகளுக்குமிரவியேயென்னவந்தான் ... ... (௮௭)

அரும்பனைக்கொடியோனாதியரவுயர்த்தவனீறாகப் ... *
பொரும்படைச்சேனைவெள்ளம்பூருவின்குலத்துளோர்கள் *

கருப்பனைத்தடக்கைவெங்கட்கரிமுகப்பதாதியோடும்... *
இரும்பினைக்குழைக்குநெஞ்சர்யாவருமீண்டிமொய்த்தார் (அஅ)

இந்திரபுரிக்குமிந்தவிந்திரபுரிக்குந்தேவர்... ... *
அந்தரமறிவுறுமலதிசயித்துவகைகூரச்... ... *
செந்திருமடந்தைக்குள்ளசெல்வங்களனைத்துஞ்சேர... *
வந்ததும்போலும்வேள்விமாநகர்த்தோற்றமம்மா... (அகூ)

தோரணவீதிதோறுந்தூரியமுழக்கந்தன்னின் ... *
ஆரணமுழக்கம்விஞ்சவந்தணராதியுள்ளார்... ... *
காரணமுழந்தோர்வேள்விக்கனன்முகமாகத்தேவர்... *
பாரணைப்பண்ணவிட்டபைம்பொன்வேதிகையிற்சேர்ந்தார் (கூ0)

சுடுமணற்கருடனாகச்சுருதியின்படியேகோட்டி ... *
நடுவுறத்திசைகணான்குதான்குவெள்ளேறுகோட்டி... *
வடுவறச்சமைந்தகாலைமண்டபந்தன்னைநோக்கின்... ... *
கடவுளர்க்கமைந்தயாகதலமெனக்கவினிற்றம்மா... (கூக)

கலிவிருத்தம்.

திருந்தமெய்ஞ்ஞானமுந்தெளிந்துசித்துடை.. ... *
அருந்தவமுனிவர்பேரவையின்மேன்மையால் ... *
பெருந்தகைநாபியம்பெருமன்வாழ்வுபோன் ... *
திருந்ததுகுருபதியாகசாலையே... ... ... (கூஉ)

யாதவகுலத்தினுக்கிறைவனாகிய ... ... *
மாதவனிணையடிவணங்கிமற்றுள ... ... *
பூதலத்தரசெலாம்பொருந்துபொற்பினால்... ... *
ஓதநீர்வண்ணன்வாழுலகும்போன்றதே... ... (கூ௩)

விதியினுமுயர்ந்ததொல்வியாதன்மேதினி... ... *
பதிகளாகியதிறற்பாண்டுமைந்தனை ... ... *
மதியினிலொருபுடைவருகென்றன்பினால்... ... *
இதியுறச்சின்மொழிசெவியிற்செப்பினான் ... (கூ௪)

இங்கிதத்திந்திரனென்பர்யாவரும்... ... ... *
சங்கரன்விதியினாற்றரணிபாலராய் .. .. *
வெங்கணேறுன்றியபின்னைவைவரும்... ... ... *
மங்கலப்புவிமகள்வழங்கினெய்தினீர் ... ... (கூ௫)

ஓரொருதலைவராயோரொராண்டுளெம்... ... ... *
கூருவகையினெடுங்கொழுநராயினீர்... ...... *
ஆரழல்பிறந்தமானறத்தின்மைந்தற்குப்... ... *
பேரழல்வளர்த்திடும்பெற்றிபெற்றனள் ... (கூஎ)

மைந்தர்நீர்தாவ்வருமகஞ்செய்வேந்தனே... ...... *
தந்தையுந்தாயுமித்தருமவல்லியே ... ... *
இந்தவான்பிறப்பினுக்கிற்றைநாண்முதல் ... *
குந்தியும்பாண்டுவுமென்றுகொண்மினே ... (கூஅ)

கனல்வருமின்னையுங்கணவன்றன்னையும் .. ... *
முனிவரன்மொழிந்திடமுகுத்தமானபின்... ... *
புனைமுடித்திருக்குழல்புழுகுநாணமும் ... ... *
இனிமையிற்சாத்தினொண்ணின்மாதரோ... ... (கூகூ)

சதிபொடுவிளைதவழ்சடுக்கைகாட்டுநல்... ...... *
நதிதருபுனலொடுநானமாட்டினார் ... ... *
விதிமுறையறிந்தவர்வேள்விக்கொப்பன ... *
பதியுடனணிந்தனர்பாவைதன்னையும் ... ... (கூகூ)

அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

மாலைமுன்வணங்கிக்கங்கைமைந்தனைவணங்கிபாக... ... *
சாலையைநோக்கும்வேந்தன்றம்பியைநோக்கிமுன்னீர்... *
வேலையின்மணலிற்சாலுமிதுசனமருந்தத்தேவர் ... *
ஆலயத்தமுதமன்னவடிசினீயளித்தியென்றான்..? ... (௱)

நாவியின்மதமுஞ்சாந்துநறும்பனிநீருந்தாரும்... ... *
வாவியிற்காவினுள்ளமலர்களுமற்றும்யாவும் ... *
மேவியவரிவிலாண்மைவிசயனைநல்குகென்றான் ... *
தூவிலைப்பழுக்காயனைத்துணைவனைவழங்கச்சொன்னான்... (௱க)

தானமுந்தியாகந்தானுந்தபனன்மாமதலையான ... *
மானவன் வழங்கவென்றான்வரம்பிலாநிதிகள்யாவும் ... *
கானலங்கடல்சூழ்வையங்காவலன்காவலென்றான் ... *
ஏனையோர்பலரும்வேந்தனேவலின்முறையினின்றார்... (௱உ)

தழல்வளரோமகுண்டத்தலத்தினில்வலத்திலாகித் ... *
தழல்வருபாவைவைகத்தருமன்மாமதலையாங்கண் ... *
தழல்புரைவேதவாணர்தாளிணைவணங்கித்தானும் ... *
தழலெனவிருந்தானெல்லாவினைகளுந்தகனஞ்செய்வான் (௱௩)

கடகரியுரிவைபோர்த்தகண்ணுதற்கடவுண்மாறி... ... *
இடம்வலமாகப்பாகத்துமையினோடிருந்தவாபோல்... *
உடறலையுறுப்புத்தோலிலொளித்திடப்போர்த்துவேள்விக்... *
கடனினுக்குரியவெல்லாங்கவினுறச்சாத்தினுரோ... (௩௪)

பொங்குறுமோமச்செந்தீப்புகையினுற்போர்த்ததென்னப்...*
பைங்கடல்பருகுமேகம்பரிதியைமறைத்ததென்ன ... *
அங்குறுப்புடனேவெங்கோட்டரிணமாத்தூரசின்மேனி ... *
எங்கணும்புதைப்பவேள்வித்தொழிலிலேயிதயம்வைத்தான் (௩௫)

தருமன்மாமதலைபந்தச்சடங்குசொற்படியேதொட்டுப்... *
புரிவுடைத்திசைகணான்கும்புற்களாற்காவல்செய்து... *
விரிசுடர்த்தீக்கண்மூன்றும்விண்ணவர்முகங்களாகச்... *
சுருவைபான்முகந்தநெய்யைச்சுருதியாலோமஞ்செய்தான் (௩௬)

முழுதுணர்வரம்பில்கேள்விமுனிவரர்குழாமுமென்றும் ... *
அழிவிலாமலரோனுதியமரர்தங்குழாமுஞ்சூழ ... *
வெழுசுடர்மூத்தீப்பொங்கவெழுபகலோமஞ்செய்தான் ... *
பழுதறுபாண்டுசெய்தமாதவம்பலித்ததொப்பான்... (௩௭)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எம்முறைராயசூயமாமகத்துக்கெழுதொணுநான்மறையுரைத்த - அம்முறையிமையோரானவர்க்கெல்லா மரும்பெறலவியுணவருளி - மும்முறைவலம்வந் திருவருஞ்சுவாகை முதல்வனைமுடியுறவணங்கித் - தெம்முறையரச ரிடுதிறையனைத்துந் தானமுந்தியாகமுஞ்செய்தான் ... ... (௩௮)

எழுநாளிவ்வாறிமையவரெவர்க்குமிமகிரியினிலயன்வேட்டஊழிமாமகம்போலியற்றியெண்டிசையினுயர்புனல் யாவையுஞ்சொரியா - ஆழிவாய்முகினுமின்னுமேயென்னவரும்புனலாடியபின்னர் - வாழிபாடினர்கணாரதன்முதலோர் மங்கலப்பாடினர்புலவோர் ... ... (௩௯)

பெயர்பெறுமுனிவரெவர்க்குமெண்ணிரண்டாம்பேருபகாரமும்வழங்கி - உயர்வறவுயர்ந்தவேள்வியினுயர்ந்தோ னுயர்குலப்பாவையுந்தானும்- மயர்வறஞானவடிவமாய்நின்றமாயனைமனனுறவணங்கி - ஆயர்வறுகங்கை மகன்பதம்பணிவுற்றறன்மகன்வினவினனம்மா... ... ... (௪௰)

பரிதிமதியும்வன்னியுமுதலாம்பல்வகைக்குலத்துமுற்பவி த்த - நரபதிகுழாத்தில் யாவரோபெறுவார்நவிலுமுற்பூசைமற் றென்னக் - கருதியவசுக்களெண்மரிலொருவன்கங்கையின் றிரு மகன்றெய்வச் - சுருதிமாமகஞ்செய்புனிதனைநோக்கித் தொன்மு னிவரரையுநோக்கி... ... ...(௱௰௧)

ஆர்கொலோமகத்திற்பூசனைக்குரியாரரசரி லந்தணி ருரை யின்-பாலொலாந்தத்தங்குடைநிழல்புரக்கும்பார்த்திபர்யாரையுமு ணர்வீர் - தாருலாமார்பீரென்றலும் வியாதன் றருமன்மா மதலை யைநோக்கிக் - காரின்மாமேனிக்கரியசெந்திகிரிக் கண்ணனுக்குத வெனக்கதித்தான்... ... ... (௱௰௨)

என்றபோதந்தவேத்தவையிருந்தோர் யாவருமிருந் துழியி ருந்து-நன்றுநான்மறையோர்சிகாமணியுரைத்ததவிரறுநல் லுரை யென்றார் - சென்றுபோர்தோறும் வென்றியேபுனையுஞ்சேதிய ம்பதிச்சிசுபாலன் - கன்றினனிதயங்கருகினன்வதனங் கனலென ச்சிவந்தனன்கண்ணும் ... ...(௱௰௩)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கொச்சையிடையர்மகளிருக்குங் கூத்துக்குனித்துநவநீதப் ...*
பிச்சைநுகருமிவனெமக்குமுன்னேபூசைபெறுவானும் ... *
கைச்சைமறையின்முறையென்றாந்தருமன்புரிந்தமகமென்னும்
செச்சைவடிவேன்முடியரசர்செங்கோலென்றாந்திருவென்னும்()

கலிநிலைத்துறை.

பூபாலரவையத்துமுற்பூசைபெறுவார்புறங்கானில்வாழ் ... *
கோபாலரோவென்றுருத்தங்கதிர்த்துக்கொதித்தோதினன் ...*
காபாலிமுனியாதவெங்காமலிகரானகவினெய்தியேழ் ... ...*
தீபாலடங்காதபுகழ்வீரசயமன்னசிசுபாலனே... ...(௱௰௫)

சூரன்குலத்தோர்குபேரன்குலத்தோர் சுடர்ப்பாவகப் - பேரன்குலத்தோர்கண்முதலோ ரிருந்தீர்கள் பேர்பெற்றபேர் - வீரங்கொலோவாகுசாரங்கொலோசெல்வ விச்சங்கொலோ-பூரம் புராசிப்புவிக்கென்றுமுடிவோர்கள்பொதுவோர்கொலோ(௱௰௬

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பராசரமுனிவன் மதலையாம்படியே பகர்ந்தனை பழுதிலா மாற்றம் - இராசமண்டலத்தின் மரபினுள்வலியாமேலற்றமுந்தோர

ற்றமுமுடையோன் - சுராசுரர்வியக்குங் கஞ்சனைமலைவான்சூரன் மாமகள்வயிற்றுதித்தான் - தராதலமிசையே பிறந்திவன்கற்ற தெத்தனையிந்திரசாலம் ... ...(௩௱௰௭)

சொற்றவாநன்று சுகன்றிருத்தாதை சூதிகைதோன்றியபோதே பெற்றதாய்தானும் பிதாவுமுன்வணங்கப் பேச்செலாமுறையெலாம்பேசிக் - கற்றமாயையினாற் கன்னியங்கிருப்பக் காரிருட்களிந்தையுநீந்தி - அற்றைநாளண்டரானவர்க்கெல்லாமரசனுக் கருமகவானான்... ... ...(௩௱௰௮)

ஈன்றதாய்வடிவங் கொண்டிளமுருகி யிணைமுலைத் தடத்திணைத்தமுதம் - போன்றபால்கொடுப்பப் பொழிமுலைப்பாலோ பூதனையுயிர்கொலோ நுகர்ந்தான் - சான்றபேருரலானுறிதொறுமெட்டாத்தயிருடனறுநெய்பாலருந்தி - மான்றுதாய்கண்டு வடத்துடன்பிணிப்ப மணியுரலோடிருந்தழுதான்... ...(௩௱௰௯)

பாடிநான்மறுகும் பெருநகைவிளைப்பப் பாவையர் மனைதொறும் வெண்ணெய்க் - காடினனவர்கண்முகந்தொறு மெச்சிலாக்கினனகன்றுமுன்னோட - ஓடினனின்பேரிளங்கன்றை யுயிருடனொருதனிவிளவில் - சாடினனரவின்முதுகையும் புள்ளின்றுலுவோடலகையும்பிளந்தான்... ... ... (௩௱௨௰)

பின்னியகுஞ்சிக்கோவலர்பயந்த பேதையர் பலரையுங்களிந்தைக் - கன்னியின்மருங்கு மோரையின்மருங்குங்கலையெலாநாணிடக்கவர்ந்தே - முன்னியவின்பச் செருக்கின்மேலமயக்கி முரிவிற்காமனுமானான் - அன்னியனல்லன் மற்றிவன்பெருமை யரசரில் யாரறியாதார்... ... ... (௩௱௨௰௧)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அண்டர்க்கெல்லாமரசானவாகண்டலனுக்கண்டாரினி... ...*
துண்டற்கமைத்தபாலடிசிலுண்டானொருநாளொருதானே ... *
கொண்டற்கனமாரியைமீண்டுங்கோவத்தனமேகுடையாகச்...*
சண்டப்பிரசண்டவேகமுடன்றடுத்தானேறுபடுத்தானே (௩௱௨௰௨)

பம்பிப்பசுந்தண்புன்மேயும்பசுவுங்கன்றுங்கோபாலர்... ...*
தம்புத்திரருமம்புயத்தோன்றன்மாயையினாற்கரந்திடுநாள் ... *
எம்புத்திரருமெங்கோவினிளங்கன்றினமுமெனத்தெளிய ...*
வம்பிற்புரிந்தமாயனிவனல்லால்யாவர்வல்லாரோ...... ...(௩௱௨௰௩)

அதிரப்பெரும்போரஞ்சினனேவஞ்சாமைகொலோதெரியாது ✻
மதுரைப்பதியுந்தன்கிளையும்வாழ்வுந்துறந்துவாரிதிவாய் ...✻
எதிரொப்பில்லாத்துவரைபுரியெனும்பேர்படைத்தமாநகரில் ✻
முதிரப்பொரும்போர்த்தம்முனுடனிருந்தான் பன்னாண்முரண
றுத்தே... ... ... (௱௨௪)

கலிவிருத்தம்.

கஞ்சனெடுமாமனெடுகள்ளமர்விளைத்தான்... ... ...✻
வஞ்சனையினாலமருமெத்தனைமலைந்தான் ... ...✻
தஞ்சமெனவேமருவுதமரிலொருதானே .. ..✻
விஞ்சிவிரகாலுரியமேதினிபுரந்தான்... ... ... (௱௨௫)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அன்னையுந்தாதைதானுமருஞ்சிறையகத்துவைக ... ✻
முன்னிருமூவர்முன்னோர்தங்களைமுருக்குவித்தான் ... ✻
பின்னொருதமயன்றன்னைப்பெற்றதாயிருவரொன்று ... ✻
இந்நிலஞ்சொல்லவைத்தானிவனைவேறியாவரொப்பார்...(௱௨௬)

என்றுகொண்டெண்ணிநாவுக்கிசைந்தனவுரைகளெல்லாம் ✻
ஒன்றினொன்றுச்சமாகவுயர்ச்சியுந்தாழ்வுந்தோன்றக் ... ✻
கன்றியமனத்தினோடுங்கட்டுரைசெய்தான்மன்றற் ... ✻
றென்றலஞ்சோலைசூழுஞ்சேதிநாடுடையகோவே ... (௱௨௭)

வேறு

திண்ணியநெஞ்சினனான சிசுபாலன்றன்னெஞ்சிற் சீற்றந்தோன்ற - எண்ணியமன்பேரவையிலியம்பியபுன்சொற்களெலாமெண்ணியெண்ணிப்-புண்ணியர்வந்தினிதிறைஞ்சும் பூங்கழலோன்வேறொன்றும் புகலானாகிப் - பண்ணியதிண்புரவிநெடும்பருமணித்தேர்மேற்கொண்டான்பரிதிபோல்வான் ... (௱௨௮)

எந்நாட்டினவனிபருமீண்டியவத் தொல்லவையினிசைத்தசேதி - நன்னாட்டுக்கதிபதியா நரபாலநின்மாற்றநன்றுநன்று - கன்னாட்டும்படியாகவிருவோரும் பொருதறிதுங்கடிதேகென்று-தன்னாட்டமிகச்சிவந்தான்கரியவடிவிறபுனைந்ததண்டுழாயோன்()

சேதிகுலநரபதியுஞ் செருப்புரிதற்கஞ்சுவனோ தேரிலானான் - மோதிவலம்புரிமுகமுகிலினங்கண் முழங்குவபோன்முரச

மார்ப்ப - வேதியரோடவையிருந்த வேந்தரெல்லாமதிசயிப்பவி
மானந்தோறும் - சோதிமுடியமரர்வர நகர்ப்புறத்திலமர்மலைய
த்தொடங்கினரே ... ... (௱௯௰)

யாதவருக்கதிபதியினணிபரவித் திண்டேருமதிலமென்ன-
மோதிவருகடகளிறுங்காலாளும் பொருதுரகர்முடிகள்சோர -
யாதிகுலநரபதிபுயிநங்களையும் பெருங்கிளையோடெதிரிலாத -
சேதிகுலநரபதியுஞ்செய்தவமர் சுராசுரரிற்செய்தாருண்டோ. ()

எழுசீர்க்கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம்.

யானைமேல்வருநிருபருந்திற லானைமேல்வரு நிருபரும் -
சோனைமாமுகிலேழுமேநிக ரென்னவம்புதொடுத்தலின் - தான
யாறுநிறைந்து பல்லணிபாதிவிஞ்சியசதுவிதச் - சேனையாவையு
மெய்க்கிவந்தன சிந்தைமாமலர்கருகவே ... ... (௱௯௨)

இரங்கியெங்கணுமோதவிஞ்சி யெடுத்துவீசுவவெழுகடற் -
றரங்கம்வந்தெதிர் மலைவம்போன்றன சண்டவாயுவோடொப்பன -
துரங்கமங்களில்வீரர்மேவிடு தும்பிமாமிசைவீரர்மேல் - உரங்
கொள்வெஞ்சிலைவாளி தோள்களுமுருவவவ்ர்பொருடற்றினர். ()

ஓரிரண்டுவருநினிக்குமு முயர்தடங்கிரியொப்பவே - ஈரிர
ண்டுவிதத்திறுவு மியம்பலுற்றனவெண்ணில்படம் - றேரிரண்டணி
யுருளினோடுருள் சென்றுமுட்டினதீயிழக் - காரிரண்டெதிர்மலை
யுமாறெனவண்டபித்திகலங்கவே ... ... (௱௯௪)

சிங்கமொன்றுடனொன்றுசீறுசெருக்கெனும்படிசேனவா
ம் - வங்கர்கொங்கணர் துளுவராரியர் மகதரொட்டியர்மாளுவர் -
கங்கர்கொங்கர்தெலுங்கர்சீனர்கலிங்கர்சிங்களர்கௌசலர் - அங்கர்
சோனகராலவீரதிர்ந்துதங்களிலமர்செய்தார் ... (௱௯௫)

வெருவருப்படிகொம்புகம்புவிதங்கொண்மாமுரசாதிய -
இருவர்தம்படைதமிலுமுழியெதிர்ந்தகாலெனவதிர்தலால் - மரு
விபெண்டிசைமுகமு நிற்பனமத்தவாரணகன்னமும் - திருவிரு
ம்புபுயத்துவானவர் செவிகளுஞ்செவிடானவே ... (௱௯௬)

புடைபடைக்கிளையாகிவந்தெதிர் பூதலத்தரியாவரும்- தொ
டைபடப்பரிவுறுமனத்தொடு தொந்தயுத்தமுடற்றினர் - குடை
யெடுத்தனரிருவரும்பெறுகொடியெடுத்தனர் கொற்றவெம் - ப
டையெடுத்தனர்மாமறைப்பசுபாலனுஞ் சிசுபாலனும் (௱௯௭)

வேலினல்வடிவாளினல்வரிவில்லினனுனாபெற்றவெங்- கோ
லினலிருவருமுனிந்திரு குன்றமொத்துயர்தேரினர் - மாலினல்
வருமத்தயானைகண் மலைவதொத்துமதித்தபோர் - நூலினல்வழு
வறமலைந்தனர் நுண்மையாலிரு நுண்ணியார் ... (௱௩௮)

வேறு

வெஞ்சினமுடுகவொருவருக்கொருவர்வென்றலுந்தோற்றலு
மின்றி-வஞ்சினமுனாசெய் துள்ளமுமெய்யும்வாகுபூதரங்களும்பூ
ரித் - தெஞ்சினர்தமைப்போலிளைத்தபினினிவானேற்றுதல்கட
னெனக்கருதிக்- கஞ்சனைமுனிந்தோனிவன்முடித்தலைமேற்கதிர்ம
ணித்திகிரியேவினனே ... ... (௱௩௯)

ஏவியதிகிரிவீரனாத்துறக்கமேறவிட்டிடும்இரவியைப்போல்-
மேவியவயிரான்மைத்துனன்முடியைவிளங்குகோளகையுறவீச-
ஆவியுமுணர்வுமொன்றுபட்டிதயத்தமர்ந்துறையாடகச்சோதி-
தீவியவமுதந்தேவருக்களித்தோன்சேவடிசென்றுசேர்ந்ததுவே.

சேதிமன்னவன்றன்முடியினை நெடியோன்றிகிரிசென்றரிந்
திடவொருபொற் - சோதிமற்றவன்றனுடலினின் றெழுந்துசுட
ராயும்பிளந்துபோய்மீண்டு - மாதிரமனைத்துமொளியுறவிளக்கி
மன்னளந்தருள்பதமடைய - வேதியர்முதலோர்யாவரும் வேள்
விப்பேரவைவேந்தருங்கண்டார் ... ... (௱௪௧)

ஈதொருபுதுமையிருந்தவாவென்பா ரிந்திரசாலமோவெ
ன்பார் - மாதொருமாபனல்லதிக்கண்ணல் மதிகுலத்தவனல
னென்பார் - கோதொருவடிவாம்புன்மொழிக்கிளைஞர் கூறினு
ம்பொறுப்பரோவென்பார் - காதொருகுழையோனிளவலைத்தே
ர்மேற் கண்டுதன்கண்ணிணைகளிப்பார் ... ...(௱௪௨)

அதிசயித்திவ்வாறிருந்துழியிருந்தோரனைவருமாழியான்ற
ன்னைத் - துதிசெயத்தருமன்சுதன்முதலெவருந் தொழுதெதிர்
வந்துவந்திறைஞ்ச - விதியெனப்பொருதவெங்களத் திடையே
வியாதமாமுனியெடுத்துரைப்ப - மதியுடைக்கடவுள்வீடுமன்மு
தலா மன்னவர்யாவருங்கேட்டார் ... ... (௱௪௩)

ஐவகைவடிவாயெங்குமாய்நின்ற வச்சுதனமலனனந்தன் -
செய்யொளிதிகழும்பங்கயசரணஞ் சிந்தனுசிந்தையனுகித் - அ

ய்யமாதவத்துத் தூருவாதமுனிதொழவருகாலைவைகுந்த- மெய் வருகோயிற்றுவாரபாலகரவ் வேதபண்டிதன்றனைவிலக்க (௱சச)

விலங்கியவிருவர் தம்மையுமந்த வெஞ்சினமுனிவரன்வெ குண்டு- துலங்கியகோயிற்று வாரம்விட்டவனிதோன்றுமின்போ யெனச்சபித்தான் - அலங்கலந்துளபமௌலியானது கேட்டந்த ணன்றனையெதிர்கொண்டு- கலங்கியதுவாரபாலர்நின்சாபங் கடப் பதெக்காலமோவென்றான் ... ... (௱சரு)

என்றலுமுனியுந் தொழுதிவரொழுகாலின் புறவன்பராய்வ ருதல் - அன்றிமும்மடங்குபகைவராய் வருதலல்லதிங்குன்பதம ணுகார்- மன்றலந்துளபமாலையா யென்னமலர்மகண்மகிழ்நனும வரைக் - கன்றியமறையோன் சாபநீர்கடக்குங்கருத்துமக்கியாது கொலென்றான் ... ... (௱சசா)

மற்றவரிறைவன் மலரடிவணங்கி வான்பிறப்பேழுறமாட் டேம் - முற்றுமுற்பகைமு முனக்குவெம்பகையா யுற்பவித்துன் பதமுறுவேம் - வெற்றிகொண் முதுபோர் நேமியாயென்றார்வி மலனுங்கொடியவெஞ்சாபம் - அற்றிடும்வகையாலவ்வரமளித்தா னசுரராயவரும்வந்துதித்தார் ... ... (௱சஎ)

இரணியன்வரிவிலிரணியனென்னுமப்பெயரிருவருமெய் தி - முரணியகொடுமைபுரிந்துமூவுலகு மொப்புடன்கவர்ந்திடு நாளில் - அரணியினழல்போலாளரியுருவாயச்சுதன்றூணிலங்குரி த்துத் - தரணியிலுகிராற்பிளந்து முன்னுகத்திற்றன்பகைசெகுத் தனன்பின்னும் ... ... (௱சஅ)

அரக்கர்தங்குலத்துக்கதிபதியாகி யாண்டுபோய்மீண்டுமங் குரித்துத் - தருக்குடனவர்களிருவரு முறையாற்றம்பியுந்தமைய னுமானார் - சிரக்குவைபுடனேபுயவனாதிரையுஞ் சிந்தவச்சிந்துவி னிடைய்ய - சரக்குவைசொரிந்தானமலனவ்வுகத்துத்தயரதன்ற ன்வயிற்றுதித்தே ... ... (௱சகூ)

இந்தநல்லுகத்தினிறைவனுக்கன்னேரிருவருங்கிளைஞராயெ ய்தி - வந்தனர்வஞ்சக்கஞ்சமாமனுமிம்மைத்துனன்றானுமாய்ம ன்னு - சிந்தையிலுணர்ந்தொன்றுகொண் டுனாத்தான்சித்தசித் துணர்தருமுனியும் - அந்தமன்னவையிலிருந்துளோரெல்லாம மலனைத்துதித்ததிசயித்தார் ... ... (௱ருய)

வீடுமன்விதுரன்றுரோணனேமுதலாம் விலகிலாவுணர்வு
டைவேந்தர் - நாடினர்மனத்திற்புளகமுற்றுடலநயனநீர் மல்கி
னர்குழறிப்- பாடினர்புகழ்ந்து பரவினர்பரவிப் பைந்துழாய்க்
கழலன்மலர்ப்பாதம் - சூடினூர்சுருதிக்கெட்டொணுதொளிருஞ்சு
டர்மணித்துய்யசோதியையே ... ... (௱௫௧)

அப்பொழுதமலனருஞ்சினமொழிந்தாங் கருளுடையறத்
தின்மைந்தனைப்பார்த - திப்பொழுதருநான்மறையவர்க்கெல்லா
மிருஞ்சிறப்புதவுகென்றிசைப்ப - முப்பொழுதுணருமுனிவர
ன்பணியான் முறைமுறைபூசனைபுரிந்தான் - மைப்பொழுதொளி
கூர் வெண்ணிலாவுமிழுமதிகுலத் துதித்தருண்மன்னன் (௱௫௨)

அருமறைமுறையாலரசனைமுனிவ ரனைவருமாசிசொற்றரு
ளித் - தருநிரைபயிலுந்தத்தம விபினஞ்சார்ந்தனாதசவுடன்மீள
க் - கருமுகிலனையமேனியங்கருணைக் கண்ணனுங்கிளையுடன்றுவ
ரைத் - திருநகர்புகுந்தான் சென்றுவன்றிறல்கூர்சேதியிற்பெரும்
பகைசெகுத்தே ... ... (௱௫௩)

அராவவெங்கொடியோனுதியாயுள்ள வரசருந்தந்நகரடை
ந்தார் - விராடனுந்துருவதேயனு முதலாம்வேந்தருந்தம்பதிபு
குந்தார் - சராசனத்தடக்கைச் சல்லியன்முதலோர்கிளையுடன்றம்
புரஞ்சார்த்தார் - பராவருமுதன்மைப் பாண்டவர்கடற்பார்பண்
புறத்திருத்தியாண்டிருந்தார் ... ... (௱௫௪)

முன்குலத்தவர்க்கு முனிகுலத்தவர்க்குமும்மதக்கைம்முகக்
களிற்று - மன்குலத்தவர்க்கும் வான்குலத்தவர்க்கும் வரம்பிலாவ
கைக்கலைதெரியும் - நன்குலத்தவர்க்கும் பொருளெலாநல்கிநா
டொறும் புகழுடன்வளர்வான் - தன்குலக்கதிர்போற் றேய்ந்தொ
ளிசிறந்தான்றண்ணளித்தருமராசனுமே ...... (௱௫௫)

௧-வது இராசசூயச்சருக்கம்

முற்றிற்று.

௨-வது.

சூதுபொருதசருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஞானமாகியபரம்பரவமிழ்தமாய்நவிரறுமயக்காகி ... *
வானமாயுடன்வாயுவாய்த்தேயுவாய்வாரியாய்மண்ணாகித் ... *
தானமாமறைமுறைமையிற்பற்பலசராசரங்களுமாகி ... *
ஏனமாயிவையனைத்தையுமருப்பினாலேந்தினானையாண்டான்.

வேறு

தாமரையனையசெங்கட்டரணிபனிராசசூய ... ... *
மாமகமுற்றித்தங்கண்மாநகர்புகுந்தபின்னர் ... *
தாமருபனுவன்மாலைநாகவேறுயர்த்தசெல்வக் ... *
கோமகனிளைஞரோடுங்குறித்ததுகூறலுற்றான் ... (௨)

கணைவருவரிவில்வாழ்க்கைக்கடுங்கனலனையதோற்றத் ... *
துணைவருந்தானுங்கங்காசுதனுமற்றெவருஞ்சூழ ... *
இணைவருமரசரில்லாவிகலரியேறுபோல்வான் ... *
கிணைவருமோதைமூதூர்க்கிளர்நெடும்புரிசைபுக்கான் ... (௩)

சென்றுழிபெவருந்தத்தஞ்செழுமனையெய்திவாசம் ... *
துன்றியவமளிகங்குற்றுயில்புரிந்துணர்ந்தபின்னர் ... *
நின்றவெம்பரிதிதோற்றந்தொழுதுநன்னியமமுற்றி ... *
வன்றிறலரசன்கோயின்மன்னவைவந்துசேர்ந்தார் ... (௪)

இறைஞ்சியவேந்தர்க்கெல்லாமிருப்பளித்தெதிர்ந்தவேந்தர் *
நிறஞ்செறிகுருதிவேலானினைவினோடிருந்தபோதில் ... *
அறஞ்செறிதானம்வண்மையளவிலாதளித்துநாளும் ... *
புறஞ்சுவர்கோலஞ்செய்வான்பூபதிக்குரைக்கலுற்றான் ... (௫)

தாதவிழ்குவளைமாலைத்தருமன்மாமதலைபெற்ற ... *
மேதகுவேள்விச்செல்வம்வேந்தரில்யாவர்பெற்றார் ... *
ஏதளவவன்றன்வாழ்க்கையாரினியெதிருண்டென்று ... *
பாதகநினைவைத்தானும்பகர்ந்தனன்பரிவுகூர ... (௬)

விதரணவிநோதன்சொன்னவார்த்தையும்வேந்தர்வேந்தன் ...*
இதயமுமொன்றாய்நின்றவியற்கையைச்சகுனிகண்டு ... *

புனைதநகமடங்கனாளும்புறஞ்செலாதொடுங்குமாகின் ... *
மதகரிவிடுமோவென்றான்வசையிசையாகக்கொள்வான் (௭)

சொல்லிடைநஞ்சுகக்குந்துன்மதித்துச்சுவாதன் ... *
வில்லிடைநின்றுதம்முன்வெம்மனங்களிப்பச்சொன்னான் ...*
அல்லிடைநின்றதேனுமமுதவெண்கிரணத்திங்கள் ... *
எல்லிடையிரவிமுன்னரெவ்வழிக்காகுமென்றான் ... (௮)

தமையனுந்தம்பிசொன்னதன்மையையுணர்ந்துநீதி ... *
அமைதருந்தந்தைகேட்பவவன்பெருந்தாதைகேட்பக் ... *
கமைபெறுவிதுரன்கேட்பக்கார்முகக்கன்னன்கேட்ப ... *
இமையணதுரோணன்கேட்பயாவருங்கேட்பச்சொன்னான் (௯)

இந்திரன்முதலாயுள்ளவிமையவர்சிறப்புச்செய்யச் ... *
சுந்தரப்பொற்றேருள்வேந்தர்தொழில்புரிந்தேவல்செய்ய ... *
மந்திரமுனிவர்வேள்விமறைநெறிமுறையிற்செய்யத் ... *
தந்திரவெள்ளச்சேனைத்தருமனேதலைவனானான் ... (௰)

இனியவன்சின்னாள்செல்லினெம்மனோர்வாழ்வுங்கொள்ளும் *
துனிவரும்புரவித்திண்டேர்த்துணைவருஞ்சூரரானார் ... *
முனைவருகூர்முள்வேலைமுளையிலேகளையினல்லால் ... *
நனிவரவயிர்த்தபோதுநவியமுமடியுமன்றே ... ... (௰௧)

போதுறவிரைந்துமற்றைப்புரவலன்செல்வம்யாவும் ... *
பேதுறக்கவர்ந்திலேனேற்பின்னையார்முடிக்கவல்லார் ... *
மோதுறப்பொருதேயாதன்மொழியொணாவஞ்சமொன்று .. *
தீதுறப்புரிந்தேயாதல்கொள்வதேசிந்தையென்றான் ... (௰௨)

என்னலுமுரியதம்பியெழுவதேகருமமீன்ற ... *
செந்நெலின்வாளைபாயுஞ்செல்வநாடுடையகோமான் ... *
நென்னலங்கெப்தவீமனைகைத்ததுநேயமான .. ... *
கன்னலின்மொழியாண்மூரல்விளைத்ததுங்கண்டிலீரோ ... (௰௩)

எத்தனைதரணிவேந்தர்யாகநல்விழவின்வந்தோர் ... *
அத்தனைபேரில்யாமுமொருவராயடங்கிநின்றேம் ... *
கொத்தனையுகளுநன்னீர்க்குருகுலக்கோமானந்த ... ...*
முத்தனையன்றிப்பின்னைப்பாரையேமுதன்மைசெய்தான் ... (௰௪)

நந்தகோமகனுக்கெல்லாநல்கியமுதன்மைகண்டு ... *
வந்தகோவெள்ளஞ்சேரவாய்திறவாமனிற்ப ... ... *

எந்தகோவிவனுக்கிந்தமுதன்மையென்றெதிர்ந்துமாற்றம் *
தந்தகோமடியுமாறுசமரமும்விளைவித்திட்டான் ... (யரு)

தன்புயவலியுமேனைத்தம்பியர்வலியுமாயன் ... *
வன்புயவலியுங்கொண்டேமண்ணெலாங்கவரவெண்ணி ... *
இன்புயசிகரிமன்னர்யாரையுந்தன்கீழாக்கி ... ... *
மின்புயலனையான்மேன்மைவிளக்கவேவேள்விசெய்தான் (யசு)

எல்லியல்பரிதியன்னயதுகுலமைந்தன்றானும் .. *
சல்லியஃமிகுபோர்செய்யத்தரியலன்றன்மேற்சென்றான்... *
சொல்லியகருமம்வாய்ப்பச்சூழ்வலைப்படுத்திக்கொண்ட... *
வல்லியமென்னச்சூழ்ந்துமலைவதேகருமமென்றான்... (யஎ)

வேந்தனுமொருப்பட்டந்தவெண்ணெய்வாய்க்கள்வன்மீளப்...*
போந்திவர்தமக்குமின்றுபொருதுணையாகமாட்டான்... *
சாந்தணிகுவவுத்தோளான்சல்லியன்வலியனிப்போ... *
தாந்தகவெண்ணின்வல்லோனவனையடக்கலாமே ... (யஅ)

வஞ்சனைகொண்டேயாதல்வாரணமணித்தேர்வாசி... ... *
நஞ்சனையவராலாதனுளையேயழித்தல்வேண்டும்... ... *
கஞ்சனைமலையவெண்ணிக்கரியபேய்முலைப்பாலுண்ட... *
நெஞ்சனையெய்தாமுன்னர்நீர்விரைந்தெழுமினென்றான் (யகூ)

வெஞ்சிலைகுனித்தோரம்பியான்விடின்வெருண்டவேந்தர்.. *
அஞ்சிவிண்புகுவரல்லால்பாவரோவெதிர்க்குமீட்டார்..... *
வஞ்சனைகொண்டுவெல்லமதிப்பதுவாளால்வெல்ல..... *
அஞ்சினமாகினன்றேவென்றனனங்கர்கோமான்... (உய)

யாவருமொழிந்தவார்த்தையின்புறக்கேட்டுப்பின்னும்... *
தாவரும்புரவித்திண்டேர்த்தானையன்சகுனிசொல்வான்... *
மேவருங்கன்னனன்றிவிண்ணுளோரெதிர்ந்தபோதும்... *
கோவருமுன்றிலானைக்கொடுஞ்சமர்வெல்லலாமோ... (உக)

இடும்பனைப்பகனைவெவ்வேலிகற்சராசந்தன்றன்னை...... *
நெடும்பனைப்புயத்தால்வென்றநிகரிலாவீரர்நிற்சக்... ... *
கடும்படைப்பெருமையால்வெந்காணலாமென்பராகின்... *
தொடும்படைத்தடக்கைவீரற்குத்தரஞ்சொல்லலாமோ... (உஉ)

துப்புறழமுதச்செவ்வாய்த்துரோபதிதுணைத்தோள்வேட்டுக் *
கைப்படுசிலையினெடுங்காவலர்கலங்கிவீழ... ... *

மெய்ப்படுமுனியாய்வந்துவிசயன்வில்லிறுத்தபோதும் ... *
இப்பொழுதிருந்தவீரர்யாவருமிருந்திலேமோ... (உங)

இப்பிறப்பொழியப்பின்னுமேழெழுபிறப்பினாலும்... *
மெய்ப்பிறப்புற்றநீதித்தருமனைவெல்லமாட்டோம் ... *
ஒப்பறப்பணைத்ததோளாயுபாயமெங்கேனுமொன்றால்... *
தப்பறச்சூழ்ந்துகொண்டுசதிப்பதேதகுதியென்றான்... (உச)

தன்பெருமாமன்சொல்லத்தரணிபர்தம்பிரானும் ... *
வன்பெருஞ்சேனைகொண்டுமலைவதற்கவர்களஞ்சார்... *
என்பெருநயமிக்கவிவன்மொழிப்படியேமாயப்... *
புன்பெருஞ்சூதுகொண்டுபொருவதேபுந்தியென்றான்... (உரு)

கோமகனெஞ்சுநாவுங்குளிர்ந்துபேருவகைகூர்ந்து... *
மாமனைத்தவிசின்கண்ணேவருதியென்றிருத்திக்கேட்டான்... *
பாமருபனுவன்மாலைப்பாண்டவர்தம்மைநின்கைக் .. *
காமருசூதால்வெல்லுங்கருத்தெனக்குரைத்தியென்றே... (உசா)

மன்னநின்செல்வக்கோயின்மண்டபமொன்றுதேவர் ... *
பொன்னுலகினுக்குமில்லையென்பதோர்பொற்பிற்றாகப்... *
பன்னுநூற்சிற்பங்குன்றாப்பஃறொழில்வினைஞர்தம்மால்... *
தன்னிலம்விரிவுண்டாகநாளையேயியற்றுகிற்பாய் ... (உஎ)

மண்டபங்காணவெம்முன்வருகவென்றழைத்துவந்தால்... *
கண்டுகண்களித்துமற்றைக்காவலரிருந்தபோழ்தில்... *
புண்டரவிசாலநெற்றிப்புரவலர்பொழுதுபோக்க... *
அண்டரும்விரும்பும்வன்சூதாடுதும்வருகவென்பேம் ...(உஅ)

அதிர்முரசுயர்த்தகோவுமடைமையெனத்துணிபும்பின்னை... *
மதிமருளியற்கைத்தாருமாயவெஞ்சூதன்றால்... ... *
விதியெனப்பொருதுவாழ்வுமேதருவரசுந்தங்கள் .. ... *
பதிமுதற்பலவுந்தோற்கும்படிசெகுத்திடுவேமென்றான் (உகூ)

இன்னதேகருமமென்றென்றிளைஞரும்விழைந்துசொன்னார்...*
அன்னதேகருமமாகியவாவழியொழுகுநீரான்... ... *
தன்னதேயாகுமிந்தத்தலமெனுங்கருத்தான்மாமன் ... *
சொன்னதேதுணிந்துமார்புந்தோள்களும்பூரித்திட்டான் (ஙய)

வில்லினாலுயர்ந்தவென்றிவிதுரனைநோக்கிக்கொற்ற... *
மல்லினாலுயர்ந்தபொற்றோள்வலம்புரிமாலைவேந்தன்... *

வல்லினன்மாயஞ்செய்யமாதுலனுரைத்தவெல்லாம்... *
சொல்லினனவனுங்கேட்டுச்சொல்லெதிர்சொல்லலுற்றான் (௫௧)

வையமுமரசும்வாழ்வும்வாங்குகைகருத்தேயாகின்... *
பொய்படர்சூதுகொண்டுபுன்மைபிறக்கவரவேண்டா... *
ஐயநின்றந்தையோலையவருக்கெழுதிவிட்டால் ... *
மெய்யுறமறுத்துச்சொல்லார்வேண்டினதருவரன்றே... (௫௨)

தந்தைதன்னேவலாலேதருமனுந்தம்பிமாரும் ... *
இந்தமண்ணுடல்கைவிட்டெரிகெழுகானஞ்செல்வர்... *
முந்துறநுமதேயாகுமுழுதும்வாழ்வெழுதுஞ்செம்பூட் ... *
பைந்தொடையசர்கேட்டாற்பாவமும்பழியுமாகா... (௫௩)

தீதிலவ்வரித்துநெஞ்சந்தீயவராடுமாயச் ... *
சூதினல்வென்றுகொள்கைதோற்றமும்புகழுமன்றால் ... *
போதினன்முகனுமாலும்புரிசடையோனும்வேள்வி... *
ஆதிநான்மறையுமுள்ளவளவுமிவ்வசையறாதே ... (௫௪)

என்றவனுரைப்பக்கேட்டேயெரியெழுமனத்தனாகி...... *
ஒன்றியகேண்மைத்தந்தைக்கொருபுடைவாரமுண்டோ... *
வன்றிறன்மைந்தர்வாழ்வுவாங்கியின்றெமக்குத்தந்தால்... *
புன்றொழில்வசையேயன்றிப்புகழ்கொலோபுகல்வதம்மா (௫௫)

நினக்கிதுதொழிலேயன்றுநேயமும்விரகின்மேல ... *
தெனக்குயிர்த்தந்தைநீயென்றியானுனைமகிழ்ந்துகாண்பல்... *
உனக்குமுன்கிளைக்குநாளுமுண்டியும்வாழ்வுமிங்கே...... *
மனக்கருத்தங்கேயென்றான்மாகணத்துவசன்மாதோ... (௫௬)

மைந்தன்மற்றுரைத்தமாற்றமனத்தினையீரப்பின்னும்... *
வெந்திறல்விதுரனுற்றவிளம்பினனென்பமாதோ ... *
புந்தியின்மறுவிலாதாய்புதல்வரிலொருசாரன்பு .. ... *
தந்தையர்க்கில்லையென்றோயானுநுந்தந்தையன்றோ ... (௫௭)

நீங்களுமவருநேயநெறிமுறைதவறாதென்றும் ... ... *
வாய்ந்தநீருததியாண்டமண்ணின்மேல்வாழ்கவுற்றால் ... *
யாங்கலாவரசரெல்லாம்பணிந்துநும்வாயினிற்பர்... ... *
ஓங்கியபுகழும்வாழ்வுமொருப்படவளருமன்றே ... ...(௫௮)

உங்களில்வநதீருமுளத்திரிந்தெதிர்த்தீராயின் ... ... *
அங்கவர்னிரித்தாராமக்குருகுலத்தலைவனொன்றப்... ... *

பொங்கொளிதிகழுங்கஞ்சப்புரவலனெழிவுகண்ட... ... *
திங்களினுயர்ச்சிபோலத்தெவ்வருந்திகழ்வரன்றே... (௩௯)

ஆதலானுறுதிசொன்னேனுமுறைதெரிந்துகேட்டி ....*
ஏதிலார்போலயானுமினியுனக்கியாதுசொல்வேன் ... ...*
தீதிலாதுணராவஞ்சச்சிந்தையர்பரிந்துகூறுங் ... ... *
கோதிலாவுனக்கிங்கோர்வேறெனச்சிலகூறினனே ... (௪௰)

திறுத்தறம்வளர்ப்போர்நெஞ்சினீதியுங்குரவரோவல் ... *
மறுத்தெதிருரைக்குமென்பால்வடுவுநீவனாந்துகண்டாய்... *
செறுத்தவராவிகொள்வாயடியனேன்செய்தவெல்லாம் ... *
பொறுத்தருளென்னக்கையாற்போற்றினன்முறுவல்பூத்தான் ()

செழுந்திருவிருக்குமார்பன்செப்பியகொடுமைகேட்டு ... ...*
விழுந்திரண்மாலைத்திண்டோள்விதுரனும்வெகுண்டுமுன்னர்த்*
தொழுந்தகைமௌலிவேந்தன்சூழ்ச்சியிற்கிசைவுறாமல் .. ...*
எழுந்துதன்கோயில்புக்கானிகலரியேறுபோல்வான் ... (௪௨)

புரிவிலாமொழிவிதுரன்போதலும்புரிவிலொன்றும் ... ...*
சரிவிலாவஞ்சமாயச்சகுனியுந்தம்பிமாரும் ... ... *
விரிவிலாமனத்தோடண்ணலும்விசாரமேவிசாரமாக ... *
வரிவிலான்வினைவினீண்டோர்மண்டபமமைக்கவென்றான் (௪௩)

பெருந்தகையேவன்மாற்றம்பிற்படமுற்பட்டோடி ... ...*
இருந்ததொல்வேந்தர்தத்தமிருக்கையினியன்றவெல்லாம்.....*
அருந்திறன்மள்ளராலுமணிமணித்தேரினாலும் ... ...*
பொருந்தியமரங்களேற்றிப்பொற்சுவருயர்த்தினரோ ...(௪௪)

சங்கையிற்சிற்பநூன்ணூற்றபதியர்தகவுகூரச்... ... ...*
செங்கையினமைத்தகோலச்சித்திரத்தூணநாட்டி ... ... *
அங்கையிலருணரத்நத்தனிகொளுத்திரமும்மேற்றிக்... *
கங்கையினுயர்ந்தமுத்தின்கற்றையான்முற்றுமேய்ந்தார் (௪௫)

ஓவியஞ்சிறக்கத்தீட்டியொண்கொடிநிரைத்துச்செஞ்சொற்...*
காவியமாக்கட்கெல்லாங்கருத்துறுகவினிற்றாகி ... ... *
வாவியபுரவித்திண்டேர்மன்னவனிணவுக்கேற்ற ... ... *
ஏவியல்கிளைஞர்தம்மாலியல்புறச்சமைத்தாரன்றே ... (௪௬)

மன்னவைக்கானபைம்பொன்மண்டபஞ்சமைந்ததென்று ... *
தன்னவைக்குரியோர்சொல்லச்சகுனியுந்தானுநோக்கிச்... ...*

சொன்னவைக்கேற்றதென்றுதொழுதகுதந்தைதன்பால்... ...*
மின்னவைத்தொளிரும்வேலான்மேவினன்விளம்பலுற்றான் ()

அரும்பெறலைபகேட்டியடியனேன்கருத்துமுற்றக்... ...*
கரும்புயறவழுஞ்சென்னிக்கதிர்மணிக்கூடமொன்று ... ...*
பெரும்புகழ்நகரினீண்டுச்சமைத்தநன்பெருமைகாண .. ...*
வரும்படிதூதொன்றேவுன்மைந்தனைவிரைவிலென்றான் (௬௮)

மகன்மொழிநயந்துகேட்டுவாழ்வுறுதந்தைதானும் ... *
மிகநயந்துருகிநல்லவிரகினால்வெல்லலுற்றீர் ... ... *
அகனெடும்போர்செய்தாலுமைவனையடக்கொணாது ... *
சகுனியையன்றிவேறார்தரவல்லார்தரணியென்றான் ... (௬௯)

விழியிலாவென்றிவேந்தன்விதுரனையழைத்துநீபோய் ... ...*
மொழியின்யாருலகின்மற்றுன்மொழியினைமறுக்கவல்லார் ...*
பழியிலாவிசைகொணீதிப்பாண்டவர்வந்துன்மைந்தர் ... ...*
வழியிலாயொழுகும்வண்ணமருட்டிநீகொணர்தியென்றான் (௭௰)

தம்பியர்விழைவாற்கூடஞ்சமைத்தபேரழகுகாண... ... .. *
இம்பர்வந்தெமையுமெய்தியேகுகவிரைவினென்னப் ... ...*
பைம்பொனிஞ்சேலைமீதுபண்புறவெழுதியின்னே ... *
எம்பியுமேகுகென்றானேவலினவனும்போனான் ... (௭௧)

காரெனக்களிறுசுற்றக்காற்றெனபுரவிமீண்டத்... ... *
மேரினுக்கொருவன்றன்னைச்சிலம்பெனத்தேர்கள்சூழ ... ...*
வீரரிற்பலரும்போற்றவிதுரனுமிரண்டுநாளால் ... ...*
பாரினுக்குயிரேபோலும்பாண்டவர்நகரிசேர்ந்தான்... ...(௭௨)

(வேறு.)

புரியும்வெங்கதிர்க்கவினுறுபொலிவினாற்பொன்னுலகாமென்ன - அரியபைம்பொனின் மணிகளினிறைந்த சீரளகைமாநகரென்னத் - தெரியும்பண்புடனறங்குடியிருப்பதோர் தெய்வவான்பதியென்ன - விரியும்வண்கொடிபுரிசைசூழ்வளநகர்விழிகளித்திடக்கண்டான்... ... ... (௭௩)

ஊடெலாநறும்பொய்கைநீள்வாவியினூடம்பெலாமலர்பூவின் - தோடெலாமெழுஞ்சுரும்பினமதுகரச்சொல்லெலாஞ்செழுங்கீதம்- பாடெலாமிளஞ்சோலைமென்பொங்கரின்பணையெலாங்குயிலோசை -நாடெலாநெடும்புனல்வயல்கழனியினடுவெலாம்விளைசெந்நெல்... ... ... (௭௪)

அருகெலாமணி மண்டபமவிரொளி யரங்கெலாஞ் சிலம்போசை - குருகெலாம்வளர்பழனமப் புள்ளெலாங்கூடலின்புறவூடல் - முருகெலாங்கமழ் துறையெலாந்தரளம்வெண் முத்தெலாநிலாவெள்ளம் - பருகலாம்புன னதியெலாநீரொலாம்பங்கயப்பசுங்கானம்... ... ...(௫௫)

ஆனகம்பலமுழங்கவந்தெதிர்பணிந்தாதுலர்க்கமிழ்ந்தென்னப் *
போனகம்பரிந்திடுநெடுஞ்சாலையேபுகுந்தமாமறுகெல்லாம் *
வானகந்தனையமையுமென்றும்பருமிப்பரில்வரவெண்ணும் ...*
ஞானகஞ்சுகநகரியையெங்ஙனேநாம்வியப்பதுமன்னோ (௫௬)

வந்தனன்சிலைவிதுரனென்றோடிமுன்வந்தவருனையாமுன் - தந்தைதன்றனிவரவறிந்திளைஞருந் தருமனுமெதிர்கொண்டார் - சிந்தையன்புடன்றொழுதமைந்தனைச்செங்கையாற்றழீஇக் கொண்டே - அந்தணம்புலிகண்டடைபைங்கடலெனவவனுமெய்குளிர்ந்திட்டான் ... ... (௫௭)

கொண்டுதாதையுந்தாமும்வண்கொடிமதிற்கோபுரநெடுவீதி - அண்டராலயமெனத்தகுகோயில்சென்றடைந்தபினடல்வேந்தர் - வண்டுதாமரைமலரெனச்சுழலுமாமலரடிபணிந்தேத்தக் - கண்டுவாழ்வுடனவர்க்கருள் புரிந்துதன்கருத்தினால்விடையீந்தான். ... ... (௫௮)

தானுமைந்தரோடைவரு மொருபுடைத்தனித்திருந்துழிவண்டு - தேனுகர்ந்திசைமுரல் பசுந்தொடையலான்றிருத்தகமொழிகின்றான் - கோனுவன்றுதன்றிருமுக மெழுதிநீகொணர்கமைந்தனையென்ன - யானும்வந்தனனேவலாலழைத்ததற்கேதுவுமுளதென்றான் ... ... (௫௯)

நீபுரிந்தநல்வேள்வியின்கடன்கழித்தியாவருநெடுமாடக் - கோபுரந்திகழ்மூதெயில் வளநகர்க்கோயில்புக்கனமாக - நூபுரந்திகழிணையடியரம்பையர் நோக்கருங்கவின்கொண்ட - மாபுரந்தரனிவனெனவிருந்தனன் வலம்புரிமலர்த்தாரான் ... (௬௰)

தம்பிமாரொடுந்தங்குபுன்றுன்மதிச் சகுனிதன்னெடுமெண்ணிக் - கும்பமாமணிநெடுமுடிநிரைத்தவண் கூடமொன்றமைக்கென்ன - அம்புராசிசூழ்மண்டலத் தரசெலாமடங்குபேரவைக்காக - உம்பராலயநிகரெனச்சமைத்தனரொட்பநூலுணர்வுற்றோர் ... ... (௬௰௧)

பெற்றதந்தையோடுள்ளூறுமுணர்வெலாம் பேசிமண்டப
ந்தன்னில் - கொற்றவன்குடிபுகும் பொழுதுன்னையுங்கூட்டிமன்
னவர்முன்னர் - மற்றைமாதுலனெஞ்சமோவஞ்சமோமாயமோர்
வகுத்தாங்கே - கற்றசூதுநின்னுடன்பொர நினைவினன்கருத்தி
னித்தெரியாதே... ... ... (௯௨)

திருதராட்டிரன்திருமுகமிதுவெனச் சென்றிறைஞ்சினன்
வாங்கி - விரதமார்க்கமென்றறிந்தறம் பேணுவான்விளைஞர்கை
க்கொடுத்திட்டான் - இரதமாற்றமங்கெழுதியபடியினு வியம்பிய
படிகேட்டு - வரதனுற்பணிப்புறுதொழில் யாவனுன்மறுக்கவெ
ன்றுனைசெய்தான் ... ... (௯௩)

மூத்ததாதைதன்னேவலும்இளையவன் மொழியுமொத்தமை
நோக்கி - வார்த்தைவேறுமற்றொன்றையுமுணாத்திலன்மனுநெ
றிவழுவாதோன் - சேத்தநாகவெங்கொடியவன்கொடியவன்சிந்
தையினிலைதோன்றக் - கோத்தகோவைநன்றாயினுந் தகுமதோ
குருகுலந்தனக்கென்றான் ... ... (௯௪)

அடியுமாண்மையும்வலிமையுஞ்சேனையுமழகும்வென்றியு
ந்தத்தம் - குடியுமானமுஞ்செல்வமும்பெருமையுங்குலமுமின்
பமுந்தேசும் - படியுமாமறையொழுக்கமும்புகழுமுன்பயின்ற
கல்வியுஞ்சேர - மடியுமான்மதியுணர்ந்தவர்சூதின்மேல்வைப்ப
ராமனம்வையார் ... ... (௯௫)

குழசராயிளமடந்தையர்க்குருகுவோர்குறிப்பிலாமையினு
லும் - பழகுவார்மிகச்சிந்தைநோய் தாங்களேபடுக்குநருணராம
ல் - அழகும்பேரறிவாகவேகொண்டவரறத்தொழில்புரியாமல் -
கழகமாடவும்பெறுவரோவிதனினுங் கள்ளுணவினிதன்றே (௯௬)

மேதகத்தெரிஞான நூற்புலவரும் வேற்றுநூலறிந்தோறும் -
பாதகத்திலொன்றென்னவே முன்னமேபலபடப்பழித்திட்டார் -
தீதகப்படுபுன்மொழிவிளைஞரிற் சிறந்தனசிறிதன்றித் - தோதகத்
துடனென்னையோசகுனிதன்சூதினுக்கெதிரென்றான் ... (௯௭)

தன்கருத்தினினிகழ்ந்தவாறிம்முறை தருமன்மைந்தனுங்கூ
றி - என்கருத்தினற்பெறுவதென் விதியினையாவரோயெதிர்வெல்
வார் - மன்கருத்தையுமவன்திருவுளநிகர்மகன்கருத்தையுநோக்
கி - நின்கருத்தையுமுணாயெனவிதுரனுநிகழ்த்தனவுணாக்கின்
றான் ... ... (௯௮)

இங்குநீயெனக்கியம்பிய யாவையும்யானுமன்னவர்கேட்ப-அங்குநீர்மையின் மொழிந்தனனென்மொழியார் கொலோமதிக்கிற்பார் - பொங்குநீருடைப்பூதலத்தலைவகேள் புதைந்துநின்னிதயத்துத் - தங்குநீர்மையிற்புரிகெனப் புதல்வனைத்தந்தையுந்தகச்சொன்னான் ... ... (௬௯)

அன்றுதாழ்புனற்றுறையினிற் கழூநிரைத்தரியவஞ்சனைசெய்தான் - குன்றுபோலுயர்வாழ்மனைகடுந்தழல்கொளுத்தினன்கொலைசூழ்ந்தான் - வென்றுசூதினில்பாவையுங்கவரவேவிரகினலைழத்திட்டான் - என்றுதானமக்கன்புடைத் துணைவனுயிருந்தவ்விகலோனே ... ... (௭௰)

முளையிலேபுயிர்கொல்வதோர்கடுவிடமுந்திவன்காமேழறி - விளையிலேதுசெய்யாதுமற்றவருடன்விளையுநண்பினிவேண்டா - வளையிலேதமேபுரிந்துமேன்மலைந்திடும்வன் படைகொடுமோதி - களையிலேநமக்கிருப்புளதென்றனன்காற்றருள்கூற்றன்னான்()

தேறலார்தமைத்தேற்றலுந்தேறினர்த்தேறலாமையுமென்றும் - மாறலாருடன்மலைதலுமாறுடன்மருவிவாழ்தலுமுன்னே - ஆறலாவெனவரசருக்கென்றுகொண்டரசர்நீதிபிற்சொன்னார் - கூறலாதனசொல்வதென் செல்வதென்கொடியவனருகென்றான். ()

விசையனிவ்வகைமொழிந்ததுமுந்துறவிமன்மாற்றமுங்கேட்டே - இசைபெறும்பெயர்நகுலனுந் தம்பியுமேகுதறகாதென்றார் - வசையறும்புகழ்த்துணைவரின் றாைத்ததேவார்த்தையாயினும்பெற்ற- அசைவிலன்புடைத்தந்தைசொன் மறுப்பதோவென்றனனறஞ்செய்வான் ... ... (௭௩)

ஆவியார்நிலைபெறுமவர்நீதிகூரரியவான்புகழன்றிப் - பாவியானதங்கணுகுருதொழியினுப்பலித்திடுநினைவின்றி - மேவியானுடையையன்வந்திருக்குமேல்வேரிவண்டெழமன்றற் - காவியார்தொடைக்காவலனேவனுமறுப்பதுகடனன்றே ... (௭௪)

நாளையேகுதுமெந்தைவாழத்தினநகர்க்கெனத்தருமன்றன் - காளையேவலின் முரசறைந்தெங்கணுங்காவலர்குழுக்கொண்டார் - வேளையேறியவகைப்படைத்தலைவருமேல்வருபுனலூர்ந் - வாளையேறுதண்பழனநாட்டெறிபடையமைந்தருவந்துற்றார். ( )

மாதுரங்கமாமணிநெடுந்தேர் மதவாரணம்வயவீரர் - சாதுரங்கமுந்தந்திரித்தலைவருந் தரணிமன்னருஞ்சூழ - மீதுரங்கவி

னெழுபெருஞ்சேனையோர்வேந்தன்மாநகருற்ற - போதுரங்கமுநெளிந்தனபஃறலைபொருமலையிருநாலும் ... (எசு)

ஐந்துபூதமேநிகரெனப்புலன்களோரைந்துமேயெதிரொன்ன - ஐந்துகாவுமேபொருவெனப்பணிமுடியைந்துமேநேரொன்ன - ஐந்துவாளியேயுறழ்வெனவேள்வியோரைந்துமேயொப்பென்ன - ஐந்துவாசமேதாமெனவைவருமைந்துதேர்மேற்கொண்டார் ... ... (எஎ)

விழியினெஞ்சின்வானெருப்பினீடுதகியின்விதிபடைப்பினிற்றோன்றிப் - பொழியும்வெண்கதிரைவகைமதியுமப்பொழுதுதித்தனவென்ன - மொழியுமைந்துபொற்றனிக்குடைநிழற்றினமுழுமதிவடிவின்கண் - இழியும்வெண்சுடர்க்கற்றையிற் சாமரமிரட்டினவிருபாலும் ... ... (எஅ)

மைத்திறத்தினின்றதிர்வனமுதிர்வனவரைத்திறத்தினுமோங்கும் - மெய்த்திறத்தனவெழுதிறத்தினுமிகவிடுவனமததாரை - எத்திறத்தினும்பொருதொழில் புரிவனவேழுறுப்புறத்தாழ்ந்த - முத்திறத்தினவெண்ணலப்பிறப்பினமூரிவெங்களியானை (எகூ)

வன்றபோதனரினுமிகுபொறையன வலனுயர்வனவெங்கோ - டென்றபோதகத் தானையின்பெருமையையெங்ஙனம்புகழ்கிற்பாம் - நின்றபோதுடல்முகிலிடைமறைந்தது நிரைநிரைநெறிப்பட்டுச் - சென்றபோதுவெம் படைக்கடல்செய்ததோர்சேதுபந்தனம்போலும் ... ... (அ௰)

சுற்றுநீளமுமுயரமுநிகர்ப்பனசுழியின்மிக்கனதிமை- அற்றுமேதகநிறத்தனகவினுடை யவயவத்தனவாகி - எற்றுமாமணிமுரசமுஞ்சங்கமு மெனுங்குரன்மிகுத்துட்பார் - முற்றுமாதிரத்தளவுமைங்கதியினுன் முடிப்பனவிலைப்போதில் ... (அக)

ஆளினெஞ்சமுஞ் செங்கையும்வார்த்தையு மாதனத்தொடுதாளும் - கோளினின்புறக்குறிப்பனவெவற்றினுங் குறைகளற்றனவாகி - யாளிகுஞ்சரம் வானரமுதலிய வியக்கினுன்விசும்பெங்கும் - தூளிகொண்டிட நடந்துவந்தனநெடுந்துரகதப்பலகோடி ... ... (அஉ)

வடிவுடைச்சிலகுரகதமரகதவண்ணமிக்கனவாகிப் - படியினிற்சிறிதமை வுறமிதித்திலபவனவெங்கதிபோல - முடிவிலிப்

பிடிமிசைவரக்கருதிய முனிவரனுயிர்க்கெல்லாம் - அடிபடைத் திங்கிவற்றினுக்கழகொடுமைவயவங்குறையாமல் ... (அரு)

நீடுமால்வரையடங்கவுநிலைபெற நிற்குமால்வரைமண்மே ல் - ஓடுமால்வரையிவையெனத்தனித்தனி யூர்ந்ததேர்பலகோடி- நாடுமால்வரைகடல்வனமெனு நிலனுமேயொன்றாகக்- கூடுமால் வரையிலெனப்பரந்தனர் கொடியவெம்படைவீரர் ...(அசு)

அதிர்முழக்கினகருமுகிலேமூடை யண்டர்கோனகல்வானு க் - கெதிர்முழக்கெனமுழங்கின தனித்தனி யின்னியமிடந்தோ றும் - முதிர்முழக்களிறவற்றினுமும்மடி முழங்கினவவைதாமு ம் - பிதிர்முழக்கெனமுழங்கினவலம்புரி யுரகரிற்பிழைந்தோர் யார் ... ... (அரு)

எடுத்தநீள்கொடியாடையாலகல்வெளி யெங்கணுநெருங்கி க்கீழ் - படுத்தவானமேவானமாய்மறைந்தது மீதுறப்பகிரண் டம் - அடுத்தபூநதிவானதிக்கிலதென வன்புடனுபகாரம் - கொ டுத்தமீனெனக்கால்பொரப்பரந்துபோய்க்குளித்தனகுளிர்தோ யம் ... ... (அசா)

அழுந்துமேலிடுதானையான்மிகவுநொந் தமரருக்குரைசெ ய்பச் - செழுந்தராதலமடந்தைபொன்னுலகிடைச்செல்லுகின்ற துபோல - எழுந்ததூளிகளிடைவிடாதெங்கணு மெழுந்தெழு ந்தெதிரோடி - விழுந்ததூளியுந்தடுத்தன நிலனொடு விசும்புறும் படிநின்றே ... ... (அள)

முன்னர்மாருதன் மதலையுஞ்சேனையு முடுகிவன்பொடுபோ தப் - பின்னர்வாசவன்மைந்தனுந்தானையும் பெருந்தகவுடன் போத - அந்நராதிபரிருவருமிருபுறத்தரும்படையுடன்செல்ல - மன்னராதிபன்றாரகாகணத்திடை மதியெனப்புறப்படடான். ()

அங்கண்மாநிலத்தரசர்தம்மகளிர்போரும்பிடிமிசைப்போ தச் - செங்கண்மாமயில்யாகபத்தினியம்வண் சிவிகையின்மிசை ப்போத - வெங்கண்மாமணிமுரசுயர்த்தருளிய மெய்தவாமொ ழிவேந்தன் - தங்கண்மாநகர்கடந்துவண்சாயையுந் தபனனுமெ னச்சென்றான் ... ...(அகூ)

கலிவிருத்தம்.

ஏவினபல்லிமுன்னிடத்திலேவரத் ... ... *
நாவினகுக்கிலுந்தருமன்றன்னெதிர் ... ... *

வாவினநெடுங்கலைமாகநூல்வலோர்... ... ... *
ஓவினருணாக்கவுமுணர்கலாமையால் ... ... (௯௰)
மடர்ந்தையரளகமுமாந்தர்மாலையும் ... ... *
உடைந்துதகடகரிமதமுமுன்னியே ... ... *
தடந்தொறுமுரலளிதமரினண்புறத் ... ... *
தொடர்ந்துடன்வரவரச்சோலைபெய்தினர் ... ... (௯௧)

சம்பகம்பாடலந்தமாலநாண்மலர் ... ... *
வம்பெழமிலைச்சுவார்வாவியாடுவார் ... ... *
செம்பலவாமிரங்கதலித்தீங்கனி... ... ... *
உம்பரிலமுதெனவுடனருந்துவார் ... ... (௯௨)

பச்சிளங்கமுகின்வெண்பாளைசூடுவார் ... ... *
அச்செழுங்காய்கனிகவர்ந்தருந்துவார் ... ... *
கொச்சையங்கடையர்குழுவிவாழ்த்தவே ... *
வச்சிரம்போல்பவர்மருதநீங்கினர் ... ... (௯௩)

தடாநிறைவெண்ணெயுந்தயிருங்கொண்டெதிர் ... *
அடாமுடைநாறுதோளாயர்கைதொழப் ... ... *
படாமுதன்முல்லையின்பரிமளங்கொளாக் ... ... *
கடாமலைவவர்தண்கானமெய்தினர்... ... ... (௯௪)

தேனினஞ்செறிதருதெரியல்வேலினன் ... ... *
தானிரங்கருண்மிகுதருமனுதலால் ... ... *
கானிலங்குறைதருகலைகளோடின... ... ... *
மானினம்பேர்கலாமருங்குலைகுமால் ... ... (௯௫)

செருவிளங்காளையர்சேனையின்றிறம்.. ... ... *
வெருவிளம்பொதுவியர்விழைந்துகாண்பபோல் ... *
மருவிளங்கிதழிநீள்வனமுமாமலர்க் ... ... *
கருவிளங்கண்கொடுகலந்துகண்டவே ... ... (௯௬)

புழைநெடுந்தடக்கைவெம்போதகங்களை... ...... *
மழைமுகிலெனக்களிமயில்களாடின ... ... *
தழலெழுகானகந்தண்ணெனும்படிச் ... ... *
செழுமதமருவியின்றிவலைவீசவே ... ... (௯௭)
வனநெறிகடந்துபோய் மன்னவர்க்கெலாம் ...... *
தினகரனெனத்தகுஞ்செய்யகோலினன்...... ...... *

இனமுகிறவழ்தலினிரங்குபேரிசைத் ....*
தனிதவெண்கிரிநெடுஞ்சாரலெய்தினான் ... ... (கஅ)

குன்றுறைகடகரிகுழாங்கள்சேனையின் ....*
ஒன்றியகளிறுகண்டுட்கியோடின... .... *
துன்றியபுறமதச்சுவடுகண்டெனச் .... *
சென்றிலவெகுண்டிவண்சேனையானையே ...... (கக)

வாளியின்வரும்பரிமாவின்வண்குரத்...... ...... *
தூளிகள்விசும்புறத்துன்றியோங்கலால்...... ...... *
ஆளிகள்சிகரியென்றறிந்துபாய்வன .... *
மீளியர்வேலின்வாய்வீழ்ந்துமாய்ந்தவே ...... (ஙா)

கார்தவழ்கொடுமுடிக்கானமால்வரை .... *
வார்தவழ்முலையரமாதரார்செவி .... *
தார்தவழ்தடம்புயத்தரணிமன்னவர் .... *
தேர்தவழோசையிற்செவிடுபட்டவால் .... (ஙாக)

வரைநிலங்கழிந்தெதிர்மகரவாரிதித் .... *
திரைநிலம்புகுத்தனன்சேனைசூழ்வரப்... ...... *
புரைநிலங்கடந்தறம்புரியுநீர்மையால் .... *
உரைநிலங்கடந்தசீருரைகொள்பேரினான்... ...... (ஙாஉ)

ஒளிநலந்திகழ்வளையுறங்குநன்னிழற் .... *
களிநறுஞ்சுரும்பமர்கண்டல்வேலிசூழ் .... *
புளினமும்கானமும்பொற்புநோக்கினான்... ...... *
நளினமும்புறத்தருநயனவேந்தனே .... (ஙாங)

பெருங்கடன்மலைக்குலம்பெயர்த்தும்வந்தென ...... *
மருங்கடற்பெயரணிவகுக்கவேயெனு... .... *
இருங்கடகளிறுதேரொண்ணில்சேனைகண்...... ...... *
டருங்கடல்வாய்திறந்தலறியார்த்ததே ....(ஙாச)

நன்னெடுந்துறையெலாநாரிகேளமோ... ...... *
டின்னெடும்பனங்கனியெடுத்தருந்தினார்... ...... *
புன்னையம்பதுமலர்புனைந்துகைதையின்...... ...... *
மென்னிழல்வைகினார்விலோதவீரரோ...... ...... (ஙாரு)

நாநலம்புனல்கெழுநாடுங்கானமும் .... *
எனலம்புனக்கிரியிடமுநெய்தலும் .... *

கானலுமிவ்வகைகடந்துகாவலன் .... *
தூநலந்திகழ்பதிதோன்றவெய்தினர் .... (௱௬)

அத்தினபுரிதனக்கருகுவாவ்வயே... .... *
முத்தினநிலவெழமுகைக்குந்தாமரைத் .... *
தொத்தினபொய்கையுஞ்சுரும்பருமலர்க் .... *
கொத்தினசோலையுங்குறுகினவகினர் ...... (௱௭)

மோட்டினபருமணிமுடிகொள்தேர்பரி .... *
வேட்டினபரிகளும்வெம்மையாறின...... .... *
மாட்டினபரிமளமரங்கள்யாவையும்......... .... *
காட்டினகழைபொருகவளயானையே ...... (௱௮)

தரித்தனவீரருந்தத்தமாதரும் .... *
சரித்தனசும்மைகடங்குபண்டியும் .... *
பரித்தனநன்னிறப்படங்குவீடுகள் ... . *
விரித்தனவிடந்தொறும்வேந்தமொதியினர்... ...... (௱௯)

கைவருதண்டிடைக்காளைவெஞ்சிலை .... *
தைவருசெங்கையான்றுணைவெம்பரி .... *
மெய்வருகுமரன்மேல்விடலைவேந்தனே .... *
டைவருமமர்ந்தனராண்மையேறனர் .... (௱௰)

மறத்திருந்தானையான்வஞ்சமெண்ணினன் ...... *
அறத்திருந்திலனெனவஞ்சிவந்தவூர் .... *
புறத்திருந்ததுவெனப்புனிதன்பாசறை .... *
திறத்திருததுபிறநிகர்ப்பவில்லையேந் ....(௱௰௧)

மீண்டவர்வரிசிலைவிதுரனேவலால் .... *
பாண்டவர்வரவுமுன்பணிந்துகூறவே .... *
மாண்டவர்குறிப்புறுமாயவஞ்சகம் .... *
பூண்டவர்களித்துமெய்ப்புளகமேறினர் ...... (௱௰௨)
தேசறையிடங்களுந்தேங்கொள்கானமும் ... *
மூசறைமதுகரமொய்த்தசோலையும்...... ...... *
வீசறவனந்திவிதமுமேல்கொளப்......... .... *
பாசறையிருந்தவாபகரலாகுமோ ....(௱௰௩)

விருந்துறுசேனைவேலவீரரின்னமு .... *
தருந்தினர்மெய்குளிர்ந்தசைவுதீர்த்தலும்... ... *

வருத்தினரிவர்துயில்வதியவேண்டுமென் ... *
றிருந்தபனனுமிவர்க்கிரவுநல்கினன் ... ... (௱௰௪)

மண்வளர்பெரும்புகழ்மன்னரைவரும்... ... *
பண்வளர்பெரும்புகழ்ப்பல்மகீபரும்...... ...... *
கண்வளர்பாளையங்காணவெண்ணியே ...... *
விண்வளர்குபேரனும்விழைந்துதோன்றினன் ... (௱௰௫)

மருண்மிகுசுரும்பினமணந்தசோலையின்... ...... *
இருள்களினிடையிடையெறித்தவெண்ணிலா ...... *
அருளுடைமைந்தர்தோளணைந்தமங்கைதன் ...... *
புரிகுழனெகிழ்ந்தவெண்போதுபோலுமே ... (௱௰௬)

கானிடைசிலசிலகடிகொடேனுமிழ் .... *
தூநிறமுல்லைகண்மலர்ந்துதோன்றுமால் ...... *
வானிடைமுறைமுறைவளருமாமதி... ..... *
மேனியினமுதுமிழ்விந்துவென்னவே ...... (௱௰௭)

பொருவில்வெண்டுகில்கொடிபொதிந்ததென்னவே ... *
பரிநெடுந்தேர்மிசைப்பானிலாவெழக் .... *
கிரணவெம்படைக்கெதிர்கெடாமனின்றபேர் ...... *
இருளெனவிளங்கினயானைவெள்ளமே ... (௱௰௮)

பரியனகந்துகம்பரிந்துமாமதக் .... *
கரிசிலபாகைபுங்கைகடந்தென .... *
அரிவையர்பலர்துயிலனந்தரோடுதஞ் .... *
சுரிகுழன்மேகலைசோரவோடினர் .... (௱௰௯)

நீடுறுதருக்களினிரைத்தமாதவக் .... *
கோடிறவெறிந்துகைக்கொள்ளுமோதையால் ...... *
மாடுறுபொங்கர்வாய்வதிந்தபுள்வெரீஇப்... ...... *
பேடொடுசேவலைப்பிரிந்துதேடுமால்... ...... (௱௨௰)

ஊதையின்மாநசைபுறப்பொருவட ... ... *
மோதுறுமுளையுடன்முடிகுவட்டமாய்த் ... *
தீதறுபரிசிலசெல்வன்பாசறை ... ... *
மாதிரமுறப்பலவாளிபோதுமால் ... ... (௱௨௧)

ஆடுவார்சிலர்சிலரைவர்வான்புகழ் ... ... *
பாடுவார்சிலர்சிலர்பாயலின்புறக் ... ... *

கூடுவார்சிலர்சிலர்கொழுநர்தங்களோ ... ... *
ஓடுவார்சிலர்சிலருவகைநீடுவார் ... ... (௱௨௨)

பஞ்சவர்வாழ்வுறுபதம்பொருமலின் ... ... *
வஞ்சகமியற்றுவான்மனங்கொலென்னவே ... ... *
விஞ்சியகுளிர்மதிமேற்பொருதிகல் ... ... *
செஞ்சுடரவன்குணதிசையிற்றோன்றினான் ... (௱௨௩)

வேறு

துயிலுணர்ந்துபைந்தொடையன்மார்பினர் ... ...*
வெயிலெழுந்துதம்விரதமுற்றபின் ... ... *
பயில்பெருஞ்சனப்பாசறைப்படுத் ... ... *
தெயில்வளைந்தமாநகரியெய்தினார் ... ... (௱௨௪)

இருமருங்கினுமிளைஞர்நால்வரும் ... ... *
தருமவல்லியுந்தானுமாகவே ... ... *
அருமடங்கலேறனையவாண்மையான் ... ... *
குரவனிற்புறங்கோயிலண்ணினான் ... ...(௱௨௫)

சிந்தையன்புறச்செல்வன்வாயிலோர் ... ... *
வந்தமைந்தர்தம்வரவுகூறவே ... ... *
முந்தையேவலான்மொழியவுள்புகுந் ... ... *
தந்தமீளிசேவடிவணங்கினார் ... ... (௱௨௬)

தம்பிமைந்தராத்தழுவியும்மையின் ... ... *
றெம்பிகாணநல்வினைபயின்றிலன் ... ...*
உம்பிமாரொடுமொத்துவாழ்கநீ ... ...*
நம்பியென்றுதன்னயம்விளம்பினான் ... ... (௱௨௭)

பாவைதன்பெரும்பணிவுகூறலும் ... ...*
மேவிவாழ்கெனமெய்களிக்கவே ... ... *
தேவிதன்னுழைச்செல்கவென்றுகொண் ... ... *
டேவிமைந்தரோடிவைவிளம்பினான் ... ... (௱௨௮)

கருமநீதிசீர்கல்விமந்திரம் .. .. *
பெருமையாண்மைதான்பீடுநீடுபேர் ... ... *
தருமம்யாவதுந்தன்மையாதலால் ... ... *
அருமையன்றியேயரசுசெல்லுமே ... ... (௱௨௯)

இகலறிந்துநீராசசூயமா... ... ... *
மகமுழந்ததும்வண்மைசெய்ததும் ... ... *

திசையடங்கலுந்திறைகொணர்ந்ததும் ... ... *
தொகுதிகொண்டுநின் றுணைவர்கூறினர் ... ... (௱௩௰)

எண்டிசாமுகத்தெல்லையெங்கணும் ... ... *
கொண்டதாகுமுன்குருகுலத்துளோர் ... ... *
துண்டியாமனுந்துணைவர்தம்மொடும் ... ... *
பண்டுபோலமண்டபரவவைகுவீர் ... ...(௱௩௧)

சேணிருந்தநுஞ்சீர்செவிப்படுத் ... ... *
தியாணரன்புகூரினிமைபன்றியே ... ... *
பூணலம்பெறும்பொற்பொடுங்களைக் ... ...*
காணுமாறுசெங்கண்படைத்திலேன் ... .(௱௩௨)

நேயமுண்டுபோனெஞ்சொடின்னசொல் ... ... *
தூயமைந்தரைச்சொல்லிநீவிர்போய்... ... ...*
யாயையும்பணிந்தெந்தைதாண்மலர்ச் ... ...*
சேயபங்கயஞ்சேர்மினென்னவே ... ...(௱௩௩)

இருந்தமைந்தருமேவலோடுசென் ... ... *
றருந்ததிக்குநேரன்னைதன்னையும் ... ...*
பரிந்திறைஞ்சினர்பயிலவாழ்த்தினள் ... ...*
திருந்துபூணினள்சிறுவர்தம்மையே ... ... (௱௩௪)

முந்தவந்துதாண்முளரிகைதொழும் ... ... *
அத்தண்வல்லியுமைவர்மைந்தரும் ... ... *
வந்துநிற்றலுமகிழ்வொடுன்னினள் ... ... *
குந்திசெய்தவங்கூருமென்னவே ... ... (௱௩௫)

வேயையென்றதோண்மின்னையங்குவைத் ... ... *
தியாயையும்பணிந்தெழில்கொடோளினர் ... ... *
போயகண்டமும்போற்றுகங்கையாள் ... ... *
சேயையன்புடன்சென்றிறைஞ்சினர் ... ... (௱௩௬)

வேந்தழைத்ததும்விதுரனேவலின் ... ... *
போந்தழைத்ததும்புகலவந்ததும் ... ... *
தாந்திறைக்கவேதந்தைதந்தைமுன் ... ... *
தேந்தழைத்ததார்ச்செல்வர்கூறினர் ... ... (௱௩௭)

புள்ளலங்கலார்புரிவுறாத்திடக் ... ... *
கொள்ளவன்றிறற்குருகுலேசனும் ... ... *

கள்ளவஞ்சர்வெங்கருவிசெய்யினும் ... ... *
உள்ளதுண்டெனவுண்மைகூறினன் ... ... (௱௫௮)

தாதைதாதைபைத்தாமகஸ்றபின் ... ... *
நோதைவெஞ்சிலைக்குருவைமைந்தனைக் ... ... *
கேதநான்மறைக்கிருபனைச்செழும் ... ... *
பாதனஞ்செய்தார்பரிவொடெய்தியே ... (௱௫௯)

சதுரமாமறைத்தலைவர்தங்களால் ... ... *
எதிர்மொழிந்தபேராசியெய்தியே ... ... *
மதுரமன்றனுண்டாலைமன்னரும் ... ... *
விதுரன்மந்திரமீளமன்னினர் .... (௱௬௰)

தமதின்மெய்யுறத்தம்மதாகவே ... ... *
அமுதருந்தியங்கவரிருந்தபின் ... ... *
திமிரநாசனன்செய்யமேனியன் .... *
கமலநாயகன்கடலின்மூழ்கினன் .... (௱௬௧)

தினகரன்கரந்திகழ்கமண்டலம்...... .... *
பனிகொள்செக்கர்செம்படமதாகவே .... *
இனியவந்தனைக்கெதியும்வேலைசேர் .... *
புனிதனொத்ததப்புன்கண்மாலையே .... (௱௬௨)

காய்ந்தமெய்ச்செழுங்கதிரவன்கர ... ... *
ஒய்ந்தவப்பதத்தெழிலெறித்தலால் ... ... *
ஆய்ந்துபத்திகொண்டடர்பசும்பொனல் ... ... *
வேய்ந்ததொக்குமால்வேந்தன்மாடமே ... ... (௱௬௩)

மன்குலத்துளோர்வஞ்சகஞ்செயார் ... ... *
என்குலத்துளோனெகாலீதெனத் ... ... *
தன்குலத்துளோர்தமைவிலக்கவே ... ... *
நன்குலத்துளோனுதயநண்ணினன் ... ... (௱௬௪)

குருகுலாதிபன்கொடியநெஞ்சமே ... ... *
இருணிறைந்ததென்றியாம்வெறுக்கவோ ... ... *
மரபிலாதிமாமதியுமெண்ணினுட் ... ... *
கரியனென்னுமாகாணலானதே ... ... (௱௬௫)

உண்ணிலாவுபேரொளிமழுங்கநீள் ... ... *
வெண்ணிலாவிருல்விளர்த்தவெங்கணும் ...... *

கண்ணிலான்மகன்கருமையஞ்சியிம் ... ...*
மண்ணிலார்வெளார்வடிமெய்தினர் ... ... (௱௪௬)

விந்தைவாழ்வுகூர்விறன்மிகுந்ததோள் ... ... *
முந்தையோதைமாமுரசுயர்த்தவன் ... ...*
சிந்தைகாமுறத்தெரிவைவந்திளந் ... ... *
தந்தைகோயிலிற்றுனுநண்ணினுள் ... ... (௱௪௭)

மங்குல்சுற்றுமாமண்டபத்திடைக் ... ...*
கங்குலிற்றடங்கண்டுயின்றபின் ... ...*
பொங்குலைப்படும்பொற்றசும்பெனச் ... ... *
செங்குலக்கதிர்த்திகிரிதோன்றவே ... ...(௱௪௮)

பாயன்மன்னுகண்படையுணர்ந்துளம் ... ... *
தூயவன்பொலஞ்சுடர்பணிந்தபின் ... ... *
சாயையன்னதன்றம்பிமாரொடும் ... ... *
சேயமென்னவேசேரவைகினன் ... ...(௱௪௯)

முனிவரர்க்கெலாமுதன்மையாகவே ... ... *
தனதனிற்பெருந்தானமுய்த்திடும் ... ...*
பனுவல்வித்தகப்பாவலர்க்கெலாம் ... ... *
கனமெனத்தருங்கனகமாரியே ... ... (௱௫௰)

கண்டுகண்டுதன்கழல்வணங்குமா ... ... *
மண்டலீகருமாலைமன்னரும் ... ... *
கொண்டுவாழ்வுறக்குரகதங்குடை... ... ... *
தண்டுசாமரந்தந்திநல்குமே ... ... (௱௫௧)

பூந்தண்மாமலர்ப்பூவைகொங்கைதோய் ... ... *
ஏந்துதோளிணைவணிருந்துழிப் ... ... *
பாந்தளங்கொடிப்பார்மகீபனைச் ... ... *
சேர்ந்தமன்னர்தஞ்செயல்விளம்புவாம் ... ... (௱௫௨)

எழுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

விழுதுபோலநேகநூல்விதங்களிப்பவேதமாம் ... ...*
எழுதொணாததொன்மரத்தையாவருக்குநிழல்செய்வான் ... *
வழுதிநாடன்வேறுசெய்தமறைகளாயிரத்தையும் ... ...*
தொழுதுபாடுமுனிவர்வாய்மைதுளவவாசநாறுமே ... (௱௫௫)

தானுமாமனுங்குறித்ததம்பிமாருமங்கர்தங் ... ... *
கோனுமாசிறந்தைதந்தைகொடியவில்விதுரனும் ... *
வானுலாவுபுகழ்படைத்தமைந்தனுந்துரோணனும் ... *
ஏனையோரும்வந்துகூடியினிதிருந்தவெல்லையே ... (௩௫௪)

மண்டபத்தினழகுதாரணமன்னனாவர்தம்மைநீ ... *
கொண்டிமைப்பின்வருகவென்றுகொற்றவன்பணிக்கவே ... *
வண்டுசுற்றுமாலையான்மகிழ்ச்சிகாமியன்பணிந் ... *
தண்டர்கற்பமெனவிருந்தவரசர்தம்மையணுகினன் ... (௩௫௫)

சென்றியாகபதிகழற்றிருப்பதம்பணிந்துநீள் ... ... *
நின்றவாய்புதைத்தறங்கணிலபெறுஞ்சொனீதியாய் ... *
வென்றிவீரமண்டபத்தின்விரிவுகாணவேண்டுநீ ... *
என்றுகூறிபேசினன்மன்னென்னையென்றியம்பினன் (௩௫௬)

தாயரூயபத்தினியைபெற்றையில்லில்யாவொடும் ... *
போயிருந்துவருகவென்றுபுனைவிலாமனத்தினன் ... *
சீயமன்னதுணைவரோடுசென்றுபுக்குநன்றியில் ... *
பேயிருந்ததெனவிருந்தபீடிலானையெய்தினன்... ... (௩௫௭)

மன்னிருந்தபேரவைக்கண்வந்துமுந்தைவரிசையால் ... *
முன்னிருந்ததாதைவஞ்சமுதல்வன்வாள்விதுரனென்... ...*
றின்னிருந்ததலைவர்தாளிறைஞ்சிமுன்னரிட்டதோர் ... *
மின்னிருந்தவாசனத்தின்மீதிருந்துவினவினன் ... (௩௫௮)

இந்தமண்டபஞ்சமைத்தவினிமைதன்னையென்சொல்வேன்... *
முந்தைமண்டபங்களுக்குமுதன்மையானதேவருர்... ... *
அந்தமண்டபத்துமில்லையதனையன்றிமண்ணின்மேல் ... ... *
எந்தமண்டபத்துமில்லையிதனிலுள்ளவெழிலமரா ... (௩௫௯)

னவியந்துதருமராசனினிதியம்பயாளிவெஞ் ... *
சினவிலங்கவென்னுமாறுசேரவந்தவிளைஞரும் ... ...*
மனுவிளங்குமுறைமைபால்வணங்கிமன்னர்மன்னன்முன் ...*
தனதனங்கிருப்பதன்னதவிசின்மீதுவைகினர் ... ... (௩௬௰)

புனைகொள்பாவமேமிகுந்துபுண்ணியங்குறைந்துநீள் ... *
தசிலுழிகாலம்வாழ்நிரகர்வாழ்வினுள்ளதும் ... ... *
தரணிமீதுபெறுகவென்றுதந்ததொக்கும்வானுளோர் ... *
அரவமேறுயர்த்தவீரனன்றிருந்தபெருமையே ... (௩௬௧)

மாயமொன்றுமெண்ணிலார்மனத்தின்மிக்கமாமனும் ... *
தீயுமின்றுசூதுகொண்டுநிகழ்விலாதமயர்விரோ ......*
ஆயவென்றியையநின்னிலமுதமன்னபோனகம் ... *
போயருந்துமளவுமிங்கிருந்துபோதுபோகவே ... (௱௬௨)

மீதெடுத்தநெஞ்சராகிவெகுளிசெய்தல்பிறர்பெறும் ... *
கோதெடுத்துரைத்தனன்புகொண்டயிர்த்தல்கொடியவெஞ் ...*
சூதெடுத்துவிழைதலுற்றருள்பிழைத்தலின்னவே ... *
தீதெடுத்தநூலின்முன்புநீயவென்றுசெப்பினார் ...(௱௬௩)

வாதுகொண்டுகாதல்கூருமாமனேறுவஞ்சனைச் ... ... *
சூதுகொண்டுபொருதழித்துதோல்வியெய்தவேண்டுமோ... *
தாதுகொண்டுதேனிரங்குதாமமார்பநெஞ்சநீர் ......*
ஏதுகொண்டதுநினக்களிப்பனிம்பமொன்னவே ...(௱௬௪)

ஒப்பிலாதவேள்விமன்னனுரையுணர்ந்துசகுனியும் ......*
தப்பிலாதகவறுருண்டதாயமெங்குமொக்குமால் ... ...*
வைப்பிலாண்மையன்றிவேறுவஞ்சமில்லையுண்டெனச் ... *
செப்பிலார்கொலிவனையாடவருகவென்றுசெப்புவார்... (௱௬௫)

வேணுமாகின்வேண்டுநெஞ்சில்விரகெனக்கழன்றுதான்...... *
நாணுமாகின்விடுதிரோணடர்க்கவென்றுநவிலுவீர் ... ...*
பூணுமாகினினிமையோடுபொருதுமற்றிருந்துநீர் ......*
காணுமாறுகாணுமின்றுகற்றவாறியற்றலாம் ... (௱௬௬)

நீடுகின்றதருமநீதிநிருபகேள்விழைந்துநாம் ... ...*
ஆடுகின்றசூதில்வெற்றியழிவுநம்மிலொக்குமால் ... *
வாடுகின்றமிடியர்போலவஞ்சமென்றுரைத்துநீ ... ...*
ஓடுகின்றதொட்டுகின்றவொண்பொருட்குலோபியோ (௱௬௭)

யானெறிந்தகவறுவெல்லினிசைவுனக்கிழத்திநீ ... ...*
தானெறிந்தகவறுவெல்லினதினிரட்டிதருகுவேன் ......*
தேனெறிந்துதேனுகர்ந்துதேனெடுக்குமாலையாய் ... *
ஆனெறிந்தகொலைஞர்போலவஞ்சமென்றொடாடவே (௱௬௮)

என்றுமாமனுய்த்துரைப்பவிவைதமக்குமவையில்வே ... *
றொன்றுமாறுரைத்திடாமலுரைகொள்வோனிருக்கவும் ...*
வென்றுமாறடர்க்குமாறு விசயனும்வெகுண்டுளம் ... *
கன்றுமாறுரைத்தனன்கொல்கன்னனென்னுமன்னனே (௱௬௯)

போதுபோருமாறிருந்துபொருதல்செய்தியென்னவும்... *
சூதும்பாருமஞ்சியேதொலைந்துளந்துளங்குவாய் ... ...*
மோதுபோரிலெங்கணுப்தியிளைஞரோடுமுடுகுதேர் ..*
மீதுபோயுனகரிதன்னில்விளைவினைப்புகென்னவே (௱௭௰)

இல்லெடுத்துவிரகிஞேடுமெமையழைத்துமாயைகூர் ...*
வல்லெடுத்துவருதலாலமறுத்தனன்மகீபனும் ......*
சொல்லெடுத்துரைவைதவாய்துணிப்பனென்றுகன்னன்மேல் ...*
வில்லெடுத்தனன்பொருமல்வீரவாளிவிசயனே ... (௱௭௰௧)

எதிலாரிலெம்பிநீயிருக்கவென்றிருத்திமுன் ... *
காதிலாரொனுடன்மலைந்துகண்விழிக்கவல்லபேர் ... *
ஓதிலாண்மைகுன்றுமென்றுருத்தெழுந்துமாயநின் ... *
சூதிலாடல்புரிதுமென்றுதருமனுந்தொடங்கினன் ... (௱௭௰௨)

நின்னைவெல்லின்ஞெட்டம்யாவு நீகொடுக்கநீயிவன் ... .. *
றன்னைவெல்லின் யான்விழைந்து தருவனென்றுதருமனைப்...*
பின்னைவெல்லொணுதெனப்பிணிப்புடன்மருட்டினன்... ...*
பின்னைவெல்லும்வெய்யசோதி வீரவாளிவீரனே... (௱௭௰௩)

அவிர்பரம்பொனமளிபாளியாசனத் திருந்துநூந்... ...*
தவிசிலொன்றிடப்புகுந்து தருமன்வைகமாமனும்... ...*
தவிரறந்திசைப்புறத்துநன்னிலங்குறித்துநீள் ... ... *
புவியெறுங்கருத்தினேடிருந்தனன்பொருந்தவே... ...(௱௭௰௪)

கவளமானபலகையாளிகால்வகுத்தபலகையில்... ... ...*
பவளமான நீலமானகருவிமுனபரப்பினர்... ... ...*
தவளமானகவறுகைத்தரித்துமெய் தரித்ததார்... ... ...*
துவளமானநிருபர்தம்மிலாடவேதொடங்கினர் ...(௱௭௰௫)

ஈரம்வைத்தசிந்தைமன்னனிசைவெனக்கழுத்துமுத்... ...*
தாரம்வைத்துநீயுமாறழைக்கவென்னமாமன்மேல் ... ...*
வாரம்வைத்த நெஞ்சினூனும்வருகவென்றுமாமணிச்... *
சாரம்வைத்தவலபமொன்றுதானுமுன்னர்வைக்கவே... (௱௭௰௬)

இருவருங்கவற்றினூலெறிந்தபோதெறிந்தவா .. ..*
ஒருவருங்குறிக்கொணுவுபாயமாயிருந்ததால்... ... *
மருவருப்புயத்தலங்கன்மாமன்வெல்லமன்னருள் ... ...*
வெருவருங்களிற்றினுனும்மேல்விருப்பம்விஞ்சினன் ...(௱௭௰௭)

ணவத்தவாரமவனெடுக்கமாயவன்கொடுத்தநன்... ... *
மெய்த்தவாததேர்குறித்துமீளவும்பரப்பினன்... ... *
மொய்த்தவாசமாலைமார்பன்முடிமகிபன்மகிழ்தரப் ... ...*
பொய்த்தவாடல்வல்லபீளிபொருதுவென்றிடுணையவே (௱௭௮)

தேர்கொடுத்தபின்னுமாறுசெப்பியுள்ளதேர்மதக் ... ...*
கார்கொடுத்துமெண்ணிலாதகவனமாக்கொடுத்துமப்... *
பார்கொடுத்துமரசுசூர்பதங்கொடுத்துமுரியதம் ... ...*
ஊர்கொடுத்து மிதனிலுள்ளமொழிவிலாமலோடவே...(௱௭௯)

வெங்கிராதவனமெரித்தவிசயனுக்குவிஞ்சையன்... ...*
அங்கிராமகிழ்ந்தளித்தவாடன்மாவுமளகநீள்... ... *
பொங்கிராமணஞ்சிறந்தபோகமாதர் பலருமின் ... ...*
றிங்கிராதரோசனுற்றவிசைவினலளிப்பவே... ... ... (௱௮௰)

யாவையுங்கொடுத்திருப்ப விளைஞரோடுமெய்த்தவக்... ...*
கோவையுங்குறிக்கவென்று குருகுலேசன்மொழியவே... ...*
ஈவையுங்குறித்துவெற்றி யெய்தவெய்த விவர்கடம்... ...*
வீவையுங்குறித்துவென்றமேன்மைபான்விளம்பினன் (௱௮௧)

உன்னையுங்குறித்துவன்புனைத்ததம்பிமாரினந்... ... ...*
தன்னையுங்குறித்திசைந்துதருகவந்துபொருகெனப்... ...*
பின்னையுங்குறிப்புறுதுபொருதுகைப்பிழைக்குமேல்... ...*
என்னையுங்குறிப்பெனுமுன் விரகினுவியம்பினன் ......(௱௮௨)

மெய்வருந்திறத்தினும்மைவெல்லுமாறுவேறலால்... ...*
ஐவருந்திருந்தவெங்க ளடிமையாளராயினீர் ....*
மைவருந்தடங்கண்வேள்வி மாதுதன்னையொட்டிநீ ... ...*
கைவருங்கவற்றினின்னமெறிகவென்றுகழறினன்... ... (௱௮௩)

அன்னபோதிலருள்விதுரனந்தனைப்புகன்றெழா ... ...*
நின்னபோதமன்றிவேறுநிருபர்தாநினைப்பரோ ... ...*
இன்னபோதுமோநமக்கியற்கையன்றதென்றுநீ... ... *
சொன்னபோதுநேயமைந்தர்சொன்னசொன்மறுப்பரோ௱௮௪

திருகுநெஞ்சின்வஞ்சராகியினைஞர்தீமைசெய்தகால் ... ...*
உருகுகின்றதாதைநீயுடன்படுத்திருப்பதோ .. ..*
மிருகமன்றுபறவையன்றிரக்கமின்றிமேவுநின்... ... ...*
அருகுவந்தணைந்ததெங்களறிவிலாமையாகுமே ... (௱௮௫)

பின்பிறந்ததம்பிமைந்தர்பேடழிந்திரங்கவே... ... ...*
முன்பிறந்தகமயலன்மைந்தர்மொய்ப்பிலுலடர்ப்பரோ... *
அனபிறந்ததென்றுநீதியழியவேநடத்திலுல் ... .*
எலிபிறந்துமுடியுமண்ணிலென்பவில்காலமின்றுமே...(௱௮௬)

மருமம்விஞ்சவிவனைவென்றவஞ்சமன்றிமற்றிவன் .. ...*
தருமவஞ்சிதனையிழைத்து பொருதுமென்கைதன்மமோ .. *
கருமமன்றுனக்குநாசகாலம்வந்ததாதலில்... ... ... *
பெருமைதஞ்சமின்றிநஞ்சுமேபருமொன்றுபேசினான் ...(௱௮௭)

விதுரனேந்துநீதிகூறவிழிபிலாமையன்றியே ... ...*
பெதிரொனுங்கோவென்னுமாறுபெரியதாதைவைகினான் ...*
சதிர்புனைந்தசகுனிசொல்லையெதிர்புரிந்துதருமனும் ... *
அதிரவஞ்சமுதிரவந்தவருளிலாவெனாடினான் ...(௱௮௮)

காயமுற்றும்வஞ்சமேகலந்ததன்னகள்வன்மேல் ... *
நேயமுற்றுநின்றுதானுநீகர்பிடித்ததென்னவே ... ... *
மாயமுற்றகவறுமத்தமாமன்வல்லபத்திலே ... *
தாயமுற்றிடக்கொடாதுதருமனைச்சதித்ததே ... (௱௮௯)

இன்னதாயம்வேண்டுமென்றெறிந்தபோதுமற்றிவன் ...*
சொன்னதாயமேபுரண்டுசோர்விலாமல்வருதலால் ... *
தன்னதாயவரசுவாழ்வுதரணிமார்பணல்கினான் ... ...*
அன்னதாயபோதுநெஞ்சசைந்திலன்னசஞ்சலன் ...(௱௯௰)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முரசினையுயர்த்தகோமான்மொழிந்தனமுழுதுந்தோற்றுப் *
பரசுவதொன்றுமில்லாப்பான்மையோடிருந்தகாலை ... *
விரைசெறியலங்கல்சோரமெய்சுலைந்துள்ளம்வெம்பி ... ...*
அரசவையிருந்தோர்தம்மிலருளிலழிந்துசோர்ந்தார் (௱௯௧)

குருமரபுடையவேந்தன்கொடியனேகொடியனென்பார் ...*
மருமகனாருக்கிந்தமாமனேமறலியென்பார் ... .. *
தருமனித்தலைநாள்செய்ததருமமும்பொய்யோவென்பார் ... *
உருமினுங்கொடியவீமனுருத்தினியெழுமோவென்பார் (௱௯௨)

பாந்தளேறுயர்த்தவேந்தன்பாத்திலனுறவுமென்பார் ... *
மாய்ந்தவேயறமுந்தேசுமனுநெறிவழக்குமென்பார் ... *
பூந்தழல்பிறந்தபாவைபுண்ணியம்பொய்யாதென்பார் ... *
சேந்தனனிருகண்பாரீர்தேவர்கோன்மதலையென்பார்... (௱௯௩)

பழிபுடைத்தந்தைபொன்றும்பகர்கலாதிருக்குமென்பார் ... *
விழிபுடையவனாயன்றேமேன்மைபோர்வெறுப்பதென்பார் *
அழியுமேயிவனுன்மைந்தாரும்பெறற்செல்வமென்பார் ... *
வழிவழிபாகிநிற்கும்வசையிவன்புரிந்ததென்பார்... ...(௱௯௪)

இன்னனதரணிவேந்தரிருந்துழியிருந்துகூற ... ... *
மன்னனுந்தம்பிதானுமாமனுமாறுவன்மைக் ... ... *
கன்னனுந்தம்பியெண்ணிக்கங்கைமாமகனைநோக்கிப் ... ...*
பன்னகதுவசன்கேட்டோர்பலருமெய்ப்பனிப்பச்சொன்னான். ( )

தண்ணியகருமன்செய்தபாவமோசகுனிசெய்த ... ... *
புண்ணியநெறிபோவந்தப்பொதுமகள்பாகசாலை ... ...*
நண்ணியதவமேறுமற்றைநால்வருந்தகைமைகூறு ... ...*
எண்ணியவெண்ணம்பொய்த்தோவிஞ்ஞனம்விளைந்ததென்றான்.)

தகாமொழிதலைவன்கூறத்தவத்தினினுயர்ந்தகோவும் ... *
நகாமரபியற்றையன்றுநம்பிநும்புன்சொல்கூறல் ... ... *
மிகாதினிநிகழ்ந்தசெற்றம்விட்டெனச்செவியிற்சற்றும் ... *
புகாதுளம்வெகுளிகூரப்புரிந்தனன்போதமில்லான் ... (௱௯௭)

இரங்கிநின்றுருதநெஞ்சினிளையதன்பிதாவைநோக்கி ... ...*
அரங்கடிசமரவேலானழல்பொழியுருமிற்சொன்னான் ... ...*
உரங்குடிபுகுந்ததோளானுரிமையினமக்குத்தோற்ற ... *
துரங்கமுங்களிறுந்தேருந்துறைதொறுங்கவர்கவென்றே(௱௯௮)

தொல்லைமாநகரிநாடுந்தோரணநாட்டச்செய்தி ... ... *
எல்லையினிதிகளெல்லாமிப்பொழுதெடுப்பச்செய்தி ... *
நல்லெழின்மடவார்தம்மைநம்பதிபெய்தச்செய்தி ... *
சொல்லியவிளைஞர்தாமுந்தொண்டினராகச்செய்தி ...(௱௯௯)

இவர்தமக்குரியளாகி யாகபத்தினியுமான ... ...*
துவரிதழ்த்தவளஹாரத்துரோபதி தன்னையின்னே ... ...*
உவரலைப்புணரியாடை யுலகுடை வேந்தர் காணக்... *
கவர்தரப்புகறியென்றான் கண்ணருள்சிறிதுமில்லான்... (உ௱)

அறந்தருமைந்தன்றன்னையறனலாதியற்றிநம்பி .. *
திறந்தருசெல்வம்யாவுந்திமையிற்கவர்தலுற்றுப்... ... *
மறந்தருவலியுமன்றுமனந்தருவாழ்வுமன்று.. ... *
நிறந்தருபுகழுமன்று நெறிதருமதியுமன்றே... ...(உ௱க)

திருத்தகமொழிந்தவெல்லாஞ் செய்தனையேனுஞ்செய்வி *
மருத்தகுதெரியன்மாலைமாசிலாமன்னர்முன்னர் .. ...*
உருத்தகுநற்பிணையுரையலாதுரைக்குமாற்றம் .. ... *
கருத்தினினினையல்கண்டாய் கடவுளர்கற்பம்வாழ்வாய் (௨௱௨)

விண்ணிலங்கருதித்தோன்றுமேதகுவடமீனன்றி... ...*
மண்ணிலங்குவமைசொல்லமடந்தையராருமில்லாப்... ...*
பண்ணிலங்கடந்தமென்சொற்பாவையையலழக்கநீயின் ... *
றெண்ணிமுன்கேட்டவார்த்தைக்கேற்றதுன்னெண்ணமென்றான்

கேட்டசொல்வினவிநாக கேதனன்கேட்பமீண்டும்... ...*
வாட்டமிலன்பினோடுமனங்கனிந்துருகிவீழ .. ... *
நாட்டமுநனிநீர்மல்கநாவமிழ்தூறப்பின்னும்... ... ...*
கோட்டமில்சிந்தையானுங்குரிசிலுக்குரைக்கலுற்றான்... (௨௱௪)

தானவராகியும்மைதனித்தனி யிறந்தோர் யாரும்... ...*
மானவராசரிம்மைவந்தனரிம்பரொன்றே .. ..*
தானவர்பொறைபொறுமற்றராதலமென்னுஞ்செங்கண் ......*
மானவராகவேதமலர்முனிதனக்குச்சொன்னான்... ...(௨௱௫)

நான்முகன்றனுமேனைநாகனுநாகர்கோனும்... ... ...*
பான்முகந்தெறிபுவேலைப் பாம்பணை பள்ளிகொள்ளும் ...*
தேன்முகங்களிக்கும்பச்சைச்செவ்விவண்டுளவமாலை... ...*
மான்முகங்கண்டுகூறவந்தவாமாலுங்கேட்டான்... ... (௨௱௬)

மின்னிடைவிளங்குமேக மேனியானவனிமானை... ... ...*
நின்னிடைவந்துதோன்றுநிருபரானவரையெல்லாம்... ...*
முன்னிடைகடையொன்றின்றிமுற்றும்வெம்முரண்கொள்காலன்
றன்னிடைவிடுதுமென்று சாற்றியேதளர்வுதீர்த்தான்... (௨௱௭)

அந்தவன்றிகிரியானுநம்மிலோரரசனாகி ... ...*
வந்தவதரித்தானென்றுமண்ணெலாம்வார்த்தையான... ...*
தெந்தலைவினையாலவ்வாறெய்துமென்றிதற்கேசால... ...*
நொந்துகண்டுயில்கிலாதேனோதகப்புரிதீர்மன்னே ...(௨௱௮)

ஒருதிறத்தவனிமுற்றுமுரிமையாற்புரக்குநீவிர் ... *
இருதிறத்தவருநும்மிலிகலுறுமனத்திராயின் ... *
வருதிறத்தானைவேந்தர்வசைபெறக்குழுக்கொண்டோடிப் .. *
பொருதிறப்பதற்கேசற்றும்புரிவிலிர்புரிதிரம்மா ... (௨௱[illegible])

ஈன்றவனுரைப்பத்தானுமெறிந்துநகைந்நகைகொண்டாடி ... *
அன்றவனிதயம்வெம்பவவமதிபலவுங்கூறி ... ... *
நின்றவனொருவன்றன்னைநீயினிவிரைவினோடிச் ... *
சென்றவனிருந்தகோலத்தெரிவையைக்கொணர்தியென்றான். ()

பெருந்தகையேவலோடுபிராதிகாமியனுமேகி... ... ...*
வருந்தியமனத்தனுகிமாசறுமரபின்வல்லி... ... ... *
இருந்துழிபெய்துருமலிடைவழிநின்றுபின்பு... ... ...*
விரைந்தவனோடிவந்துவேந்தனுக்கேற்பச்சொன்னான்...(௨௱௰௧

வேறு

என்னைத்தோற்றுமனுநெறிகூறிசையோன்றன்னைத்தோற்
றனனோ - தன்னைத்தோற்றுத்தனதுமனத் தளர்வாலென்னைத்தோ
ற்றனனோ - முன்னைத்தோற்றுத்தோற்றபொருண் முற்றுங்கவரு
முறையன்றிப் - பின்னைத்தோற்றபொருள்கவரப் பெறுமோதி
னைக்கப்பெறுதென்றாள் ... ... (௨௱௰௨)

செல்வப்பாவைதிருவுள்ளமிதுவென்றந்தத்தேர்ப்பாகன் ...*
சொல்லப்பாவிதரியாமற்றுச்சாதனனைமுகநோக்கி ... *
அல்லற்பாவைபேறழிந்தவைவர்க்கொருத்தியாகியவம் ... *
மல்லற்பானல்விழியாளைமன்பேரவையிங்கழையென்றான் ௨௱௰௩

நோன்றாள்வேங்கைகடகளிற்றி னுழைவேலரசனுவறனு
மே - ஆன்றார்கேட்கிற்செவிபுலைதக்கு மழல்கால்வெஞ்சொலறனி
ல்லான் - தோன்றுநயனத்துணைவனைப் போற்றுணைக்கண்டிகிலிற்
சூழ்ந்திருந்த - ஈன்றாளில்லத்திருந்தாளை யெய்திக்கொடியானி
வைசொன்னான் .... (௨௱௰௪)

தானேசூதுபொருதழிந்து தலைவன்றனக்குன்பதியான -
கோனேசொல்லியாவையுமுன் கொடுத்தான்கொடுத்தபின்னிசை
வு - யானேயென்றும் வீமன்முதலிளையோ ரொன்றுமென்மேல்
வி - மானேயென்றுங்குறித்திழந்தான் வழக்கால்வென்றேம்வரு
வாயே .... (௨௱௰௫)

பொன்னைச்சிரிக்கும்பூங்கோயிற்புனலாவியிலன்றெங்கள்குல...*
மன்னைச்சிரித்தசெங்கனிவாய்மாருதிரங்கிமூதரற்ற ... ... *
மின்னைச்சிரித்தநுண்ணிடையாய்வந்தார்க்கெதிர்நின்மெய்க்கிழவ
ன் - றன்னைச்சிரிக்கவிருக்கின்றதனைநீகாணத்தரியாயே (௨௱௰௬)

தலத்துக்கிசையாவவைவளாயுந் தழுவித் தழுவித் தனித்தனி
யே-நலத்துப்பொய்யே மெய்போல நடிக்குஞ்செவ்வி நலனுடை
யாய்- குலத்திற்பிறந்தாயன்றாகிற் கூசாதென்பின்போதுகெனப்-
பொலத்திற்செங்கைமலர்திண்டிப்பிடித்தான்சூழ்ச்சி முடித்தானே

சிலைவாயங்கையவன் றீண்டச் செல்லாளாகியல்லலுழந் - து
லைவாயழல்போனெடிதுயிராவுள்ளந் தளராவுளநடுங்காக் - கொ
லைவாயெயினர்கொல்லு நிலங்குறித்துச்செறிந்தகொடியநெடு -
வலைவாயொருதானைப் பட்டமானைப்போன்மாயமருங்குற்றாள்· ()

பூவார்குழலிதளர்வொடிதன்புறஞ்சேர்பொழுதுஞ்சிறிதிரங்காள் ※
நீவாவென்றேயருகிருத்தி நெடுங்கண்பொழியுநீர் துடையாள் ...※
மேவாரல்லர்தமரனைத்தான்மேலுங்கருத்துவிளம்பிவரப் .. ※
பாவாயஞ்சாதேகென்றாள்பல்பாதகனைப்பயந்தாளே (உ௱௰௯)

தண்டார்விடலைதாபுணைப்பத் தாய்பின்னனுகித்தாமரைக்
கைச் - செண்டாலவள்பைங்குழல்பற்றித் தீண்டாவுகிச்செல்கின்
றான் - வண்டார்குழலுமுடன் றலைப மானங்குலையமனங்குலையக்-
கொண்டோ ரிருப்பமொன்றுநெறிக் கொண்டாளந்தோகொடி
யாளே... ... ... (உஉ௰)

சூழுங்கனல்வாயுருமின்றித்துளிவாய்முகிலுமகிதலத்து ... ※
வீழுங்கொல்லோவுற்பாதம்விளைவிற்றென்றேவெருக்கொள்ளத்
தாழும்பெரியகரியகுழலுமோடலையத்தழீஇக்கொண்டு ... ※
வாழுஞ்சுரும்புஞ்சுழன்றரற்றமண்மேல்வீழ்ந்துவருகின்றாள் (உஉக

தழலோவென்னுங்கற்புடைய தனிநாயகிதன்றுமைநறுங் - கு
ழலோவுரகக்கொடிவேந்தன் குலமோகுலைந்த திவணென்பார் -
நிழலோபுவிக்குநெருப்பன்றோ நெறியொன்றில்லாநீடுபோல
ன் - சழலோன்மதிவெண்குடையென்பார் கையாற்கண்டகண்பு
டைப்பார் ... ... (உஉஉ)

காட்டுந்திறல்வெஞ்சிலைவிசயன்கையால்வகிர்ந்துகடிகொண்மலர்
சூட்டும்பனிச்சைபிவண்புழுதித்துகளேறியதென்றழுதலைநவார்※
மீட்டுந்தடாமலேகென்றுவிட்டாண்மைந்தனிட்டவின்ன ... ※
கேட்டுங்கொடியகாந்தாரியினையோடின்றேகெடுமென்பார். ()

இரும்போநெஞ்சம்மாமணிதம்மிசைந்தாரேனுக்கவிருந்தென்
பார் - பெரும்போரரசர்பெண்ணுடனே பிறந்துஞ்சிறப்பேறு

றென்பார் - பொருப்போர்வீமன் பொறுத்தாலும்பொற்றேர்வி
சயன்பொறுனென்பார்- அரும்போரரசராமாகா தென்றுஞ்வரு
மோவழிவென்பார் ... ...(௨௨௪)

என்னேகுடியிற்பிறந்தோருக் கிருப்பன்றிவ்வூரினியென்பா
ர் - முன்னேயோடிமுறையிட்டான் முனியுங்கோலோவெமை
யென்பார் - பின்னேயிரங்கியழுதழுது டெய்துற்றின்னல்பெரி
துழப்பார் - அன்னே துன்பங்களை நீதில்ப மாவாயென்றென்றரு
ள்புரிவார். ... ... (௨௨௫)

பறைவன்களிற்றுப்பல்புரவிப்பைம்பொற்றடந்தேர்ப் பா
ஞ்சாலர்க்- கிறைவல் பாவைபாங்காணவிவையோபடுவதெனவுரை
ப்பார் - பொறைவன்சிந்தைத் தருமனுக்குப் பொய்ச்சூதறிந்து
ம் பொரவென்னம்- குறைவந்ததுதன் விதிவலிபாற்குறைந்தான்
யாவுங்கொடுத்தென்பார்... ... ... (௨௨௬)

நெடுமாநகரிற்சனமனைத்து நேயம்பெறக்கண்டிவைகூற -
வடுமாமாபிற்குறைதேடு மன்பேரவையின்முன்புக்காள் - கொடு
மாமலர்க்கண்புனல்சோரக்குழைந்தேகிடைத்தங்குழல்சோரத்-தவி
மாறுள்ளந்தனிச்சோரத்தலைநாளளித்ததழல்போல்வாள் (௨௨௭)

நாணேமுதலாநாற்குணனுநண்ணுங்கற்புநயந்தணிந்த - பூ
ணையனையாளழுதரற்றப் புன்பேரவையிற்புகும்போகம் - காணு
மெல்லாற நிலனோக்கிக் கதிர்வேனிருபரிருந்திரங்கக்- கோணெந
ர்பாடாயிருந்தான் குருடென்றுனாக்குங்கொடியோனே (௨௨௮)

மேகங்குருதிபொழிந்தகல்வான் மீனும்பகலே மிகவிளங்கிப்*
பூகம்பமுமுத்றற்பாதமப்போதியாவும்புரிந்துளவால்... ...*
நாகப்புணைபொற்றுவசனுடனவிலாநின்றநால்வருமே... ...*
சோகம்பிறவாதொழிந்தார்மற்றொழிந்தார்யாருஞ் சோகித்தார்()

வீமன்கதைமேற்கைவைக்கவின்மேல்விசயன்விழிவைக்கத் ... *
தாமம்புனைந்தோ ரிளையோருந் தந்தமனத்தின் சினமூட்டத்*
தூமம்படிசெந்தழலவியச் சோனுமேகஞ் சொரிவதுபோல்*
நாமந்தரும னெனத்தக்கோனிளையோராறநவிலுற்றான் ... ()

தேம்போதணைத்துமெக்காவுஞ் சிலபோத லருஞ்சிலபோ
து - வேம்போதாங்குவாழ்வவெல்லாம் வெங்கானுடனே வே
வாவோ - ஆம்போதாகுமஃதன்றியாயபொருள்களம்முறையே

போம்போதணைத்தும் போமுன்னம் பொறுத்தீரின்னம்பொறு மென்றான்... ... ... (௨௯௧)

வாருங்கண்ணீர்வளர்கொங்கைவரைமேலருவியெனவீழத் - தாருங்குழலுமின்னுடனே தலஞ்சேர் கொண்டலென்ன வீழக் - கூருந்துயரினுடன்வீழ்ந்து கோகோவென்று கோச்சபையில் - சோருங்கொடியை முகநோக்கித் துச்சாதனன் மெய்சுடச்சொன்னான்... ... ... (௨௯௨)

மன்வந்திருந்தசங்கத்து மாமனிருந்தானைவருமுன் - முன்வந்திருந்தார்முன்கொண்ட முறையான்முயங்கு முடிவேந்தர் - மின்வந்தனைய நுண்ணிடையாய் விழிநீர்சொரிந்துமெலியவுனக் - கென்வந்ததுகொல்பொதுமகளிர்க்கரிதோவிழிநீரொளிதென்றான்... ... ...(௨௯௩)

பொல்லாவசையைப்புகழ்பூணப்புல்லன்புகலவிதற் கொன்றும் - சொல்லாதிருந்தமன்னவையைத்தொழுதாளழுதாள்சோர்வுற்றாள் - மல்லார்திண்டோண்மாமாவோ மந்தாகினியாண் மதலாயோ - எல்லாநெறியுமுணர்ந்தவருக் கிதுவோமண்ணி லியல் பென்றாள்...... ... ... (௨௯௪)

இன்னற்படுசொற்பாஞ்சாலி யிரக்கந்தனைக்கண்டிரக்கமுறா-மன்னர்க்கிளையோய்தவறாத்தல்வழக்கோவடமீனனையாளை - என்னக்கழறியுரைத்தவெலாமரசர்க்கியல்போவியம்பென்றான் - முன்னர்ப்புகலுங் குருகுலத்தோர் முதலாம்வாய்மை மொழியோனே... ... ...(௨௯௫)

மன்றேற்றன்னவெஞ்சூதால் வழக்காற்கொண்மின் மன்னவையில் - நமன்றேற்றனனேவென்னையுந்தான் முன்னேயிசைந்து தனைத்தோற்ற - பின்றேற்றனனேகரியாகப் பெரியோருண்மைபேசுமென - மின் றேற்றனைய நுண்ணிடையாள்விழிநீர் வெள்ளமிகவீழ்த்தாள்... ... ... (௨௯௬)

மையோடரிக்கண் மழைபொழியவாடுங் கொடியின்மொழிக்கார் - வெய்யோனெண்ணந்தனக்காகார்விறல்வேல்வேந்தர் வெருக்கொண்டு - பொய்யோவன்றுமெய்யாகப் புனையோவியம்போலிருந்தாரை - அய்யோவந்தக் கொடுமையை நாமுரைக்கும்பொழுதைக்கதிபாவம்... ... ...(௨௯௭)

அல்லார்கூந்தல்விரிந்தமயி லனையாளரற்றவிதற்கொன்று
ம்- சொல்லா தூமர்கணம்போலத்தொல்போர்வேந்தர்சூழ்ந்திரு
ப்ப - மல்லார்தடந்தோள்விகருணனும்வாய்மைக்கடவுள்வாள்வேந்
தீர் - பொல்லாநெறியிலனைவீரும்போகாவண்ணம் புகல்வீரோ ()

முறையோவென்றென்றவனிதல முழுதுமுடையான்றனித்
தேவி - நிறையோடழிந்துவினவவுநீர் நிறைவற்றிருந்திர் நினைவ
ற்றோ - இறையோன்முனியுமெனநினைந்தோ விருந்தாருறுதியெ
டுத்துரைத்தல் - குறைமேயாகண்கண்டதுநாளுங் குலத்திற்பிறந்
தோர்கூறுமோ... ... ... (உாருக)

தன்னேரில்லாநெறித்தருமன் றனவென்றுரைக்கத்தக்கவெ
ல்லாம் - முன்னேதோற்றுத்தங்களையு முறையேதோற்றுமுடிவு
ற்றான் - சொன்னேனுரைக்கிற்றான்பிறர்க்குத் தொண்டாய்விட்டு
ச்சுரிசுழலைப் - பின்னேதோற்கவுரிமையினாற் பெறுமோவொன்
றும்பேசீரோ ... ... (உாசய)

என்னுமன்னர்முகநோக்கி யெல்லாரிதயங்களுமகிழச் ... *
சொன்னானெவருந்தக்கோனென்றவனுக்கொருபேர்சூட்டியபின்
நன்னுமனத்தோடனன்மூள நயனஞ்சிவக்கநஞ்சின்வடி ... *
வன்னனிளவன்முகநோக்கியருக்கன்குமரனறைகின்றான் (உாசுக)

வேறு

இருக்கின்றகாவலரிவின்னறிவா லுயர்ந்தனையோவிராசநீதி -
குருக்கொணடுமுதிர்ந்தனையோ நினையொழிந்தால்வழக்கொருவ
ர்குறிப்பார்ற்றோ - மருக்கொண்டதொடைமுடியாய்மொழிகெ
னநின்னுடன்வினவவந்தாருண்டோ - உரைக்கும்போதெவருட
னுமுணர்ந்தன்றோ வுரைப்பதெனவுரைத்தான்மன்னோ (உசுஉ)

தான்படைத்தபொருளனைத்துந்தம்பியர்களுடன்றோற்றுத்
தனையுந்தோற்றால் - மீன்படைத்தமதிமுகத்தா ளிவன்படைத்த
தனமன்றிவேறேகொல்லோ - வான்படைத்தபுரியனையவாணகரு
ந்தன்னில்லும்வழங்குமாகில் - யான்படைத்தமொழியன்றோவெ
ங்கணு மில்லெனப்பட்டாளில்லாளன்றோ... ... (உசுரு)

மைக்கோதிலக்கலையுடையன் மதியுடையன்பொறையுடைய
ன்வரிசையாகத்-தக்கோனென்றரசசொல்லா முரைத்தபெயரிவன்
றனக்கேதக்கதம்மா -மிக்கோர்மற்றுங்களைப்போல்வேறுண்டோ

மகிதலத்தில்வேந்தராகித் - தொக்கீர்யானுவன்றமொழிக்கெதிர
மொழியுண்டாமாகிற்சொல்லுவீரோ ... ... (௨௪௪)

என்னவெருண்டிடுகின்றவெல்லையினிலெழுவுறழ்தோளிரா
சராசன் - தன்னனையநெடுங்கோபத் தம்பியையின்றம்பிதனைத்
தக்கோனென்ற - மன்னவையினெதிரேயிம்மானமிலாவவ்வணா
யப்வழக்குவார்த்தை - சொன்னகிளிமொழியினையுந் துகிலுரிதி
யெனவுருமிற்சொன்னான்மன்னே ... ... (௨௪௫)

இத்தகவின்மொழிசெவியி லெரிவாளியெனமூழ்கவிருந்த
வேந்தர் - தத்தமனமடிந்துருகத்தருமன்மதிமுகநோக்கித்தம்பி
ரேக்கி - வித்தகவெங்கதைநோக்க விறல்வீமன்விசயனுந்தன்வி
ல்லைநோக்க - ஒத்ததமனைவிளையோருருப்பமடக் கினனுண்மை
க்குறுதிபோலவான் ... ... (௨௪௬)

தருகதுகிலெனவெழுந்து தங்கையவன் பொடுதுச்சாதனன்
சொலாமுன்- வருகவெனவரைமார்பில்வாங்காத வுத்தரியம்வாங்கி
யீந்தார் - அருகணுகிமடவரலையஞ்சாமற் றுகிலுரிவானயர்ந்த
போதில் -இருகைநறுமலர்குவியவெம்பெருமா னிணையடிக்கேயி
தயஞ்சேர்த்தாள் ... ... (௨௪௭)

ஆறுகியிருதடங்கணஞ்சனவெம்புனல்சோரவளகஞ்சோர ... *
வேறான துகிறலைகந்தலைசோர மெய்சோரவேறோர்சொல்லும் *
கூறாமற்கோவிந்தாகோவிந்தா வென்றரற்றிக்குளிர்ந்துநாவில் *
ஊறாதவமிழ்தூறவுடல்புளகித் துள்ளமெலாமுருகினாளே(௨௪௮)

அருமறைசொல்லியநாமமாயிரமு முறைத்தழைக்கவமரர்
போற்றும் - திருமலர்ச்செஞ்சேவடியோன்றிருச் செவியிலிவண்
மொழிசென்றிசைத்தகாலை - மருமலர்மென்குழன்மானினுடன
டுங்காவலைமனத்தேவந்துந்தான்றிக்-கரியமுகிலனையானும்பிறரொ
வர்க்குந்தெரியாமற்கருணைசெய்தான் ... ...(௨௪௯)

உடுத்ததுகிலுணர்விலானுரிந்திடவு மாளாமலொன்றுக்கொ
ன்றாங்- கடுத்தநிறம்பலபலபெற் றுயிரமாயிரங்கோடியாடையா
கக்- கொடுத்தருளவுரிந்தனபட் டிருந்தபெருந்தனிக்கூடங்கொள்
ளாதோடி - எடுத்தனர்பற்பலவீரருரிந்தோனுஞ் சலித்திருகை
யிளைத்துநின்றான் ... ... (௨௫௰)

கங்கைமகன் முதலானகாவலர்மெய் புறவாங்கிக்கண்ணீர்சோ
ரச் - செங்கைமலர்குவித்திவளே கற்பினுக்குமரபினுக்குந்தெய்
வமென்றார் - அங்கணகல்வானோருமானக மும்வலம்புரியுமதிரத்
தங்கள் - பைங்கனகத்தருவின்மலர் மழைபொழிந்துகருணை யிறை
ற்டரிவுகூர்ந்தார்... ... ... (உருக)

அழுதழுதுகொடும்புலிவா யகப்பட்டமான்பிணைபோல வ
ற்றாநின்ற - எழுதரியமடப்பாவைதங்கண் முகங்களைநோக்கியிரங்
கிவிழ்ந்த பொழுதுமனம்புகைமூளப் பூந்தடங்கண்கனல்மூ
ளப்போரின்மூாய் - பழுதுபடாவடலாண்மைப் பவன்குமார
ன்றடங்கைபடைமேல்வைத்தான் ... ...உருஉ

அருளாருந்தருமபதியாகாதென் றெமைப்பலகாலடக்கபா
ழும் - இருளாவ்வெம்பரிதிவடிவொளிப் பதுபோலமர்புரியாதிரு
க்கின்றோமால் - மருளான்மெய்ம்மயங்கியொரு வலிபுடைபோர்
தமைப்போலமதத்தநீவிர் - பொருளாகவிருந்தனமோ நூற்றுவ
ரும்வருகவெதிர்பொருகவென்றான்... ... ...(உருந)

கொத்தளகமலர்சரியக்கூப்பிடுவாள் கொடுங்கற்புங்கூறை
மாளா - மந்திரமுமடல்வீமன்யான மிலாதுரைக்கின்றவலியுங்கா
ணத் - தந்தைவிழியிருள்போலத் தகுமனத்தானுந்துச்சாதன
னைநோக்கிப் - பைந்தொடியைக்கொணர்ந்தினியென் மடியின்மி
சையிருத்துகெனப்பணித்திட்டானே... ... (உருச)

என்றபொழுதருந்ததிக்கு மெய்த்தாதகற்புடையாளிடியே
றுண்ட - வன்றலைவெம்பணிபோலநடுநடுங்கி மாயனையுமறவாளா
கிப் - புன்றிறலோன்யானிருக்கக்காட்டியதன் றொடைவழியேபு
ள்வாய்குத்தச் - சென்றிடுகவாருயிரென்றெவரும்வெரு வரச்சபி
த்தாடெய்வமன்னாள் ... ...(உருரு)

ஆசவையிலெனையேற்றி யஞ்சாமற்றுகிறீண்டியளகந்தீ
ண்டி - வினைசெயளிபினம்படிதார்வந்தவெதிர் தகாதனவேவி
ளம்புவோனைப் - பொருசமரின்முடிதுணித்துப் புலந்தோறும்
வெங்குருதிபொழியவெற்றி - முரசறையும்பொழுதல்லால்விரி
த்தகுழலினிமுடிபேனென்றாள் ... ...(உருசு)

பாஞ்சாலிக்கரசவையிற்பழுதுரைத்தோ னுடலெனதுப
டையாமேழி - போஞ்சாலினிணஞ்சொரியத் துணைவரொடுமுல
மாளப்பொருவேன்யானே - தீஞ்சாலிவிளைபழனத்திருநாட்டீர்

கேண்மினெனச் செந்தீமுள-வேஞ்சாலினறு நெய்போல் வெஞ்சி
னத்தான் வஞ்சினமும் விளம்பினனே ... ... (௨௫௭)

வண்டாருங்குழல்பிடித்துத் துகிலுரிந்தோனுடற்குருதி வா
ரியள்ளி - உண்டாகங்குளிர்வதன்முன் னிக்கரத்தாற்புனலுண்ணே
னொருகாலென்னைத் - தண்டாலவெம்புனலெற்றிமீதெழுந்துவி
ழுந்திவலைதண்ணீராகக் - கொண்டாவிபுரிந்திடுவே னிதுவிரத
மெனக்கொலைவுங்கூறினானே... ... ... (௨௫௮)

பகலவன்றன்மதலையுயிர் பகைப்புலத்துக்கவர்வனெனப்பா
ர்த்தன்சொன்னான் - நகுலனுமன்றென்கரத்தேசௌபலநாயகனு
யிர்க்குநாசமென்றான் - சகுனிதனையிமைப்பொழுதிற் சகாதே
வன்றுணித்திடுவன்சமரிலென்றான் - இகனிருபரிவர்மொழிகேட்
டெளிதோவிக்கொடும்பழியென்றேங்கினரோ ... (௨௫௯)

மேகங்கள்வழங்காமல் விண்ணதிர்ந்திட்டூர்கோளும்வெயிலை
ச்சூழ்ந்து - பூகம்பம்பிறந்திடுவுமருப்பகலே வீழ்ந்துடனே
பொய்கைபாட - யாகஞ்செய்நெடுஞ்சாலையின்பாலுஞ்செந்நீரா
யிருந்தார்வேந்தர்-ஆகங்கொளொளிமழுங்கித்த பிதார வன்றணங்
கனையாளழுதபோதே ... ...(௨௬௰)

உற்பாதம்பெரிதெனநெஞ்சுகுவாரு மென்னுமிவ்வூரொன்ற
ஞ்சி - நிற்பாரும்போம்வழிமே னினைப்பாரும்பலராகிநிகழ்ந்த
காலை - கற்பான்மிக்குயர்வேள்விக்கடன்சுமந்த மடவரலைக்கண்
ணிலாதோன் - பொற்பாதம்பணிந்தேத்தியபராதம் புரிந்தவெ
லாம்பொறுத்தியென்றான் ... ...(௨௬௧)

உத்தமமாங்குலமயிலேயென்சிறுவரறியாமலுனக்குநேரோ-
மைத்துனராமுறையாலிவ்வழக்கல்லா தனசெய்தார்மதியிலாமல்-
எத்தனைதாழ்விவர்புரிந்ததென்றாலு மவையொன்றுமெண்ணாதின்
றே - பித்தர்மொழியெனக்கருதிமறந்தருளென்றொருகோடிபி
தற்றினனே ... ... (௨௬௨)

மைவனாயுந்தடங்கண்ணன் மனச்சோகம்பலமுகத்தான்
மாற்றிமைந்தர் - ஐவனாயுந்தனித்தனியேமுகங்கொண்டுகொடுங்
கோபமகற்றிநீவிர் - மெய்வனாயும்பொருபுயத்திர் விறற்போரி
லழிந்தவியதிலமுந்தேரும் - கைவனாயும்பரிமாவுஞ்செல்வமும்
யாவையுமீண்டுங்கைக்கொளீரோ ... ...(௨௬௩)

கோமன்மிலருந்ததியைக்கொண்டினிநீர் நில்லாமற்குறுக
ஆமோ - போமென்றுவரவழைத்துத்தழீஇக்கொண்டென்கண்மல
ரோபோலாமெம்பி - யாமென்றுமவனென்று மிரண்டில்லைவிளை
யாட்டென்றிருந்தேனிவ்வா - றேறுமென்பதெனக்கொருவருணர
த்திலராலியானறியே னருத்தியொன்றே ... ... (௨௬௪)

என்மைந்தரிவர்நீங்களவன்மைந்த ரெனநினையேனிவரோ
யெம்பி - தன்மைந்தருங்களையே யென்மைந்தரெனவளர்த்தே
ன்சம்புநாட்டு - மன்மைந்தருங்களைப்போல்வேறுபடாதித்தனை
நாள்வளர்த்தாருண்டோ -வின்மைந்தர்நடக்கவென விடைகொடு
த்தான் விரகினுக்கோர்வீடுபோல்வான் ... ... (௨௬௫)

படைகொடுத்தானவனிழந்த பார்கொடுத்தானாசாளப்பண்
டுபோல்வெண் - குடைகொடுத்தான்குருகுலத்தோர் குலங்கொடு
த்தானைவருக்குங்குலத்தேகொண்ட - தடைகொடுத்தானகப்பட்
டுந் தணையழிக்கநினையாமற்றனேயம்ம - விடைகொடுத்தானினி
விடுமோ வயப்புலியையவாலுருவிவிடுகின்றனே... .. (௨௬௬)

வேறு

யாதொருகருமமேனுமெண்ணியே துணிகவென்றும்... ...*
காதலிற்றுணிந்துசெய்தாலெண்ணுதலகடனன்றென்றும்... *
ஓதுநூற்புலவோர்சொன்னருமக்குளவுணர்விற்றன்றே... *
பேதுறவடர்த்துப்பின்னையுருகினீர்பிழைசெய்திரோ... (௨௬௭)

தீயினாற்சுட்டசெம்புண்புலருமற்றீயிற்றீய.. ... ...*
வாயினாற்சுட்டமாற்றமாறுமோவடுவேயன்றே... ... *
பேயினாற்புடையுண்டாரோமறப்பரோபெரியோரொன்றன் *
வீயினாற்றடுத்ததண்டார்வேந்தர்க்குவேந்தன்மாமன் .. (௨௬௮)

சகுனிசொல்மருகன்கேட்டுத்தம்பியுமங்கர்கோவும்... ... *
முகமுகநோக்கியெண்ணியெம்பிநீமொழிகவென்றான் ... ... *
துகிலினையுரிந்தவன்கைச்சூரனுந்தருமாசன் ... ...*
மகனுடன்வெகுளிதோன்றவழக்குறமொழிபலுற்றான்...(௨௬௯

சரதமன்றுண்மைபாகச்சபையினிலிசைந்துதோற்ற ... ...*
இரதமுங்களிறுமாவும்யாவையுமீண்டுந்தாரோம்... ... ... *
சுரதமென்கொடியுநீருந்தொண்டொழிந்துரியீராமின்... *
விரதமுன்னறத்துக்கென்றும்பொய்கொலோமெய்ம்மையன்றே

தந்தைதன்னருளாற்பெற்றாபுரிமையுந்தம்பிமாரும்... ... *
பைந்தொடிதானுநீரும்பதிபெயர்ந்துயர்ந்தவேவையின்... ...*
வெந்தழலாற்றாயானில்வெளிப்படாதுன்றமினென்றே... ...*
இந்தமாதரணிகைவிட்டேகுமினெழுமினென்றான்... (௨௭௧)

என்றலுந்தந்தைதமைந்தனியம்பியவாய்மைகேளா... .. *
தீன்றவைநில்லாவஞ்சநெஞ்சினனாகிமீண்டு... ... ...*
வென்றிகொளரசனாமவெஞ்சிலைவிதுரனோடும்... ... *
ஒன்றியவமைச்சரோடுமுறுவனவுபாவனுற்றான்... ... (௨௭௨)

மேல்வருகருமமெண்ணாவெகுளியான்மிக்கவீரர் ... ...*
நால்வருமெம்மனோர்கணவின்றனசிறிதுங்கேளார்... ... *
சேல்வரும்பழனநாடன்செயலறிந்தெண்ணிவேத... ... *
நூல்வருமுறைசொல்லென்றானான்சிலைநூலின்மிக்கான் (௨௭௩)

வின்மகனுரைக்கவேனையமைச்சரும்விதுரன்றானும்... ... *
மன்முறைதவறிலின்றேவசையும்வந்திசையுமென்றார்... ... *
கன்மனநெடுங்குன்றன்னான்கருதியகருத்தேமீளத்... ...*
தன்மனையாவாநெஞ்சுசருகெழத்தழைக்கச்சொன்னான்...(௨௭௪)

உன்னுணர்வுனக்கேயுள்ளதுன்பெருந்துணைவனான... ...*
கொன்னிலைவேலோன்மீண்டுகொண்டனகொடுத்தலொல்லான் *
பின்னுறவுரிமையாவும்பெறுகினும்பெருமைக்கேற்ப... ...*
முன்னுளபலருஞ்செய்தமுறைமையைமுன்னுகென்றான் (௨௭௫)

அரசன்மற்றுரைத்தமாற்றமந்தணனுணர்ந்துசெல்வ... ...*
மூசதிரோத்திரதூர்முன்னவன்கதையுங்கூறி .. ... *
ஊணைசெய்தபடியேயுங்களுலகினையிழந்துசின்னாள்... ... *
வனைசெறிகானம்வைகிவருவதேவழக்குமென்றான்... (௨௭௬)

அரிவையோடகன்றுநீவிரைவருமடவியெய்திச்... .. *
சுரர்தினமீராறுங்கட்டுன்னுதிர்மன்னுநாளில்... ... *
ஒருவருமறியாவண்ணமொருதினமுறைதிருங்கள்... ... *
பெருந்திறலரசும்வாழ்வும்பின்னுறப்பெறுதிரென்றான்... (௨௭௭)

மறைந்துறைநாளினும்மைமற்றுளாரீண்டுளாரொன்... ... *
றறிந்திடின்மீண்டிவ்வாறாணியமதடைதிரென்றான்... ...*
பிறந்தவிம்மாற்றங்கேட்டுப்பிதாமகன்முதலாயுள்ளோர்... *
சிறந்ததின்றிதனினில்லையிசைவதேசெய்மினென்றார்... (௨௭௮)

சரிகுழல்குலையநின்றதுரோபதிசுருதிமுன்னூல்... ... *
வரபதிமொழிந்தமாற்றங்கேட்டலும்வணங்கியைவர்... ...*
அரசருமெனதுமைந்தனைவரும்யானுமீண்டும்... ... *
உரிமையினெய்தவன்சூதொட்டுதலுறுதியென்றாள் ... (உஎகூ)

தையலங்குழைத்தமாற்றந்தருமனுங்கேட்டுநாங்கள்... ...*
கையறுதொண்டாகிக்கான்புகல்வழக்குமன்று... ... ... *
ஐயுறுதொருகாலின்னமாடுதுமருஞ்சூதென்றான்... ... *
மெய்யுறவிருந்தவேந்தர்மீளவுங்காணலுற்றார்... ...(உஅய)

தத்தையைவென்றவெஞ்சொற்றன்பெருந்தேவிசொல்லப் ...*
பத்தியால்வணங்கிமாயன்பன்னிருநாமமேத்தி... ... ...*
ஒத்தவெங்கவறுவாங்கிச்சகுனியாதொட்டமென்னப் ... ...*
புத்தியாலவனுநான்செய்புண்ணியமனைத்துமென்றான் (உஅக)

உருட்டியகவறுநேமியுடையவனருளினாலே... ... ... *
மருட்டியசகுனியெண்ணின்வழிப்படாதுருண்டகாலை... ...*
இருட்டியவிழியான்மைந்தனிருதயமிருண்டுசோரத்... ... *
தெருட்டியவுணர்வின்மிக்கான் செப்பியயாவும்வென்றான் (உஅஉ

வென்றுதனிளைஞரோடுமேதகுபுதல்வரோடும்... ... *
மன்றலந்தெரிவையோடுமற்றுமேலோர்தங்களோடும்... ... *
அன்றுதந்தாவர்பொற்றாளன்புடன்வணங்கிக்கானம். . ...*
சென்றனனென்பமன்னோசெழுநிலமுடையகோமான்... (உஅங

ஒழிவுசெய்கருணைநால்வருள்ளமுமொழிபவேனை... ... *
வழுவறுமன்னருள்ளமப்படியோடயர்ந்துவிம்மக்... ... *
குழவிபானுகர்தலின்றிக்கொற்றமாநகரிமாக்கள்... ... *
தழலெனவுயிர்த்துமாழ்கித்தனித்தனிப்புலம்பிநைந்தார் (உஅச)

நாட்டிடையெல்லைபோற்றாணறுமலர்சிவப்பவேகிக்... ...*
காட்டிடைபுகுந்தபோதுங்கலக்கமற்றுவகைகூர்ந்தார் ... ...*
கூட்டிடையின்பதுன்பக்கொழும்பயன்றுய்த்துமாறி... ...*
வீட்டிடைபுகுந்தபோதுமெய்ம்மகிழ்விபுதர்போல்வார்(உஅரு)

உ - வது. சூதுபொருத சருக்கம்

முற்றிற்று.

ஆக சருக்கம் -உ- இ திருவிருத்தம் - சசo.

ஸ்ரீமதேராமாநுசாயநம:

ங-வது.

ஆரணியபருவம்.

முதலாவது வனம்புகுசருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அண்டருக்கமுதமன்னனவுணர்பாலரியேறொப்பான் ... *
தெண்டிரைக்கொருவனெஞ்சத்திருவினன்மருவினோர்பால் *
புண்டரிகத்தன்பாதப்பொருத்துவன்புவனமூன்றும் ... *
உண்டெனப்பூத்தோனுமவியற்றியானுரைக்கலுற்றேன் ... (க)

பெருமிதவலியும்வாழ்வும்பேணலார்கவரவின்சொற் ... *
றருமனுந்தம்பிமாருந்தழலெழுதையலாளும் ... ... *
அருட்கமுனிவர்மூந்நான்காயிர்சூழப்போதக் ... ...*
கருமுகிலபடியுஞ்சார்க்காமியவனம்புக்காரே ... (உ)

ஆரமுமகிலுநாறுமருவியுஞ்சுனையுமற்றை ... ...*
வாரணம்பிடிகளாடும்வாரிதோய்கானியாறும்... ... *
ஈரமுநிழலுங்காயுங்கனிகளுமெங்கும்விஞ்சிக்... ... ...*
காரினம்பொழிபுமித்தக்கானகத்தழகுகாண்பார்... ... (ங)

அங்கிவர்புகுந்தபின்னரங்கியும்புகைடமாறிப்... ... ...*
பொங்கிபமேவாமத்தியின்புகையுமேபுனலுண்டாகச் .. ... *
சிங்கமுந்துதிக்கைமாவுஞ்சேர்ந்துடன்றிரியச்சூழல்... ... *
எங்கணுமழகுபெற்றதிமகிரிச்சாரல்போன்றே ... ...(ச)

கலிவிருத்தம்.

துருபதேயனுந்திமனுஞ்சோமக... ... ...*
நிருபரானநிருபர்கள்யாவரும்... ... ...*
விரவுதானைவிராடனுஞ்சுற்றமும் ... ... *
மருவினாரவ்வனத்திருந்தோரையே... ... ... (ரு)

மற்றுமற்றுமகிபரிலன்பினல் ... ... *
உற்றவுற்றவுறவுடையோர்களும் ... ... *
கற்றகற்றகலைவிதமாக்களும் ... ... *
சுற்றமொய்த்தனர்தோமறுகேண்மையார் ... (௬)

மாதவத்தின்பயனெனமாதவன் ... ... *
யாதவக்குலத்தோனிமையோர்பதி ... ... *
ஆதபத்துக்கருநிழலென்னவே ... ...*
வேதவித்தகவீரனுமேவினன் ... ... (௭)

பாரிழந்தவிப்பாதகச்சூதுகேட் ... ... *
டீரநெஞ்சினரோமுறநோக்கினர் ... ... *
பேரறன்றருபிள்ளையைப்பார்த்தருள் ... ... *
கூரவன்பொடிவையிவைகூறுவார் ... ... (௮)

மரபின்வல்லியையமன்னவையேற்றிய ... ... *
குருகுலேசனைக்கொற்றவெஞ்சேனையோ ... ... *
டிரியவேற்றுதமிப்பொழுதேயென ... ... *
ஊரவுஞ்சீற்றமுந்தோற்றவுரைசெய்வார் .. ... (௯)

தம்பிமாரைத்தனித்தனியேயுயிர் ... ... *
வெம்பிவீழவிரைந்துவில்வாங்கியின் ... ... *
றும்பர்காணவுயிர்செகுப்போமெனத் ... ... *
தும்பைசூடுங்கருத்தினர்சொல்லுவார் ... ... (௰)

வஞ்சகச்சுபலன்றருகாளையை ... ... *
வெஞ்சமத்திடைவீழக்கணத்திடை ... ... *
செஞ்சரத்தின்வழியுயிர்செல்லவே ... ... *
எஞ்சுவிக்கவெழுமென்றியம்புவார் ... ... (௰௧)

சீதவெண்குடைவேந்தர்தந்தேர்விடும் ... ... *
சூதன்மைந்தன்சுயோதனன்றோழனை ... ... *
மாதிரங்களில்வானவர்காணவிப் ... ... *
போதுடன்றிடுவோமெனப்பொங்குவார் ... ... (௰௨)

உந்தவுந்தவொருவர்க்கொருவர்வாய் ... ... *
முந்தமுந்தமுடுகுசினத்தராய் ... ... *
வந்தவந்தமகிபர்கள்யாவரும் ... ... *
இந்தவிந்தவுரைகளியம்பவே ... ... (௰௩)

கேட்டிருந்தருள்கேசவன்வாசவன் ... ... *
காட்டிருந்தனனென்னக்கவின்பெறு ... ... *
தோட்டிருந்தளிதேனுகர்சோலையின் ... ... *
மாட்டிருந்தமகிபற்குரைசெய்தான் ... ... (௧௪)

விடுமினிந்தவெகுளியைப்பின்புற ... ... *
அடுமினுந்திறலாண்மைகடோன்றவே ... ... *
வடுமனங்கொடுவஞ்சகஞ்செய்பவர் ... ... *
கெடுவரென்பதுகேட்டறியீர்கொலோ... ... ... (௧௫)

இயைந்துரைத்தவியையின்படியினி... ... ... *
வியந்திருக்கும்விபினந்தொறுமிருந்... ... ... *
துயர்ந்தபிற்செய்வினையையின்றன்னுதல்... ... *
அயர்ந்துரைத்தலலாதிலையாவதே... ... ... (௧௬)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கேட்டிநீமுரசகேதுகிளைஞர்தமிருக்கைதோறும்... ... *
ஈட்டியபுதல்வருள்ளோர்யாரையுமிருத்தல்செய்து... ... *
காட்டிடைநீரும்வைகிச்சொன்னநாள்கழித்துமீண்டு... *
நாட்டிடைவந்தாற்கண்டீர்நலனுளோர்நலங்களெல்லாம்... (௧௭)

அன்னையைச்சுபலன்பாவையருகுறவிருத்தியுங்க ... *
டந்நயர்சம்மையாகசேனனூர்தன்னில்வைத்துப் ... ... *
பின்னையும்வேண்டுவோரைப்பிரிவுறநெறியிற்போக்கி ... *
நன்னயத்தோடுநீர்கானடப்பதேநன்மையென்றான் (௧௮)

அச்சுதனுரைத்தமாற்றமறன்சுதன்மகிழ்ந்துகேட்டு ... *
மெய்ச்சுதர்முதலாமற்றும்விளம்பியகிளையையெல்லாம் ... *
இச்சையின்படியேயாங்காங்கேகுவித்தீராருண்டும் ... ... *
அச்சிறுகானவைகுமார்வமேயார்வமென்றான் ... (௧௯)

சோனைமாமுகிலின்மேனித்தோன்றலுந்துவரைபுக்கான் ... *
ஏனையோர்தாமுந்தத்தமெழிலுடையிருக்கைசேர்ந்தார் ... *
ஞானயோகிகளுமொவ்வாநமோசனுந்தம்பிமாரும் ... *
கானமேதாங்களாளுங்காசினியாகக்கொண்டார் ... (௨௰)

அவ்வனந்தன்னில்வந்தவரசெலாமகன்றபின்னர் ... ... *
வெவ்வனம்விடார்துமேவித்தவம்புரிவியாதனென்னும் ... *

செவ்வனமுனிவனந்தச்செவ்வனச்சியல்களான … … *
இவ்வனசரிதர்தம்மைவிரைவுடனெய்தினனே … …(உச)

கண்டனர்சென்றுபோற்றிக்கண்ணினுஞ்சென்னிமீதும் … *
கொண்டனரவன்றன்பாதங்குளிர்ந்தனருயிருமெய்யும் …*
புண்டரநுதலன்றன்னைப்பூசனைசெய்தபின்னர் … … *
வண்டணிதாரான்செய்தவஞ்சனையனைத்துஞ்சொன்னார் …(உஉ)

செறிந்தவர்கூற்றங்கேளாச்செய்தவமுனிவன்முன்னே … *
குறைந்தனநிகழ்ந்தவெல்லாங்கூறுதல்கொடிதுபாவம் …*
பிறந்தனதாயந்தன்னிற்பெரும்பகையினிதென்றன்மேரு …*
அறிந்தவருணத்தாரையவவாவினுக்கவதியுண்டோ … (உரு)

துன்றினரின்னலெய்தித்துன்னலராகித்தப்பின் … … *
ஒன்றினசெயினுமுள்ளதுண்டெனவுணரத்தேற்றிக் .. *
கன்றினர்கவலைதீர்த்தான்கண்ணுடைக்கருணைமூர்த்தி …*
குன்றினதுயர்ச்சியந்தக்குன்றினுக்கறியவுண்டோ …(உச)

நீவிரோபன்றுமுன்னுணிலமுழுதாண்டநேமி … … *
நாவிரிகீர்த்தியாளனளனெனுநாமவேந்தன் … … *
காவிரியென்னத்தப்பாக்கருணையான்சூதிற்றோற்றுத் …*
தீவிரிகானிற்சென்றான்காதைநின்செவிப்படாதோ …(உரு)

தோத்திரமானதெய்வச்சுருதிகள்யாவுநான்காக் … …*
கோத்தவன்பின்னுஞ்சொன்னான்குன்றவில்லவன்பாலின்று… *
பார்த்தனேசென்றுபாசுபதக்கணைவாங்கினல்லால் … …*
ஆர்த்தபைங்கழலோயெய்தாதரும்பகைமுடித்தலென்றே (உசு)

முதலாவது. வனம்புகுசருக்கம்

முற்றிற்று.

உ - வது.

தவநிலைச் சருக்கம்,

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

திருவளர்புதுவைக்கோதைதேங்குழல்பூத்தமாலை... ... *
உருவளர்பவளம் பூத்தவொண்டமிழ்மாலைவய்ந்த... ... *
பெருவளர்வரைத்தோண்மாலைப்பேணிச்செம்பதுமத்தாள்கள் *
கருவளர்மாலைவீழ்ப்பான்கருத்தினிலிருத்தல்செய்வாம்... (௧)

பரிவுடன்முனிவன்மாற்றம்பணிந்துதன்றலைமேற்கொண்டு ...*
வரிசிலைக்குலகமென்னுமகபதிமகனைநோக்கிக் ... ... *
கிரிசனையுள்ளிவெள்ளிக்கிரிப்புறத்தெய்தியர்க்கும் ... ...*
அரியநற்றவஞ்செய்தேனுமவனருள்பெறுதியையா ...(௨)

எனவிடைகொடுப்பமண்ணிலிணையிலாவியாதன்பாதம் ... *
மனனுறவணங்கியாங்கண்மந்திரமுறையிற்பெற்று ... ...*
நனிமிகத்திதியுநாளுநல்லதோர்முகுத்தந்தன்னில் ... ...*
சனபதமியக்கர்காட்டத்தனஞ்சயன்சேறலுற்றான் ... (௩)

வெஞ்சலமனத்தரானோர்விரகினாற்கூட்டங்கூடி. ... ... *
நஞ்சலதுவமையில்லாநவைபுரிந்தனர்களேனும் ... ...*
சஞ்சலமும்மைப்போலத்தரணிபருவுதல்செய்யார் ... *
அஞ்சலியொன்றுமீளவாரணமுனியும்போனான் ... ... (௪)

மரவுரியுடையன்சென்னிவகுத்தசெஞ்சடையன்றூணி ...*
சரமுடனங்கியீந்ததனுவினன்றவத்தின்மேலே ... ...*
புரிதருமனத்தனெல்லாப்புண்ணியங்களுக்குந்தானே ... *
உளர்பெறுதயரதன்றன்மகனலாதுவமையில்லான் ... (௫)

நெறியிருபுறத்துமூசிநுழையொணாநெருக்கமிக்க ... *
செறிதருவனமுஞ்சிங்கஞ்சிந்துரஞ்செருச்செய்சாரற் ... ... *
பொறைகளும்வெம்பசாசபூதமுமியக்கர்யாரும் ... ...*
உறைதருகுவடுநீங்கியுத்தரமுடிவுகண்டான் ... ...(௬)

அத்திசையிமயமென்னுமரசவெற்படைந்துமிக்க ... *
பத்தியொடம்பைதன்னைப்பயந்தகுன்றென்றுபோற்றி ...*
சத்தியவிரதன்றம்பிதபோவனந்தோறுந்தங்கள் ... ...*
முத்தழல்வளர்ப்போர்பாதமுளரிகண்முடிமேற்கொண்டான் (௭)

சாரணரியக்கர்வித்தியாதரர்முதற்பலருஞ்செஞ்சொல் ...*
ஆரணப்படியேசூழ்ந்தவடவிகடோறும்வைகு ... ... *
நாரணன்மலரோனும்பர்நாயகன்பதங்கணச்சிக் ... ... *
காரணத்தவஞ்செய்வாரைக்கண்டுகண்டுவகைகூர்ந்தான் ...(அ)

அரியும்வெங்கரியுந்தம்மிலமர்பொருமுழக்கங்கேட்டும் ... *
கிரியினன்முழக்கங்கேட்டுங்கிராதர்ம்பர்முழக்கங்கேட்டும்... *
எரிகிளர்முழக்கங்கேட்டுமிசைகெழுமிமைான்றந்த... ... *
புரிகுழலோடும்வைகும்புண்ணியன்பொருப்பைச்சேர்ந்தான்(கூ

கைம்மலையுரிவையோடுகட்செவிக்கச்சுஞ்சாத்தும் ... ..*
செம்மலைவிழியிற்காணுச்சிந்தையார்கண்டுபோற்றி ... ... *
அம்மலைச்சாரமூற்று மருந்தவம்புரிதர்கூற... ... ... *
விம்மலைநீங்கியாங்கண்மெய்த்தவவிரதனுனன்... ... (ய)

எயிலொருமூன்றுஞ்செற்றோனேந்திழையுடனேவைகும் .. *
கயிலையின்பெருமைதன்னைக்கட்டுரைசெய்வதெங்கண்... ... *
வெயிலவன்முதலோர்நாளுமேம்படவல்லுஞ்செய்வோர்கள் ... *
அயினுதல்லமுதோர்சூழ்வந்தன்புடன்போற்றுவாரோ.. (யக)

உருகியவெள்ளிபோலவுயர்முகந்தோறும்வீழும்... ... *
அருவிநீர்புனிதன்வேணியமர்தருநதியிற்றோன்ற.. ... *
உருகியபனிவான்குன்றிலொண்பனிக்கடவுள்வந்து... ... *
மருவியதென்னத்தோன்றும்வருணமால்வரையிற்றென்பால்(யஉ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

ஆசினன்மறைப்படியுமெண்ணில்கோடி யாகமத்தின்படியுமெழுத்தைந்துங்கூறிப் - பூசினன்வடிவமெலாம்விபூதியானபூதியினைப் புனைந்தசடைபுறத்தேசேர்த்தான் - தேசினலைப்பொருப்பின்சிகரமேவுஞ் சிவனவனேபோலுமெனத்தேவரெல்லாம் - பேசினர்வரிசிலைக்கைவிசயன்பூண்ட பெருந்தவத்தினிலைசிலர்க்கும்பேசலாமோ... ... ... (யங)

ஒருதாளின்மிசைநின்றுநின்றதாளினூருவின்மேலொருதாளையூன்றியொன்றும் - கருதாமன்மனமடக்கிவிசும்பினோடுங் கதிரவனைக்கவர்வான்போற்கரங்கணீட்டி-இருதாரைநெடுந்தடங்கணிமையாதோரா யிரங்கதிருந்தாமரைப்போதென்னநோக்கி - நிருதாதிபரின்மனுவாய்த்தவஞ்செய்தாரி னிகரிவனுக்கார்கொலெனநிலைபெற்றானே... ... ... (யச)

தோற்றியதன்னிடத்தேயிக்கொன்றைமாலை சூட்டியபோற்றேவபன்றோ துரகம்பொற்றேர் - கூற்றியல்வெஞ்சிலைபாணந்தூணிநாணிரதக்குநெடுங்கொடிமுன்னங்கொடுத்தோமென்றோ - காற்றினுடன்விரைவுறச்சென்றருந்துமாறு காண்டவனம்பசிக்கவித்தகாளையென்றோ - நாற்றிசையும்வளர்த்தஅழற்கடவுளந்தநரனுடலங் குளிர்விக்குநாரம்போன்றான்... ... (௯௫)

வலப்பாகஞ்செம்பவளச்சோதியென்ன வாணிலச்சோதியென்னமற்றைப்பாகம் - கலப்பானதிருமேனியணிந்தநீற்றாற் கதிர்முத்தின்சோதியென்னவிமவானீன்ற - குலப்பாவையுடன்கயிலைக்குன்றில்வாழ்விற்குன்றுடையோன்றிருக்கோலக்குறிப்பினுள்ள - புலப்பாடுபுறம்பொசியமாபுந்தோளும் பூரித்தானுடலபுளகம்பாரித்தானே... ... ... (௯௬)

கருந்துறுகல்லெனக்கருதிப்பிடியுங்கன்றுங் களிற்றினமுமுடனுரிஞ்சக்கறையானேறப் - பொருந்துமுழைப்புற்றென்னப்புயங்கமூரப் பூங்கொடிகண்மரமென்றுபாங்கேசுற்றப் - பரிந்துவெயினுண்மழைநாள்பனிநாளென்று பாராமனெடுங்காலப்பயின்றான்மண்ணில் - அருந்தவமுன்புரிந்தோரிலிவனைப்போன்மற்றார்புரிந்தார்சிவசிவவென்றரியவாறே... ... ... (௯௭)

பகிரதனைமுதலாகவெண்ணில்கோடி பார்த்திபருந்தவம்புரிந்தார்பைம்பொன்மேனி - இகலவுணர்முதலாயகணவாணரொத்தனைபேர்தவம்புரிந்தாரிமையாரோத்தும் - மகபதிதன்மதலையிவனெழுதொணாதவனப்பினுக்கும்வரிசிலைக்கும்மதவேளொவ்வான் - சகலகலைகளுக்குமிவன்றானே யிஞ்ஞான்றவம்புரியநினைப்பந்தசார்த்தபாவம்... ... ... (௯௮)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பண்ணுக்குவரும்பரித்தோதபனும்பசுபதியைப்பணிந்துநோக்கி - மண்ணுக்குத்தவம்புரியுந் தனஞ்சயற்குக்கோடையிலுமதியம்போன்றான் - எண்ணுக்குவருப்புவனம்யாவினுக்குங் கண்ணனன்பானிவனையன்றோ - கண்ணுக்குப்புனைமணிப்பூண் கண்ணோட்டமென்பவெல்லாங்கருணையன்றோ... ... (௯௯)

கலிவிருத்தம்.

அங்கியையங்கியால்வெதுப்பிவெம்மையைப் ... ... *
பொங்கியவாயுவாற்போக்கிமேற்சிரம்... ... ... *

தூங்கிபவமுதிருற்றன்னணெனும்படி... ... ... *
இங்கிதத்தொடுக்கிஞனிதயந்தன்னைமேய... ... ... (௨௰)

ஈண்டிவன்கருத்தினோடியைந்தமாதவம்... ... ... *
பூண்டிளமதிமுடிப்பண்ணியன்றனை ... ... *
வேண்டியவாறெலாம்விருப்பொடுன்னினன்... ... *
பாண்டியனுயர்குலப்பாவைகேள்வனே... ... ... (௨௧)

நிரந்தரமநேகநாணினைவுவேறற ... ... *
ஊரந்தருபுலன்களையொடுக்கியாயுதம் ... ... *
இரந்தனன்வரையிடையியற்றுநற்றவம்... ... ... *
புரந்தரனறிந்துமெய்ப்புளகமேறமேவ... ... ... (௨௨)

குருவுடனவிரதக்கூறியீசனை ... ... *
மருவுறுகொன்றைநாண்மாலைமோலியைக் ... ... *
கருமயில்பாகனைக்காண்டல்வேண்டிய ... ... *
திருமகன்றவநிலைதெரியவுன்னினன் ... ... (௨௩)

அரும்பகைவலிமையாலவுணரூர்சுடும் ... ... *
பெரும்பிறைபணிமுடிப்பிஞ்ஞகன்றன ... ... *
இரும்பகழிகள்பெறவெண்ணியேகொலாம் ... *
விருப்பியதித்தவம்வில்வலானரோ ... ... (௨௪)

நற்றவத்துறுதியுநரன்கருத்துநாம் ... ... *
முற்றறிகுவமெனமுன்னுஞ்சிந்தையான் ... ... *
கற்றையஞ்சடையவன்கயிலையங்கிரி ... ... *
உற்றறிவுறுவதற்குபாயமுன்னினன் ... ... (௨௫)

தூநகைபுருப்பசியரம்பைதொண்டைவாய் ... ... *
மேனகைதிலோத்தமையென்றவேலையின் ... ... *
மானெனமயிலெனவந்தமாதரார்... ... ...*
ஆனவருற்றுநீரவனைநண்ணுமே ... ...(௨௬)

என்றுகொண்டிந்திரனிபம்பமாதரார்... ... ... *
துன்றியபேரவைதோற்றமிக்கவார்க்... ... ...*
குன்றிரண்டெடுப்பதோர்கொடிமருங்குலார்... ... *
சென்றனரவ்வழிச்செய்யவாயினர்... ... ... (௨௭)

காமனைநினைந்தனர்காமராசனும்... ... ... *
மாமலர்வர்ளியுமதுரசாபமும்... ... ... *

தேமுறுமலர்க்கையிற்சேர்த்திச்சேனையோ... ... *
டாமுறைபுரிந்தனனரனுமஞ்சவே... ... ...(௨௮)

செந்தமிழ்வரைதருதேரன்செக்கர்வான்... ... ...*
அந்நியானையன்மதியாதபத்திரன்... ... ... *
சிந்துவெம்முரசினன்செவ்விகூரவே... ... ... *
வந்தனன்காலமும்வசந்தமாக்கியே... ... ...(௨௯)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

கந்தனையளித்தகன்னிபோர்பாகங் கலந்தமெய்க்கண்ணுதற்
கெதிராய்ச் - செந்தமிழுரைத்தகுறுமுனியிருந்த தெய்வமால்வ
ரையிடைத்தோன்றி - இந்துவுமரவுமுறவுசெய்முடிமேலிருந்த
மந்தாகினிபருவி - வந்திழிபுனலுஞ்சந்தனங்கமழவந்ததுமந்த
மாருதம்ம ... ... (௩௰)

வம்பருமதுரபல்லவங்கொழுதி மாமதுநுகர்ந்துமாகந்தக்-
கொம்பெலாமிருந்துகுயிலினங்கூவக் கொற்றவெஞ்சிலையினன்
முன்னம் - சம்பராசுரனைவென்றவீரனைப்பைந்தாமமாமணிமுடி
சூட்டி- எம்பிரான்முனிவுக்கஞ்சலென்பதுபோ லியைந்ததுவயற்
தகாலமுமே... ... ...(௩௧)

மழைமதவருவிக்கிரிதருசெங்கைக் கொங்கர்கோன்வாகை
வேந்தனைப்போல் - எழில்பொழிறடமுஞ்சூதமுந்தழைக்க வினி
யபேரிசையுடன்றோன்றி - அழநடைமடவார்க்கணியெனப்புகல
வாடவர்தலைக்கொளநறும்பூ - ஊழ்கொழுவளங்கொள்பயனெலா
ம் விருந்தோடுண்டனவண்டினமொருபால்... ... (௩௨)

பூதமைந்தனையும்புலத்துடனொடுக்கிப் புரிசடையுடன்பரு
கூதன் - காதலம்புதல்வனருந்தவம்புரிதற்காட்சிபாவிப்பனபோ
ல - மாதிரந்தொறுஞ்செம்பல்லவச்செந்தீ வளர்த்துவான்மணியி
னைநோக்கிப் - பாதமொன்றினினின்றுயர்ந்தன வொளிகூர்பணை
யுடைப்பாதபங்களுமே... ... ...(௩௩)

உள்ளுறக்கலக்கமறத்தெளிந்தசலத்துப்பர்தலைமுழையினின்
றருவி - வெள்ளமொத்தமுதங்களையறப்பொழியவெம்மையொ
த்தளியுடன்குளிர்ந்து- புள்ளுடைக்கொடியோற்கருமைபங்க
ன் புண்ணியம்பொருப்பிடைத்தவஞ்செய் - வள்ளலொத்தனவா
ற்சாரலைச்சூழ்த்துவயங்குநீள்வாவியுஞ்சுனையும் ... (௩௪)

நீறுபட்டிலங்குமெய்ந்நிலவொளியா னெஞ்சினிலிருள்க ளையகற்றி - மாறுபட்டிடுமைம்புலனையு மொடுக்குமாதவன்வளர் த்தசெந்தழலால் - கூறுபட்டுமையோடொருபடி வானேன்குன் றாசூழ்புறவனாயனைத்தும் - மாறுபட்டுருகிப்பெருகியோடினவா லம்மலைவெள்ளியாதலினால் ... ...(ருரு)

அலைத்தடங்கடலிலமுதொடுற்பவித்தாங்கமரர்வாழ்பதிகுடி புகுந்தோர்-குலைத்துமென்றெண்ணி யொருவருக்கொருவர்கொ டியிடைநுடங்கவந்தந்த - மலைத்தடநெருங்கப்புகுந்தனர்குயிலு மயூரமுமானுமேயனையார் - நிலைத்தவம்புரிவான்வகைநெருப்பி னமிவுறநின்றவாகண்டார் ... ... (ருசு)

அந்தரத்தமரர்துந்துமிமுழங்கவநங்கதுந்துமியெதிர்முழ ங்க - வந்துபொற்சிலம்புமேகலைவிதமுமலர்க்கைவெள்வளைகளு முழங்கப் - பந்தடித்திடுவாரம்மனைபெறிவார் பயில்கழங்காடுவா ர்நெற்றி சிந்துரகத்தின்றிலகமுந்திடுவார் தனித்தனித்திசைதொ றுஞ்சூழ்ந்தார் ... ... (ருஎ)

குயிலுடன்கூவிக்கிஞ்சுகமலர்ந்து கொஞ்சுபைங்கிளிகளைய ழைப்பார் - மயிலினநடிப்பத்தாமும்வண் சிலம்புமணியணியொ லிபெழநடிப்பார் - வெயில்விடுபரிதிமதியுடன்வலஞ்செய் விடர கமுமுழுதுமொலிப்பக் - கயிலையங்கிரியின்சாரலையம்பொற் கட வுளாலயம்மணக்களிப்பார் ... ... (ருஅ)

கூந்தன்மாமுகிலைக்குலைத்துடன்முடிப்பார் குங்குமங்கொ ங்கைமேலணிவார் - ஏந்தரவல்குற்கலைநெகிழ்த்துடுப்பா ரிட்டவு த்தரியமாற்றிடுவார் - பூந்துகினனையநறுஞ்சுனைபடிவார் புழுகுச ந்தனநறும்பனிநீர் - காந்திகொடெறிவார்காமவேதங்கள் கருங் கடைக்கண்களால்மொழிவார் ... ... (ருகூ)

பண்ணுடையாழினின்னிசைவழியே பாடுவார்பைங்குழல் குறிப்பார் - பெண்ணுடைமடநாணகன்றபேரமளிப் பேச்செ லாம்பேசிவந்தடுப்பார்-விண்ணுடையமுதம்பருகெனவுருகமெ ன்மலர்கொய்துமேலெறிவார் - எண்ணுடைமடவார்புரிந்தனவிவ் வாறிங்கிதமெத்தனைகோடி ... ... (சய)

காவும்வன்புறவுங்கயங்களுமருவாக் கவர்ந்தபைங்கணைகளா ணைந்து - பூவும்வந்துள்ளமுறவுறப்பட்டுப் புதையவும்புலனழி

வின்றி - மேவுதன் கருத்தின்வழியினின்ற விசயனையங்கிபோல்வி
ல்லும் - எவருடன்பெற்றவிறைவனை யெய்தெய்திளைத்தனனிரதி
செல்வனுமே... ... ...(௪௧)

கூற்றினையுதைத்தபாதமுமுடுத்த குஞ்சரத்துரிவையுமணிந்
த - நீற்றணிபொலிவானிலவெழுவடிவு நிலவெயிலனலுமிழ்விழி
யும் - ஆற்றலர்துரந்தகொன்றைவார்சடையு மல்லவையாவையுங்
கருதான் - மாற்றமொன்றின்றிநின்றனன் வரைபோல்வசிராயு
தன்றிருமகனும் ... ... (௪௨)

அன்றரனிருந்தயோகினையகற்று மயர்விலாவநங்கனுன்மரு
ப்புக் - குன்றிவர்தடங்கணாயிரமுடையோன்கொள்கையின்கூற்றி
னைத்தேறி - இன்றவன்மதலைபுரிதவங்குலைத்தா லென்விளைந்திடு
மெனவஞ்சி- நின்றிலன்மதனனிற்குமோநெற்றி நெருப்பினனீறு
பட்டுள்ளான்... ... ... (௪௩)

வானவர்பெருமானேவலால்வந்த வானவர்மகளிருந்தம்மா
ல் - ஆனவக்கிரீடையாவையும்புரிந்து மொருபயன்பெற்றிலரக
ன்றார் - கானகமுழுதும்பரிமளப்பரப்பிக் கானவண்டிமிர்தரப்பு
குந்த - வேனலுமகன்றதருக்கனுங்குடபால் வெண்டிரைவேலைவா
ய்வீழ்ந்தான் ... ... (௪௪)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இந்திரன்சுதன்றனெண்ணம்யாவதென்றினிதென்றெண்ணி ...*
இந்திரசாலமாகவேகினொருவருமேகி ... ... *
இந்திரநீலந்தன்னினிறைவனுக்குணர்த்தாரந்த ... ...*
இந்திரன்றானுமைந்தன்றவம்புரியிருக்கைசேர்ந்தான் ... (௪௫)

விருத்தமாமுனிவனாகிவிசயனைநோக்கியாது... ... ... *
கருத்தினீதவஞ்செய்கின்றகாரணமென்னவென்னத் ... ...*
புக்கதுதனுசர்தமுடல்பொடிபடவே ... ... (௱௬௯)

மாருதவிசையுடன்வடவனல்கொளுவிக் ... ... *
கார்தொறுநிரைநிரைகடிகுவதுபோல் ... ... *
தேர்தொறுமமர்புரிதயித்தியர்வடிவத் ... ... *
தோறொருகணையொருநொடியினிலுறவே ... (௱௭௰)

மகபதிபரிசிறைவரைநிரையெனவே ... ... *
திசைதொறுமவுணர்கள்சிரநனிசிதறிப் ... ... *
புகையொடுதெறுகனலகல்வெளிபொதுளக் ... *
ககபடலமுமுறைகளுவினகளமே ... ... (௱௭௧)

ஆடினவறுகுறைபலகைகளுடனின் ... ... *
றாடினதிசைதொறுமுதுகுருதியினீர் ... ... *

நீடினபிணமலைநிரைநிரைநெறிபோய்த் ... ... *
தேடினகதிர்களுமிசைவழிசெலவே ... (௱௪௨)

மாதவமிகுதிறலசுரரைமறலிக் ... ... *
கோதனமிமிழிவெருசிலைவலிகண் ... ... *
டாதவனருணனிலணிகிளருடர்தேர்ச் ... ... *
சூதனும்விசயனதிணையடிதொழுதான் ... (௱௪௩)

தள்ளினர்தமதுயர்சலமிலிபிலதென் ... ... *
றுள்ளினர்விசயனதுறுதியுமுரானும் ... ... *
அள்ளினரமுதெனவகநனிமகிழாத் ... ... *
துள்ளினரிமையவர்சுரர்பதிமுதலோர் ... ... (௱௪௪)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தேனிமிர்கமலத்தோங்குந்திசைமுகன்வரத்தினுலோ ... *
மானவன்விசயனுய்த்தவடிநெடுஞ்சரத்தினுலோ ... *
தானவர்தானையெல்லாந்தடிந்தவத்தளர்வினுலோ ... *
போனதுகரந்துவஞ்சரிரணியபுரமுமன்றே ... (௱௪௫)

வாணகைதுளவம்வாங்குமவுணர்தமகளிர்வெய்ய ... *
பூணொடுகுழைகள்வாங்கப்புனைவயவாகைவாங்கும் ... *
நாணுயர்தனுவின்வாங்கிநயந்திளைப்பாறிநின்றான் ... *
தூணொடுதசும்புவாங்குஞ்சுடர்மணிக்கடகத்தோளான் (௱௪௬)

பார்கொண்டதசுரர்மெய்யிற்பரந்தவெங்குருதிவெள்ளம் ... *
கார்கொண்டவிசும்புங்கொண்டதவர்பிணக்காயம்வானோர் ... *
ஊர்கொண்டதுரிமையோடுமவருயிர்மீண்டுமென்றால் ... *
தார்கொண்டவமரர்க்கெவ்வாறிவன்பகைதடிந்ததம்மா (௱௪௭)

இவ்வகையசுரர்சேனையாவையுமிரியநூறிக் ... ... *
கொய்வரும்வரிவில்வீரன்குரகதத்தேர்மேற்கொண்டான் ... *
வைவருமுனைவேற்சித்ரசேனன்வாசவனுக்கோடி ... *
நைவருந்துயரநீங்கநவின்றனன்புரிந்தவெல்லாம் ... (௱௪௮)

சித்திரசேனன்மாற்றஞ்செவிக்கமுதாகக்கேட்டுப் ... *
பத்திகொள்விமானஞ்சாதிப்பைம்பொன்மாநகரிகோடித் ... *
தெத்திசையவருமேனையிமையவர்குழாமுஞ்சூழ ... *
வித்தகவிசயன்றன்னைவிபுதர்கோனெதிர்கொண்டானே (௱௪௯)

கின்னரமிதுனமின்சொற்கீதங்களினிதுபாடத் ... ... *
துன்னியெங்கெங்குஞ்சேரத்துந்துமிக்குழாநின்றார்ப்பப் ...*
பன்னருமறைகடெய்வமுனிவரர்பகர்ந்துவாழ்த்த ... *
மன்னவர்மன்னன்றன்னைவாசவன்றழுவிக்கொண்டான் ...(௱௫௰)

கையுடைக்கயிலையன்னகடகரிப்பிடரின்வைத்து .. ... *
மையுடைக்கொண்டல்வாகனகர்வலஞ்செய்தபோதின் ... *
மெய்யுடைக்கலைகள்வல்லான்விஞ்சையனொருவன்கண்டு ... *
பொய்யுடைத்தலத்தோற்கின்னபொறுக்குமோபுனிதவென்றான்.

விஞ்சையனுரைத்தமாற்றம்விபுதர்கோன்செவியிற்சென்று ...*
நஞ்செனப்புகுதமேலாடுநயனங்கள்செர்தீக்கால ... ... *
நெஞ்சினிலறிவிலாதாய்நீயிதுகேட்டியென்று ... ... *
மஞ்செனக்கரியமெய்யான்மனங்கனன்றினையசொன்னான் (௱௫௨

ஆதிநாயகமாமாயனமரர்தந்துயருமேனைப் ... ... *
பூதலமடந்தைக்குற்றபுன்மையுந்தீர்ப்பானெண்ணிச் ... *
சீதைதன்கொழுநனானதிண்டிறலிராமன்போல ... *
ஓதநீருலகமீண்டுமருச்சுனனுருவங்கொண்டான் ...(௱௫௩)

ஆதலான்மனித்தனென்றிவ்வருச்சுனன்றன்னையின்னே ... *
நீதியாலமரர்யாருநெஞ்சினிலிகழற்கென்று ... *
மாதர்கள்வீதிதோறுமலர்மழைசொரிந்துவாழ்த்தக் ... *
கோதிலாவமரர்கோமான்கொண்டுதன்கோயில்சேர்ந்தான்... ()

அரிமுகக்கனகபீடத்தண்ணலையிருத்தியண்டர் ... ...*
இருபுடைமருங்குநிற்பவிந்திரனிருந்தபின்னர் ... ... *
மருவுபொற்றடந்தேரூருமாதலிதன்னைநோக்கிப் ... *
புரிசிலைவிசயற்குற்றபோர்த்தொழில்புகறியென்றான் ...(௱௫௫)

மற்றவன்றொழுதுபோற்றிவானவர்குழுவுக்கெல்லாம் ...*
கொற்றவவென்னாலின்றுகூறலாந்தன்மைத்தன்றால் ... *
உற்றெதிர்மூன்றுகோடியசுரருமுடன்றுசேர ... ... *
இற்றதுகண்டேன்பின்னர்வில்லினாணிடியுங்கேட்டேன் (௱௫௬)

ஆயதுநிகழ்ந்தபின்னரயன்றருவரத்தினாலே ... ...*
ஏயவாள்வலியின்மிக்கவிரணியபுரத்துள்ளோரைத் ... ...*
தீயவெம்பகழியொன்றாற்செற்றனனிமைப்பின்முற்றும் ...*
மாயமோமனிதன்வல்வில்வன்மையோதெரிந்திலேனால் (௱௫௭)

என்றுகொண்டுயர்தேர்ப்பாகனிசைத்தவையாவுங்கேட்டு ...*
வன்றிறலமரர்கோமான்மனமகிழ்ந்திருந்தபோதில் ... *
துன்றியவமரர்யாருந்தனித்தனிச்சுருதியோடு ... ...*
வென்றிபடையுமற்றும்வேண்டுவபலவுமீந்தார் .. (௩௫௮)

தேவர்பால்வரமுமெல்லாச்சிறப்புமின்னருளும்பெற்றுக் ...*
காவலன்கடவுள்வேந்தன்கழலிணைபணிந்துபோற்றித் ... *
தாவரும்புரவித்தானைத்தருமன்மாமதலைபொற்றுள் ... *
மேவரவேண்டுமின்னேவிடையெனக்கருளுகென்றான் ..(௩௫௯)

மைந்தனங்குரைத்தமாற்றமனனுறமகிழ்ந்துகேட்டுத் ... *
தந்தையுமின்னஞ்சின்னாடங்குகவிங்கென்றேத்திச் ... *
செந்திருவனையகொற்றத்தெய்வமெல்போகமாதர் .. *
ஐந்தொடாயிரமும்வேறோரப்பொன்மாளிகையுமீந்தான் ௩௬௰)

வரோதயமானதெய்வவான்படைக்கலன்கள்பின்னும் ... *
புரோசனப்பகைவற்கீந்துபுரந்தரனிருந்தபின்னர்ச ... *
சரோருகனண்டப்விண்டாலொருமயிர்சலிக்குமுன்கை ... *
உரோமசமுனியைநோக்கியுரைத்தனனுற்றவெல்லாம் (௩௬௧)

வரிசிலைவிசயன்வந்துவான்றவப்புரிந்தவாறும் ... *
அரிவையோர்பாகனன்பாலாரருள்புரிந்தவாறும் ... *
இரியவெம்பகையையெல்லாமின்றனிக்கடிந்தவாறும் ... *
தருமனுக்குரைத்தியென்னத்தபோதனமுனியும்போனான் (௩௬௨

இரணிய புரவாசியர்வதைச் சருக்கம்.

முற்றிற்று.

ஆ௨. சருக்கம் - ௩ - இ திருவிருத்தம் ௩௧௫.

௪ - வது.

சௌகந்திகமலர்ச்சருக்கம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மற்கொண்டுவகுத்தனையசிகரத்திண்டோள் வாளரக்கன்குல
த்தோடுமடியமுன்னம் - விற்கொண்டுசரந்தொடுத்தப்புலவாயில்
கேள்வி விண்ணவர்தந்துயர்தீர்த்தவிமலமாயன் - கற்கொண்ட
வகலிகைதன்னுருவமீளக் கவின்கொள்ளக்கொடுத்ததிருக்கமலபா
தம் - சொற்கொண்டு துதித்தெழுந்து துள்ளிநாளும் தொழுபவ
ரேயெழுபிறவித்துவக்கற்றாரே ... ... (௧)

இப்பால்வெஞ்சிலைவிசயனின்பமெய்தி யிந்திரன்றனருகிரு
ப்பவிமையோரூரில்- அப்பானற்றவம்புரியுந்தழல்கூர்வேள்வியந்
தணர்தங்குழாஞ்சூழவழகான்மண்ணில் - ஒப்பாருமிலாதமடமயி
லினோடு முபர்வனத்திலிடைநாளுமொருநாள்போலத் - தப்பாம
லறம்வளர்க்குந்தருமவேந்துந் தம்பியரும்புரிந்ததினிச்சாற்றுகி
ற்பாம் ... ... (௨)

விறல்விசயன்றனைப்பிரிந்தவருத்தமென்மேல் விஞ்சவொரு
தஞ்சமறவெம்பியம்பொற் - சிறகிழந்தபறவையெனத்துணைவ
ரோடுந் திறல்வேந்தன்சிந்தனையுற்றிருந்தகாலை - பொறையறிவு
நெறிதருமமுடையவாய்மைப் போர்வேந்தேயஞ்சலெனப்புகழ்
ந்துவாழ்த்தி - மறையொருபொன்வடிவுகொடுவந்ததென்ன மா
முனிபுலமைப்பினிடைவந்தானவ் ... ... (௩)

வந்தபெருங்கடவுண்முனிவரவுநோக்கி வாள்வேந்துந்தம்
பியருமகிழ்ச்சிகூர்ந்து - அந்தைவிழிபலவொடுபேருவகைபொங்
கச் சென்றெதிர்போய்வணங்குதலுஞ்சிந்தைவிலாத - அந்தமுனி
வரனுமவர்க்கன்பாற்றுப்ப மனுகாதலத்தமிலாவாசிகூறிப் - புந்
தியுடனளித்தசெழும்புனிதக்காலப் புவித்தவிசினிருந்தனவே
புனிறுமிலல்லாம்... ... ... (௪)

வாள்விசயன்புரவிசயன்றன்னைநோக்கி மன்னுதவம்புரிந்த
துவுமகிழ்ச்சிகூர - வேள்விசயந்தவிர்த்தபிரானருளால்வேண்டு
ம் விறற்படைகளீந்ததுவும்விபுதர்கோமான் - நாள்விசயம்பெற
க்கொடுபோயும்பருரி னனிமகுடம்புனைந்ததுவுநாணுந்தன்பொ
ற் - றோள்விசயந்தொலைத்ததிறலவுணர்சேனை சுடுசரத்தாற்றொ
லைத்ததுவுஞ்சூழ்ந்தயாவும்... ... ...(௫)

தன்னருகேயும்பரெல்லாமினிதுபோற்றத் தனஞ்சயனங்
கிருந்ததுவுந்தயங்குசோதி - மன்னுமெழிற்காந்தர்ப்பமென்னு
நாம வரைவழியேவருவதுவுமாருவுகாதல - உன்னுடையபெருந்
துயருந்தணிவுமாற வுரைத்தருள்சென்றெனவும்பார்கோமானுன்
பால் - என்னைவிடுத்தனனவ்வந்தேனென்றுனெல்லா வுலகமுடிந்
திடுநாளுமீறிலாதான் .. .. (௬)

மாமுனிதன்மொழிப்படியேபுணையில்கேள்வி மன்னவனுந்
தம்பியரும்வருத்தமாறிக் - காமியமென்றுரைபெறுசீர்வனத்தை
நீங்கிக் கடவுண்முனிதன்னெடுமக்கணத்திலேகி - நாடமதுகரதீர்த்
தமுதலாயுள்ள நற்றீர்த்தமெவற்றினும்போய்நானமாடித் - தா
மமலிதவழ்சிகரவித்த்ரநீல சயிலத்தின்சுனைகெழுதண்சாரல்சார்
ந்தார்... ... ... (௭)

அக்கிரியின்புதுமையெல்லாமடைவேநோக்கி யங்குள்ள
வருவிநறும்புனலுமாடித் - தக்கபுகழ்விசயனருந்தவம்புரிந்தசா
ரலிதுவென்றுதவமுனிவன்சாற்ற - மிக்கநனியுவகைநிகழ்நெஞ்
சராகி விசயனைக்கண்டனர்போலவிரும்பிக்கண்டு - தொக்கமுனி
கணத்தொழப்போய்த்தசாங்கனென்னுந் தொல்லைமுனிதம்பாவ
னத்தில் சூழல்சேர்ந்தார்... ... ... (௮)

அங்குள்ளதபோதனர்தம்பாதம்போற்றி யவருணாக்குமாசி
யும்பெற்றப்பாலேகி- எங்குள்ளகடவுணெடும்புனலுமாறு மெய்
புனலுந்தப்பாமலினிதினாடி - வங்கமெறிகடல்கடைந்துவானோர்
க்கெல்லாம் மருந்துவிருந்தருளியமந்தரமுங்காட்டிக் - கங்கைந
திகுதிபாயுஞ்சிகரச்சாரற்காந்தர்ப்பமெனுவ்வரையுங்காட்டினானே

அந்தவுயர்கிரியினெடுஞ்சாரமேறு மருந்தவஞ்செய்முனி
வரனாயடைவேகாட்டி - இந்தவனந்தனக்கெமையா ளுடையா
ன்குன்ற மீராம்பதியோசனையென்றெடுத்துக்காட்டிக் - கந்த
னெனவெக்கலையும்வல்லஞானக் கடவுண்முனிவிசாலயனாலயமுங்

காட்டி - உந்துநெறிச்செங்கோலாயிதனிலாண்டோன் றிருத்தி
யெனவுரோமசனுமுரைத்திட்டானே... ... ... (௧௦)

அம்முனிவன்மொழிப்படியேவரப்பில்வேள்வியறன்மகனு
ந்தம்பியருமரிவையோடும் - எம்முகமுந்தம்முகமாவிலையுங்காயு
மினியகனியுடனருந்தியிருந்தநாளில் - மைம்முகில்வாகனன்கன
கமுடிமேலம்பொன் வனசமலரொன்றுதழன்மயின்முன்வீழச் -
செம்மலரைச்செங்கண்மலர்தன்னினோக்கிச் செய்யமலர்கரத்தே
ந்திச்சிந்தித்தாளே ... ...(௧௧)

இந்தமலருலகனைத்துமீன்றகோல வெழின்மலரோவிரவிதி
ருக்கையில்வைகும் - அந்தமலரோவமுதிற்பிறந்தபாவை யமர்ந்
துறையுமணிமலரோவவனிதன்னில் - எந்தமலருங்கருகக்கமழா
நின்றதெங்கெங்குமிதன்மணமேயென்றுபோற்றிக் - கந்தவகன்
மைந்தனுக்குக்கனலோனல்குங் கனங்குழை சென்றுவகையுடன்
காட்டிச்சொன்னாள் ... ... (௧௨)

இம்மலருக்கொருமலருமவனிதன்னி லெதிரில்லையென்றி
தழாயிரத்தின்மிக்க - அம்மலரைக்கைம்மலரிற்கொடுத்திதொக்கு
மணிமலர்நீயெனக்கருளல்வேண்டுமென்னச் - செம்மலையிற்றிகழ்
சிகரத்திண்டோள்வீமன் றெய்வமுனிப்புங்கவன்றன்றிருத்தாள்
போற்றி - மெய்ம்மலரைத்திருமுன்புவைத்து நின்று வினவினான
வனுமெதிர்விளம்பினானே ... ... (௧௩)

என்பலவும்பாமுரைப்பதிந்தப்பூவி னியல்பினையும்பெரு
மையையுமியக்கர்தங்கள் - மன்பதியிலுளதன்றிவரம்பிலாத வா
னுலகிலுளதன்றிமற்றுமுண்டோ - உன்பிறருக்கிதுகோடற்கெளி
தோமாம்யா இம்பர்பதிபுகுந்தொருபைந்தோகைக்கீந்த - பி
ன்பிதனைக்கண்டறிவாரில்லையென்று பேசினான்யாவரொடும்பேசி
லாதான் ... ... (௧௪)

இயக்கர்பதிதனிலுளதென்றிசைத்தமாற்ற மின்புறக்கேட்
டொருகாலுமீறிலாத - வயக்கொடுவெஞ்சராசனமும்வன்போர்
வாளை மறத்தண்டுங்கரத்தேந்திமடந்தைநெஞ்சில் - துயக்கமற
விக்கணத்திற்றெய்வப் பொய்கைச் சுரபிமலரளித்திடுவேனென்று
சொல்லிச் சயக்கரடமுதுதறுகட்சயிலமன்ன சதாகதிமைந்தனு
மிமைப்பிற்றனிச்சென்றானே... ... ... (௧௫)

கைக்காற்றுந் தொடைக்காற்று மூச்சுக்காற்றுங் கனகமணிவளைபோன்றுகவின்கொள்சோதி -மெய்க்காற்றும்பரந்தெழுந்து வனத்திலுள்ள வெற்புநெடுந்தருவுடன்வேர்பறிந்துவீழ - எக்காற்றுமுட்டனெழுந்தவுகாந்தகால மெனச்சென்றுனினவளைகளெண்ணில்கோடி - செய்க்காற்றுஞ் செழுந்தாளநிலவுவீசச் சேதரபல்பகன்மலருஞ்செல்வநாடன்... ... ...(கசு)

இலங்கைநகர்தன்னில்விறலிராமதூதனிகலரக்கன்சோலையெலாமிறுத்தவாபோல் - நிலங்குலுங்கவணாகுலுங்கவனத்திலுள்ள நெடுந்தருக்கள்யாவையும்வேருடனேராக்கி - விலங்கொடுபுள்ளினமடையவெருவத்தாக்கி மெய்ந்நடுங்கித்தடுமாறிவெம்பியுள்ளங்கலங்கிவிழக்கனமதிர்வபோலவார்த்துக் காஞ்சனப்பொழில்வனமுங்கடந்திட்டானே... ... ... (கஎ)

அவ்வனத்தையிகந்தநந்தகாதமேகி யங்கிடைவிட்டுத்தரத்தினப்பாலெய்தி - மெய்வனப்புமடல்வலியுமிகுத்தவாகை வீமனெனும்பெயர்திசையின்விளங்கும்வீரன் - மைவனப்பினுடன்படியுஞ்சினைக்கைவாச வனப்பொழிலினொருமருங்கேமத்தமாவின் - கைவனப்புந்தழைசெவியுமருப்புஞ்சேரக் கவினழிக்குங்குலைக்கதலிக்காடுகண்டான்... ... ... (கஅ)

அக்கதலிவனந்தனக்குக்காவலாய வடலரக்கரநேகருடனடுபோர்செய்து - மிக்கதலங்குருதியினால்வெள்ளமாக்கி வெருண்டவர்தமாவியையும்விண்ணிலேற்றித் - திக்கதலமுதலாமெவ்வுலகுமேங்கச் சிங்கநாதமுஞ்செய்தான்செய்தகாலை - உக்கதலைமணியுரகராசற்கென்றுமும்பர்படிந்துபரமெமக்குணாக்கலாமோ (ககூ)

வரைகலங்கவனங்கலங்கக்கலங்குறாத மண்கலங்கவிண்கலக்கமகரமுந்நீர்த் - திரைகலங்கத்திசைகலங்கவிதிலாத செகங்கலங்கவுகங்கலங்கச்சிந்தைதூமேபோர் - உரைகலங்கவுளங்கலங்கத்துளங்கிமெய்ப்பிணுரங்கலங்கவிலங்கொடுபுள்ளினத்திலுள்ள - நிரைகலங்கவுலகினுயிர்படைத்தபாவுநிலைகலங்காதனவுண்டோ நிகழ்த்தினம்மா

கலிநிலைத்துறை.

அந்தவோதையப்பொழிலிடைத்தவம்புரிந்தருளும் ... *
மந்தராசலமனையதோண்மாருதிகேட்டு ... ... *
விந்தமன்னதிண்புயாசலவீமனுக்கெதிர்போய் ... *
முந்தமற்றவன்வருநெறிபதனிடைமுன்னி ... ...(உக)

வெற்பிரண்டினில்வேலைமுன்கடந்தாணீட்டிப் ... *
பொற்புபாசலமிரண்டையுமிருவரைபோக்கி ... ... *
அற்பவாழ்வுடையரக்கர்மாநகரழனூட்டும் ... ... *
சிற்பவாலதிதிசையெலாஞ்சென்றுநின்றோங்க ... (௨௨)

எம்பிரான்றனக்கொழியமற்றியாவர்க்குந்தெரியாச் ... *
செம்பொன்மாமணிகுண்டலமிருபுறந்திகழ ... *
விம்பமால்வரைமீதொருமேருவையொக்கும் ... *
அம்பொன்மால்வரையிருந்தெனவிருந்தனனநுமான் ...(௨௩)

குகைத்தடங்கிரியனையதோள்கொட்டியார்த்ததிரா ... *
நகைத்துநாகமுநாகமுநடுங்கிடநடந்து ... ... *
மிகைத்தவாளரிபோல்வருவீமன்முன்கண்டு ... ... *
திகைத்துநின்றனன்வன்மையுந்திறன்மையுமுடையான் (௨௪)

அண்டர்தானவரரக்கருமனுகுருவனத்தில் ... ... *
எண்டிசாமுகமடங்கலுமிரிந்திடவார்த்து ... ... *
மண்டிமேல்வருமானுடனாடாவென்றான் ... *
சண்டவாயுவின்றநயனைமற்றவன்றமையன் ... ... (௨௫)

தம்முனாகியவானரஞ்சாற்றியவுரைகேட். ... *
டெம்முனாகிவந்திருந்தநீயார்கொலென்றிசைத்தான் ... *
தெம்முனாகினுஞ்செவ்விமென்போகமாமகளிர் ... *
அம்முனாகினுநாகவராவடல்வீமன் ... ... (௨௬)

துன்னும்வெஞ்சிலைவலிகொலோதோளிணைவலியோ ...*
என்னைநீபுகலாரடாவென்பதிங்கெவனே ... *
உன்னைநீயறியாநெறியுணர்விலாமனித்தா ... *
மன்னுவாறனைக்கடந்துபோவல்லையேலென்றான் (௨௭)

உரங்கொள்வீமனம்மாருதியுரைத்தசொற்கேளா ... *
வரங்கொள்வார்சிலையிராகவன்மாபெருந்தூதன் ... *
தரங்கவாரிதிதாவுமென்றம்முன்வாலன்றிக் ... ...*
குரங்கின்வாலிதுகடப்பதிங்கரியதோகூறாய் ... (௨௮)

என்றுதன்றிருத்துணைவனின்றிசைத்ததுகேட்டு ... *
நன்றுநன்றிதுநவின்றதுநன் றெனநகையாத் ... *
துன்றும்வார்சிலைமனித்தனைச்சுமந்துதோள்வருந்தும் *
புன்றொழிற்சிறுகுரங்கையோவென்றெடும்புகல்வாய் (௨௯)

குரக்குநாயகனவ்வுரைகூறலுங்கேட்டுத் ... ... *
தரைக்குநாயகன்றடம்புயங்குலுங்கிடநகையா ... ... *
அரக்கர்நாயகனூரழலூட்டியிவ்விலம் ... ... *
புரக்குநாயகன்றன்னையோவிழித்துநீபுகல்வாய் ... (௫௰)

மறைக்குநாயகன்வரம்பிலாஞானமெய்ச்செல்வத் ... ... *
துறைக்குநாயகன்சுருதிசொன்மூவர்முத்தொழிலின் ... ... *
நிறைக்குநாயகனாகியநெடியவற்பிடரில் .. .. *
பொறுக்குநாதனையிகழ்ந்தனையறிவிலாய்போலும் ... ... (௫௧)

பின்னும்வார்சிலையிராகவன்பெருமையுமநுமான் ... *
மன்னுதோளிணைவலிமையுமாருதிசாற்ற ... *
அன்னபோதினிலகமகிழ்ந்தருளுடனோக்கி ... ... *
என்னகாரியம்வந்தநீயார்கொலோவென்றான் ... (௫௨)

தாமமாருதியுரைத்தசொற்றம்பியுங்கேட்டு ... ... *
நேமிமாநிலம்புரக்குமன்னீதிவேற்றருமன் ... *
நாமநாயகற்கிளையவனரனுக்குமூத்தோன் ... ... *
வீமன்வாயுவின்புதல்வன்யானென்றனன்விறலோன் (௫௩)

அன்னவாசகமவனுரைத்தலுமிகலநுமான் ... ... *
கன்னபாகமுஞ்சிந்தையுமுந்துறக்களித்து ... ... *
மின்னும்வார்சிலையிராகவன்மெய்ப்பெருஞ்சீர்த்தி ... *
சொன்னவாறுநன்றுனக்கிதார்சொற்றவரென்றான் (௫௪)

வரத்தினாலருமறையினால்வார்சிலைபயிற்றும் ... ... *
பரத்துவாசன்முன்பகர்தரக்கேட்டனம்பலகால் ... *
இரத்தினாலுயரிராகவன்சிலைவலியென்றான் ... ... *
உரத்தினாலொருவீரருமொப்பிலாவுரவோன் ... (௫௫)

குந்திகான்முளைகூறியவாசகங்கேட்டுப் ... ... *
புந்தியாலுயரஞ்சனைபுதல்வனும்புகல்வான் ... *
சிந்துசீகரச்சிந்துமுன்கடந்துசெந்தீயால் ... ... *
உந்துவாள்வலிநிருதனூரொருங்குசுட்டவனும் ... (௫௬)

அந்தவார்சிலையிராமனுக்கடிமையாயென்றும் ... *
சிந்தையாலவன்றிருப்பதஞ்சிந்தைசெய்பவனும் ... *
உந்தையாகியவாயுவுக்குற்பவித்தவனும் ... ... *
இந்தவாழ்வுடையநுமனேயென்றனனிகலோன் ... (௫௭)

என்றவாசகமிருசெவிக்கமுதெனக்கேட்டுத் ... ... *
துன்றுநெஞ்சினிலுவகையன்றுதித்தனன்றுள்ளி ... *
என்றும்பான்முயபறவப்பயனிருந்தவாவென்னாச் ... *
சென்றிறைஞ்சினன்றிரைக்கடல்கடந்தசேவடிமேல் (௫௮)

தம்பியைத்தனதாழ்தடக்கைகளாலெடுத்து ... *
வம்புசேர்மணிமால்வரைமார்புறவணைத்துப் ... *
பம்புசெந்தழற்கானிடைப்பதமலர்சேப்ப ... *
எம்பிநீதனிநடந்தவாறென்கொலென்றிசைத்தான் (௫௯)

தாயத்தாருமவ்வல்வினைச்சகுனியுங்கூடி ... ...*
மாயத்தாலொருகவறுகொண்டெங்கண்மண்கொண்டு *
நேயத்தானெடுங்கானகநேர்ந்தனமென்றான் ... *
ஓயத்தாலரசிழந்திடுஞ்சிம்புளேறொப்பான் ... (௬௰)

திகந்தமெட்டினுந்தன்மணமொல்லெனச்செல்லச் ...*
சுகந்தபுட்பமொன்றியாமுறைவனத்தினிற்றோன்றத் ... *
தகைந்தவப்புதுமலர்தனைத்தழன்மகள்காணா ... *
வகைந்தவித்துணைமலரொனக்கருளுதியென்றாள் ...(௬௧)

ஆதலாலிவண்யானுமின்றணுகினேனென்று ... *
நீதியாலுயர்தம்முனைநெடுந்தகைபோற்றக் *
கோதிலாதவக்குரிசிலுங்குமரனைநோக்கித் ... *
தீதிலாயிதுகேட்கெனச்செப்பினன்மாதோ (௬௨)

அருநிதிக்கிழவன்றனதளகைமாநகரில் ... ... *
மருமிகுத்தநீண்மஞ்சனவாவியின்கரையில் ... ... *
தருமலர்ப்பசுஞ்சோலையிற்றங்குமம்மலர்சென் ... *
றுரிமையுற்றதுகோடன்மற்றும்பர்க்குமரிதால் ... (௬௩)

ஈறிலாவிகலரக்கரோடியக்கர்தங்காவல் ... ... *
கூறுவாசகம்பொய்ப்பவர்கூர்தவமுயலும் ... ... *
பேறிலாதவர்பேரருளிலாதவர்பிறிதும் ... ... *
ஆறிலாதவர்தமக்குமங்கணுகுறவரிதால் ... (௬௪)

அறிவும்வாய்மையுந்தூய்மையுமன்புமின்னருளும் ... *
பொறையுஞானமுங்கல்வியும்புரிபெருந்தவமும் ... *
நெறியுமானமுந்தன்மமுநின்னவாதலினால் ... ...*
பெறவுனக்கரிதாயதேதென்றனன்பெரியோன் ... (௬௫)

முன்னவன்புகலுறுதிகூர்மொழியெலாங்கேட்டுப் ... *
பின்னவன்றொழுதிவையிவைபேசினன்பின்னும் ... *
மன்னர்மன்னவன்றவமுண்டுமறமுண்டுவழக்கே ... *
உன்னினுன்னருளுண்டுதிண்டோளுரமுண்டால் ... (௪௬)

தேவர்காக்கினுந்தயித்தியர்காக்கினுஞ்சிறந்த ... *
மூவர்காக்கினுமுறைமுறைமொழிந்தமூவுலகில் ... *
யாவர்காக்கினுமிக்கணத்தியச்சருமொய்த்திக் ... *
காவின்மேற்பயில்கடிமலர்கவருவேனென்றான் (௪௭)

ஆண்டவன்புகலுறுதியுமாண்மையுங்கேட்டு ... *
நீண்டதோள்வயமாருதிநெடிதுவந்தருளிப் ... *
பாண்டவன்றனைப்பண்பறப்பரிவினுநோக்கி ... *
வேண்டுநல்வரம்வேண்டுகவிண்டைநீயென்றான் (௪௮)

நெடியகானகநீங்கியாநெறியினேரலரைத்... ... ... *
கடியவெஞ்செருப்புரிபெருங்குருதிவெங்களத்தில்... ...*
அடிகளாங்கெழுந்தருளிவந்தருச்சுனன்றடந்தேர்க்... ...*
கொடியின்மீதுநின்றுவந்துகூத்தாடுதியென்றான்... ... (௪௯)

நீட்டுமவ்வரம்வீமனுக்கநுமனுநேர்ந்தான்... ... ...*
மீட்டுநல்வரமொன்றுமுன்வேண்டினன்வீமன்.. ... *
ஈட்டுமாமதிளிலங்கைதீயிட்டஞான்றியைந்த... ... ...*
மோட்டுருத்தனைக்காட்டுகென்றிறைஞ்சினன்முதல்வன்... (௫௰)

கலிவிருத்தம்.

என்றடல்வீமனிசைத்திடுமுன்னம்... ... ...*
ஒன்றியிவ்வேழுலகங்களுமொன்று... ... ...*
மன்றுளதார்புனைவாமனனைப்போல்... ... ...*
நின்றுநிமிர்ந்தனனித்தமுமுள்ளான் ... ... (௫௧)

படியினதெல்லைபதத்தினதெல்லை ... ... *
மடியினதெல்லையவ்வானினதெல்லை ... ... *
அடியினதெல்லையளப்பரிதென்றால் ... ... *
முடியினதெல்லைமொழிந்திடலாமோ ... ... (௫௨)

அந்தரமெங்குமடக்கியமெய்யில் ... ... *
சுந்தரவாலதிசுற்றியதோற்றம் ... ... *

முந்தியநீளுடல்வாசுகிமுதலுள் ... *
மந்தரவெற்பைவளைந்ததுமானும் ... ... (௫௩)

நீளகல்வானநெருங்கமருங்கே ... ... *
தோள்புறம்வாலதிசூழ்வரநிற்போன் ... ... *
நாளொடுதாரகைஞாயிறுமுதலாம் ... ... *
கோளணிசூழ்வருகுன்றமுமொத்தான் ... ...(௫௪)

இவ்வகைமுன்னமிலங்கையெரித்தோன் ... ... *
பைவருநாகர்பணஞ்சுளிபத்தின் ... ... *
மெய்வகைகொண்டதுகண்டுவியந்தார் ... ... *
மைவகைகோகுலவானவரெல்லாம் ... ... (௫௫)

மேலளவாதுவிளங்கியசொன்மெய் ... ... *
நூலளவாகியநுண்ணறிவார்போல் ... ... *
மாலளவன்றிவணங்குதலில்லான் ... ... *
காலளவல்லதுகண்டிலன்வீமன் ... ... (௫௬)

அருக்கனின்மும்மடியாமொளிவீசும் ... ...*
உருக்கிளர்மேனியையுமுறநோக்கா .. ..*
வெருக்கொடுதாண்மிசைவீழ்ந்தனன்மீண்டும் ... .. *
சுருக்குகவென்றுதுதித்தனன்வீமன் ... ... (௫௭)

அந்தமுமாதியுமாகவிருக்குச் ... ... *
செந்தமிழ்செய்துதிரட்டினனாய்ப்போல் ... ... *
அந்தரவானுமகண்டமுமொன்றாய் ... ... *
உந்தியமேனியொடுக்கினனம்மா ... . (௫௮)

இந்திரசாலமியற்றினனாய்ப்போல்... ... ... *
மைந்தொடுதொல்லையில்வடிவுகொள்போழ்தத்... ... *
தந்தமிலாயடியேன்பிழையெல்லாம்... ... ...*
புந்தியுறாதுபொறுத்தருளென்றான்... ... (௫௯)

திருவடிதன்னிருசேவடியிற்போய்... ... ... *
மருவடிதார்புனைமாருதிதொழவே... ... ... *
அருவடிவாகியகண்டமுமெங்கும் .. ..*
ஒருவடிவானவனுற்றனைசெய்வான்... ... ...(௬௰)

உன்னருகேபயிலும்பியரோடும்... ... ...*
மின்னருகேபயில்வேந்தொடுவாழ்வுற்... ... ...*

றென்னருகேவருகென்றனனென்றும்... ... ... *
தன்னருகேதமுறுததவத்தோன்... ... ... (௯௧)

அங்கவனம்மொழிகூறலுமையா... ... ...*
எங்கணு நின்னுயிரின்னருளுண்டே... ... ...*
பங்கயமாநதிவாழ்பதியெய்தச்... ... ...*
சங்கையினன்னெறிசாற்றுகவென்றான்... ... ... (௯௨)

என்றலுமித்தவனத்தினதெல்லை... ... ...*
ஒன்றியயோசனையோரிருநூறும்... ... ...*
சென்றபின்யோசனைசிற்சிலசென்றால்... ... ... *
மன்றன்மலர்ப்பொழில்வாவியின்மன்னும்... ... (௯௩)

அப்பொழில்காவலரக்கரநேகர்... ... ... *
எப்பொழிலுந்திறைகொள்ளுமெயிற்றார்... ... ... *
துப்புடனையவராவிதொலைத்தால்... ... ...*
செப்பியவாய்மலர்சென்றுறலாமே... ... ... (௯௪)

அல்லதுநீடளகாபதிதானும்... ... ... *
மெல்லியலுப்பொழின்மேவியபோழ்தின்... ... ... *
நல்லுறவாகிநயத்தொடுசென்றால்... ... ... *
மல்லன்மலர்த்தருவோழங்குமுவம்... ... ... (௯௫)

உறுதியுமொன்னலருக்கமுமேகும்... ... ... *
நெறியினதெல்லையுநீர்மையுநெறியில் ... ... *
குறிகளும்யாவுமுவப்பொடுகூறு ... ... *
அறிவுடையான்விடையன்பொடளித்தான் ... (௯௬)

மொய்ம்புடைமாருதிதாளிணைமுன்னு ... ... *
வெம்பியகானிடைமேவியபயனிங் ... ... *
கெம்பெருமானுனையெய்தினனென்று ... ... *
நம்பியுநாழிகையொன்றினடந்தான் ... ... (௯௭)

அக்கணமாசுவிலாசுகன்மைந்தன் ... ... *
மிக்குயர்விஞ்சையர்நாட்டிடைவிட்டுத் ... ... *
திக்குறநாகர்திரண்டுதுதிக்கும் ... ... *
சக்கரநாகமதன்புடைசார்ந்தான் ... ... (௯௮)

தவாமறைவாணர்தவம்புரியுந்தண் ... ... *
கவானுடைநீளகுகரத்துயர்கலைசேர் ... ... *

உவாமதிசூழ்வருமோங்கலொடொக்கும் ... ... *
திவாகரமால்வரைசேர்ந்திடுமெல்லை ... ... (௬௯)

அஞ்சனமேகமொடாலமளாவா ... ...*
வஞ்சனைகொண்டுவகுத்தனமெய்யான் ... ... *
குஞ்சிகள்வானினிடைக்கொடியோடிச் ... ...*
செஞ்சுடர்காறருகின்றசிரத்தான் ... ... (௭௰)

குளிர்வரையொன்றியநீள்குகரம்போல் ... ... *
அளவில்பெரும்பசுவாயுறைமதியின் ... ... *
பிளவெனலாய்வளையும்பிறழுந்தண் ... ... *
இளநிலவென்னவிலங்குமெயிற்றன் ... (௭௧)

ஆறிருகாதமகன்றுயர்தோளான் ... ... *
நூறிருகாதநொடிக்குணடப்பான் ... ... *
ஏறுடையான்முதலாயவரோனும் ... ... *
மாறெடுகாதிமலைந்திடவல்லான் ... ... (௭௨)

எண்டிசையுந்திறைகொண்டிகலோடும் ... ... *
புண்டரிகப்பெயர்நாடுபொறித்தான் ... ... *
திண்டிறன்மாருதசெய்வருவானைக் ... ... *
கண்டனனங்கழல்கார்தருகண்ணன் ... ... (௭௩)

உருத்தழுமிற்குலமுட்டுடன்மட்கச் ... ... *
சிரித்திதழ்கவ்வியெயிற்றிணைதின்றங் ... ... *
கரித்துவசன்றனைநோக்கியரக்கன் ... ...*
கருத்துடனின்றிவைகட்டுரைசெய்வான் ... ... (௭௪)

யானுறைகானமென்றிமையோரும் ... ... *
தானவர்தாமுமிதற்கிடைசாரார் ... ... *
மானிடனீயிவண்வந்ததுசுவையாம் ... ... *
ஊனிடவேவாவிதுரைத்திடுகென்றான் ... ... (௭௫)

வென்றியரக்கன்விளம்புதல்கேளாக் ... . *
குன்றனதோள்கள்குலுங்கநகைத்தாங் ... ... *
குன்றனதாவிபுழுண்டிடவந்தேன் ... ... *
என்றனன்முன்னமிடும்பனைவென்றான் ... (௭௬)

மற்றதுகூறமறத்தொடரக்கன் ... ... *
உற்றெதிரோடியுறுக்கியபோதத் ... ... *

கொற்றவனுங்கதைகொண்டுடன்மண்டிப் ... ... *
பற்றினன்வத்தவனுருவிபதிப்பான் ... ... (எஎ)

குன்றொடுகுன்றமர்கூருவதேபோல் ... ... *
நின்றுநெடும்பொழுதாகமலைந்து ... ... *
வன்றிறலுந்தமவாகுவின்வலியும் ... ... *
ஒன்றுமிளைத்திலவொத்தவுரத்தார் ... (எஅ)

எல்லையிலாவமரிங்கிவரிவ்வா ... ...*
ரொல்லையின்மோதியுடன்றிடுபோதில் ... ... *
தொல்லையிலோர்முனிசொல்லியசாபம் ... ... *
அல்லலரும்பிவழங்கியதன்றே ... ... (எகூ)

ஒன்றினுமாவியுனக்கிவனொல்கான் ... ... *
துன்றிருதோண்மிசைதோமரமேவிக் ... ... *
கொன்றிடுவாயினிவாயுகுமாரா ... . *
என்றதுவானினிடத்தசரீரி .. .. (அய)

அங்கசரீரியரற்றியசாபம் ... ...*
சங்கையுறுதசமீரணிகேளாப் ... ...*
பங்கபநாமநிசாசரபதிதன் ... ... *
துங்கவயப்புயமேற்கதைதொட்டான் ... ... (அக)

தொட்டகொடுங்கதைதோளுறுமுன்னம் ... ... *
பட்டுளநொந்துபதைத்தடல்வஞ்சன் ... ... *
வட்டநெடுங்கடலூடுமருத்தன் ... ... *
திட்டபெருங்கிரியென்னவிழுந்தான் ... (அஉ)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஏற்றத்தோடிகலியிவ்வாறிடைவழியதனில்வந்து ... *
சீற்றத்தோடெதிர்ந்தவெம்போர்த்திண்டிறலரக்கன்றன்னைப் *
பாற்றுக்கும்பகுவாய்ப்பேய்க்கும்பவணைக்கும்வருந்துகின்ற .. *
கூற்றுக்கும்விருந்துசெய்துகொற்றவக்குரிசில்போனான் (அங)

எண்டிசையமரர்போற்றுமிந்துமால்வரைசென்றெய்திப் *
புண்டரிகன்றனூடுபொருக்கெனநெருக்கியப்பால் ... *
தெண்டிரையளித்ததெய்வச்செல்வமாநிதிகளோங்கும் *
அண்டர்மாநகருமொவ்வாவளகைமாநகருங்கண்டான் (அச)

அந்தமாநகரிற்றென்பாலகல்விசும்புறநின்றோங்கும் *
விந்தமாமென்னநின்றுவிளங்குந்தோள்வீமசேனன் *

முந்தைமாருதிநண்போடுமொழிவழியெய்தியந்தக் ...*
கந்தவான்பொழிலுநன்னீர்க்கடிமலர்த்தடமுங்கண்டான் (அரு)

ஆயிடைக்குறுகுமெல்லையப்பொழிறுப்பிற்காப்போர் ..*
சேயிடைப்பரந்தமார்பர்சேணிடைத்தடவுந்தோளர் *
வாயிடைப்பிறைகளென்னவளைந்தவாளெயிற்றர்வஞ்சத் *
தீயிடைச்சோரிதோய்ந்ததிரண்டெனச்சுழல்செங்கண்ணர் (அசு

சூழிருட்பிழம்புநஞ்சுதோய்ந்தன்னதுவக்கருன்னின் ... *
நாழிகையொன்றினெல்லாவுலகையுநலியுமீட்டர் ... *
வாழிமந்தரமத்தாகவாசுகிகயிறுமாயோன் ... ... *
ஆழிநீர்கடைந்தநாளுமமுதெழக்கடைந்தவீரர் ... (அஎ)

மறத்தொடுவஞ்சமானநண்பெணவளர்ந்துநாளும் ... *
அறத்தொடுபகைக்குநெஞ்சர்பிலத்தினுமகன்றவாயர் *
புறத்தினின்முகத்தர்மார்பிற்புகைமுழைமுக்கரின்ன ...*
திறத்தினர்குஞ்சிச்செந்தீச்சிரத்தினர்வரத்தின்மிக்கோர் (அஅ)

கரங்களாயிரத்தர்நண்ணுங்கால்களாயிரத்தர்குஞ்சிச் ... *
சிரங்களாயிரத்தர்பூழைச்செவிகளாயிரத்தர்வென்றி ... *
உரங்களாயிரத்தருழ்தவமூபன்றுரிமைபெற்ற ... ...*
வரங்களாயிரத்தர்மிக்கமறைகளாயிரத்தர்மன்னோ (அகூ)

வைத்தாணாவாளம்வில்வேன்மழுவெழுத்திகிரிசூலம் ... *
கைத்தாணாபடக்கொண்டென்றுங்கண்ணிமையாதுகாப்போர் *
மைத்தாணைமாரியொப்பார்மானுடனுற்றங்கேட்டு ... ..*
மொய்த்தாரக்கடவுள்வாசமொய்ம்மலர்ச்சோலையெல்லாம் (கூய)

மண்டியெங்கெங்குமேன்மேன்மறிகடன்முகக்குநீலக் *
கொண்டலிற்குமுறிபார்த்துக்குறுகியக்கொடியநீசர் ... *
சண்டவேகத்தினைத்துஞ்சதாகதிதனயன்றன்னைக் ...*
கண்டனர்சூலபாசக்காலனைக்கண்டதன்னார் ... ..., (கூக)

எற்றவென்பாருஞ்சூலத்தெறியவென்பாருமெய்திப் ...*
பற்றவென்பாருமாவிபறிக்கவென்பாரும்யாக்கை ... *
சுற்றவென்பாருஞ்சென்னிதுமிக்கவென்பாருமாகி ... *
உற்றனரரக்கர்நூறாயிரவருமுனைக்கலுற்றார் ... (கூஉ)

இந்திரன்முதலாயுள்ளவிமையவர்தாமுமிந்தக் ... ...*
கந்தவான்சோலைகண்ணானோக்கவுங்கருத்துணாவர் ... *

வந்ததென்மதியிலாதமானுடாவின்றுன்னாவி ... *
சிந்துமுன்செப்புகென்னாத்தெழித்தனர்தீயோரெல்லாம் (கூங)

அருளிலாவரக்கரிவ்வாறகங்கரித்தரற்றுமிந்தப் ... *
பொருளிலாவுரைகட்கெல்லாமுத்தரம்புகலானாகி ... *
இருளிலாமுத்தமன்னவெயிற்றரும்பிலங்கநக்கான் ... *
தெருளிலாமதனைமுன்னமெரித்திடுஞ்சிவனைப்போல்வான் (கூச)

தனிதமேகம்போலார்க்குநமதுயிர்சரத்திற்சாய்த்துப் *
புனிதவான்பொழிலில்வாசப்பதுமலர்கொய்யவந்தேன் ... *
குனிதவர்கொண்டுமுன்னுங்குலங்கரிசறுத்தவீரன் ... *
மனிதனோவானுளாரேனுமறந்திரோவஞ்சவென்றான் (கூரு)

மாவிந்தமனையபொற்றோண்மாருதிவாய்மைகேட்டுப் ... *
பூவிந்தவனத்துநீயோபறித்தியென்றழன்றுபொங்கி ... *
நாவிந்தவுரைதந்தின்னுமிருப்பதோநரனுக்கென்னாக் ... *
கோவிந்தன்றடுத்தகுன்றிற்கொண்டலின்குழாத்திற்சூழ்ந்தார் ()

வானகமறையவீசிவான்படைக்கலன்கள்வால ... *
சேனைமுதலாயுள்ளசேனையின்றலைவரார்த்தார் ... *
கானுடைத்தொடையலானுங்காலனுக்காவியன்ன.. ... *
தானுடைத்தண்டமேந்திப்புகுந்தனன்சலிப்பிலாதான் (கூஎ)

தண்டினாலவர்கள்விட்டபடையெலாந்தகர்த்துமீண்டு ...*
மண்டினானுழுவைகண்டவாளுகிர்மடங்கலொப்பான் ... *
விண்டனாருடலம்பாவுமெய்த்தலைதப்பிலொன்றாக் ... *
கிண்டினான்மூளைச்சேற்றிற்கிடத்தினான்படுத்துமன்னோ (கூஅ)

தாக்கினான்சிலரைத்தண்டாற்றடக்கைபாற்சிலரைவானில் ... *
தூக்கினான்கரங்கினின்றுசுழற்றினான்சிலரையெற்றி ... *
நூக்கினான்சிலரைத்தோளானொறுக்கினான்சிலரைவாளால் ... *
வீக்கினான்சிலரையாவிவேறிட்டான்சிலரைவீமன் ... (கூகூ)

பிடித்தனன்சிலரையள்ளிப்பிசைந்தனன்சிலரைமண்ணில் *
அடித்தனன்சிலரையங்கமசைத்தனன்சிலரையெண்ணம் *
முடித்தனன்சிலரைப்போதமுகிழ்த்தனன்சிலரைக்கண்டம் *
ஒடித்தனன்சிலரையஞ்சவுறுக்கினன்சிலரைமன்னோ (௨௰)

சரக்கழுந்ததனினாலுங்கனவரைத்தோளினாலும் ... *
வரக்கொடுங்கதையினாலுமராமரப்பணையினாலும் ... *

உரக்கொடுங்காலினுளுமுருக்கினனுரைப்பதென்னே ... *
அரக்கனையென்றபின்னைவிடுங்கொலோரவநுமன்பின்னோன் (௱௧)

இப்படிக்கெதிர்ந்தசேனையானவையுமிமைக்குமுன்னம் ... *
துப்புடன்றொலைத்துவாயுசுதனின்றவுறுதிநோக்கி ... *
மைப்படிவனாகள்போல்வார்வாளெயிற்றரக்கர்பின்னும் *
கைப்படைகொண்டுநூறுயிரரொடுகணத்திற்சூழ்ந்தார் (௱௨

அவர்வெகுண்டமூன்றுமேன்மேலலைகடல்போலவார்த்துப் *
பவர்கொண்டபனகமென்னச்சூழ்வரும்பரிசுபாராக் ... *
கவர்கொண்டதொடைபலானுங்கதையொழிந்திலங்குசெங்கைத் *
தவர்கண்டுசிறுநாணன்டந்தகர்தரத்தழங்கவார்த்தான் (௱௩)

அல்னதாசோனதையெங்குமகண்டமும்பொதுவத்தாக்க *
மன்னுநாகங்களெட்டுந்தம்புலந்துயங்கிவீழத் ... ...*
துன்னுவாய்நஞ்சுகக்கிச்சுழன்றுமண்சுமக்குங்கொற்றப் *
பன்னகாதிபனுமுள்ளம்பதைத்துவெம்படங்கள்சோர்ந்தான் (௱௪

உரம்படச்சரங்கண்மேன்மேலுறுக்கிவேல்வீமனுந்தச்... *
சிரங்களிற்றோளின்மார்பிற்கண்களிற்செருகச்சென்று ... *
கரன்படைக்குழாத்துமுன்னங்காகுத்தன்கதிர்கொள்கூர்வாட் *
சரம்படத்தளர்ந்ததென்னத்தளர்ந்ததத்தளர்வில்சேனை... (௱௫)

சக்கரஞ்சூலம்பாசந்தண்டம்வேல்கப்பணம்வாள் ... *
முற்கரங்களையம்விட்டேறெழுக்கொடுமுசுண்டிகுந்தம் *
எக்கரங்களினுமேந்தியாவருமிவன்மேலேவி ... ... *
அக்கணந்தன்னின்மீண்டுமகங்கரித்தரக்கரார்த்தார் (௱௬)

அப்படைத்தொகைகளெல்லாமறுத்தறுத்தவர்கடத்தம் ... *
மெய்ப்படச்சரங்கள்சிந்திச்சிரங்கள்வெவ்வேறவாக்கி ... *
இப்படித்தனுசர்சேனையானவையுந்துணித்துமீண்டும் ... *
செப்படிப்பவரினின்றுசிரித்தனன்சிங்கம்போல்வான் (௱௭)

கலிநிலைத்துறை.

அந்தவயப்படையவ்வாறுதல்கண்டு ... ... *
கந்தமலர்ப்பொழில்காக்குங்காவலாளர் ... ... *
புந்திமயக்குறதொந்துபுகுந்தவெல்லாம் ... ...*
முந்தியியக்கர்பிரானுக்கோடிமொழிந்தார் ... ... (௱௮)

எம்பெருமானிதுகேட்டியென்றிறைஞ்சி ... ... *
[illegible]ம்பவிழ்சோலையிடத்தோர்மனிதன்வந்து ... . *

பம்பியசேனைபடுத்தெழுமதமும்பாயும் ... ... *
உம்பலின்வாவிபுகுந்துழக்குகின்றான் ... ... (௬௯)

என்றவர்வாய்கைபுதைத்திசைத்தல்கேட்டுக் ... ... *
குன்றுடனொன்றுபுயங்குலுங்கநக்குக் ... ... *
கன்றியசிந்தையனங்கிகால்செங்கண்ணன் ... ... *
ஒன்றியமங்குலினீபிருத்துரைத்தான் ... ... (௭௰)

தன்றுணைநின்றருள்சங்கோடணனைநோக்கி... ... ...*
வன்றிறல்கூரடல்வேகமானவன்னைச்... ... ...*
சென்றவனாவிசெகுத்தல்செய்யாதின்னே... ... ...*
துன்றுபுயங்கடுவக்கியெய்தச்சொன்னான்... ... (௭௰௧)

அந்தவியக்கர்பிரானுமக்கணத்தில்... ... ...*
வந்துதிரிக்கிழவன்றன்பாதமன்னித்... ... ...*
துந்துமிகொட்டவளப்பில்சேனைசூழ... ... ...*
உந்தியிமைப்பின்மலர்த்தண்சோலையுற்றான்... ...(௭௰௨)

மன்னுநிருக்கள்குலத்துமன்னர்மன்னன்... ... ...*
நல்லையியக்கர்குலத்திலெண்ணுந்தலைவன்... ... ...*
துன்னுபடைக்கடலோடும்பொங்கிச்சூழ்ந்தான் ... ... *
மின்னிமுழக்கியிடிக்குமேகம்போல்வான் ... (௭௰௩)

மானவரக்கர்குலத்தைவானிலேற்றி... ... ...*
ஊனொடிரத்தமுநக்குஞ்சோலையூடே... ... ...*
தானைவளைத்திடநின்றசாபவீரன்... ... ...*
யானையினத்தின்வளைக்கும்யாளிபோன்றான்... ... (௭௰௪)

விண்ணிலியக்கர்படைக்கலன்கள்வீசி... ... ...*
எண்ணிலர்சுற்றும்வளைத்தெதிர்ந்தபோதில்... ... ...*
வண்ணவரிச்சிலைகோலிவாயுமைந்தன்... ... ...*
துண்ணெனவுட்கவடிச்சரங்கடொட்டான்... ... (௭௰௫)

தொட்டசரங்கடொளைத்தனமார்புந்தோளும்... ... ...*
முட்டவிசும்பினெல்லையெங்குமூடப்... ... ...*
பட்டவொழிந்துபடாதசேனையெல்லாம்... ... ...*
கெட்டனபட்டதுரைக்கவுண்டோகேட்கின்... ...(௭௰௬)

மன்னளகாபதிசேனைநாதன்மார்பில்... ... ...*
தன்னுடையாளமுறத்தண்டாலேதாக்க... ... ...*

மின்னிடை நாகம் வெருக்கொண்டென்ன மீண்டான்... ...*
தன்னெதிர் வீரரிலாதான் சங்கோடண்ணன்... ... (௱௰௭)

கருத்தொடு சென்றளகேசன் பாதகமலம்... ... ...*
சிரத்தினில் வைத்திவை நின்று செப்பலுற்றான்... ... ...*
உருத்திரன் மானுட வுருவங் கொண்டதன்றேல்... ... ... *
வரத்தவன் மானுடனல்லன் மன்ன வென்றே... ... (௱௰௮)

பண்புடனிக்கணம் வேண்டு நிதிகள் பலவும் ... ...*
நண்பொடவற்கெதிர் சென்று நல்காயென்னின் .. ... *
விண்புகுமிப்புரம் வந்த வென்றான் மெய்யிற்... ... *
புண்புகவுட்கியுழைக்கும் யானை போல்வான்... ... (௱௰௯)

கோதிலியக்கன் யாவுங் கூறக் கேட்டுத்... ... ... *
தாதையுருத்திரசேனன் றன்னை நோக்கி... ... ...*
மாதர் மலர்ப்பொழிலூடு வந்த மனிதன்... ... ...*
எதிலருத்திய தென்னை கேட்டியென்றான்... ... (௱௨௰)

தந்தையுணாத்தருள் வாய்மை தலைமேற்கொள்ளா... ... *
மைந்தனுமப்பொழிலூடு சென்று மண்ணிச்... ... ...*
சிந்தவரக்கர் சிரங்கள் குன்றஞ்செய்து... ... ... *
கந்தனினிற்கு மறத்தினானைக் கண்டான்... ... ...(௱௨௧)

கண்டுமருத்தருள் காளை தன்னை நோக்கி... ... ... *
வண்டுமிடைப்பயிலாத காவில் வந்து... ... ...*
விண்டு மரக்கர் குலத்தை வீணையாவி... ... ...*
கொண்டு மடுத்தவன் யார் நீ கூறுகென்றான்... ... (௱௨௨)

நின்னளகாபதி மைந்தர் சாபநீக்கி... ... ...*
முன் மருதூடு தவழ்ந்த ஞானமூர்த்திக்... ... ... *
கின்னருண் மைத்துனன் மண்ணில் யாரும் போற்றும்... ...*
மன்னவன் வீமன் மருத்தின் மைந்தனென்றான்... ...(௱௨௫)

மாயவனற்புதனாதன் கண்ணன் வையம்... ... ...*
தாயவன் மைத்துனனாகினை பதனி நீ... ... ...*
ஏயவனத்தினில் வந்த தென் கொலென்றான் ... .*
தூயவனுற்றன யாவுந் தோன்றச் சொன்னான்... ... (௱௨௪)
மற்றவனவ்வுரை கூற மகிழ்வோடந்தண்... ... ... *
பொற்றருதண் பின் வழங்கப் போகென்றருளி... ... ...*

வெற்றியுருத்திரசேனன்மீண்டும்வந்தாங்... ... ... *
குற்றதுதாதைதனக்குரைத்திருந்தான்... ... ... (௱உ௫)

வேறு.

அண்ணற்றருப்பெற்றபின்னந்தவயமீளியக்காவினில்... ...*
தண்ணித்திலப்பொய்கைபடிவுற்றிருந்தன்னதண்ணீர்குடித் ...*
தெண்ணற்றகழுதாடலதுகண்டிருந்தங்கிளைப்பாறினன்... *
மண்ணுக்கும்விண்ணுக்குமறலிக்குமுறவானவடிவாளினன்(௱உ௬

இவ்வாறிவன்செய்கையிவன்வந்ததறியாமலெழில்கூர்வனத்... *
தவ்வாறுபயில்கின்றவருள்வாரிதானுற்றவதுகூறுவாம்... ...*
கைவார்குழைக்காளையைக்கண்ணுறச்சூழல்காணாதுமுன்... ...*
செவ்வாய்மடப்பாவைநின்றானீகூறெனச்செப்பினன் (௱உ௭)

வானின்றுமலரொன்றுதன்முன்புமின்போலவந்துற்றதும்... *
தானின்றமலர்போலுமலர்தேடிநீயின்றுதருகென்றதும்... *
தேனின்றதொடையானவ்வளகேசனகர்மீதுதனிசென்றதும் *
கானின்றநிழலாருமன்னற்குமுன்கட்டுரைத்தாளரோ... (௱உ௮)

கருமத்தின்வடிவானமடமங்கையிவ்வாறுகழறுதமுன் [ன்
உருமுத்துவசன்மைந்தன்முன்போகவன்போடுமுளநொந்துளா
மருமத்துவேறைத்தபுண்மீதுகனலுற்றதெனமாழ்கினன் *
தருமத்தினுருவாகிபெழுபாருநிலையிட்டதனியாண்மையான் ()

வாளிப்பரித்தேர்மனிவ்வாறுதுயரெய்திமனனஞ்செயத் *
கூளிக்குழாம்வானின்மிசையுய்த்ததென்னக்கொடித் தேரின்மேல்
காளக்கருங்கொண்டல்போல்வந்துவீமன்றருங்காளைமுன் *
ஆளிப்பெருங்கொற்றவெற்றித்திருத்தாதையடிமுன்னினன் ()

மின்றாடபடவெண்ணிலாவீசுமேகங்கொலெனவந்துமுன் ...*
நின்றானைமுகநோக்கிநீதிக்கோர்வடிவாமன்னிதுகூறுவான் ...*
உன்றாதைதமியேனெடுயவாமலொருவாசமலர்காணவே *
சென்றானெனச்சிந்தைநொந்தன்புடன்பின்னுநனிசெப்பினன்()

எம்பிக்கொரிடையூறுவந்தெய்துமுன்யாமியக்கேசனூர் *
வம்புற்றமலர்வாவிசென்றெய்திவினைவோடுவருவேமென ...*
வெம்புற்றபைங்கானினிடைமின்னுமிளையோரு முடன்மேவவே
கம்பிக்குநெஞ்சோடவன்றேரின்மீதக்கணத்தேறினன் (௱௩உ)

கூரச்சும்பகம்பக்கடாயானைமன்னன்கருத்தோடுசென் *
றாக்கன்றடந்தேரினவனேடுநீடந்தரத்தேகினன் ... *

பரக்கும்பெரும்புண்ணியம்பாவமுந்தாவில்பகிரண்டமும் *
புரக்கும்பரஞ்சோதியும்பொங்குமாமாயையும்போலவே (௱௯௩)
காவெனல்லசெல்லாதுகதிரோனெடுந்தேரெனக்கங்கைசேர் *
வாவெனல்லயுறவோடியொருநாலுகடிகைக்குள்வயமன்னுதேர் *
ஊவெனல்லபடியாதுபுகமண்டிமிகமண்டுமுதிரத்துடன் *
தேவெனல்லயில்லாதுகக்கும்பெருஞ்சுழல்சென்றுற்றதே (௱௯௪)

ஆனைக்குழாநூறுமரியேறெனப்பொங்கிபளகேசன்வெஞ் *
சேனைக்குழாநூறியதனூடுபயில்வாயுசிறுவன்றனைத் ...*
தானைப்பெருங்கொற்றமகன்கண்டுதானுற்றதளர்வாறினான் *
வினைத்திருத்தாதையைக்கண்டுதேர்நின்றிழிந்தின்புறு (௱௯௫)

மைக்காளமுகிலன்னமகனுந்தனடிமன்னவயவீமனும் *
கைக்கானநிறைவாசமலர்கொண்டறன்காளைகழனல்கியே *
முக்காலும்வலம்வந்துமுறையோடுதொழுவானைமுகநோக்கிநின்
றெக்காலுநாவந்ததிசையாதவிசையானுமிலைகூறினான் (௱௯௬)

என்னைவலாலன்றியிமையோருமெய்தாதவிக்காவினீ *
மின்னைவலால்வந்துவிரகாகவினைசெய்தவிதுமேன்மையோ *
உன்னைவல்புரிவாருமுளரும்பிமானொன்றுருத்தானரோ *
தன்னைவலாவிந்தவுலகேழும்வலம்வந்ததனியாழியான் (௱௯௭)

என்றந்தவுரைகூறிமுனிவாறியிறையோனுமிகலோனுடன் *
சென்றந்தண்மலர்வாவிபடிவுற்றுவாசத்திருத்தார்புனைந் *
தன்றந்தவிடம்விட்டிமைப்போதிலத்தேரின்மிசையேறியே...*
மின்றந்தவிடையாருமிளையோருமுறைகாணிடைமேவினார் *

மேவிப்பெருந்தெய்வமுனிபாதமலர்சென்னி மிசைவைத்துமென்
காவிக்கயற்கண்ணிணைச்சேயிதழ்ப்பாவைகளிகூரவே
வாவிச்செழுந்தாமமலர்நல்கிபொல்காதுவலிகூருநல் *
ஆவிக்கின்னமுதானநிருதற்கும்விடையன்றளித்தானரோ (௱௯௮)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மின்புரைமருங்குன்மின்னும்வேந்தருமந்தக்கானில் ... *
அன்புடைமுனிவன்கூறவவன்மலர்ப்பாதம்போற்றித் ... *
துன்பமுந்துனிபுமாறநாடொறுந்தோகைபாகன் ... *
றன்பெருங்கதையுங்கேட்டுத்தங்கினரொன்பமன்னே (௨௱)

சௌகந்திகமலர்ச்சருக்கம்முற்றிற்று.

ஆ-சருக்கம். ௪ - இம் - திருவிருத்தம்- ௲௭௫

௫ - வது.

சடாசுரன்வதைச்சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அழுதும்வான்முறுவலரும்பியுங்களித்து மாடியும்பாடியும
கிழ்ந்தும் - தொழுதுமாதரித்தும்விழுந்துமேலெழுந்துந்துதித்
திடத்தன்பதந்தநம்தான் - முழுதுமாயோங்குமுச்சுடராகிமூ
லமாய்ஞாலமாய்விண்ணாப் - எழுதுநான்மறைக்குமெட்டொணா
வடிவத்தெம்பிரானும்பர்நாயகனே ... (௧)

இந்தநீள்வனத்தின்மன்னவரிவ்வாறின்பமுற்றிருந்தவந்நா
ளில் - அந்தமாவனத்தின்சூழலிற்பயிலுமருந்தவமுனிவரர்பலரு
ம் - தந்திபேருழுவையாளியெண்கிவற்றாற்றருமிடருழந்துமெய்
தளர்ந்து - வந்துமாமகிபற்கபயமென்றவர்வாழ்வனத்திடைப் பு
குந்துமன்னினரால் ... ...(௨)

அருந்தவமுனிவரனைப்பலரிவ்வாறபயமென்றழுங்குசொ
ற்கேட்டுப் - பெருந்திறலரசனவர்பதம்வணங்கிப் பேசுநுங்கு
றையென்னப் - பொருந்தியகொடியவிலங்கினாற்றமக்குப் புகுந்
துளயாவையும்புகன்றார் - வருந்தியதுயரந்தணிதிர்நீரென்றேம
ன்னனுமக்குறைநேர்ந்தான் ... ... (௩)

மறத்துடன்றொழுதுவணங்கிமுன்னின்ற வாயுவின்மதலை
யைநோக்கித் - திறத்தருமுனிவரிடுக்கணீயைய சென்றுதீர்த்திடு
கெனவேவி - அறத்தினதுருவாயகண்டமும்புரக்குமரசனுங்கிரு
ந்துழிவந்து -புறத்தொருநிருதன்புகுந்தவஞ்சனையும் புரிந்ததும்
புகலலாமளவோ ... ...(௪)

தோளிரண்டினுநாடொறுமிரண்டண்டஞ் சுரும்பெனவிரு
ம்பினன்சுமந்து - தாளிரண்டுடையதொருகருங்குன்றஞ் சரிப்ப
போலகண்டமுஞ்சரிப்பான் -கோளிரண்டஞ்சிப்பிறையிரண்டக
ல்வான் குகையிடைப்புகுவதேபோல - வாளிரண்டன்னவெயிறிர
ண்டொளிகூர் வானிலாவழங்கியவாயான் ... (௫)

242 , 243 pages missing in book

முருக்கிவெஞ்சமரமிவ்வகைவெம்போர் மொய்ம்பனீடுயர் முழந்தாளால் - அரக்கனையகலத்தமுக்கியிட்டவன்ற னவயவம்யா வையுமொன்றாய்ச் - சுருக்கியந்தரத்திற்சுழற்றினனெறிந்தான் றொடுகழலிராகவன்முன்னம் - குரக்குநாயகன்முன்விரலினாற் றெறிக்குங் குன்றெனச்சிந்திவீழ்ந்திடவே (௧௯)

எறிந்தவாளரக்கன்விசும்பினதெல்லை யெவ்வளவெவ்வளவும் போய் - மறிந்தமால்வரைபோன்மீளவும்புவிமேன் மாசுணநடு க்குறவீழ்ந்து - செறிந்தபேருடலுமாவியுஞ்சிந்தித் தென்புலத் திறைப்பினிற்சென்றான் - அறந்துறந்தென்றுமடாதனசெய்தா லார்கொலோவடாதனபடாதார் (௨௰)

கலிவிருத்தம்.

வாளரவமுண்டுமிழும்வாண்மதியும்வஞ்சக் ... *
கோளுமுழைவைகொள்ளவிடர்கொண்டுகுலைகுலையா ... *
நாள்வலியினுய்ந்தமடநவ்வியையுமொத்தாள் ... *
காளவிடமுண்டமுதடக்குமிருகண்ணாள் ... ... (௨௧)

அடாதுசெய்சடாசுரனதாவியையுமம்பொற் ... *
படாமுலைகடாமுடையபைந்தொடியையும்போய்த் ...*
தடாவமர்விடாதுடையதம்பியனையுங்கொண் ... *
டடாவிறல்கொண்மாருதியிருக்கும்வனமுற்றான் ... (௨௨)

௫ - வது. சடாசுரன்வதைச் சருக்கம்.

முற்றிற்று.

ஆ௨ சருக்கம். ௫ - இம் - திருவிருத்தம் - ௪௱௯௭.

௬ - வது.

மணிமாலன்வதைச் சருக்கம்.

இதுவுமது.

ஆழ்மறைதுணிந்தபொருளாகுமவனென்னல் ... *
ஊழுறவுணர்ந்தமுதியோர்கடுணிபன்றே ... *
கேழில்பலவண்டமுணுகர்ந்துகிளர்செவ்வாய் ... *
ஆழிமணிவண்ணனடியடைகுதும்விரைந்தே ... (௧)

உற்றபடிதம்முனிருதாடொழுதுரைத்தான் ... *
மற்றவனுமங்குறையுமாமுனிவரோடும் ... ... *
கொற்றமிகுதம்பியொடுங்குழுமியன்றே ... *
நற்றபதிநாரணனதாச்சிரமநண்ணி ... ... (௨)

அங்கவன்மலர்ப்பதம்வணங்கியருள்பெற்றுக் ... ... *
கங்கைவளநாடர்கலைதேர்முனிவரோடும் ... ... *
தங்கினர்கள்சிற்சில்பகறங்கியபினப்பால் ... ... *
சிங்கமெனவெண்ணில்வளைசேர்நெறிகள்சென்றார் ... (௩)

சகபதிதபோதனர்கடம்பியொடும்போய்க் ... *
ககபதிதனொடொருகணத்திடைகலந்தே ... ... *
மகபதிமுதற்கடவுள்வானவர்துதிக்கும் ... ... *
அகமகிழகத்தியனதாச்சிரமமுற்றார் ... (௪)

அகத்தியனையன்பொடுவணங்கியவனருளால் ... *
மகத்தியனுமாமுனிவர்தங்களொடுமாநீர்ச் ... *
செகத்தியனுநீதிகள்செலுத்தியசெங்கோலார் ... *
நகத்தியனுநீள்வனமெனைப்பலநடத்தார் ... (௫)

ஏணில்வளைமார்பரிமையோர்புகழுமெட்டுக் ... *
கோனுடையமாமுனிவனங்குறுகியன்றன் ... *
மானுடைமலர்ப்பதம்வணங்கினர்துதித்தார் ... *
தானுவனையானுமவர்தம்மையெதிர்கொண்டான் (௬)

அன்பொடொருநாளெனவநந்தநெடுநாளங் ... *
கின்புறவிருந்தனர்களெக்கதையுங்கேட்டான் ... *
றொன்பதுகழிந்தனர்களிவ்வகைபொருங்கே ... *
பின்பவணிகழ்ந்ததொருபெற்றியுரைசெய்வாம் ... (௭)

அங்கிவரமர்ந்துறையுநாளிலளியோடும் ... ... *
பொங்கியொருமாநதிபுதுப்புனல்வரப்போய் ... *
மங்கைமுனிமங்கையர்கடங்களொடுவாசப் ... ... *
பங்கயநெடுந்துறைபடிந்தனள்விரும்பி ... (௮)

அப்புனலிலாமணமணங்கமழவந்தண் ... ... *
மெய்ப்பதுமநாண்மலர்மிதந்துவரமீதே ... ... *
மைப்பதுமவாள்விழிமடந்தையதுகாணாக் ... ... *
கைப்பதுமநாண்மலருறக்கடிதெடுத்தாள் ... (௯)

எடுத்தமலரைக்கொடொரிமைப்பின்மயிலன்னாள் ... *
அடுத்தவயமாருதியையம்மலரவன்கைக் ... ... *
கொடுத்திமலரொங்குளதுகூறுகெனவமரில் ... ... *
தொடுத்தவயவாகைபுனைதோன்றலிவைசொன்னான் ... (௧௦)

முன்புமுன்மலர்க்குழறனக்கிமலர்மொய்ம்பால் ... *
அன்புடனியக்கர்பதிநின்றுமருள்செய்தேன் ... ... *
இன்புறவிமைப்பொழுதினின்றுமிதளிப்பேன் ... *
துன்புறுமழற்கடவுடந்ததொருதோகாய் ... ... (௧௧)

இந்தமலரிந்திரபுரத்தெனினுமின்றன் ... ... *
அந்தமில்கருங்குழறனக்கருள்கிலேனேல் ... ... *
முந்தரவுயர்த்தவன்முதற்படைமுடிக்கும் ... *
மைந்துடையவன்றெனதுவாகுகிரியென்றான் ... (௧௨)

என்றிணையவஞ்சினமுரைத்திகலினென்றும் ... *
வென்றிதருதண்டுசிலைகொண்டுவிறலோடும் ... *
தன்றுணைவரொன்றுமுணராதபடிதானே ... *
சென்றனனிரும்பனையடுந்திறலின்மிக்கான் ... (௧௩)

குன்றமொடிரண்டிவையெனுங்குவவுதோளான் ... *
மன்றன்மலர்கொண்டுவருமாநதியின்வழியே ... *
சென்றுபலயோசனைகடிங்களொடுநாளும் ... *
என்றும்வலம்வந்துலவுரத்நகிரியெய்தி ... (௧௪)

மரகதமணிப்பணிசெய்மாளிகைகளொருசார் ... ...*
அரிமணியழுத்தியனவாலயமதொருசார் ... ... *
எரிமணியழுத்தியனவில்லின்விதமொருசார் ... *
தருணமணிமுத்தினியவுஞ்சயனமொருசார் ... (கரு)

இன்னரர்பயிற்றுமெழுகீதமெழலொருசார் ... *
மின்னனையபாவையரும்விஞ்சையருமொருசார் ... *
அன்னநடைமங்கையருமாரணருமொருசார் ... *
மன்னியபவியக்கருமடந்தையருமொருசார் ... (கசா)

சூலுடையமந்தியசைவுற்றதுயர்தீரக் ... ... *
கானுடைநெடுங்கடுவன்வார்கழைநறைத்தேன் ... ...*
மாலைவரிவண்டிரியமோதிவழையிலையில் ... ... *
கோலியதன்வாயிடைகொடுத்திடுவதொருசார் ... (கஎ)

கடக்கலுழிபாய்மதகதக்களிறுமந்தண் ... ... *
மடப்பிடிகளுந்தமின்மணந்திடுவதொருசார் ... *
அடர்த்தறுகுமாளியுமதிர்ந்துமுழைதோறும் ... *
புடைத்தெதிர்மலைந்துமிகுபோர்புரிவதொருசார் (கஅ)

தண்டரளமாதிமணிதந்தவொளிதானே ... ... *
எண்டிசைவிளக்கும்வனாயின்புதுமையெல்லாம் ... *
கண்டுவகைகொண்டுநனிகண்ணிணைகளித்தான் ... *
புண்டரிகவாணிருதனைப்பொருதழித்தான் (ககூ)

அக்கிரியினின்றுமிழிவுற்றளவில்செல்வம் ... *
மிக்கவளகேசனகர்வெய்திவினாவெய்தித் ... ...*
தொக்கமணிவாயிலொருநாலுமொருதானே ... *
புக்குவடமேற்றிசையினின்றிவைபுரிந்தான் ... (உய)

கலிச்சந்தவிருத்தம்.

சீர்த்தாரைகளுந்திரத்திசைமருவுங்கரிசிதறக் ... ... *
கார்த்தாரைகள்காற்றுரைகளுருமேறுமிருங்குக்க ... ... *
வார்த்தாழ்கடலுலையக்கதிர்மணிவெள்வளைவாய்வைத் ... *
தார்த்தானுகவந்தத்தெழுமடன்மாருதமனையான் ... (உக)

அந்தத்தமரஞ்சென்றுயரளகாபுரியுறைவோர் ... *
சிந்தைத்துயருறமற்றவர்செவியிற்செறிவுறலும் ... *
இந்தத்தொனிபுரிவானிவனெவனோவெனவெவரும் ...*
முந்திக்கரிபரிதேர்படைகொண்டேயுடன்மொய்த்தார் (உஉ)

அவ்வேலையினொருவிஞ்சையனஞ்சாவலிநெஞ்சன் ... *
வெவ்வேலையின்மிகவோதைசெய்மீளிக்கெதிர்செல்லாக் *
கைவேலவனிவனாமெனக்கண்டான்வெருக்கொண்டான் *
வைவேனிருதரின்வஞ்சமுமாமாயையும்வல்லான் ...(௨௩)

இம்மானவனெழில்கூரதிபதியைப்பொருமெரிகட் ... *
கைம்மானவனருளுங்களிமயிலோனலன்முதனாள் ... *
அம்மான்விழிமொழிப்பொழில்வந்தோனெனநினையா *
இம்மாநமர்க்குரையாடுதுமெனவெய்தினின்மீண்டான் (௨௪)

மேனாவொருமலர்காரணம்விறல்வாணிருதனாமேல் *
வானாடகமுலகத்தடன்மறலிக்கிடுமறவோன் ... *
ஆனாமுனிவினல்மீளவுமணுகுற்றனனென்னாச் ... *
சேனாபதிமணிமாலனுடன்வந்துரைசெய்தான் ... (௨௫)

அவன்வந்திவைபகராதருமனதிவேகமொடழலாச் ... *
சிவணண்பனும்விழிசெந்தழல்புரியச்சிறுநகையாப் ... *
பவனன்றருசிறுமானுடனவனேபடிமுதலாம் ... *
புவனந்தொழுபெருமானகரிடைவந்திவைபுரிவான் (௨௬)

தும்பிக்குலமிரதத்தொகைதுரகத்திரள்காலாள் ... *
பம்பிப்பணைவிதமோலிடுபணிலத்தொகைகுமுற ... *
நம்பிக்கினியுரையாடலநாமேயவனுடலம் ... *
கம்பிக்கவுடன்றாருயிர்கவர்வோமெனவுரையா ... (௨௭)

பண்ணார்படைநஞ்சேனையின்பரவைக்கதிபதியாம் *
எண்ணாபிரமியக்கேசருமிவன்மேலெழுகென்னத் ... *
தண்ணார்மதிகவிகைப்பெருசாலேந்திரன்முதலோர் ... *
விண்ணாடரும்வெருவச்சமர்புரிவான்விரைவுற்றான் (௨௮)

தாமப்புரிசையின்வாயிலெழுந்தானையின்வெள்ளம் ... *
நேமிக்கிரிநெரியப்புரிநெடுவெள்ளநிகர்ப்பத் ... ...*
தாமக்கனல்சொரிகண்ணினரெண்ணாயிரர்தொலையாச் ... *
சேமக்கவசியர்மாருதிதிசையிற்புடைசூழ்ந்தார் ... (௨௯)

உதிக்குஞ்சுடரோராயிரமுருக்கொண்டெனவொளிகூர் *
விதிக்குஞ்சமர்தொலையாவிறல்வித்யாதரர்வெள்ளம் ... *
கொதிக்குங்கடலிடைநின்றநற்குமரன்குணகடன்முன் *
மதிக்கும்படிநெடுமாலிமாமந்தரமொத்தான் ...(௩௰)

ஊழ்வந்துதனைதிருந்தலுமுயர்வானுலகுறுவான் ... *
சூழ்வந்திடுஞ்சேனைத்திரடொலையாவமர்புரிவோர்க் ... *
காழ்வந்தகதாபாணியுங்காணுமுனைத்தென்றும் ... *
வீழ்வந்தகொடுஞ்சாயகம்வின்னாணில்விசித்தான் .. (௫௧)

அக்காலையில்விறலோனிலையறிவானுயரறிவால் ... *
தக்கார்புகழ்சாலேந்திரன்றன்சேனைகடலையாக் ... *
நைக்கார்முகவயமாருதிதிருமுன்கடிதோடிப் ... *
புக்கானொரும்தர்மேனணியிவைநின்றுபுகன்றான் (௫௨)

சிவனோதிசைமுகனோவதிர்திரையார்கலிதுயில்கூர் ... *
பவனோகொடுமுடிமாமலைபகிருஞ்சுடர்வடிவேல்... ... *
அவனோதிறனரவாகனனளகாபுரிவருவான் ... ... *
எவனோநினதுயிர்சிந்துமுன்யார்நீபுணாயென்றான் ...(௫௩)

என்றவவனுரையாடலுமிவனின்புறநகையா ... ... *
மூன்றிலொருமலர்காரணமுனைவோருயிரெல்லாம் ... *
பொன்னாடர்தமுலகிற்புகவிடுவோனிகல்போரால் ... *
மன்னாகவமதியாவிறல்வயமாருதியென்றான் ... (௫௪)

மருவீசுபொலந்தாமரைமலரின்னமுமொருகால் ... *
தருவீரெனினுமதாருயிர்யானுந்தருவேனால் ... ...*
பொருவீரெனினமராபதிபுகுவீரினியென்றான் ... *
ஒருவீரருமுவமைக்கெதிரில்லாவிகலுரவோன் ... (௫௫)

வேறு.

என்றுவயமாருதியிசைத்தமொழிகேளா ... ... *
வென்றிதிகழ்வாகைபுனைவிஞ்சையர்பிரானும் ... *
குன்றனையதோளிணைகுலுங்கநகைசெய்யாக் ... ...*
கன்றினன்வெகுண்டுகனல்காலுமிருகண்ணான் ... (௫௬)

தேனிடறும்வாசமிகுதெய்வமலரொன்னே ... ... *
மானுடர்கள்கூடவருவார்கண்மதியற்றே ... ... *
கானுடையவாழ்வுபுரிநின்னுயிர்கணத்தென் ... *
ஊனிடறும்வாளிகடமக்குணவளிப்பேன் ... (௫௭)

மற்றிவன்வெகுண்டிவைபுரைத்துவருசேனைக் ... *
கொற்றவரைநின்றுநனிகூவியெதிரேவிக் ... ... *
சுற்றுமிகல்வெம்படைகடூவியிகலோனைப் ... ... *
பற்றுமின்விரைந்தினியெனப்பகரலுற்றான் ... (௫௮)

பற்றியபுருந்தபடைவீரருயிரெல்லாம் ... ... *
கொற்றமுளவெங்கணைகுளிக்கும்வகையோட்டிச் ... *
செற்றமுடனின்றெதிர்சிரித்தனனுருத்தான் ... ... *
பற்றலர்புரம்பொடிபடுத்தவனையன்னான் ... ...(௫௯)

இவ்வகைபொழிந்தவடிவாளியினியக்கர் ... ... *
மெய்வழிசெழுங்குருதிவெலையிடைவீழ்ந்தார் ... *
அவ்வளவில்விஞ்சையரநேகரதுகாணுக் ... ... *
கைவரிவில்கொண்டவன்மிசைக்கணைதொடுத்தார் ... (௬௰)

தொடுத்தசமர்வார்சிலைதுணிந்தநனிமேன்மேல் ... ... *
விடுத்தபடையும்பொரவெகுண்டுமுனைவாய்வந் ... *
தடுத்தவர்கடோளுமணிமார்புமணிமுடியும் ... *
நடுத்தறியவெங்கணையுகைத்தனனகைத்தான் ... ...(௬௧)

மண்டுதிறல்விஞ்சையர்மடிந்தசெயல்யாவுங் ... ... *
கண்டுசிலசாரணர்கரங்கனையதேர்மேல் ... ... *
கொண்டுகடலென்னவுருமென்னநனிகொதியாத் ... *
தண்டுகொடெதிர்ந்தனர்கடண்டதரனேனும் ... (௬௨)

வார்சிலையொழிந்துவிறன்மன்னுவயவாகைப் ... *
போர்செய்கதைகொண்டெதிர்புகுந்துபொரலுற்றான் *
பார்செய்பயனன்னதிருபற்குனவல்பார்மேல் ... ... *
கார்செயுருமேருருமுடன்கனல்வதேபோல் ... (௬௩)

தண்டினெடுதண்டெதிர்தகர்ப்பவெழுபொறியும் ... *
மண்டுமுடியோடுமுடிமன்னவெழுபொறியும் ... *
திண்டிறல்வயப்பொருநர்செங்கணுமிழ்பொறியும் ... *
அண்டமுழுதும்பொதுளியப்புறமுமொய்த்த ...(௬௪)

மட்டவிழலங்கன்மறவோனுடன்வயப்போர் .. ... *
தட்டமர்புரிந்துதனுவுஞ்சிரமும்வேருப் ... ... *
பட்டவரொனைப்பலர்படாதவர்விடாதன் ... ... *
றிட்டனர்புறந்தரவியக்கர்குலமெல்லாம் ... (௬௫)

தொடிக்கரமிழந்தணிதுணைப்புயமிழந்தாங் ... *
கடிப்பதமிழந்தவயவங்களடைவேபோய் ... ... *
இடிக்குரலின்விஞ்சையரெதிர்த்தயரவாங்கே ... *
கொடிக்குடரிழந்தனர்மருத்துதவுகூற்றால் ... (௬௬)

அன்னநிலைகண்டடலரக்கரொடியக்கர் ... ... *
பின்னருமெனைப்பலர்பிறங்கலைநிகர்க்கும் ... ... *
கன்னமதமாவிரதகற்கியிவைகாலாள் ... ... *
மன்னுபடைமானுடமடங்கலைவளைத்தார் ... (சஎ)

வளைத்துவயவெம்படைகள்வீசிமறிகடல்போல் ... *
உளைத்தொருவர்போலெவருமுருமெனவுருத்துப் ... *
புளைத்தரதமாபுரவிபோதகமிசைப்போய் ... *
விளைத்தனர்பெருஞ்சமரம்விஞ்சையர்களெல்லாம் (சஅ)

தேரணியும்வெம்பொறியெனச்செறிபுகர்க்கைக் ... *
காரணியும்வாயுநிகர்கற்கியணியும்போர்ப் ... *
பேரணிகலன்றணிபிறங்குமணிமார்பன் ... ... *
தாரணியெனத்தனதுதண்டுகொடகைத்தான் ... (சகூ)

நெரிந்தனரதந்துணையுநேமியொடுவேழம் ... ... *
சொரிந்தனநெடுங்குடரரிந்துதலைதாள்போய் ... ...*
முரிந்தனபெரும்புரவிவெள்ளமுனைதோறும் ... ...*
விரிந்தனருரங்கடவுள்விஞ்சையர்கண்மன்றே (ருய)

மீளியொருதண்டுகொடுவிண்டெதிர்வெகுண்டோர் ... *
மூளைநிணம்வாயுகமுருக்குதலுமொய்ம்பிற் ... ... *
றாளுடைமருத்தெதிர்சரிக்கும்வகைபெய்தும் ... *
பூளைவனமொத்தனர்பொரும்பொருநரெல்லாம் ... (ருக)

சிந்துரமணிக்கொடிகொடேர்புரவிகாலாள் ... ... *
அந்தகபுரத்தணுகலுற்றவொழியப்போய்த் ... *
தந்தமபுரத்தணுகலுற்றனசயப்போர் ... *
மந்தரவரைப்புயனுநின்றனன்மறத்தால் ... (ருஉ)

இருவரொருநீணெறியியங்கலர்தியங்கா ... ... *
வரியுழுவைகண்டுடையுமானினினமே ... *
வெருவியுளநொந்துதிறல்விஞ்சைய ல்லாம் ... *
பொருவிலளகாபுரிபுகுந்தனர்புரிந் ... ... (ருங)

இஞ்சிமதில்வாயரணம்யாவுமிகல்ட ான் ... ... *
அஞ்சினர்கள்விஞ்சையரடைந்த களழகார் ... *
மஞ்சனையமேனிமணிமாலனைய ந்தே ... ... *
அஞ்சினொழிந்தவரவற்றெழு துசொன்னார் ... (ருச)

அந்நிலையுணர்ந்துமணிமாலனவிர்சோதிப் ... ... *
பொன்னசலமொத்துயர்புயத்துணைதுடிப்ப ... ... *
மன்னுபுருவச்சிலைவணக்கிமழைமுகில்போல் ... ... *
மின்னிலகநக்குருமெனத்தனிவெகுண்டான் ... (௫௫)

எழுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

வானிலவுணரைமோதிமுனைதொறும்வாகைபுனைமணிமாலனீள் *
சேனைமுதல்வரைவேகமுறநனிசீறியுரைபலகூறினான் ... *
ஆநீயியினுடல்வீழவமரிடையாவிகவர்தரவஞ்சிநாம் ... *
தானையரியெதிரேகுகரியினமாகிவெருவொடுசாய்வதே (௫௬)

என்றுதனதெதிர்நின்றவனாயிகஃவொன்றுமொழிகளிபம்பிமற்*
குன்றமெனவமர்வென்றிதருவதொர்கும்பமதகிரிமேல்கொளா *
ஒன்றுபடவுலகின்றுபொடிபடவுத்துகரிரதமூந்தெனச் ...[ன்
சென்றுபுடைவருகின்றபடையொடுதெண்டதரனெதிர்மண்டினு

மண்டியெதிர்வருகின்றபொருநனைவன்புபெறுபுயமூன்பனும் *
கண்டுமுகிழ்நகைகொண்டுதனதிருகண்கள்கனலுகநின்றபின்...*
எண்டிசையும்வளைகின்றவிமையவரொன்றினவிரொளிகுன்றிநீர் *
மொண்டமுகிலெனவொன்றுபடமிசைமூசியெறிபடைவீசவே

வீசுபடையொருகோடிவிசைபடவோடிமிசைவரவீமனும் ... *
பாசதரனெதிர்நீலமயிலொருபாகனிகரெனவேகியா ... *
ஆசைதொறுமுகில்போலவளைபவராகமிருபிளவாயுளம் *
கூசியலம்வருமாறுதருவளர்கோடுகொடுநனிசாடினான் (௫௭)

ஆயபொழுதளகாதிபதியுயிராயவணிமணிமாலனும் ... *
தீயமெனவவன்மீதுபலபடைசிந்தியமர்செய்துமுந்தினான் ...*
